உதயன்
அங்காடி
விளம்பர சிறப்பிதழ்
உள்ளே

உதயன்
UTHAYAN - A Lively National Tamil Daily
சுடர்: 29 கதிர்: 033 வள்ளுவர் ஆண்டு: 2044 | மார்கழி 14, ஞாயிறு 29.12.2013
பக்கம் : 56
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30


மப்பான வானிலை
29 C 24 C


பக்கம் 03
சட்ட மாணவர் அனுமதி பயிற்சிப்பட்டறை


பக்கம் 11
இயக்கச்சி கிழக்கில் இயற்கை விடுதி


பக்கம் 22
தாச்சி இறுதியாட்டம் இன்று மாலை உடுவிலில்


பக்கம் 23
இலங்கைக்கு ஆறுதல் வெற்றி

# 13 ஆபிரிக்க நாடுகளுடன் புலம்பெயர் தமிழர் பேச்சு

## ஜெனிவாவில் அரசை மடக்க அதிரடி நடவடிக்கை

கொழும்பு, டிசெம்பர் 29
இலங்கை மீது சர்வதேச விசாரணைக்கு ஆதரவு திரட்டும் வகையில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் 13 ஆபிரிக்க நாடுகளையும் தனித் தனியே சந்தித்துப் பேச்சு நடத்துவதற்கு புலம்பெயர் தமிழ் அமைப்புகள் தீர்மானித்துள்ளன.

இதன்படி, உலகத் தமிழர் பேரவையின் உயர்மட்டப் பிரமுகர்கள், ஜனவரி நடுப்பகுதியில் ஆபிரிக்க நாடுகளுக்குப் பயணம் செய்யவுள்ளனர் என்றும் அதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெறுகின்றன என்றும் அறியமுடிகின்றது.

> “ ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளுள் 13 நாடுகள் ஆபிரிக்க நாடுகளாகும். இவற்றில் பெரும்பாலான நாடுகள் இலங்கைக்கு சார்பாகச் செயற்படும் போக்கை கொண்டவை யாகும்.

இதுதொடர்பில் உலகத் தமிழர் பேரவையின் தலைவர் வண. இம்மானுவேல் அடிகளாரிடம் 'உதயன்' வினவிய போது,

"தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்காக நாம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம். இதற்காக ஆபிரிக்க நாடுகளுடனும் தனித்தனியே பேச்சு நடத்துவோம். குறிப்பாக மேற்குலக நாடுகளில்தான் புலம்பெயர் தமிழர்கள் கணிசமாக வாழ்கின்றனர். அங்கு எமது அமைப்புகளும் இருக்கின்றன. ஆனால், ஆபிரிக்க நாடுகளைப் பொறுத்தமட்டில் அங்கு புலம்பெயர் தமிழர்கள் பெரிதாக இல்லை. எனவே, எமது குழுவினர் சென்று அந்நாட்டு அரச பிரதிநிதிகளிடம் தனித்தனியாகப் பேச்சு நடத்த வேண்டியுள்ளது" - என்றார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளுள் 13 நாடுகள் ஆபிரிக்க நாடுகளாகும். இவற்றில் பெரும்பாலான நாடுகள் இலங்கைக்குச் சார்பாகச் செயற்படும் போக்கை கொண்டவையாகும். கடந்த முறை அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணைக்கு கொங்கோ, உகண்டா ஆகிய நாடுகள் எதிர்த்து வாக்களித்திருந்தன.

வாக்கெடுப்பில் பங்கேற்காமல் இலங்கைக்கு மறைமுக

21 ஆம் பக்கம் பார்க்க

## பால் மாவின் விலைகள் ஜன. 2 முதல் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 29
ஜனவரி இரண்டாம் திகதி முதல் பால்மாவின் விலை அதிகரிக்கப்படவுள்ளது. உலக சந்தையில் ஒரு மெட்றிக் தொன் பால்மாவின் விலை 5 ஆயிரத்து 400 டொலர்களால் அதிகரித்ததை அடுத்து, உள்நாட்டிலும் 400 கிராம் பால்மாவின் விலையை 115 ரூபாவாலும் ஒரு கிலோ கிராம் பால்மாவின் விலை 290 ரூபாவாலும் அதிகரிக்குமாறு பால்மா நிறுவனங்கள் நுகர்வோர் அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்திருந்தன.

இந்தக் கோரிக்கைக்கமையவே பால்மாவின் விலை ஜனவரியிலிருந்து அதிகரிக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், ஜனவரி மாதம் வரை சந்தையில் பால்மாக்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவலாம் என்று கூறப்படுகின்றது. (த-சி)

## இராணுவக் கட்டமைப்பில் அதிரடியான மாற்றங்கள்

### யாழ்.தளபதி ஹத்துருசிங்க ராணுவத் தலைமையகத்துக்கு

கொழும்பு,டிசெ 29
இலங்கை இராணுவக் கட்டமைப்பில் அதிரடியான மாற்றங்களை மேற்கொண்டுள்ளது பாதுகாப்பு அமைச்சு. இராணுவ உயர் அதிகாரிகள் பலருக்கு ஜனவரி முதல் இட மாற்றங்கள் வழங்கப்பட்டுள் ளன.

யாழ். மாவட்டப் பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க உட்பட ஆறு மேஜர் ஜெனரல் தரமுடைய அதிகாரிகளுக்கு ஜனவரி முதலாம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அண்மைக்காலத்தில் இலங்கை இராணுவத்தில் நடந்த மிகப் பெரும் உள்ளக இடமாற்றம் இதுவெனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டப் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதியாகச் செயற்பட்டுவரும் மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, இராணுவத் தலைமையகத்தின் நிர்வாக நிறைவேற்று அதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். கிளிநொச்சி மாவட்டப் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதியாகச் செயற்பட்டுவரும் மேஜர் ஜெனரல் உதய பெரேரா, யாழ். மாவட்டப் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதியாகவும், நிர்வாக நிறைவேற்று அதிகாரி மேஜர் ஜென

21 ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் மனித புதைகுழியில் நேற்றும் மண்டையோடு மீட்பு

### தோண்டும் பணி தொடர்கிறது



*மன்னார்,டிசெ.29*
*மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழியைத் தோண்டும் பணிகள் நேற்றுச் சனிக்கிழமை மீண்டும் முன்னெடுக்கப்பட்ட போது மனித மண்டையோடு ஒன்றும் மனித எலும்பு எச்சங்களும் மீட்கப்பட்டுள்ளன.*
*கடந்த 22 ஆம் திகதி இடை நிறுத்தப்பட்ட புதைகுழியைத் தோண்டும் நடவடிக்கைகள் ஏற்கனவே அறிவித்தபடி நேற்று மீண்டும் முன்னெடுக்கப்பட்டன.*

21 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா தனியார் பஸ்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு



யாழ்ப்பாணம்,டிசெ.29
வவுனியா மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இதனால் நேற்று வவுனியாவில் இருந்து வெளியிடங்கக்குச் செல்ல வேண்டிய பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

வவுனியாவில் இருந்து பரந்தன் ஊடாகப் புதுக்குடியிருப்புக்கு சேவையில் ஈடுபடும் பஸ்கள் நேற்றுமுன்தினம் பரந்தன் பகுதியில் இடைமறிக்கப்பட்டு திருப்பியனுப்பப்பட்டதைக் கண்டித்தும் தமது பஸ்கள்சிலவற்றை பரந்தன் ஊடாக

21 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு மீனவர்களுக்கு பேச்சுக்கு அழைப்பில்லை

### ஜனவரி 20 இல் சென்னையில் பேச்சு

யாழ்ப்பாணம்.டிசெ.29
இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பான பேச்சு எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி சென்னையில் நடைபெறவுள்ளது என்று இந்திய அரசு கூறியுள்ளது.

எனினும் இந்தப் பேச்சுக்கு வடக்கு மாகாணத்தைச் சார்ந்த மீனவர் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு இதுவரை எந்த வித அழைப்பும் விடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழக மீனவர்கள் தொடர்சியாக இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவதாலும் கைது செய்யப்படுவதாலும் தமது வாழ்வாதாரம் பெரிதும் பாதிப்படைந்து வருவதாக இந்திய மீனவர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இலங்கைக் கடற்படையினரின் அடாவடியை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இந்திய மத்திய அரசிடம் அவர்கள் கோரிக்கை விடுத்ததுடன் வேலை நிறுத்தத்திலும் ஈடுபட்டனர்.

தமிழக மீனவர்கள் கச்சதீவுக் கடல் பகுதியில் எல்லைதாண்டி மீன் பிடியில் ஈடுபடுவதால் தமது கடல்வளம் பாதிப்படைவதாக இலங்கை மீனவர்களும் பதிலுக்குக் குற்றம் சாட்டுகின்றனர்.

இந்த நிலையில் இரு நாட்டு மீனவர்களதும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வகையில் முக்கிய பேச்சு ஒன்று எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கும் இந்திய மீனவர்

21 ஆம் பக்கம் பார்க்க

## தனது பிரிவுபசார விழாவில் உயிர்விட்டார் கிராம அலுவலர்

### சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் சோகம்

யாழ்ப்பாணம்,டிசெ.29
கடமையில் இருந்து ஓய்வு பெறுவதையொட்டி பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட பிரிவுபசார விழாவில் விழா நாயகரான கிராம அலுவலர் திடீரென ஏற்பட்ட மாரடைப்பினால் உயிரிழந்தார்.

இந்தச் சோகச் சம்பவம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

சண்டிலிப்பாய், கல்வளையைச் சேர்ந்த இராசையா நித்தியானந்தன் (வயது 60) என்ற கிராம அலுவலரே உயிரிழந்தவர் ஆவார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் ஆண்டு நிறைவு நிகழ்வும் சண்டிலிப்பாய் வடக்கு (ஜே/ 141) கிராம சேவகர் இராசையா நித்தியானந்தனின் பிரிவு உபசார நிகழ்வும் நேற்று சனிக்கிழமை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விழா நாயக

21 ஆம் பக்கம் பார்க்க

# கண்களை இழந்த முன்னாள் போராளியின் தொழில் நிலையத்தின் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், டிசெ.29

இரண்டு கண்களையும் இழந்த முன்னாள் போராளி ஒருவரின் தொழில் நிலையம் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டதுடன் அவருடைய மனைவி மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



இந்தச் சம்பவம் கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் இடம்பெற்றது.

முன்னாள் போராளியான தீபன் என்பவர் போரின் போது தனது இரண்டு கண்களை இழந்த போதும் தனது சுய முயற்சியால் தையலகம் ஒன்றை அமைத்து 13 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கி வருகிறார்..

கிளிநொச்சி கனகபுரம் வீதியில் அமைந்துள்ள மாதங்கி தையலகமே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

குறித்த தொழில் நிலையத்தை அவர் 15 லட்சம் ரூபா முற்பணம் செலுத்தி வாடகைக்கு நடத்தி வருகிறார். தற்போது தொழில் நிலையத்தை மீளத் தருமாறு அதன் உரிமையாளர் கோரியுள்ளார். இதனால் தான் செலுத்திய முற்பணத்தைத் தருமாறு அவர் கடை உரிமையாளரிடம் கேட்டிருந்தார்.

இது தொடர்பாக கிளிநொச்சி பொலிஸ்நிலையத்தில் 6 மாதங்களுக்கு முன்னர் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடந்த 21/2 வருடங்களாக குறித்த தொழில் நிலையத்தை நடத்தி வரும் இவர் முன்னர் இனந்தெரியாதோரால் மிரட்டப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் நேற்று சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் வாகனம் ஒன்றில் வந்திறங்கிய இனந்தெரியாதோர் தொழில் நிலையத்தை தாக்கியதுடன் அங்கிருந்த பெண்களை தகாத வார்த்தைகளால் பேசியதுடன் தொழில் முயற்சியாளரின் மனைவியையும் கோடரியால் தாக்கியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக 119 அவசர தொலைபேசி இலக்கத்துக்கு தகவல் வழங்கியதையடுத்து பொலிஸார் நேரடியாக வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (த-14)

# ஆங்கில வினாடி வினா போட்டி வட மாகாணம் தங்கம் வென்றது

யாழ்ப்பாணம்,டிசெ.29

இலங்கை கல்வி அமைச்சினால் ஜீ.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கு இடையே அகில இலங்கை ரீதியில் மாகாணங்களுக்கு இடையே நடத்தப்பட்ட ஆங்கில வினாடி வினா போட்டியில் யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய மாணவிகள் வட மாகாண அணி சார்பாக பங்கு பற்றி முதலாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இப் போட்டி கொழும்பு ரூபவாகினி கூட்டுத் தாபனத்தில் நேற்றுமுன்தினம், வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி இதன் இறுதிப்போட்டி நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த இறுதிப்போட்டியில் வட மாகாண அணி, மத்திய மாகாண அணி, ஊவா மாகாண அணிகள் மூன்றும் பங்கேற்றன.

இதில் சிறப்பாக தமது திறமையை வெளிப்படுத்தி வட மாகாண அணி முதலாம் இடத்தையும், மத்திய மாகாண அணி இரண்டாம் இடத்தையும், ஊவா மாகாண அணி மூன்றாம் இடத்தையும் பெற்றன.

வட மாகாண அணி சார்பாக யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையை சேர்ந்த சிவபாலன் - சுமித்தி ரேஜி, சிறிராஜ் - பைரவி ஆகியோரும், வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த கிருபாசுதன் - ஆரபியும் கலந்து கொண்டு வட மாகாணத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர் என்று வட மாகாண கல்வித் திணைக்கள ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சோமஸ்கந்தராஜா தெரிவித்துள்ளார். (ஒ-422)

# பொறுப்புக்கள் ஏதும் அற்ற அமைச்சராக சந்திரசேன

கொழும்பு, டிசெ.29

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய விசேட திட்டங்கள் தொடர்பான அமைச்சராக எஸ்.எம். சந்திரசேன நியமிக்கப்பட்ட போதும் அவரின் கீழ் திணைக்களங்களோ, துறைகளோ வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் சந்திரசேனவின் அமைச்சுக்கான பொறுப்புகள் மற்றும் துறைகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கடந்த 23ஆம்திகதி வெளியிடப்பட்டது.

இந்த அறிவிப்பில் திணைக்களங்களோ, அரச கூட்டுத்தாபனங்களோ, அதிகாரமிக்க நிறுவனங்களோ அமைச்சர் சந்திரசேனவுக்கு ஒதுக்கப்பட்டதற்கான பரிந்துரைகள் இடம்பெறவில்லை.

பொதுநலவாய நாடுகளின் மாநாடு தொடர்பான செய்திகளை சேகரிப்பதற்காக இலங்கை வந்திருந்த கெலும் மக்ரே உள்ளிட்ட சனல் 4 குழுவினர் வடக்கு நோக்கி ரயிலில் சென்ற போது அனுராதபுரம் பகுதியில் அவர்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தை அமைச்சர் எஸ்.எம். சந்திரசேனவே ஒழுங்கு செய்திருந்தார் என தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து சந்திரசேனவின் செயலைப் பாராட்டி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசேட திட்டங்களுக்கான அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியை பரிசளித்ததாக அறிவிக்கப்பட்டது.

ஆனாலும் இவருக்கென கடமைகள் பொறுப்பளிக்கப்படாததால் சந்திரசேனவும் கௌரவத்துக்குரிய அமைச்சராகவே நியமிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# ஐ.தே.கவின் பொது வேட்பாளர் சந்திரிகா?

கொழும்பு, டிசெ.29

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவை எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக நியமிப்பது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி கவனம் செலுத்தி வருவதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக, சந்திரிக்காவை களமிறக்கும் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர இந்த முயற்சியை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

பொல்கொடவில் அமைந்துள்ள மங்களவின் வீட்டில் நடைபெற்ற சந்திப்பின் போது இது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க, சந்திரிக்கா, கரு ஜயசூரிய, திஸ்ஸ அத்தநாயக்க உள்ளிட்ட பலரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்திரிக்காவை பொது வேட்பாளராக நியமிக்கும் திட்டத்தை இரகசியமாக பேணத் தீர்மானிக்கப்பட்ட போதிலும் ஊடகங்களுக்கு கசிந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# இஸ்ரேல், பலஸ்தீனம் செல்கிறார் ஜனாதிபதி

கொழும்பு,டிசெ 29

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அடுத்து மாதம் இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம் ஆகிய நாடுகளுக்கு பயணத்தை மேற்கொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நான்கு நாள்கள் பயணமாக அங்கு செல்லும் அவர், இரண்டு நாடுகளிலும் தலா இரண்டு நாள்கள் தங்கி இருப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது ஜனாதிபதி இஸ்ரேலின் ஜனாதிபதி சிமோன் பெரேஸ் மற்றும் பலஸ்தீன் ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் ஆகியோரைச் சந்திக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுக்களின் போது, இலங்கைக்கும் இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம் ஆகிய நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத் தொடர்புகளை அதிகரித்துக் கொள்வதற்கான வழிமுறைகள் தொடர்பில் கலந்துரையாடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் கலாசாரம், சுற்றுலா, மற்றும் தொழில் வாய்ப்புகள் தொடர்பிலும் பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளன.

ஜனாதிபதியின் இந்த பயணத்தின் போது, இலங்கையின் பிரதிநிதிகள் குழு ஒன்றும் ஜனாதிபதியுடன் செல்லும் என்று தெரிவிக்கப்படுகிறது. (த)

# விடுவிக்கப்பட்டார் தமிழ்ப் பிரபாகரன்



கொழும்பு,டிசெ 29

விசா நடைமுறைகளை மீறி செயற்பட்ட குற்றச்சாட்டுக்கமைய கைதுசெய்யப்பட்ட தென்னிந்திய ஊடகவியலாளர் மகா தமிழ் பிரபாகரன். நேற்று மாலை சென்னைக்கு திருப்பியனுப்பப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

நேற்று சனிக்கிழமை மாலை 6.45 மணிக்குச் சென்னைக்குப் புறப்பட்ட விமானத்திலேயே மகா தமிழ்ப் பிரபாகரன் திருப்பியனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (த)

# இலங்கையை ஆள்வது சம்பந்தனா? மஹிந்தவா?

## கேள்வி எழுப்புகிறது பொதுபலசேனா

கொழும்பு, டிசெ.29

"இலங்கையை ஆள்வது சம்பந்தனா? ஜனாதிபதி மஹிந்தவா? என்று சந்தேகமாகவே உள்ளது. பௌத்த மக்களின் ஆதரவு ஜனாதிபதிக்கு இருந்தும் அவர் கூட்டமைப்பை நாடுவது ஏன்" என பொதுபல சேனா அமைப்பு கேள்வி எழுப்பியுள்ளது.

இது தொடர்பில் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்ததாவது:

இலங்கையில் பிற மதத்தவரின் ஆதிக்கங்களை ஒரு போதும் நாம் அனுமதிக்கமாட்டோம். முஸ்லிம் தீவிரவாதத்தைப் பரப்புவதைப் போல் இந்துப் பிரிவினைவாதமும் தலை தூக்குகின்றது. இன்று கூட்டமைப்பினரின் பேச்சே நாட்டில் அதிகரித்துள்ளது. அரசின் செயற்பாடுகளை விடவும் சம்பந்தன், விக்னேஸ்வரன் ஆகியோரின் கருத்துக்கள் அதிகம் எடுத்துக் கொள்ளப்படுகின்ற நிலையில் நாட்டை ஆள் வது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவா? அல்லது சம்பந்தனா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

உண்மையில் சிறுபான்மை மக்களில் அக்கறை இருந்திருந்தால் கூட்டமைப்பினர் என்றோ அரசுடன் பேச்சு நடத்தி இருப்பார்கள். ஆனால் அவர்களின் நோக்கம் தனித் தமிழீழம் காண்பதுதான்.

அரசு கூட்டமைப்பினருடன் பேசி தீர்வு காண்பதைவிடவும் பௌத்த அமைப்புக்களுடன் பேசி நாட்டை பலப்படுத்த முடியும்.

அரசு தமிழ்த் தீவிரவாதத்துக்கு ஒரு போதும் இடமளிக்கக் கூடாது. தமிழர்கள் மீது அரசு அக்கறை கொண்டதாலேயே 30 வருடப் போர் நிறைவுக்கு வந்ததென்பதை ஒவ்வொரு தமிழ்க் குடிமகனும் மறந்து விடக் கூடாது - என்றார். (த-10)

## குருதிக்கொடை



வடமராட்சி,டிசெ.29

சுப்பர் மடம் சித்தி விநாயகர் விளையாட்டு கழக இளைஞர்களால் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை இரத்ததான நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

இந் நிகழ்வு சுப்பர் மடம் பொது நோக்கு மண்டபத்துக்கு இடம் பெறவுள்ளதால் இரத்ததானம் செய்ய விரும்பும் இளைஞர், யுவதிகள் காலை 9 மணியளவில் மண்டபத்திற்கு சமுகம் தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இளைஞர்களால் இவ் வருடம் இரண்டாவது தடவையாக இரத்த தானம் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (த-422)

# புதிய அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்படவேண்டும்

## அமைச்சர் வாசுதேவ கூறுகிறார்

கொழும்பு,டிசெ 29

இலங்கையில் புதிய அரசமைப்புச்சட்டம் உருவாக்கப்படவேண்டும் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார கோரிக்கை விடுத்துள்ளார்.



ஜனநாயக இடதுசாரி முன்னணியின் 14ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு புதிய நகர மண்டபத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்த வருடத்தில் அரசமைப்புச் சீர்த்திருந்தங்களுக்கான அழுத்தங்களை ஜனநாயக இடதுசாரி முன்னணி கொடுக்கும்.

அரசமைப்பு சீர்த்திருந்தங்களுக்கு அழுத்தம் கொடுக்கும் அதேவேளையில், ஜனநாயக இடதுசாரி முன்னணி தற்போதைய தேர்தல் முறையையும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையையும் எதிர்க்கின்றது. எமது கட்சி இதற்கான உறுதியான முனைப்புகளை மேற்கொள்ளும். மக்களின் தீர்மானத்துக்கு அமைய நாடு நடவடிக்கை எடுக்கும்-என்றார். (த)

# தேர்தல் திகதி வெளியான பிறகே ஜனாதிபதி வேட்பாளர் அறிவிப்பு

## ஐ.தே.கவின் தலைமைத்துவ சபை தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட பின்னரே ஜனாதிபதி வேட்பாளராக யாரை களமிறங்குவது என்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி முடிவெடுக்கும் என்று அக்கட்சியின் தலைமைத்துவ சபை உறுப்பினரான கரு ஜயசூரிய எம்.பி. நேற்று உதயனிடம் தெரிவித்தார்.

உரிய நேரத்தில் உரிய நபரை உரிய வகையில் ஐக்கிய தேசியக் கட்சி நியமிக்கும் என் றும் அவர் கூறினார்.

2014 இல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்கவை களமிறக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முடிவெடுத்துள்ளது என்றும், இதற்கான பேச்சுகள் இடம்பெற்றுள்ளன என்றும் வெளியாகியுள்ள செய்திகள் குறித்து வினவியபோதை கரு எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

## யாழுக்கு புதிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்

வலி.வடக்கு, டிசெ.29
யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்கு புதிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக விமலசேன பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டதுடன் நேற்று முன் தினம் பகல் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலும்கலந்து கொண்டார்.
இவர் முன்னர் மாத்தறை பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராகக் கடமையாற்றி தற்போது யாழ்ப்பாணத்தின் சிரேஷ்ட பொலிஸ்அத்தியட்சகராக இருந்த முகமட் ஜிப்றிசின் இடத்துக்கு மாற்றலாகி வந்துள்ளார்.
ஏற்கெனவே யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக இருந்த முகமட் ஜிப்றி தற்போது கொழும்பு பொலிஸ் தலைமையகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டு பொலிஸ் நலன்புரிப் பிரிவின் பணிப்பாளராகக் கடமை ஏற்றுள்ளார். (த-86)

# தனியார் பாடசாலை ஆசிரியருக்கும் முதற்கட்டமாக நேர்முகப் பரீட்சை

### ஆசிரியர் பயிற்சிக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்காக

அச்சுவேலி, டிசெ.29
ஆசிரியர் பயிற்சிக்கு ஆள் சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சை கொழும்பு கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விப் பிரிவில் நடைபெறவுள்ளது.
தனியார் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசி ரியர்களுக்கு முதல் கட்டமா கவும் அடுத்து அரச பாடசா லைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது.
ஆசிரியர் கலாசாலைகளுக்கும் 2014 இல் புதிய ஆசிரிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கு கல்வி அமைச்சு வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரம் செய்ததன் பிரகாரம் அரச பாடசாலைகளில் மூன்று வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்களும் தனியார் பாடசாலைகளில் ஒரு வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்களும் ஆசிரியர் பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.
இந்த வருடம் தமிழ்மொழி மூலப் பயிற்சிக்கு 300 பேர் மட்டிலேயே விண்ணப்பித்துள்ளனர். இவர்களில் விண்ணப்ப நிபந்தனைக்கு உள்ளடங்கிய வர்களே பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.
தமிழ் மொழி மூலமான ஆசிரியர் பயிற்சி கோப்பாய், மட்டக்களப்பு, அட்டாளைச்சேனை, கொட்டகலை ஆகிய நான்கு இடங்களில் அமைந்துள்ள ஆசிரிய கலாசாலைகளில் வழங்கப்படுகின்றது. சிங்கள மொழி மூலம் நாடளாவிய ரீதியில் ஒன்பது ஆசிரிய கலா சாலைகள் செயற்படுகின்றன.
இந்தமுறை பலாலி ஆசிரிய கலாசாலைக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.
புதிய பயிற்சி நெறிகளுக்கு ஆசிரியர்கள் 2014 இரண்டாம் தவணையில் இருந்து இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.
தற்போது பயிற்சி பெற்றுக் கொண்டிருப்ப வர்களின் பயிற்சிக் காலம் 2014 மே 15 ஆம் திகதியுடன் நிறை வடைகின்றது.
அதன் பின்னரே புதியவர்கள் பயிற்சிக்கு இணைத்துக் கொள்ளப் படவுள்ளனர்.
ஆசிரியர்களைப் புதிதாக நியமனம் செய்யும் நடைமுறையில் தேசியக் கல்வியியல் கல்லூரிகள் அறிமுகம் செய்யப்பட்டு பல்கலைக்கழக அனுமதிக்கு அடுத்த நிலையில் உள்ள இசற்புள்ளி நிலையில் இருந்து பாட ரீதியில் ஆள் தெரிவு நடைபெறுவதோடு.
தேசிய கல்வியியல் கல்லூரிகளில் இரண்டு வருடங்கள் பாடரீதியிலான தொழில்சார் கல்வி போதனையோடு ஒரு வருட உள்ளக பயிற்சியுடன் "தேசிய ஆசிரியர் கல்வி டிப்ளோமா" சான்றிதழுடன் இலங்கை ஆசிரியர் சேவை தரம் 3: I இல் உள்ளீர்ப்பு செய்யப்பட்டு சேவையில் அமர்த்தப்படுகின்றனர். நாடளாவிய ரீதியில் 10 தேசிய கல்வியியல் கல்லூரிகள் செயற்படுகின்றன.
தமிழ் மொழி மூல ஆசிரியர் பயிற்சிக்கு 300 பேர் மட்டில் விண்ணப்பித்திருப்பதால் அதில் தெரிவு செய்யப்படுபவர்களை உள்ளடக்கி 4 தமிழ் மொழி ஆசிரியர் கலாசாலைகளையும் உரிய முறையில் செயற்பட வைப்பதில் நிர்வாக ரீதியிலான நடைமுறைச் சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (வ-11)

"_"

**இந்த வருடம் தமிழ்மொழி மூலப் பயிற்சிக்கு 300 பேர் மட் டிலேயே விண்ணப்பித்துள்ள னர். இவர்களில் விண்ணப்ப நிபந்தனைக்கு உள்ளடங்கிய வர்களே பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.**

## இலவச ஆங்கில மொழி பயிற்சிப் பட்டறை

தென்மராட்சி, டிசெ.29
ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு இரண்டு நாள்கள் இலவச ஆங்கில மொழிப் பயிற்சிப் பட்டறை மீசாலை உயர் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.
நாளை திங்கட்கிழமையும் மறுதினம் செவ்வாயும் பயிற்சிப் பட்டறை நடத்தப்படவுள்ளது.
ஆங்கில மொழிப் பயிற்சிக் கல்லூரியின் அனுசரணையுடன் மீசாலை உயர் கலைக் கல்லூரியினால் இப்பயிற்சிப் பட்டறை நடத்தப்பட வுள்ளதால் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களைப் பங்குபற்றுமாறு நிர்வாகி எஸ். வீரசுதாகரன் அறிவித்துள்ளார். (ஒ-9)

## சட்ட மாணவர் அனுமதி பயிற்சிப்பட்டறை



திறந்த பல்கலைக்கழக சட்ட மாணவர் அனுமதிக்கான பயிற்சிப்பட்டறை நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி குமார சாமி மண்டபத்தில் நடை பெற்றது.
சட்டத்தரணியும், சத்திய ஆணையாளரும் கம்பனிப் பதிவாளருமான அல்ஹாஜ் எம்.ஐ.உவைசுர்ரஷ்மான் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்தப் பயிற்சிப் பட்டறையில் முப்பதுக்கும் அதிகமான சட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். பொதுஅறிவு, பொது உளச் சார்பு, மொழி தொடர்பாக விளக்கங்கள் அளிக்கப் பட்டன. சட்டத்துறைசார்ந்தவர்கள் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர். பயிற்சிப் பட்டறை இன்றும் இடம்பெறும். (வ-7)

## அனுமதிக்காத இடங்களில் நடைபாதை கடைக்கு தடை

யாழ்ப்பாணம்,டிசெ.29
யாழ்.நகரில் மாநகர சபையால் அனுமதிக்கப்படாத இடங்களில் நடைபாதைக் கடைகளை அமைத்து வியாபாரத்தில் ஈடுபடும் வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்.மாநகர சபை அறிவித்துள்ளது.
நத்தார் பண்டிகை மற்றும் தைப்பொங்கலை முன்னிட்டு யாழ்.நகரின் பிரதான வீதிகளில் ஆங்காங்கே புதிது புதிதாக நடைபாதைக் கடைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. நடைபாதைக் கடைகளை அமைத்து வியாபாரம் செய்வதற்கு யாழ்.மாநகர சபையால் குறிக்கப்பட்ட வீதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.
எனினும் தென்னிலங்கைப் பகுதிகளில் இருந்து வரும் வர்த்தகர்கள் தமது வாக னங்களை ஆங்காங்கே நிறுத்தி நடைபாதை வியாபாரம் செய்து வருகின்றனர்.
இதன் காரணமாக யாழ்ப்பாண வர்த்தக நிலையங்களது வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டுள்ளது.
பண்டிகைக் காலம் என்பதால் யாழ். நகருக்குள் பெருமளவான மக்கள் வருகை தரும் நிலையில் திடீரென முளைக்கும் நடைபாதைக் கடைகளால் நகர் வர்த்தகர்கள் பெரும் பாதிப்பை எதிர்கொள்கின் றனர்.
இந்த நிலையில் அனுமதியற்ற இடங்களில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள யாழ். மாநகர சபை தடை விதித்துள்ளது. (வ-14)

## இடமாற்றங்கள் ஒத்திவைப்பு சாதகமான பதில் நாளை

யாழ்ப்பாணம், டிசெ.29
மாவட்டங்களுக்கு இடையேயான இடமாற்றங்களை இரண்டாம் தவணைக்கு ஒத்தி வைக்கப்படுவதை ஆசிரியர்கள் எதிர்த்ததால் திங்கட்கிழமை இதற்குச் சாதகமான பதில் தருவதாகக் கூறப்பட்டுள்ளது.
அன்றைய தினம் பாதிக்கப்பட்ட அனைத்து ஆசிரியர்களும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலனின் அலுவலகம் முன்பாக ஒன்று கூடவுள்ளனர்.
இடமாற்றம் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படாது விடில் மாற்று நடவடிக்கைகள் குறித்து முடிவு எடுக்கப்படும் என்று பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவித்தனர்.
வருடாந்த இடமாற்ற அடிப்படையில் வெளி மாவட்டங்களில் சேவைக்காலத்தை நிறைவு செய்து விட்டு யாழ். மாவட்டத்துக்கு மீளத்திரும்பிய நிலையில் இடமாற்றம் இரண்டாம் தவணைக்கு ஒத்தி வைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டதால் குறித்த ஆசிரியர்கள் சிக்கலுக்கு உள்ளாகினர்.
வடமாகாண கல்வி அமைச்சு அலுவலகம் முன்பாக பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் நேற்று முன்தினம் முற்பகல் ஒன்று கூடினர்.
அவர்களது பிரச்சினை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்துரையாடினார். பின்னர் வடமாகாண அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் ஆசிரியர்களை அழைத்து கலந்துரையாடினார்.
அதில் வடமாகாண சபை உறுப்பி னர்களான பா.கஜதீபன், சித்தார்த்தன் ஆகியோரும் கலந்துகொண்டு ஆசிரியர்களது பிரச்சினைகள் பற்றிக் கேட்டறிந்தனர்.
அதன்போது ஆசிரியர்களது கோரிக்கை தொடர்பில் சாதகமாகப் பரிசீலித்து வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவின் இறுதி முடிவின் படி நாளை திங்கட்கிழமை பதில் அளிப்பதாக ஆசிரியர்களுக்குக் கூறப்பட்டது.
அன்றைய தினம் வலயக் கல்விப் பணிப்பாளர்களுடனும் சம்பவம் பற்றி கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. (வ-4)

## கடைகளுக்கு முன்னால் வைத்து பொருள்கள் விற்க அனுமதி

### பண்டிகைக் காலத்தை முன்னிட்டு

யாழ்ப்பாணம், டிசெ.29
பண்டிகைக் காலத்தை முன்னிட்டு யாழ்.நகர் காங்கேசன் துறை வீதியிலிருந்து யாழ். பஸ் நிலையம் வரையான மின்சாரநிலையவீதிக்குஇடைப்பட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக பொருள்களை விற்பனை செய்வதற்கு நேற்று சனிக்கிழமை தொடக்கம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
யாழ்.மாநகர சபை மற்றும் யாழ்.வர்த்தகர் சங்கம் என்பன இணைந்து நடத்திய கலந்துரையாடலுக்கு அமைவாக யாழ். வர்த்தகர்களது வர்த்தக நடவடிக்கைகளுக்கும் சாதக மாக நேற்று சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
பண்டிகைக் காலத்தை முன்னிட்டு வர்த்தக நிலையங்கள் தமது நிலையங்களுக்கு முன்பாக மூன்று அடிக்கு மேல் நீண்டு செல்லாது புடைவை கள், அழகு சாதனப் பொருள் கள் உள்ளிட்ட விற்பனைப் பொருள்களைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்ய முடியும். (வ-14)

புத்தாண்டில் புதுப்பொலிவு பெற்றிடுங்கள்
அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எமது இதயங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்.
SISIL WORLD
The World at your doorstep
20% Discount Low Interest Scheme
Rs. 58,999/- NAPLE (3+1+1) WF-NAPLE Monthly Rs. 2,727/-
10% Discount or coffee table FREE
Rs. 62,999/- JOVANA (3+1+1) WF-JOVANA Monthly Rs. 4,384/-
Rs. 29,999/- LILY (5 Pcs) WFI-LILY-DRS Monthly Rs. 2,389/-
SALE
Rs. 23,999/- CAMELIA (1 Pcs) WF-CAMELIA Monthly Rs. 1,855/-
SALE
MIKO LF-MIKO-WD Rs. 15,999/- Monthly Rs. 1,237/-
SISIL WORLD யாழ்ப்பாணம் காட்சியறையின் இரண்டாண்டு பூர்த்தியை முன்னிட்டு இம்மாதம் 16ஆம் திகதியிலிருந்து 31ஆம் திகதி வரை கொள்வனவு செய்யும் அனைத்து பொருள்களுக்கும் 7.5% வீதம் வரை விசேட விலைக் கழிவு அல்லது விசேட பரிசுப் பொருள்.
அனைத்துவிதமான வீட்டு மற்றும் அலுவலக தளபாடங்களையும் தற்பொழுது விசேட கழிவு விலையில் எமது காட்சியறையில் கொள்வனவு செய்யலாம். சிசில் வேர்ட் இன் தளபாட விற்பனைக் கூடம் தற்பொழுது புதுப்பொலிவுடன்.
சிசில் வேர்ல்ட்
இல. 106, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9291

## மரண அறிவித்தல்

### குருசாமி கனகசபாபதி



மண்டைதீவு. 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 197A பொற்பதி வீதி, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட குருசாமி கனக சபாபதி (ஓய்வுபெற்ற உதவி விவசாயப் பணிப்பாளர்) நேற்று (28.12.2013) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருசாமி - சின்னம்மா தம்பதியரின் அன்பு புத்தரனும் காலஞ்சென்றவர்களான இராமநாதன் - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், மங்கையர்க்கரசி (சுதா - கனடா), கலையரசி (கௌரி), கௌரீசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் உலகராஜா (கனடா) ஸ்ரீபாதன் (ஹரணி காட்வெயர், ஸ்ரான்லி வீதி, யாழ்ப் பாணம்), சோதிமாலா (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கண்ணகை (கனடா), சரோஜாதேவி (ஓய்வுபெற்ற அதிபர்), அருணாசலம் ( உரும்பிராய்), காலஞ்சென்ற நிர்மலா மற்றும் திலகவதி (கனடா), கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், பரிமளகாந்தன் (கனடா), செபரெட்ணம், மலர்தேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை), பாக்கியசீலன் (கனடா).காலஞ்சென்ற கனகநாதன் மற்றும் யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆரணி (கனடா), பவதாரணி (கனடா), ஹரிணி, ஹரிகரன், மாதேசன், ஜெகதேசன், கஜதேசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2013) ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மண்டைதீவு தலக்கீரி இந்து மாயனத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**197, A பொற்பதி வீதி,கோண்டாவில் கிழக்கு** (41815) **தகவல்: குடும்ப உறுப்பினர்கள்**


## பல்கலை தொழிலாளர் கைவிட்டனர் விரதத்தை

யாழ்ப்பாணம்,டிசெ.29

நிரந்தர நியமனம் கோரி உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய யாழ். பல்கலைக்கழக தொழிலாளர்கள் நேற்று தமது உண்ணா விரதப் போராட்டத்தை நிறைவு செய்தனர். பல்கலைக்கழகத்தினால் இடைநிறுத்தப்பட்ட குறித்த 17 பேரினதும் பெயர்ப்பட்டியலை அமைச்சுக்கு அனுப்பி வைக்கும் பொருட்டு, அதற்கு முன்னேற்பாடாக பெயர் விவரங்களைப் பரிசீலிப்பதற்கென மூன்று பேர் கொண்ட குழு பேரவையினால் நியமிக்ககப்பட்டுள்ளது. தற்போது பல்கலைக்கழகத்தில் தொழிலாளர் வெற்றிடம் இல்லை. எனவே அவ்வாறு வெற்றிடம் ஏற்படும் போது அவர்களது பெயர்களை பரிந்துரை செய்ய முயற்சி மேற்கொள்ளப் படுகிறது என்று போராட்டம் நடத்தியவர்களுக்கு கூறப்பட்டது. இந்த்நிலையில் பிற்பகல் போரட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. (ஐ-4)

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி நமசிவாயம்



அரசடி அம்மன் வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரஸ்வதி நமசிவாயம் நேற்று ( 28/12/2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிட்டினர் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நமசிவாயத்தின் அன்பு மனைவியும், கோதைநாயகி, யோகநாயகி, சாந்தநாயகி, மகிந்தன்( mines advisory group) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுந்தரமூர்த்தி (விசுவமடு), சிவபாதலிங்கம் (முன்னாள் டிப்போ பரிசோதகர், காரைநகர்) மகேந்திரன் (விசுவமடு) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரசன்னா (சிங்கப்பூர்) சிந்துஜா (யாழ். பல்கலைக்கழகம் மருத்துவ ஆய்வுகூடம், விஞ்ஞானம்) சஞ்சுதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ( 29/ 12/2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காகத் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்ள அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

**அரசடி அம்மன் வீதி, திருநெல்வேலி** **ந.மகிந்தன் (மகன்) 077 8012521**

## மரண அறிவித்தல்

### சின்னையா நல்லையா



பலாலி கிழக்கை பிறப்பிடமாகவும் சங்கானை வீதி அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா நல்லையா நேற்று (28/12/2013) சனிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும் அம்பிகாதேவி (சுவிஸ்) கலா ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராச குலேந்திரன் (சுவிஸ்) கருனானந்தன் ( நீர் வழங்கல் சபை) ஆகியோரின் மாமனாரும் சாரா, அபிரா, சாரங்கா, சுஜானா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29/12/2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அச்சுவேலி நீர்த்தாங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

**சங்கானை வீதி, அச்சுவேலி.** **குடும்பத்தினர்**

## விற்பனை பிரதிநிதிகள் தேவை

பிரபல சிறுவர் சஞ்சிகையினை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் விநியோகிப்பதற்கு விற்பனை பிரதிநிதிகள் தேவை. விற்பனை துறையில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப் படும் **கவர்ச்சிகரமான சம்பளப் பொதி வழங்கப்படும்**

**தொடர்பு : 072 9228129**

## வீடு வாடகைக்கு

கொக்குவில் இந்துக்கல்லூரி அருகில் ஆடியபாதம் வீதியில் வீடு வாடகைக் குண்டு. **தொடர்பு : 077 3151545, 077 2718870**

## PERSONAL CLASS ENGLISH

அனுபவம் வாய்ந்த பட்டதாரி ஆசிரியரால் தேவைப்படும் திறன்களில் குறுகிய காலத்தில் சிறந்த பயிற்சிகள்

T.P : 077 9309740

## மரண அறிவித்தல்

### லீலாவதி விஜயரத்தினம்



அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட லீலாவதி விஜயரத்தினம் நேற்று முன்தினம் (27.12.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான கணபதிப் பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்புமகளும் விஜய ரத்தினத்தின் அன்பு மனைவியும் சிவஞான சுந்தரம், புஸ்ப லட்சுமி ஆகியோரின் அன்புச் சகோ தரியும் சுகுணா (லண்டன்), சதீஸ் (கனடா), தபேஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயும் செல்வ முருகானந்தம், றாஜினி, தயந்தினி, சுகிர்தா, பங்கஜன் ஆகியோரின் அன்புமாமியும் புண்ணியா, சுபிலன், ஆகாஷ் அபிசேக், றிகேஸ், தாட்சாயினி பிரவர்த்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நடராசா, விஜயராணி, காலஞ் சென்றவர்களான குண லட்சுமி, சீவரத்தினம், ஜெயரத்தினம் மற்றும் நவரத்தினம் பாக்கிய லட்சுமி, கனகலட்சமி, ஆகியோரின் மைத்துனியும் பிருந்தா, யுவனா ஆகியோரின் பெரிய தாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை மறுதினம் (31.12.2013) செவ்வாய்க் கிழமை லண்டனில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:

அச்சுவேலி வடக்கு,
அச்சவேலி

க. சிவஞானசுந்தரம்
(சகோதரன்)

## மரண அறிவித்தல்

### முதலி மார்க்கண்டு



விடத்தற்பளை உசனை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முதலி மார்க்கண்டு நேற்று (28.12.2013) சனிக் கிழமை காலமானார்.


அன்னார் காலஞ் சென்றவர்களான முதலி தங்கம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ் சென்றவர்களான அப்புக் குட்டி - பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் மல்லிகாதேவி (தாதி - உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்தியசாலை) அவர்களின் பாசமிகு கணவரும் சிவம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு தம்பியாரும் கனகம்மா காலஞ்சென்றவர்களான நல்லம்மா, கனகசபை, பத்மாவதி மற்றும் யமுனா ராணி ஆகியோரின் அன்புமைத்துனரும் குணத்தின் சகலனும் மாவார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல்லத்தில் நடைபெற்று இன்று (29.12.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக உசன் ஈச்சங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

**விடத்தற்பளை வீதி, உசன் மிருசுவில்.** **குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



### இராசையா நித்தியானந்தன்

(கிராம அலுவலகர் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்)

கல்வளை சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரசையா நித்தியானந்தன் (கிராம அலுவலர், சண்டிலிப்பாய் வடக்கு. J/141) நேற்று (28.12. 2013) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரா சையா-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், துவாரகா தேவி, மின்னற்கொடி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (29.12.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சண்டிலிப் பாய் சங்கம்புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**கல்வளை, சண்டிலிப்பாய்.**

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் சின்னத்தம்பி



வரணி இயற்றாலையைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சின்னத்தம்பி நேற்று (28.12.2013) சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சீதேவிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், சரஸ்வதியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், லக்சியாவின் பாசமிகு தந்தையும், சின்னத்தம்பி - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், பரமேஸ்வரி, மீனாட்சிப் பிள்ளை, பெரியநாயகி, சின்னத்தங்கம் (பிரான்ஸ்), சிறீஸ்கந்த ராசா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுப்பிர மணியம், கந்தசாமி, வடிவேலு, காலஞ்சென்ற நல்லம்மா (ராணி), சாந்தம்மா (ஜேர்மனி), யோகராசா, மகேசு, விக்னேஸ்வரன், விக்கினேஸ்வரன் (பிரான்ஸ்), லோகேஸ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் மீசாலை வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை வடக்கு, 0776332766. தகவல்:
கொடிகாமம். 0772190464. குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி மகேந்திரன்



34 யாழ். வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட சின்னத்தம்பி மகேந்திரன் நேற்று (28.12.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நாகேஸ்வரி நீற்றாவின் அன்புக்கணவரும் நவீனதாஸ் (இத்தாலி), சத்தியதாஸ் (ஹொலண்ட), துக்கதாஸ் ( ஹொலண்ட்), கவாஸ்கரன் (கொலண்ட்), ஜீவன் (கொலண்ட்) அனுமாமா (ஜேர்மனி), மதன் (பிரான்ஸ்), அனுசா, சுபாஸ்கரன், அனிற்றா, திலீபன் பிரசாந் ஆகியோரின் அன்புதந்தையும் சுஜி (கொலண்ட்), றிசி (கொலண்ட), அனித்தா (கொலண்ட), ஜெரின் (ஜேர்மனி), தயானந்தன், சிவகரன், சயந்தினி, சுகந்தினி, உசா ஆகியோரின் அன்புமாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மாயனத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

**34 யாழ். வீதி**
**யாழ்ப்பாணம்**

**து. விக்னேஸ்வரன் (சகோதரன்)**
**077 5105713, 077 5314697**



ஆழிப்பேரலையின்போது இன்னுயிர் நீத்த மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கான அஞ்சலி நிகழ்வும் ஒளிவிழா நிகழ்வும் கடந்த வியாழக்கிழமை தென்மராட்சி கல்வி வலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலய பங்குத்தந்தை அருட்பணி யோசப் பிரான்சிஸ் அடிகள், தென்னிந்திய திருச்சபையின் சாவகச்சேரி தேவாலய போதகர் வண.ஏ.கே.செல்வநாயகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வலய ஊழியர் நலன்புரி சங்கத் தலைவர் சு.சுந்தரசிவம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் உட்பட பலர் உரையாற்றினர்.

வலய உத்தியோகத்தர்களின் வழிபாட்டு நிகழ்வுகளும், நத்தார் தாத்தா சிறுவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன. (ந-9)

# கிராம அபிவிருத்திச் சங்கங்கள் சிறப்புடன் செயற்பட வேண்டும்

வரணி, டிசெ.29

கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மக்களின் தேவைகளை நிறைவேற்ற பாடுபடல் வேண்டும். இந்த விடயம் தொடர்பில் விடத்தற்பளை கிராம அபிவிருத்திச் சங்கம் சிறந்த செயற்பாடுகளைக் கொண்டு இயங்குகின்றது. ஏனைய சங்கங்களும் அப்படியான செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும் என்று தென்மராட்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அலுவலர் எஸ்.ரவிகரன் தெரிவித்தார்.

தென்மராட்சி பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது. அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சங்க நிர்வாகிகள் சங்க யாப்பின்படி நடவடிக்கைகளை செயற்படுத்த வேண்டும். சங்கங்களின் உள்ளக முரண்பாடுகளை நீக்கி சமுதாய வளர்ச்சிக்காக செயற்படவேண்டும். விடயங்களை சட்டரீதியாக எதிர்கொள்ள வேண்டும். நிர்வாக சபையினரின் அனுமதியுடன் தான் நிதிசார் விடயங்களை நிறைவேற்ற வேண்டும். வேலைத்திட்டங்கள் தொடர்பில் நிர்வாக சபையினரின் ஒத்துழைப்போடு அவற்றைப் பகிரங்கப்படுத்தி செயற்படுத்த வேண்டும். ஒப்பந்தங்கள் சார்பிலும் அந்த நடைமுறை பின்பற்றப்படல்வேண்டும். சங்க அங்கத்தவர்களின் கடன் திட்டங்கள் தொடர்பில் நிர்வாக சபை கூட்டப்பட்டு அதன் அனுமதி பெறப்படல் வேண்டும்.

ஒப்பந்தங்கள் தொடர்பில் நிர்வாக சபைக்கு தெரியப்படுத்த வேண்டும். தலைவர் செயலாளர்கள் தன்னிச்சையாகச் செயற்பட முடியாது.

அரச நிதி தொடர்பில் சகல விடயங்களுக்கும் நிர்வாகம் பொறுப்புக் கூற வேண்டும். சட்டரீதியாக பதவிக் காலம் முடிவடைந்த சங்கங்கள் புனரமைக்கப்படல்வேண்டும். சங்க சமாசத்தில் பல கிராம அபிவிருத்திச் சங்கள் இதுவரை அங்கத்தவராக சேரவில்லை. மாதர் சங்கங்களின் ஊடாக செயற்படுத்தப்படும் வாழ்வாதார கடன் திட்டங்கள் பெற்ற 31 சங்கங்களில் 20 சங்கங்கள் சிறப்பாகச் செயற்படுகின்றன. புதிதாக வாழ்வாதார கடன் திட்டங்களைப் பெற சங்கங்களை வலுவுடையதாக மாற்ற வேண்டும் என்றார் அவர். (ந-122)

## மாணவர் கௌரவிப்பு

தென்மராட்சி, டிசெ.29

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினர் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளைக் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 7 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு சங்க மண்டபத்தில் இடம்பெறும்.

சங்கத் தலைவர் செ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதனும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக மக்கள் வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் இரத்தினகாந்தன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

நிகழ்வில் சங்கத்தில் கடமையாற்றி இளைப்பாறிய மற்றும் விலகிய பணியாளர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். (ந-9)

# இலவச கற்கைநெறிகள் ஜனவரியில் ஆரம்பம்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை இலவசமாக பத்து கற்கைநெறிகளை எதிர்வரும் ஜனவரியில் யாழ். மாவட்டத்தில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் ஆரம்பிக்கவுள்ளது.

கட்டட நிர்மாண தொழில்நுட்ப உதவியாளர், வீட்டு மின்னிணைப்பாளர், காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), மரவேலை தொழில் நுட்பவியலாளர் (தளபாடம்) நீர்க்குழாய் பொருத்துநர், வெளியிணைப்பு இயந்திரம் திருத்துநர், அலுமினியம் பொருத்துநர், வீட்டு மின்சார உபகரண திருத்துநர், விவசாய உபகரண திருத்துநர், மின் மோட்டர் கம்பி மீள் முறுக்குநர் (றிவைண்டிங்) ஆகிய கற்கை நெறிகளும் தேசிய தொழில் தகைமை சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.

இந்தக் கற்கை நெறிகளை கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவுகளை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் உள்ள அலுவலகத்தில் மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

# இராமகிருஷ்ண மிஷனால் மாணவனுக்கு நிதியுதவி

வலி.தென்மேற்கு, டிசெ.29

அன்னை ஸ்ரீசாரதா தேவியின் 161 ஆவது ஜெயந்தி தினம் உரும்பிராயிலுள்ள இராம கிருஷ்ண மிஷனில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழகஓய்வுநிலை இந்து நாகரிகத்துறை பேராசிரியர் கலாநிதி திருமதி கலைவாணி இராமநாதன் சமுதாய மறுமலர்ச்சிக்கு அன்னையின் வாழ்க்கையும் உபதேசமும் என்ற தலைப்பில் உரையாற்றினார்.

அதைத்தொடர்ந்து, தாவடி இராம கிருஷ்ண மிஷன் சமிதி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சி இடம்பெற்றது. மாணவர்களின் கல்வி வளர்ச்சி கருதி கற்றல் உபகரணங்களும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு நிதியுதவியும் வழங்கப்பட்டது.

இதேவேளை, இருதய சத்திர சிகிச்சை செய்து கொள்வதற்காக தாவடி இந்து தமிழ்கலவன் பாடசாலை மாணவன் ஒருவருக்கு சமிதியினால் நிதியுதவியும் வழங்கப்பட்டது. (ந-115)

# இந்த வீதிக்கு வருமா விடிவு



யாழ்ப்பாணம், டிசெ.29

குன்றும் குழியுமாக நீண்ட காலமாக திருத்தப்படாத நிலையில் வாகனப் போக்குவரத்துச் செய்ய முடியாது மோசமாகப் பாதிக்கப்பட்டு இருக்கிறது யாழ். நகர் இராசாவின் தோட்ட வீதி. இந்த வீதியில் குப்பைகள் கொட்டப்பட்டு வீதிகளில் சிதறி மக்கள் நடமாட முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

வீதியில் இந்தப் பகுதி குழந்தைகளின் மலக் கழிவுகளும் போடப்படுகின்றன. அவற்றை அந்தப் பகுதியில் திரியும் நாய்கள் இழுத்து நடு வீதியில் போடுகின்றன. வீதிகளில் பொதுமக்கள் கழிவுப் பொருள்களைப் போட வேண்டாம் என மாநகர சபை அறிவித்தல்களை விடுத்த போதும் பொதுமக்கள் அவை குறித்து அக்கறை காண்பிப்பதில்லை.

மாநகர சபை ஒழுங்காக குப்பைகளை அகற்றாததால் சுகாதாரச் சீர்கேடுகள் இடம்பெறுவதாக பொதுமக்களும் பொதுமக்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளால் மாநகர சபை சிரமத்துக்குள்ளாவதாக உத்தியோகத்தர்களும் பரஸ்பரம் குற்றம் சுமத்துவது தான் தற்போதைய நிலை என இந்தச் செயற்பாடுகளை விரும்பாத மக்கள் தெரிவிக்கின்றனர். (ந-7)

# நெல் வயல்களுக்கு நீர்பாய்ச்சும் நடவடிக்கை

மட்டுவில் பகுதியில் உள்ள நெல் வயல்களுக்கு கிணறுகள் மற்றும் குளங்களில் இருந்து நீர் பாய்ச்சப்பட்டுவருகிறது. இந்த வருடம் மழை போதிய அளவு பெய்யாததால் பயிர்கள் வாடும் நிலை காணப்பட்டதால் நெற் செய்கையாளர்கள் நீரிறைக்கும் இயந்திரங்கள் மூலம் வயல்களுக்கு நீர் பாய்ச்சி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ந-9)

## இலவச மருத்துவ சேவையில் பெருமளவானோர் பங்கேற்பு

தென்மராட்சி, டிசெ.29

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரும் சாவகச்சேரி பொலிஸாரும் இணைந்து இலவச மருத்துவ பரிசோதனை முகாமை வெள்ளிக்கிழமை கைதடி-நுணாவில் அ.த.க.பாடசாலையில் நடத்தினர்.

மருத்துவ பரிசோதனை முகாமில் கண், இரத்த அழுத்தம், நீரிழிவு, வாய்ப்புற்று, பொது மருத்துவம் ஆகிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

கண் பரிசோதனையில் பார்வையில் குறைபாடு காணப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ்வரும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

பரிசோதனை முகாமில் நுணாவில் மேற்கு, தென்மட்டுவில் கைதடி-நுணாவில் சந்திரபுரம், மட்டுவில்-நுணாவில் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த பெருமளவானோர் கலந்துகொண்டு பயன் பெற்றனர். (ந-9)

## பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.29

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பும் உள்ளூராட்சி வார நிகழ்வும் நாளைமறுதினம் செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்குபிரதேசசபைதலைமை அலுவலகத்தில் நடைபெறும்.

பிரதேசசபைத்தலைவர் ம.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கொன்ஸ்ரன்ரைன் ஜக்ஸீலும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்டச் செயலக கணக்காளர் செ.ரகுநாதன், யாழ்.பல்கலைக்கழக ஓய்வு நிலை பதிவாளர் மு.சின்னராசா ஆகியோர் கலந்துகொள்வர். நிகழ்வில் 'அனலை' என்னும் சஞ்சிகை வெளியீடு இடம்பெறும்.

தேசிய வாசிப்பு மாதம், உள்ளூராட்சி வாரம் ஆகியவை தொடர்பாக நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கு பரிசில்கள் வழங்கலும் பிரதேச சபை உத்தியோகத்தர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (ந-9)

# மணிவாசகர் சபை நடத்திய போட்டி முடிவுகள்

காரைநகர்,டிசெ. 29

காரைநகர் மணிவாசகர் சபை கடந்த மாதம் காரைநகர் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்திய சைவசமயப் பாடப் பரீட்சை பெறுபேறுகள் வருமாறு:-

**தங்கப்பதக்கம் பெற்ற மாணவர்கள்**

இ.தமிழினி-வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை தரம்-2, வி.கஜந்தினி-வலந்தலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை தரம்-5, அ.ரவீந்திரன் -சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம் தரம்-6, பா.குலமதி- கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி தரம்-9, ம.நவநிலா-யாழ்ற்ரன் கல்லூரி தரம் -10

**பரிசுபெறும் மாணவர் விவரம்**

**தரம் - 2**

இ.தமிழினி-வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை, செ.தர்சிகா- யாழ்ற்ரன் கல்லூரி, ப.சுரேஸ் -வலந்தலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை, சா.தவலோசனா-சுந்தரமூர்த்தி நாயனார்வித்தியாலயம்,வி.சரண்யா -யாழ்ற்ரன் கல்லூரி, பா.டர்ணிகன்-வலந்தலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை, கு.வைஷ்ணவி-வலந்தலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை, க.துவாரகன்-வலந்தலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை.

**தரம் - 3**

ஈ.தமிழ்ச்சுடர்-தோப்புக்காடு மறைஞானசம்பந்தர் வித்தியாலயம், ஜெ.சரண்யா- வலந்தலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை, ஜெ.புவியரசன்- யாழ்ற்ரன் கல்லூரி,அ.மஞ்சுளா -சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், தி.கம்சிகா- யாழ்ற்ரன் கல்லூரி, பா.அனித்தா- யாழ்ற்ரன் கல்லூரி.

**தரம் - 4**

பி.ரேந்தினி-யாழ்ற்ரன் கல்லூரி, ஜ.லக்ஷன்-யாழ்ற்ரன் கல்லூரி, இ.சுருதி -சுப்பிரமணிய வித்தியாசாலை, சி.துஸ்யந்தி-வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாலயம், சி.லட்சிகன்-சுப்பிரமணிய வித்தியாசாலை, ப.வஜிகரன்-காரை மெய் கண்டான் வித்தியாசாலை, அ.ஜெயந்தினி-சுப்பிரமணிய வித்தியாசாலை.

**தரம் - 5**

வி.கஜந்தினி-வலந்தலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை, ந.நளினி-சுப்பிரமணிய வித்தியாசாலை, தி.எழில்வேந்தன் -தோப்புக்காடு மறை ஞான சம்பந்தர் வித்தியாலயம், தி.சசிகரன்-யாழ்ற்ரன்கல்லூரி, அ.ராகுலன் - யாழ்ற்ரன் கல்லூரி

**தரம் -6**

அ.ரவீந்திரன்-சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், ஆ.பேபிஷாமினி-யாழ்ற்ரன் கல்லூரி, அ.கம்சிகா-யாழ்ற்ரன் கல்லூரி, ம.கயாணி- கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி, செ.கஜரூபன்- யாழ்ற்ரன் கல்லூரி,பே.தமிழினி- கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி

**தரம் -07**

அ.பிரணவரூபன்- கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி,பா.சிவராஜினி-கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி, ஆ.அமிர்தா-கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி, ம.பவித்திரா-யாழ்ற்ரன் கல்லூரி, கி.கஜந்தினி-யாழ்ற்ரன் கல்லூரி

**தரம் -08**

த.கம்சிகா-கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி, யோ.கோபிகா-யாழ்ற்ரன் கல்லூரி, இ.கிருத்திகா- கலாநிதி ஆ.தியாக ராசா ம.ம.வி,தே.தேனுப்பிரியா-யாழ்ற்ரன் கல்லூரி,ப.யாழினி-யாழ்ற்ரன்கல்லூரி,சோ.யசிந்தா-கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி,செ.கீர்த்தனா-யாழ்ற்ரன் கல்லூரி

**தரம் -09**

பா.குலமதி-கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி, ச.ரோகினி-யாழ்ற்ரன் கல்லூரி, இ.பத்மலோஜன்-யாழ்ற்ரன் கல்லூரி, க.அபினோசா-கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி, ப.கவிதா-கலாநிதி ஆ.தியா கராசா ம.ம. வி., ப.துவாரகா- யாழ்ற்ரன் கல்லூரி

**தரம் -10**

ம.நவநிலா-யாழ்ற்ரன் கல்லூரி, த.திருமகள்- யாழ்ற்ரன் கல்லூரி, வி.வேதாரணி-யாழ்ற்ரன் கல்லூரி, சி.விசாளினி- கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி, செ.கமலேஸ்வரி-யாழ்ற்ரன் கல்லூரி

**தரம் -11**

சு.மனோகரி-யாழ்ற்ரன் கல்லூரி, ம.சிவகௌரி- யாழ்ற்ரன் கல்லூரி, த.ஆரணி-யாழ்ற்ரன் கல்லூரி, ம.மகிபன்-கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி, க.விேனாதன்-கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி, ந.தீபிகா-கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி (ந-250)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
0215671111

## வீடு வாடகைக்கு

உடுவிலில் நவீன முறையில் கட்டப்பட்ட மாடி வீட்டின் பகுதி தளபாடங்களுடன் வாடகைக்குண்டு.
தொடர்பு:077 662 3943,
075 789 9750
(41801)(4.6.3)

## சேவை நலன் பாராட்டு



29.12.2013 இன்று தனது 60 ஆவது அகவையில் தாவரவியல்துறை, யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் திருவாளர்

**செல்லன் கனகசபை**

அவர்களின் சேவையைப் பாராட்டி பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
தாவரவியல்துறைச் சமூகம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## பாராட்டிவாழ்த்துகின்றேன்

யாழ் வடமராட்சி ஸ்ரீ சுந்தர ஐயப்ப இசைமாலை இறுவட்டு செய்வதற்கும், வெளியீட்டு விழாவுக்கும் முதன்மையாக நின்று உதவி செய்த உடன்பிறவா சகோதரன் செல்வம் சாமிக்கு சிரம் தாழ்த்தி நன்றி தெரிவிக்கின்றேன்.

ஆலய குருசாமி ஆதீனகர்த்தா
ந.சுந்தரேஸ்வர சர்மா

## வீட்டுப் பணிப்பெண்தேவை

யாழ்ப்பாண வீட்டில் தங்கியிருந்து வேலை பார்ப்பதற்கு 30 வயதுக்குட்பட்ட பணிப்பெண் தேவை. (41765)(4.6.3)
தொடர்பு:077 926 1129

## காணி விற்பனைக்கு

கரந்தன் சந்திக்கு அண்மித்ததாக ஊரெழு றோட்டில் 16 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 118 5263,
077 625 8805
(41758)(4.6.3)

## வாடகைக்கு

இலக்கம் 09 அரசடி வீதி, தட்டாதெரு சந்தியில் அமைந்துள்ள 4 அறை, 2குளியல்அறை, சமையல்அறை, கிணறுடன் நீண்டகால வாடகைக்குண்டு.
தொடர்பு:இளங்கோ
077 310 9585
(43030)(4.6.3)

## காணி விற்பனைக்கு

கரந்தன் சந்திக்கு முன்பாக இராச வீதியில் ஆறு (06) பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 118 5263,
077 625 8805
(41757)(4.6.3)

## வேலையாள் தேவை

கொழும்பில் விற்பனை நிலையம் ஒன்றுக்கு விற்பனை உதவியாளர் தேவை. (இருபாலாரும்)
விளம்பர இல : 4478
மே.பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(41744)(7.6.3)

## அக்ஷயா டிப்ளோமா அழகுக்கலை பயிற்சி

1) பேசியல் (10) 2) மேக்கப் (7) 3) கெயாஸ்ரைல் (25)
4) தலைமுடி அயன்பண்ணுதல் 5) கேஎரிங் பேமிங் 6) சாறி பிளவுஸ் கட்டிங் (6)
7) சாறி வேக் (5) 8) வொக்கே செற்றிங் (10) 9) ஐசிங் கேக் (20)
10) ஐசிங் பிளவர் (20)

◇ மேற்படி பயிற்சி நடைபெறுகின்றன. பயிற்சியின் முடிவில் டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.
◇ பிறப்பிலே கறுப்பு, கருமை, மஞ்சள் புள்ளிகள், காய்கள், நாட்பட்ட பருக்கள், பள்ளங்கள் அனைத்தையும் மாற்றும் [illegible] விற்பனைக்கு உண்டு. [illegible] விற்பனைக்கு உண்டு.
◇ பேசியல் (வைத்திங், கோல்ட்) மேக்கப், ஐசிங் கேக், றிச் கேக் ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு:
077 210 6155
(41761) (7.6.3)

அக்ஷயா 221, நாவலர் றோட்
(பிறவுண் றோட் சந்தி அருள் கொமினிகேஷன் அருகில்)
யாழ்.

# உங்களுக்கு
## அவசரபணத்தேவை
# உள்ளதா?

SINGER FINANCE
நாடுங்கள்

உங்கள் வாகன புத்தகத்தை கொடுத்து
உங்கள் பணத்தைப்பெற்றுக்கொள்ளுங்கள்

(C/11106)

தொடர்புக்கு
தனு 077 9 357 124
பிருந்தன் 078 5 000 917

இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்

## STUDY MBBS | 2014 ஆண்டிற்கான நுழைவுகள் ஆங்கில மொழியில் | STUDY IN INDIA



பல்கலைக்கழக நுழைவுக்கான விண்ணப்பம்
on 4th January 2014
at Colombo Hilton
Opal Room
9.30 a.m - 4.00 p.m

பெங்களூர் பல்கலைக்கழகம்
Programmes After A/L's
- B.Sc. - Biotech/Micro/Genetics
- Business Management
- B.Sc. - IT ■ B.Com
- Bachelor of Engineering
- B.A. - Journalism/English/Psychology
- B.Sc. - Fashion & Apparel Design
- B.Sc. - Medical Lab Technology
- B.P.T. - Physiotherapy
- BE - Bachelor of Engineering
- Pre-Medicine Course
Available for students without A/L's

RECOGNIZED BY: SLMC, European Medical Association, Medical Council of India, GMC-UK, ECFMG-USA & WHO

இந்தியா - JJM Medical College
Affiliated to Rajiv Gandhi University

ஐரோப்பா - Georgia
Tbilisi State Medical University
கட்டணம் US$ 4500 ஒரு வருடத்திற்கு

நேபாளம் - Nepalgunj Medical College
Affiliated to Kathmandu University
(C/11104)

சீனா - Dalian Medical University

ICAM கல்வி நிறுவனம்
17 A, Kassapa Road, Colombo 05
0773-039666 / 011-2593933 / 0773-022177 | www.icam.lk

# யாழ்நகரில்...

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

## ஸ்ரீ தனலஷ்மி யந்திரம்

இல்லங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களின் விருத்திக்கு!

எமது குழுவினர் யாழ்நகரில்
**2014 ஜனவரி 5ம் திகதி**
காலை 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை
**ஸ்ரீ தனலஷ்மி யந்திரங்களை**
விற்பனை செய்யவுள்ளனர்.




Free Gift
Shiv-Hanuman
Pendant & Idol

கையிருப்பு உள்ளவரை மட்டுமே...
பதிவுக்கு இன்றே முந்துங்கள்!

(C/11103)
Sri Lanka 0777 614 186
flex 4, IBC Road, Wellawatte, Colombo 06.
CAPTAIN TV MEGA TV JAYA TV

## வீடு வாடகைக்கு (ANNEX)

யாழ்ப்பாணம், அத்தியடியில் வீட்டின் ஒரு பகுதி வாடகைக்கு கொடுக்கப்படும்.
சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.
தொடர்பு:077 959 9527
(41763)(4.6.3)

## GENERATER விற்பனைக்கு

17.5 KVA Lister Petter (Sound Proof) U.K, 3 Phase
தொடர்பு:இல.70, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
077 711 1036
(41762)(4.6.3)

## காணி விற்பனைக்கு

பிரதான வீதி, சங்கானையில் (தபால் கந்தோருக்கும் சேச் றோட்டுக்கும் இடையில்) 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்)
தொடர்பு:077 625 7905,
021 221 3010
(41745)(4.6.3)

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, கோணாவளை ஒழுங்கையில் (சாயி துர்க்கா கோயில் அருகில்) 1¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 808 0607
(41720)(7.6.3)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் சோதிவேம்படி வீதி சந்தியில் இருந்து 250 மீற்றர் தூரத்தில் 5½ பரப்புக் காணி, கிணறு, பயன் தரும் மரங்களுடன் விற்பனைக்குண்டு.
T.P. : 077 322 2755
(41700)(7.6.3)

## வீடு வாடகைக்கு

அரியாலையில் 3 படுக்கையறைகள், 3 கோல் நவீன குளியலறை, நவீன சமையலறை, வாகனத் தரிப்பிடம், விளையாடும் இடம் மற்றும் அமைதியான சூழலில் அமைந்துள்ள சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு :-075 029 0921
kugan-nathan@hotmail.com
(41683)(7.6.3)

## மணமகள் தேவை

மத்திய கிழக்கு நாடொன்றில் கணக்காளராகத் தொழில்புரியும் மணமகனிற்கு தாயார் 35-40 வயதுடைய மணமகளை எதிர்பார்க்கின்றார். மூல நட்சத்திரம், விவாகரத்து பெற்றவர்.
T.P. : 077 141 7067
(41699)(7.6.3)

## கார் விற்பனைக்கு

தனிப்பாவனையில் உள்ள Toyota Premio-240 2006 KD xxxx
தொடர்பு:077 914 4520
(41710)(4.6.3)

## விற்பனைக்கு

தனிப்பாவனையில் உள்ள Toyota COROLLA-121 2005 KA xxxx புதிய கார்
தொடர்பு:077 595 9459,
077 342 0359
(41711)(4.6.3)

## வீடு வாடகைக்கு

A-9 வீதிக்கு அருகில் நுணாவில் மேற்கு, சாவகச்சேரி "அருள் நிவாசா" (360 KM இற்கு அண்மையில்) ஒரு அறை, சாலை (Hall), சமையலறை, விறாந்தைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. சிறிய குடும்பம், அரச ஊழியர் விரும்பத்தக்கது.
தொடர்பு:071 229 9128
(33063)(4.6.3)

# பாராட்டப்பட்ட 62 மாணவர்

வடமராட்சி, டிசெ.29

இலங்கை வங்கியின் பருத்தித்துறை கிளையில் கணக்கு வைத்திருந்த 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 62 மாணவர்களை வங்கி பாராட்டிக் கௌரவித்துள்ளது.

கிளை முகாமையாளர்கள் எஸ்.தர்மராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் சி.எம்.ரி.தென்னக்கோன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். மேலைப்புலோலிசைவப்பிரகாசவித்தியாலயஅதிபர்கள் எஸ்.பொன்னம்பலம், பருத்தித்துறை வட இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் ரி.ரவீந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (ஒ-8)

# பயிர்களை அழித்த பசு நாளை ஏலத்தில்

வடமராட்சி, டிசெ.29

துன்னாலை மத்தி பகுதியில் பயிர்களை அழித்து வந்த கட்டாக்காலி பசுமாடு ஒன்று நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கோவிற்கடவை பிள்ளையார் கோயில் முன்றலில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளதாக கரவெட்டி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.

இந்தப் பசு மாட்டை துன்னாலை மத்தி விவசாயிகள் பிடித்து பாதுகாப்பாக வைத்திருந்ததோடு இதனை அடையாளம் காட்டிதண்டப்பணத்தை செலுத்திப் பெற்றுகொள்ளுமாறு கமக்கார அமைப்பு கோரிக்கை விடுத்திருந்தபோதிலும் எவரும் உரிமை கோரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-8)

## நாளை மாணவர் கௌரவிப்பு

கொழும்புத்துறை,டிசெ.29

அரியாலை அபி விருத்திச் சங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் 2014 ஆம்ஆண்டுக்கானமாணவர்களை இணைக்கும் நிகழ்வும் மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அரியாலை சித்திவிநாயகர் ஆலய அருகில் உள்ள அருளம்பலம் ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வேம்படி மகளிர் உயர் தர பாடசாலை அதிபர் திருமதி ரேணுகா சண் முகரத்தினமும், சிறப்பு விருந்தினராக கனகரத்தினம் ம.ம. வித்தியாலய அதிபர் திருமதி ஸ்கந்தசோதி சாந்தராசாவும் கலந்து கொள்வர். (ந-135)

## வீதி புனரமைப்பு

அளவெட்டி தெற்கு அப்பாச்சிப்பிள்ளை வீதி (மாரியம்மன் வீதி) நீண்ட காலத்தின் பின் வலி வடக்கு பிரதேச சபையின் அனுசரணையுடன் புனரமைக்கப்பட்டு தார் வீதியாக்கப்பட்டுள்ளது. (ஒ-36)

ஓம்சிராட் விளவப்பிரமணை நமவம

# 27ஆவது பிறந்தநாள் நினைவும் 4ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்



செல்வி

## யசோபாரதி தில்லையம்பலம்

உள்ளகப்பயிற்சி ஆசிரியர் (3ஆம் வருடம்)
தேசிய கல்வியியற் கல்லூரி. மட்டக்களப்பு.

**மூத்தாக :- 29.12.1986**

**வித்தாக:- 28.12.2009**

திதி :- துவாதசி (14.12.2013)

நான்கு ஆண்டுகள் ஆனதோ இன்று !
காயத்தின் காயமதை காலமது மாற்றிடுமே
மனத்தின் வேதனையின் வேகம் கொஞ்சம் குறைந்திடுமே
ஞாலத்தில் நாம் சொன்ன நியாயம் கூட மறைந்திடுமே
நீ கொண்ட கோலம் மட்டும் எம் நெஞ்சை நிறைத்திடுமே
வானத்தில் நீ மட்டும் சிறகடித்துப் பறந்ததென்ன !!!
மெலிதாய்த் தவழ்ந்திடும் உன் புன்னகை
ஜொலித்து மின்னும் உன் கண்கள்
மெழுகாய் உருகும் உன் பேச்சு
முழுதாய் நாம் காண்பது இனி எப்போது ???

இன்றைய தினம் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அன்னதான நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உறவினர்கள். நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

நாவற்குழி கிழக்கு, கைதடி.
த.மு: பருத்தித்துறை வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
தொலைபேசி :- 0212270393

உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்,
**அப்பா, அம்மா, அக்கா குடும்பம், சகோதரர்.**

# மூன்றாம் வருடமதனில் பிரார்த்திக்கின்றோம்

சிவபூசாதுரந்தரர்

## வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்

திதி: மார்கழி
அபரபக்க துவாதசி-
29.12.2013 ஞாயிறு



சீவனாய்
17
★
02
★
1920

சிவமாய்
01
★
01
★
2011

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகுமென்று
கரையிலாக் கல்வியைத் தெள்ளிதின் ஆராய்ந்து
அமைவுடைய கற்று அவையத்துள் முந்தியிருப்ப
முன்னறி தெய்வமாய் நெறிகாட்டிய-அப்பு
பிள்ளைகள் யாம் பெருவாழ்வு பெற்றின்று

நல்லோராய் வல்லோராய் நானிலத்தில் வாழ- நீங்கள்
நித்தமும் பூமாலை புனைந்து புகழ்ந்து
கண்ணாரமுதமுமாய் நின்றான் கழல் பாடிய
நல்வினையின் பயனை நாமின்று உணர்கின்றோம்
வெவ்வினைகள் வேரறுத்து விடையேறும் பெருமானார்
பொன்னடிகள் நீர் பற்றி இன்புற்றீர் என்று பிரார்த்திக்கின்றோம்.

'பாநேசர்'
செம்மணி வீதி,
நல்லூர்.

(41763)(3.6.4)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி த.செல்வராசா அவர்களின் பாசமிகு தாயார்

## சபாபதி சின்னம்மா

அவர்கள் இறைபதம் எய்திய செய்தி அறிந்து மிக்க துயருறுவதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கல்லூரி சமூகம்,
யா/நடேஸ்வராக் கல்லூரி, காங்கேசன்துறை.

(41760)(4.6.3)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர்

## நாகலிங்கம் லோகநாதன்

(உரிமையாளர்
நிபு கொழும்பு ஸ்ரோர்ஸ் புளியங்குளம் சந்தி)



தோற்றம்
06.07.1937

மறைவு
29.11.2013

கடந்த (29.11.2013) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் நாகலிங்கம் லோகநாதன் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (29.12.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் நினைவாக
வடமராட்சி ஸ்ரீபரமானந்த சிறுவர் முதியோர் இல்லத்தில்
இருப்பவர்களுக்கு மதியபோசனம் வழங்கப்படும்.

கதிர் வேலாயுதசுவாமி கோயில் வீதி.
சரவணை மேற்கு, வேலணை.

(41759)(7.6.3)

குடும்பத்தினர்.
077 058 5766

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர் **செல்லமுத்தர் சச்சிதானந்தசிவம்**

(மகிஷா புக் பைண்டேர்ஸ் உரிமையாளர் - உரும்பிராய்)



அன்னை மடியில்
01.08.1943

இறைவன் திருவடியில்
29.11.2013

உரும்பிராய் வடக்கை வாழ்விடமாகக் கொண்ட அமரர் செல்லமுத்தர் சச்சிதானந்தசிவம் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து நேரடியாகவும், தொலைபேசி மூலமாகவும் துயர் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். இன்று (29.12.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

ஐங்கரக் கல்லூரி வீதி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(சி/10813)(7.6.3)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி சுதாதேவி செகராஜசேகரம்

(ஓய்வுபெற்ற முகாமைத்துவ உதவியாளர்- பேரவைச் செயலகம் வடக்கு, கிழக்கு மாகாணம், நகராட்சி மன்றம் திருகோணமலை, வலி. வடக்கு பிரதேசசபை மல்லாகம், சுதேச மருத்துவ திணைக்களம் வடமாகாணசபை)



யாழ். புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட சுதாதேவி செகராஜசேகரம் அவர்கள் 27-12-2013 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சிவஞானம் தம்பதியரின் பாசமிகு மூத்த மகளும், காலஞ்சென்ற பரராஜசேகரம் (நவாலி) தம்பதியரின் பாசமிகு மருமகளும்,செகராஜசேகரம் அவர்களின் அன்பு மனைவியும், பிறேமாதேவி, அருணாதேவி, சிவக்குமார் (ஜேர்மனி), மீராதேவி, நிருபாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், செல்வஜோதி, சிவதாசன், பிறேமவதனி, அசோக்குமார், சாந்தகுமார், திருமதி விஜயலெட்சுமி பாலசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், பிரணவஜோதி, பிரசாந்த ஜோதி, நிர்மல்ஜோதி, நிஷாந், நிஷாஹரி, நிஷாலினி, ராகவி, அம்ரித்தா, நிதர்சினி, ஆரவி ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும், சஞ்ஜீவ்குமார், குமுதினி, நளினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,அட்சயன், ஆரணி, தனுசியான், ஹருணி, பிஜு ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (29-12-2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் இல. 366, திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் திருகோணமலை இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு: 026 222 7393

(சி/10826)(5.6.3)

தகவல்: ப. செகராஜசேகரம் (கணவர்)

## ஓடி மறைந்தது மூன்றாண்டு



மண்மகிழ
24.05.1956

கண் நெகிழ
01.01.2011



திருமதி
### விஜயகுமார் சரோஜினிதேவி

அமைதியான புன்சிரிப்பும்
ஆழ்ந்த அறிவும் கொண்டு
கனிவு மொழி பேசும்
கள்ளமில்லா வெள்ளை மனமும்
அந்தரித்து வருவோருக்கு
அள்ளி வழங்கும் குணமும்
எமக்கு வரும் சோதனைகளை
சாதனைகளாக மாற்றி எம்முடனே
இருந்து நாம் மேன் மேலும்
அகிலத்தில் உயர ஆசீர்வதிககும்
அம்மாவே!
ஆறாது எம் துயரம்

(C/10820)(2,6,3)

என்றும் நினைவில் :
குடும்பத்தினர்.
நாவலடி, கோப்பாய் மத்தி.

### திருவாசகம் முற்றோதல்

யாழ்.சைவ பரிபாலன சபை வருடந்தோறும் நடத்திவரும் திருவாசக முற்றோதல் நிகழ்வு ஜனவரி முதலாம் திகதி காலை 7.30 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிர மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்று சைவ பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ந)

♦♦♦

நவாலி அட்டகிரி சிவன் தேவஸ்தானத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணிமுதல் திருவாசக முற்றோதல் இடம்பெறும் என்று ஆலய பிரதம குரு அறிவித்துள்ளார். (ந-50)


♦♦♦

மேலைப் புலோலி சதாவதானி கதிரை வேற்பிள்ளை இந்து அறநெறிப் பாடசாலை பருத்தித்துறைப் பிர தேசத்தில் நடத்திவரும் திருவாசக முற்றோதல் நிகழ்வு நாளை திங்கட் கிழமை மந்திகை கண் ணகை அம்மன் கோயி லிலும் மறுநாள் செவ் வாய்க் கிழமை வத்தனை அம் மன் கோயிலிலும் நடைபெறவுள்ளன. (ஒ-8)

### ஒளி விழா

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தின் ஒளி விழா நிகழ்வுகள் நாளை திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு பங்குத் தந்தை அருட்திரு அன்ரன் மத்தாயஸ் அடிகள்தலைமையில் நடைபெறவுள்ளது. (ந-135)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு
13 ★ 12 ★ 1919

உதிர்வு
29 ★ 11 ★ 2013

### அமரர் பொன்னுத்துரை முத்தையா
(இளைப்பாறிய அதிபர்)

பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
இப் பாரினில் வாழ்ந்த எம் பாசமிகு தெய்வமே!
ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ இம் மாநிலத்தே...
உங்கள் நினைவலைகள் எம்மை விட்டு என்றென்றும் நீங்காது.
31 ஆம் நாள் நினைவு தினமான இன்று உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்பதோடு, எமது ஆறாத் துயரில் பங்கு கொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி, இணையம், கடிதமூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், போசனமளித்து உதவியவர்களுக்கும் எம் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வெள்ளவத்தை. [சி/10292][3.6.4]

## விண்ணக வாழ்வின் நினைவலைகள்
## முதலாம் ஆண்டு... 23 ஆம் ஆண்டு...





அமரர்
### திரேசம்மா சிங்கராயர்
மண்ணில் :- 16.10.1933
விண்ணில் :- 29.12.2012

அமரர்
### அந்தோனிப்பிள்ளை சிங்கராயர்
மண்ணில் :- 24.12.1933
விண்ணில் :- 13.11.1990

அன்புடன் எம்மை அரவணைத்து
ஆர்வமுடன் எம்மைக் காத்து
இன்னமுதாய் இனிய அறிவுரைகூறி
ஈடேற வாழ்வில் வழிகள் பலகாட்டி
உன்னதமான வாழ்வை எமக்களிக்க
ஊக்கமுடன் உழைத்து வந்தீர்கள்!
எண்ணரிய சேவைகள் பலசெய்து
ஏற்றமுற வைத்தீர்! பேரர்க்கும் கற்பித்தீர்
ஐயுறவு ஏதுமின்றி அனைவர் வாழ்வும் மலர்ந்திட
ஒற்றுமையாய் எம்மை ஆதரித்து
ஓதற்கரிய கலைகள் யாவும் புகட்டி
ஔவையின் அருளுரையும் இனிதே தந்து
வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி சமைத்த
அன்புத் தெய்வங்களை வாழ்த்தி, வணங்கி
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

என்றென்றும் உங்கள் நினைவில் வாழும்
- குடும்பத்தினர்.

"ஜெயமஹால்",
74/1, ஓட்டுமட வீதி, யாழ்ப்பாணம். (42940)(7.6.3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி
### யோகநாயகி சண்முகநாதன்
(சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், தெல்லிப்பழை)

தோற்றம்
18.11.1969

திதி: துவதசி [29.12.2013]

மறைவு
08.01.2013


எங்கள் இதய ஆழத்தில் உம் அன்பு நினைவுகள்
என்றும் நிலைத்திருக்கும் உம்முடன் பழகிய
நாள்களை மறக்க முடியாமல் தவிக்கின்றோம்
உம் ஆன்ம இளைப்பாறுக்காக
கண்ணீர்த் துளிகளுடன் இறைவனைப்
பிரார்த்திக்கிறோம்.

தந்தை, சகோதரர்கள்,
மைத்துனர்கள், மருமக்கள்.

5 ஆம் கட்டை,
பெரியவிளான், இளவாலை

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 148

# உடல்நிறை குறைப்பு ஓர் இலகுவான கலை-பகுதி 1



எமது உடல் நிறையைச் சரியான அளவில் பேணிக் கொள்வதும் ஒரு கலையே- திருமூலர் திருமந்திரத்திலே **"உள்ளம் பெருங் கோயில் ஊன் உடம்பு ஆலயம்"** என்று சொல்லி உடலை ஆலயத்துடன் ஒப்பிட்டிருக்கின்றார். அந்த ஆலயத்தை அழகுறப் பராமரிப்பது கலை மட்டுமல்ல, எமது கடமையுமாகும்.

"உடல் நிறையை குறைப்பது இயலாத காரியம், பட்டினி கிடக்க வேண்டி வரும், நடைமுறைப்படுத்துவது மிகவும் கடினம்" என்ற ஒரு தப்பபிப்பிராயம் பொதுவாக நிலவி வருகிறது.

மிகவும் சிறிதளவு உணவை உட்கொண்டும் கூட நிறை தானாகக் கூடி வருகிறது. எவ்வளவு வேலைகளைச் செய்தும், உடற்பயிற்சி செய்தும் நிறை குறைவதாகத் தெரியவில்லையே என்று எல்லாம் ஆதங்கப்பட்டுக் கொள்கின்றோம்.

"இது பரம்பரை உடம்பு, இதனைக் குறைக்கவே முடியாது. எனது நிறை நெடுகவே இப்படித்தான்" என்று சொல்லி திருப்திப்பட்டுக் கொள்ள முனைகின்றோம்.

"சிறுவர் முதல் பெரியவர்கள் வரை பருத்திருப்பதே பலம், நிறை குறைந்து போனால் உடல் பலவீனப்பட்டு விடும், உடல் அழகு கெட்டுவிடும்" என்று பயப்பட்டுக் கொள்கின்றோம்.

"கொழு கொழு என்று இருப்பது தான் அழகு" என்று தனது பருத்த உடலைப் பார்த்து பூரித்துப்போய் இருப்பவர்களும் இருக்கின்றார்கள்.

"உணவைக் கட்டுப்படுத்தி வாழ்வதும் ஒரு வாழ்க்கையா? பக்கத்து வீட்டு அம்மம்மா பருத்த உடம்புடன் 10 பிள்ளைகளையும் பெற்றெடுத்து பல காலம் வாழவில்லையா? உணவை ஒறுத்து வாழ்வதன் அர்த்தம் என்ன? என்று எல்லாம் எத்தனை விதமான எண்ணங்கள் மனதில் தோன்றி மறைந்து கொண்டிருக்கின்றன.

"உணவை வீணடிக்கக் கூடாது, கடவுளுக்கு ஏற்காது" என்று எண்ணி மிச்ச சொச்ச உணவுகளை எல்லாம் உண்டு பருத்து உடம்பு வீணாகிப்போய் நோய்களை தேடிக் கொண்டவர்கள் எத்தனை பேர்?

"மற்றவர்களுடன் ஒப்பிடும்பொழுது, நான் சாப்பிடுவது மிகவும் குறைவு, ஆனால் நிறை தானாக அதிகரித்து வருகிறதே!" என்று வேதனைப்படும் மனங்கள் எத்தனை?

"நல்லாய்ச் சாப்பிடு, நல்லாய் வேலை செய். நிறை தானாகக் குறையும்" என்று பலரின் அறிவுரைகளைக் கேட்டு ஏமாந்து போனவர்கள் எத்தனை பேர்?

"எனது நிறையைக் குறைக்கவே முடியாது" என்ற தீர்மானத்துக்கு வந்து மனம் சோர்ந்து போனவர்கள் எத்தனை பேர்?

ஏன் நாம் உடல்நிறை குறைப்பு என்ற இந்த இலகுவான கலையை கற்றுத் தேற முடியாது? அதிகரித்த உடல் நிறை என்ற பிரச்சினையை சரியான திசையில் அணுகுவோமாயின் அதனை வெற்றி கொள்வது மிகவும் இலகுவானது.

(தொடரும்)

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

**ஒருவருக்கு நீரிழிவு உள்ளதா என்பதை எவ்வாறு கண்டறிவது?**

அடிக்கடி சிறுநீர் வெளியேறுதல், அடிக்கடி தாகம் எடுத்து நீர் அருந்துதல், உடல் மெலிதல், காயம் மாறுவதில் தாமதம் போன்ற அறிகுறிகள் ஏற்படும் போது வைத்தியரை நாடி குருதியில் குளுக்கோசின் அளவை சோதித்துப் பார்த்தல் வேண்டும். இதன் பெறுமானம் சாப்பிட முன் (fasting blood sugar) 100 mg/dl ஐ விட அதிகமாக இருப்பின் வைத்தியரின் ஆலோசனை பெற வேண்டும். 126 mg/dl ஐ விட அதிகமாக, இருப்பின் உங்களுக்கு நீரிழிவு உள்ளது எனப் பொதுவாகத் தீர்மானிக்கப்படும்.

உங்கள் பரம்பரையில் தாய், தந்தை அல்லது சகோதரர்களுக்கு நீரிழிவு காணப்படின் அல்லது அதிகரித்த எடை உள்ளவராக இருந்தால் 6 மாதங்களுக்கு ஒரு தடவையாவது இரத்தத்தில் குளுக்கோசின் அளவைச் சோதித்துப் பார்க்க வேண்டும்.

**4 வயதுடைய எனது மகனுக்கு முட்டு வருத்தம் (ஆஸ்துமா) கடந்த 2 வருடங்களாக இருக்கின்றது. முட்டு வருத்தம் அதிகரித்து அடிக்கடி வைத்தியசாலையில் அனுமதிக்க வேண்டியுள்ளது. வைத்தியசாலையில் நன்கு குணமாகி வீடு திரும்பியதும் ஓரிரு நாள்களில் மீண்டும் முட்டு வருத்தம் அதிகரிக்கிறது. இதற்கான காரணம் என்ன?**

வைத்தியசாலையில் குணமாகி வீட்டில் அதிகரிக்கிறது என்றால் முட்டு வருத்தத்தைக் கூட்டும் காரணிகள் வீட்டுச் சூழலிலேயே காணப்படுகின்றன. நீங்கள் கவனிக்க வேண்டிய விடயங்கள்.

- வீட்டில் தூசுகள் அகற்றப்பட்டு சுத்தமாக இருத்தல் வேண்டும்.
- ஒவ்வொரு நாளும் வீட்டைப் பெருக்கித் தூசு காற்றில் எழும்பாமல் ஈரத்துணியால் நிலத்தைத் துடைக்க வேண்டும்.
- கிழமைக்கு 2 தடவையேனும் படுக்கை விரிப்பு, தலையணை என்பவற்றைக் கழுவுதல் வேண்டும்.
- உங்கள் குழந்தைக்கு எந்தப் பொருள்கள் ஒவ்வாமையை(allergy) ஏற்படுத்துகின்றனவோ அவற்றைத் தவிர்த்தல் வேண்டும்.

உதாரணம் : பொம்மைகளின் பஞ்சு(wool), மகரந்த மணி , வாசனைத் திரவியங்கள், மண்ணெண்ணெய் மணம்.

- யன்னல்கள் திறந்த, நல்ல காற்றோட்டமான அறைகளில் குழந்தை தூங்க வேண்டும்.
- ஓர் அறையினுள் பல அங்கத்தவர்கள் நெருக்கமாகப் படுப்பதைத் தவிர்த்தல் வேண்டும்.
- நுளம்புத்திரி எரிப்பதை தவிர்த்து சுத்தமான நுளம்பு வலைகளைப் பயன்படுத்துங்கள்.
- கரப்பான் பூச்சிகள் பெருகாமல் தடுத்தல் வேண்டும்.
- குடும்ப அங்கத்தவர்கள் புகைப்பிடிக்கும் பழக்கம் இருந்தால் அதனை நிறுத்துதல் வேண்டும்.
- வைத்தியசாலையில் தரப்பட்ட மருந்துகளை ஒழுங்காகச் சொல்லிக் கொடுத்த முறையில் பாவித்தல் வேண்டும்.
- முக்கியமாக மருந்துப் பம் (Inhaler) பாவிப்பதை தவிர்க்காமல் தொடர்ச்சியாகப் பாவியுங்கள்.

**என்னைப் பரிசோதித்த எனது வைத்தியர் கொலஸ்ரோல் றிப்போட்டைப் பார்த்து எனக்கு கொலஸ்ரோல் அதிகமாக இருப்பதாகவும், மருந்து எடுக்க வேண்டும் என்றும் கூறினார். அதே றிப்போட்டை எனக்கு அறிமுகமான பிறிதொரு வைத்தியரிடம் காட்டியபோது அவர் எனக்கு கொலஸ்ரோல் அதிகமில்லை எனவும், மருந்துகள் எடுக்க வேண்டிய அவசியமில்லை எனவும் கூறினார். கொலஸ்ரோல் அதிகம் என்று எவ்வாறு தீர்மானிப்பது? இந்தக் குழப்பத்தைத் தீர்க்க உதவுங்கள்.**

உங்களுக்கு கொலஸ்ரோல் அதிகம் எனத் தீர்மானிப்பதற்கு கொலஸ்ரோல் றிப்போர்ட் மட்டும் போதாது. உங்கள் கிளினிக் கொப்பியைப் பார்வையிட்டு உங்களைச் சோதனைகள் செய்த பின்பே தீர்மானிக்க முடியும். ஏனெனில் நீரிழிவு அல்லது இருதய வருத்தம் இருப்பின் கொலஸ்ரோலின் அளவு மிகக் குறைந்த அளவிலேயே பேணப்பட வேண்டும். உதாரணம்- ஒரு நீரிழிவு நோயாளி தனது கொலஸ்ரோல் ரிப்போர்ட்டில் LDL இன் அளவை 100 mg/dl க்குள் பேண வேண்டும். சுருக்கமாகச் சொல்வதென்றால் உங்கள் கொலஸ்ரோலுக்கு மருந்துகள் தேவையா எனத் தீர்மானிக்க உங்களுக்கு வேறு என்ன மருத்துவப் பிரச்சினைகள் இருக்கிறது எனத் தெரிந்தாக வேண்டும். எனவே உங்களுக்கு கொலஸ்ரோல் பிரச்சினைக்கு மருந்து அவசியமா இல்லையா என்பதை உங்கள் சொந்த மருத்துவர் தான் தீர்மானிக்க வேண்டும்.

இரண்டாவதாகப் பார்த்த வைத்தியர் தனியே உங்களது கொலஸ்ரோல் ரிப்போர்ட்டை மாத்திரமே பார்வையிட்டுள்ளார். இந்த முறையில் உங்கள் கொலஸ்ரோல் அளவு பற்றி தீர்மானிப்பது சற்றுச் சிரமம். மருத்துவ ஆலோசனை பெறுவதாக இருந்தால் முதலில் உங்கள் முழுமையான மருத்துவத் தகவல்களைக் கூறியே ஆலோசனை பெற வேண்டும்.

# சுகாதாரமான புதிய உணவு வகைகளை

## சிறார்களுக்கு அறிமுகப்படுத்தும் போட்டி

சிறார்களுக்கான காலை உணவு மற்றும் சிற்றுண்டிப் பதார்த்தங்களை (தற்போது நடைமுறையில் இல்லாத உணவுகள்) தயாரிக்கவேண்டும். சைவ, அசைவ உணவுகளைத் தயாரிக்கலாம். பருப்பு வகை, பயறு, கௌபி, கொண்டைக் கடலை, உழுந்து வகை, சோளம், மரக்கறி வகை (வெண்டிக்காய், கத்தரி, போஞ்சி, தக்காளி, வாழைக்காய், பயற்றங்காய், பூசணி, புடோல், கரட், பீற்றூட்) இலைவகை (வல்லாரை பொன்னாங்காணி, அகத்தி, தவசி முருங்கை) பழவகை (அப்பிள், கொய்யா, வாழைப்பழம், தோடம் பழம், விளாம்பழம், ஜம்பு) சோயா அவரை, கோழி இறைச்சி, நல்லெண்ணெய், மீன், இறால், சுறா, கருவாடு, நிறமூட்டிகள், சுவையூட்டிகள், உள்ளி, வெங்காயம், மிளகாய், வெந்தயம், கடுகு, மிளகு, சீரகம், முட்டை, பால், உருளைக்கிழங்கு.

தவிர்க்கப்பட வேண்டியவை

சீனி, சர்க்கரை, பழப்பாகு, ரின்பால், கிழங்கு வகைகள் (உருளைக்கிழங்கு தவிர) எண்ணெய் வகை (நல்லெண்ணெய் தவிர) இறைச்சி வகை (கோழி இறைச்சி தவிர) நண்டு, கணவாய், அரிசிமா, ஆட்டாமா, கோதுமைமா, பட்டர், மாஜரின், நெய்,பாண், கச் சான், பலாப்பழம், மாம்பழம், திராட்சை.

மேற்கூறப்பட்ட விதிமுறைகளுக்கமைய நீங்கள் புதிய உணவு வகைகளைக் கண்டுபிடித்தால் எம்மால் நடத்தப்படும் போட்டியில் பங்குபற்றிக் கொள்ளுங்கள்.

பெயர், முகவரி, வயது, தொழில், தொலைபேசி எண் என்பவற்றுடன் நீங்கள் தயாரிக்க விருக்கும் உணவு வகை பற்றிய விவரங்களுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:-
"நீரிழிவு சிகிச்சை நிலையம்"
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம்:021 222 0179, 075 279 2272
விண்ணப்ப முடிவுத் திகதி-06.01.2014
வெற்றி பெறும் போட்டியாளர்களுக்கு பெறுமதிமிக்க பல பரிசில்கள் வழங்கப்படும்.



## தேவை நாடும் மகளிர்

நீங்கள் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்ணா?
அல்லது சிறுமியா?
அப்படியாயின்
உளவளத்துணை (மனநல ஆலோசனை)
சட்ட உதவி
எம்மால் இலவசமாக வழங்கப்படுகின்றன.

மௌனத்தைக் கலையுங்கள்!
வாழ்வில் வெற்றி கொள்ளுங்கள்!!

விபரங்களுக்கு:

**தேவை நாடும் மகளிர் 'வின்'**

அவசர தொலைபேசி இலக்கம் 24 மணித்தியாலமாக விஸ்தரிக்கப்பட்டு
2014 ஜனவரி முதல் அமுல்படுத்தப்படவுள்ளது
**011 4718585**
இல 35A, சோமசுந்தரம் அவனியு, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்
அலுவலக இல. 021 222 9671
இணையத்தளம்: www.winsl.net
Facebook - Women In Need (WIN)

(42635)

### வீடு வாடகைக்கு தேவை

2 வருட காலத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை. யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மித்ததாகவோ அல்லது யாழ் நகர மத்தியிலோ வீடு இருப்பது விரும்பத்தக்கது. (1 Hall, 1 சமையலறை, 1 குளியலறை வேண்டும்) (41732) (7.6.3)

தொடர்பு: **076 608 4284**

(ஆங்கிலத்தில் தொடர்பு கொள்வது விரும்பத்தக்கது)

### தேவை

யாழ். நகரில் உள்ள ஆங்கில மருந்தகத்துக்கு மருந்தாளர் தராதரச் சான்றிதழ் உடைய மருந்தாளர் (Pharmacist) தேவை. சுயவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல: 4481,
C/O.உதயன்
361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### வீடு விற்பனைக்கு

மந்திகை சிலையடிச் சந்திக்கும், கிராமக் கோட்டுச் சந்திக்கும் இடையில் சாரையடி பிரதான வீதியின் கிழக்குப் புறத்தில் ஒன்றரை பரப்புக் காணியுடன் கிணறு, கடையுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. கடையை வாகனத் தரிப்பிடமாகவும் பயன்படுத்தலாம். (43026) (7.6.3)

தொடர்பு: **077 989 6789**

### வீரு வாடகைக்கு

69, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி (விதானையார் வீதி முன்பாக) 6 அறைகள் 3 Phase மின்சாரம், ஜெனரேற்றர் வசதி உட்பட சகல வசதிகளும் உடைய விசாலமான வீடு வாடகைக்குண்டு. (நிறுவனங்களுக்கு மட்டும்.)
T.P:077 832 5839,
071 326 9807
(42829)(4.6.3)

### விற்பனைக்கு

அரியாலையில் உள்ள பழைய வீட்டின் கட்டடப் பொருள்கள் விற்பனைக்கு உள்ளன.
தொடர்பு: 075 029 0921 (41664)(7.6.3)

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், வயது 32 புனர்பூசம் 3ஆம் பாதம், உயரம் 168Cm, கிரகபாவம் 10, செவ்வாய் குற்றமற்ற A/L, Computer Diploma படித்த மணமகளுக்கு பொருத்தமான மணமகனை உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ எதிர்பார்க்கின்றனர். (வெளிநாடு மிகவும் விரும்பத்தக்கது)
தொடர்பு: 077 759 3858

### School Service

அளவெட்டி, அம்பனை, மாகியப்பிட்டி ஊடாக சுன்னாகம், யாழ்ப்பாணத்திற்கு பாடசாலை சேவை வாகன ஒழுங்கு. (42929) (7.6.3)
அழையுங்கள்: கோபி 077 967 3395

### PHYSICS AND CHEMISTRY INDIVIDUAL OR GROUP CLASSES

A/L 2016
க.பொ.த உயர்தரத்திற்கான இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல் பாடங்கள் வீடுகளுக்கு வந்து குழுவாகவோ அல்லது தனியாகவோ கற்பிக்கப்படும். (41882)(4.6.3)
தொடபுக்கு:077 454 3229

### தேவை

கார்த்திகைக் காய்களின் பருவம் இது. நன்கு முற்றிய பச்சைக் காய்கள் தேவை.
தொடர்புக்கு: EK & CO
55/1. ஸ்ரீ மகிந்த தர்மபாலவத்தை கொழும்பு -00900
(41881)(4.6.3) T.P:011 267 7077/011 269 7729

### HOT SEMINAR

SLEAS (OPEN) Exam Part-II
துரித வழிகாட்டல் வகுப்புகள்
* பொது அறிவு * கட்டுரைகள்
வவுனியா
CBA ரியூசன் நிலையத்தில்
2015 ஜனவரி 04, 05இல்
தொடர்புகளுக்கு/பதிவுக்கு: (41687) (7.6.3)
A.L.M. Thasim (SLAS)
077 317 0717, 077 321 1233

## New Year Celebration Wel Come 2014

Buffet Dinner
Musical Extravaganza
Till Late Dance
Fire Works
லொத்தர் பரிசுகள்

Experience the Difference
Dances by Leading SriLankan Groups
* SriLankan Fusion
* Bolly wood Dance
* Freestyle Dances
* Salsa and Manymore

முன்னணி இசைக் கலைஞர்களின்
Live Music with D.J. மற்றும் பல

அதிகாலை 2:00 மணி வரை

Location CHOLA Banquet hall at TILKO JAFFNA CITY HOTEL
On 31st December 2013 from 7.00 p.m. onwards
Gala Dinner Buffet with Musical Entertainment
TILKO JAFFNA CITY HOTELS
No.70/6, K.K.S. Road, Jaffna. Tel : 0212225969 Mob : 0776943479

(C/10811)


# மயானத்தில் இராணுவ முகாம்; கிரியை நடத்துவதில் சிரமம்

*நேரில் பார்வையிட்டார் வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன்*

யாழ்ப்பாணம், டிசெ.29

ஒட்டுசுட்டான் மக்கள் தலைமுறை தலைமுறையாக பயன்படுத்திவந்த வெடுக்கு நாறி மயானம் அமைந்த பகுதியில் தற்போது இராணுவத்தினர் முகாம் அமைத்துள்ளதால் அந்தப்பகுதி மக்கள் தமது முக்கிய கடமையை ஆற்றுவதில் பெரும் இடையூறுகளை எதிர்நோக்கியுள்ளனர்.

ஒட்டுசுட்டானில், குறித்த வெடுக்குநாறி சுடலையை அந்தப் பகுதி மக்கள் நீண்ட காலமாகப் பயன்படுத்தி வருகின்றனர்.



இறுதிப்போரின் பின்னர் மக்கள் மீள் குடியமர்வு செய்யப்பட்ட போது அந்தப் பகுதியில் இராணுவத்தினர் முகாம் அமைக்கப்பட்டுள்ளதை அவதானித்துள்ளனர். அதன்பின் அவர்கள் இது குறித்து பலருக்கு அறிவித்தும் இது வரை ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தற்போதைய நிலையில் உயிரிழந்தோருக்கான தமது சம்பிரதாயக் கடமைகளை ஆற்றுவதற்காக சுமார் எட்டு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள பேராறு என்ற இடத்துக்குச் செல்ல வேண்டியுள்ளதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்தநிலையில் அந்தப்பகுதி மக்களின் தகவலை அடுத்து வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் வெடுக்கு நாறி மயானப் பகுதியை நேரில் சென்று பார்வையிட்டார்.

மக்களின் அடிப்படை சம்பிரதாயக்கடமைகளில் ஒன்றை நிறைவேற்ற முடியாமல் அவர்கள் தவிக்கும் நிலை வருத்தமளிக்கிறது. இந்த இடத்தை விடுவிப்பதற்கு மாவட்ட, பிரதேச ரீதியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும். இவ்விடயத்தை உரியவர்களின் கவனத்துக்குக் கொண்டுவருவதாக அவர் உறுதியளித்தார். (வ-5)

## களை நாசினிகளுக்கு அதிக செலவு

இந்த ஆண்டின் காலபோக நெற்செய்கையின் போது களைநாசினிகளுக்கு அதிக செலவு ஏற்பட்ட போதிலும் களைகளைக் கட்டுப்படுத்த இயலவில்லையென விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மழை பெய்யாததால் இந்த ஆண்டுக்கான பெரும்போக நெற்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. நெல் வயல்களில் நெற்பயிர்களுக்குப் பதிலாக புற்களே வளர்ந்து காணப்படுகின்றன. இந்தப் புற்கள் களைநாசினிகளுக்குக் கட்டுப்படாத நிலையில் விவசாயிகளுக்கு அதிக செலவை ஏற்படுத்தி வருகின்றன.

சில விவசாயிகள் இரண்டு, மூன்று தடவைகளுக்கும் அதிகமாகக் களைநாசினிகள் தெளித்த போதிலும் புற்கள் கட்டுப்படவில்லை எனத் தெரிவித்துள்ளனர். இதற்கு அதிக செலவு ஆவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (க-500)

## பொலிஸ் விழிப்புணர்வு செயற்பாடுகள்

*அடுத்த ஆண்டு தொடக்கம் கிளிநொச்சி மாவட்டத்தில்*

கிளிநொச்சி, டிசெ.29

கிளிநொச்சி மாவட்டத்தில் அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து 5 கிராம அலுவலர் பிரிவுகளை இணைத்து நடமாடும் பொலிஸ் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் இடம்பெறவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பொதுமக்கள் தொடர்பாடல் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

கிளிநொச்சி மாவட்டத்தில் காணிப் பிணக்குகள் அதிகரித்துள்ளன. அவற்றுக்கு விரைவாகத் தீர்வு காணப்பட வேண்டும்.

“-”

**அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள நடமாடும் சேவைகளின்போது காணிப் பிணக்குகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்படும்.**

அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள நடமாடும் சேவைகளின் போது காணிப் பிணக்குகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்படும். சுகாதாரம், உதவித் திட்டங்கள் தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (க-18)

## இயக்கச்சி கிழக்கில் இயற்கை விடுதி

கிளிநொச்சி, டிசெ.29

இயக்கச்சியின் கிழக்கே சுண்டிக்குளம் பறவைகள் சரணாலயத்தை அண்மித்த பகுதியில் புதிய சுற்றுலா விடுதி ஒன்று வனவளப் பாதுகாப்பு அமைச்சால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.



வனவள பாதுகாப்பு அமைச்சின் நிதியீட்டத்தில் சுமார் 22 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த விடுதி இயற்கைச் சூழலையும் பறவைகள் விலங்குகள் சரணாலயத்தையும் கொண்ட அமைவிடத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இயக்கச்சி சந்தியிலிருந்து 15 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்திருக்கும் இந்தச் சுற்றுலா விடுதி சுண்டிக்குளம் கடற்கரை மற்றும் காட்டு மரங்கள், பனங்கூடல்கள், நீர் நிலைகள் ஆகியவற்றின் மத்தியில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த விடுதிக்கு 'இயற்கை விடுதி' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

பறவைகள் சரணாலயத்துக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் உட்பட சகலதரப்பினருக்குமான சுற்றுலா விடுதியாக இது அமைந்துள்ளது. இதைத் தொடர்ந்து இந்தப் பிரதேசத்தின் இயற்கை வளப்பாதுகாப்பு மேலும் வளப்படுத்தப்படும். இந்தச் சரணாலயம் வளப்படுத்திப் பேணப்படும் என இந்த விடுதியைத் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்த வனவளப்பாதுகாப்பு அமைச்சர் காமினிவிஜித விஜயமுனிசொய்சா தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், வனவள பாதுகாப்பு திணைக்களத்தின் பொது இயக்குநர் டி. ரத்னாயக்க மற்றும் மாகாணசபை உறுப்பினர் வை. தவநாதன், பொலிஸ் அதிகாரிகள், வனவள பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## கிளிநொச்சி கடற்றொழிலாளருக்கு வள்ளம், வலைகள் கையளிப்பு

*இதற்கான நிகழ்வு தருமபுரத்தில்*

கிளிநொச்சி கடற்றொழிலாளர்களுக்கு வள்ளம், வலைகள் ஆகியவற்றை வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி தருமபுரம் நெசவு மண்டபத்தில் கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்றது.


கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் கு.அருமைராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சியிலுள்ள யூ.என்.எச்.சி.ஆர். தலைமை அதிகாரி மரின் கஜ்டொம்ஹை, கண்டாவளை பிரதேச செயலர் த.முகுந்தன், கிளிநொச்சி சேவா லங்கா திட்டமுகாமையாளர் கே.முகுந்தன், கிளிநொச்சி அரச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் உட்பட பலர் கலந்துகொண்டு கடற்றொழில் உபகரணங்களை வழங்கினர். 31 பேருக்கு வள்ளங்களும், 31 பேருக்கு வலைகளும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)



கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட கல்லூரியின் பழைய மாணவரும், வைத்திய அதிகாரியுமான மருத்துவர் ரி.சத்தியமூர்த்தி மங்கல விளக்கேற்றி வைக்கின்றார். (க-6)

## கிளிநொச்சிக் குளத்தில் கொட்டப்படும் கழிவுகள்



அக்கராயன், டிசெ.29

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையினர் கழிவுகளை உமையாள்புரத்தில் கொட்டி வருகின்றனர். இந்த நிலையில் சில வர்த்தகர்களும் இராணுவத்தினரும் கிளிநொச்சிக்குளத்தின் வான் பகுதியிலும் அணைக்கட்டின் அருகிலும் கழிவுகளைத் தொடர்ச்சியாக கொட்டி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

“-”

**கிளிநொச்சிக் குளத்தின் வான் பகுதியிலும் அணைக் கட்டின் அருகிலும் கழிவுகளை தொடர்ச்சியாக கொட்டி வருகின்றனர்.**

கிளிநொச்சி நகரின் கழிவுப் பொருள்கள் கொட்டவேண்டிய இடம் உமையாள்புரம் ஆகும். கிளிநொச்சி குளப் பகுதியில் கழிவுப் பொருள்கள் வீசப்படுவதனால் அவை வயல் நிலங்களைச் சென்றடைகின்றன.

மேற்படி விடயம் தொடர்பாக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ந-18)

## கிடைக்காத மானிய உரம்

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள முழங்காவில் பகுதியில் கால போக நெற் செய்கைக்குரிய மானிய உரம் உரிய வகையில் கிடைக்கவில்லை என விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

காலபோக நெற் செய்கைக் குரிய மானிய உரம் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 58 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள நெற் பயிர்களுக்குரிய மானிய உரம் விநியோகிக்கப்பட்டு வருவதாக கமநல சேவை நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள முழங்காவில் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மானிய உர விநியோகம் உரிய முறையில் இடம்பெறவில்லையென விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (க-6)

## வவுனியாவில் மண்டல பூசை

வவுனியா, டிசெ.29

மணிகண்டன் தீர்த்த யாத்திரைக் குழுவினரின் மூன்றாவது மண்டல பூசை வவுனியாவில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளதாக வவுனியா மணிகண்டன் தீர்த்த யாத்திரைக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நிகழ்வில் ஐயப்ப சுவாமிமார்களுக்கான பாதபூசை, தீப ஆராதனை, சகஸ்ர நாம சரணகோசம், ஆனந்தமிகு பஜனை, விபூதிப் பிரசாதம் வழங்கல், ஜோதி பூசை என்பன இடம்பெறவுள்ளதாகவும், மணிகண்டன் தீர்த்த யாத்திரைக் குழுவினர் மேலும் தெரிவித்தனர். (க-402)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வர்த்தகர்களைக் கைதூக்கிவிட்டு உயர்த்த வழி காண்பது அவசியம்

இன்னமும் இரண்டு நாள்களில் ஆங்கிலப் புத்தாண்டு பிறக்கப்போகிறது. நாட்டுக்கு நாடு, மதத்துக்கு மதம், தொழில் சார்ந்தும், பண்பாடுகள் சார்ந்தும் வெவ்வேறு அடிப்படைகளை அடியொற்றியும் புத்தாண்டுகள் கொண்டாடப்படுவது உண்டு.

எதிர்வரும் புதன்கிழமை அன்று மலரும் ஆங்கிலப் புத்தாண்டு, பல நாடுகளைச் சேர்ந்த மக்களால் மத, இன பேதமின்றிக் கொண்டாடப்படும் ஒன்றாகும்.

ஆங்கிலப் புதுவருடத்தை முன்னிட்டு யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் தலைவர் ஆர்.ஜெயசேகரம் வெளியிட்ட தகவல் சற்று-சிறிது-ஆக்கபூர்வமானதாகத் தோன்றுகிறது.

யாழ்.மாநகர சபையால் ஒழுங்குபடுத்தப்பட்ட இடங்களைத் தவிர, வேறு எந்த இடத்திலும் நடைபாதைக் கடைகளை நடத்த முடியாது. யாழ். வணிகர் கழகம், யாழ். மாநகர ஆணையாளர், மாநகர முதல்வர் ஆகியோர்களுக்கு இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் முடிவில் இந்த நல்ல முடிவு எட்டப்பட்டதாக அறியப்படுகிறது.

கடந்த தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு, வழமைபோலவே தமக்குத் தேவையான துணி வகைகளை வாங்குவதற்குச் சென்ற பெண்மணி ஒருவரிடம், 'நீங்கள் ஒருவர் தான் எங்கள் கடைக்கு வந்திருக்கிறீர்கள். நம்பிக்கை, நாணயம், மதிப்புக்கு எல்லாம் காலம் போய்விட்டது அம்மா. பண்டிகைக் காலம் என்றதும் எங்கள் மக்கள், பாவனையாளர்கள், வந்தேறு வியாபாரம் செய்பவர்கள் பின்னால் வேகா வெய்யிலிலும் ஓடி ஓடித்திரிந்து வாங்குகிறார்கள்' என்று தனது கவலையைக் கண்ணீராகக் கொட்டியிருக்கிறார், வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவர். பாவம்.

பெரும் முதலீட்டைக் கொட்டி, தான் சொந்தத்தில் செய்யும் தொழில், முறிந்து விடக்கூடாது, அது தொடர்ந்து தனது வருவாய்க்கு காலாக அமைய வேண்டும் என்ப தற்காக-

பண்டிகைக் காலங்களில், வாடிக்கையாளர்களுக்குப் பல சலுகைகளை, கழிவுகளை வழங்குவது, புடைவை வியாபாரத்தில் மட்டுமன்றி, ஏனைய வகை வர்த்தக வகையறாக்களுக்கும் பொருந்தும்.

தீபாவளிப் பண்டிகை வியாபாரம் மட்டுமன்றி நத்தார்க் கால வியாபாரமும், தென்னிலங்கை "தொங்கு" வியாபாரிகளால் கபளீகரம் செய்யப்பட்டு விட்டதாக எமது வர்த்தகர்கள் புண்படும் நிலை தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

தமது சொந்த மண்ணில் நீண்ட காலமாக நின்று நிரந்தரமாகவே தொழில் செய்யும் எமது வர்த்தகப் பெருமக்களின் கால்களை தடுக்கி வீழ்த்தும் 'தொங்கு' வியாபாரம் முற்றாகக் களையப்பட வேண்டிய ஒன்று. இதில் தர்க்கம் புரிய முனையின் அது "வம்புத்தனம்"!

வடக்கின் நகரப் புறங்களில் மட்டுமன்றி, கிராமப் புறங்களிலும், புடைவை வியாபாரத்தில் தனித்தன்றி, நடைபாதை வியாபாரிகள் நானாவித வியாபாரத்தில் முழுமூச்சில் ஈடுபட்டதையும் புறந்தள்ள இயலாது.

பிறக்கும் புத்தாண்டிலும்-2014 ஆம்-இந்த ஆண்டின் ஒவ்வொரு பண்டிகைகள் பெருநாள்களை ஒட்டி எங்கள் பிரதேச வர்த்தகர்களை இந்த நச்சு வட்டம் வந்து அவர் தம் கால்களைச் சுற்றும் பேராபத்து உண்டு.

இதனை, வெறுமனே வர்த்தகர்களுக்குரிய பிரச்சினையாகவோ, தொழில்சார் விவகாரமாகவோ கருதக் கூடாது; கணிக்கவும் கூடாது. எமது பிராந்திய பொருளாதார வளர்ச்சியின் மேல், தூக்கில் போடப்படும் பாறாங்கல்லாகக் கருதப்பட வேண்டும். மாகாண சபை முதற்கொண்டு நாடாளு மன்றம் வரை எடுத்துச்செல்லப்பட்டு சீர்செய்யப்பட வேண் டியது.

இதனைக் காதில் போட்டுக் கொள்வார்களா எங்களின் மக்கள் பிரதிநிதிகள்....?

பெரும் தொகைப் பணத்தைக் கடன்பட்டு, தமது வியாபார நிலையங்களை விஸ்தரித்த-பெருப்பித்த வியாபாரிகள் சிலர் இரவோடு இரவாக ஊரை விட்டு கண்காணாத் தூரத்துக்கு "ஓடி விட்டவர்கள்" என்பது ஒரு வகையினராகவும்-

காலமும், பாவனையாளர்களும் தங்களுக்கு உதவுவார்கள் என்ற நம்பிக்கையில் வங்கி நிலுவைகளைச் செலுத்த முடியாது முடங்கி உள்ளவர்கள் இன்னொரு வகையினராகவும்-

இருக்கும் எமது சொந்த வர்த்தகர்களைக் கைதூக்கி விட்டு உயர்த்தவும் வழிகாண வேண்டும்.



# நம்பகமான விசாரணை தேவை



இலங்கையில் போர் முடிவடைந்ததானது இங்கு மீளிணக்கப்பாடு மேற்கொள்ளப்பட்டு ஜனநாயக ஆட்சி நடைபெறுவதற்கான ஒரு சிறந்த வாய்ப்பாக உள்ளபோதிலும் இலங்கை அரசால் இழைக்கப்பட்ட பல்வேறு மீறல்கள் தொடர்பில் நம்பகமான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என இலங்கை அரசு மீது அனைத்துலக சமூகமானது மிகப் பலமான அழுத்தங்களை மேற்கொள்கின்றது.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புப் படையினர் தமிழீழ விடுதலைப் புலிகளைப் போரில் தோற்கடித்ததன் மூலம் 2009இல் இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால் இலங்கையில் தொடர்ந்தும் முன்னாள் புலி உறுப்பினர்கள் மீதான கடத்தல்கள், சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்புணர்வுகள் என்பன தொடர்கின்றன.

**2006ன் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை இலங்கை ஊடகங்களில் பணிபுரிந்த 14 ஊடகப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்ட தாக அனைத்துலக மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.**

### மனிதக் கேடயமாக பொதுமக்கள்

நவம்பர் 2013இல் இலங்கையில் இடம்பெற்ற பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாட்டின் போது பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் உட்பட பல்வேறு தலைவர்கள் இலங்கை மீது தமது அழுத்தங்களை மேற்கொண்டிருந்தனர். இலங்கையில் போர் முடிவடைந்ததானது இங்கு மீளிணக்கப்பாடு மேற்கொள்ளப்பட்டு ஜனநாயக ஆட்சி நடைபெறுவதற்கான ஒரு சிறந்த வாய்ப்பாக உள்ளபோதிலும் இலங்கை அரசால் இழைக்கப்பட்ட பல்வேறு மீறல்கள் தொடர்பில் நம்பகமான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என இலங்கை அரசு மீது அனைத்துலக சமூகமானது மிகப் பலமான அழுத்தங்களை மேற் கொள்கின்றது.

இறுதிக்கட்டப் போரின்போது பல பத்தாயிரக்கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். பாதுகாப்பு வலயங்களில் தங்கியிருந்த பொதுமக்கள் மீது இலங்கை இராணுவத்தினர் ஆட்லறித் தாக்குதல்களை மேற்கொண்டதாகக் குற்றம் சுமத்தப்படுகிறது. இவ்வாறான மீறல்கள் இடம்பெற்றதை இலங்கை அரசு நிராகரித்துள்ளது. இதேவேளையில் தமிழீழ விடுதலை புலிகள் தமது கட்டுப்பாட்டில் இருந்த பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தினர்.

போரின் இறுதிக்கட்டத்தில் இராணுவத்திடம் சரணடைந்த மற்றும் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்ட பலர் இன்றுவரை காணாமற் போயுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. தடுத்து வைக்கப்பட்ட பெரும்பாலானவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது.

### சரணடைந்தவர்களின் முடிவு இன்னும் இல்லை

யாழ்ப்பாணத்தில் நாங்கள் அனந்தி சசிதரனைச் சந்தித்தோம். இவரது கணவரான எழிலன் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் தலைவர்களுள் ஒருவராவார். இவர் போரின் பின்னர் இராணுவத்திடம் சரணடைந்திருந்த போதும் இதுவரையில் அவர் குறித்து எவ்வித தகவலும் கிடைக்கப்பெறவில்லை. தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது எனக் கோரும் போரில் தமது கணவன்மாரை இழந்த தமிழ்ப் பெண்களின் ஒரு குழுவுக்கு அனந்தி தலைவியாக உள்ளார். இந்தப் பெண்களின் கணவன்மார் இராணுவத்திடம் சரணடைந்து காணாமற்போயுள்ளனர்.

2006-2012 வரையான காலப்பகுதியில் இலங்கையின் உத்தியோகபூர்வ மற்றும் இரகசியத் தடுப்பு முகாங்களில் தடுத்து வைக்கப்பட்ட போது பாலியல் வன்புர்வுகளுக்கும் பாலியல் சித்திரவதைகளுக்கும் உட்படுத்தப்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்ட 75 வரையான் வழக்குகளைப் பதிவு செய்துள்ளதாக இவ்வாண்டின் ஆரம்பத்தில் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்திருந்தது. 2009இல் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னரே இவற்றுள் பெரும்பாலான மீறல்கள் இடம்பெற்றதாகவும் வெளிநாடுகளிலிருந்து தமது உறவுகளைப் பார்ப்பதற்காக இலங்கைக்குச் சென்ற போது தடுத்து வைக்கப்பட்டவர்களும் இதற்குள் உள்ளடங்குவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஊடகத்துறைக்குச் சுதந்திரம் இல்லை

விசாரணையின் போது இலங்கைப் படையினராலும் இலங்கைப் பொலிஸாராலும் தொடர்ச்சியாகப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிவித்த தமிழ் யுவதி ஒருவரை நாங்கள் சந்தித்தோம். இவ்வாண்டு தான் தடுத்து வைக்கப்பட்ட போது இலங்கைப் படையினரால் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் தான் கர்ப்பமுற்றதாகத் தெரி வித்த பெண்மணி ஒருவரை நாம் சந்தித்தோம். இதுபோன்ற பல்வேறு சம்பவங்களை நாம் கேட்டறிந்தோம்.

இலங்கை அரசால் இழைக்கப்படும் பல்வேறு மீறல்களில் தமிழ் மக்கள் பெருமளவில் பாதிக்கப்படும் அதே வேளையில், பெரும்பான்மை சிங்கள சமூகமும் பாதிப்பைச் சந்திக்கின்றது. 2009இல் சுட்டுக் கொல்லப்பட்ட பிரபல பத்திரிகை ஒன்றின் ஆசிரியரின் சகோதரரை நாம் சந்தித்தோம். அண்மைய ஆண்டுகளில் ஊடகங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளால் 23 வரையான ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும் கூறப்பட்டது.

இலங்கை அரசை விமர்சிக்கும் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுவதாகவும் கடத்தப்படுவதாகவும் படுகொலை செய்யப்படுவதாகவும் ஊடக சுதந்திரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஊடகவியலாளர்கள் தெரிவித்தனர். 2006ன் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை இலங்கை ஊடகங்களில் பணிபுரிந்த 14 ஊடகப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டதாக அனைத்துலக மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

### தொடரும்இராணுவக் கண்காணிப்புகள்

அனைத்துலக நாடுகளில் வாழும் தமது உறவுகளுடன் தொடர்புகளைப் பேணும் தமிழர்களை இலங்கைப் படையினர் மிகவும் நெருக்கமாகக் கண் காணிக்கின்றனர் என்ற குற்றச்சாட்டை வடக்கில் பணிபுரியும் மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் ஏற்றுக்கொண்டார்.

மனித உரிமை மீறல்குற்றச்சாட்டை விசாரிப்பதற்கான சட்ட நடைமுறை இலங்கையில் கடைப்பிடிக்கப்படுவதாக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாட்டின் போது அறிவித்திருந்தார். ஆனால் இந்த சட்ட முறைமையின் ஊடாக எந்தவொரு வழக்கும் வெற்றிக ரமாக முடிவுக்குக் கொண்டு வரப்பட முடியாதுள்ளதாக மனித உரிமை ஆர்வ லர்கள் தெரிவித்துள்ளனர்.

*(நன்றி: புதினப்பலகை)*





ஜனசக்தி காப்புறுதி நிறுவன சாவகச்சேரி கிளையின் பொதுக்காப்புறுதி வாடிக்கையாளரான க. சுதாகரன் என்பவருக்கான வாகன இழப்பீட்டுத் தொகையை கிளை முகாமையாளர் சி.ரகுவரன் வழங்கினார். (த-9)



மக்கள் வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளையின் ஏற்பாட்டில் மாணவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திவரும் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் கணக்குகளைப் பேணிவரும் மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். இதன்போது பாடசாலை ஆசிரியர் ஒருவருக்கு மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் கே. சுசீந்திரனும், முன்பள்ளி மாணவியொருவருக்கு யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் மா. சின்னத்தம்பியும் பரிசில் வழங்கிக் கௌரவித்தனர். (த-14)



## கையடக்க தொலைபேசிகளின் மூலம் இ-சேவை கட்டணம் செலுத்த வசதி

அரச இ-சேவைகளை இணையத்தின் மூலம் பெற்றுக்கொள்வதற்கான கட்டணங்களை கையடக்கத் தொலைபேசியின் மூலம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வசதியை நுகர்வோருக்கு ஏற்படுத்த இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் (இக்டா) நடவடிக்கை எடுத்துள்ளது. இக்டாவும் வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமொன்றாகிய டயலொக்கும் ஒன்று சேர்ந்து இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப் படுத்தவுள்ளன.

இதன் காரணமாக (லங்கா கேட்) இலங்கை நுழைவாயில் என்ற அரசாங்க இ-சேவைகளுக்கான பணம் செலுத்தும் தலைவாசலின் மூலம் பரவலான சேவையொன்றை வழங்க வசதியேற்படுகின்றது. இது சேவை பெறுபவர்களுக்கு ஒரு பெரிய வசதியொன்றென்று இக்டா கூறுகிறது. தற்போது 25 அரசாங்க நிறுவனங்களின் சேவைகளை இ-சேவைகளாகப் பெறுக்கொள்ள முடியுமென எடுத்துக் காட்டும் இக்டா, இ-சேவைகளைப் பெற்றுக்கொள்ளவதற்காக இதுவரை ஏறத்தாழ 25,000 பேர் www.srilanka.lk என்னும் இணையத்தளத்தின் மூலம் தம்மைப் பதிவு செய்து கொண்டுள்ளனர் எனக் கூறுகிறது.

இப் பணம் செலுத்தும் சேவை தொடர் பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதன்போது இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், இக்டாவின் தலைவரும் ஜாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் பேராதனைப் பல்கலைக்கழக வேந்தருமான பேராசிரியர் பீ. டபள்யு. ஆப்பாசிங்ஹ, இக்டாவின் பணிப்பாளர் நீதி ஆலோசகர் ஜயந்த பர்ணாந்து மற்றும் வரை யறுக்கப்பட்ட பொது நிறுவனமாகிய டயலொக் அகிசியாட்டாவின் குழு பிரதான நிறைவேற்றுநர் கலாநிதி ஹான்ஸ் விஜேசூரிய ஆகியோர் கலந்துகொண்டனர். (த)



வீதி விபத்தில் உயிரிழந்த பங்குத்தந்தை அருட்திரு. கீதபொங்கலன் லக்ஸ்மன் அவர்களின் ஆயுட் காப்புறுதி இழப்பீட்டுத் தொகையான 20 லட்சம் ரூபா காசோலையை அவரது பெற்றோரிடம் யாழ். பிராந் திய முகாமையாளர் வழங்குகிறார். அருகில் முகாமையாளர்களான விஜேந்தன், றொக்சன், உத்தியோகத்தர்கள் மற்றும் பங்குத் தந்தையர்கள் உள்ளனர். (த)



2013ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாத வாசிப்பு மாதத்தை முன்னிட்டு செலான் வங்கி கிளிநொச்சி கிளையின் முகாமையாளர் மற்றும் ஊழி யர்களினால் கிளிநொச்சி பொதுநூலகத்துக்கு அன்பளிப்பாகப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. (த)

## மக்கள் வங்கியின் பிராந்தியக் கிளையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிலையம்

யாழ்ப்பாணம்,டிசெ.29

மக்கள் வங்கியின் சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிலையத் திறப்பு விழா யாழ். கன்னாதிட்டிப் பிராந்தியக் கிளையில் அண்மையில் இடம்பெற்றது.

மக்கள் வங்கியின் பிராந்தியக் கிளையின் சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிலையத்தின் முகாமையாளர் என். தனேஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நிலையத்தின் நினைவுப் பலகையை மக்கள் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் ரி. ஏ. ஆரியபாலா திரைநீக்கம் செய்ததுடன் நிலையத்தையும் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து நிலையத்தின் ஆரம்ப நடவடிக்கைகள் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டு 100 பயனாளிகளுக்கு கடன் உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வங்கியின் பிராந்திய முகாமையாளர் கே. சுசீந்திரன், மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் சண். குறிஞ்சிதரன் மற்றும் வங்கிக் கிளைகளின் முகாமையாளர்கள் வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டனர். (த-14)



## இன்றைய நாள்

தருவது வித்தியா

உங்களுக்கு எப்படி?

**மேடம்:** விரும்பிய பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். வியாபாரத்தைப் பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையைப் பெறுவீர்கள்

**இடபம்:** சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசிக் காரியம் சாதிப்பீர்கள். பணப் புழக்கம் அதிகரிக்கும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள்.

**மிதுனம்:** உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகமும். உங்களால் மற்றவர்கள் பயனடைவார்கள். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளையும் தாண்டி முன்னேறுவீர்கள்.

**சிங்கம்:** யதார்த்தமாக சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். பிரபலங்களின் நட்புக் கிடைக்கும். அரசால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு அதிகரிக்கும்.

**கன்னி:** சோர்வு நீங்கி துடிப்புடன் செயற்படத் தொடங்குவீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**நாளை**

மார்கழி-15 திங்கட்கிழமை 30.12.2013
திதி:திரயோதசி மு.இ.09.53 வரை
நட்சத்திரம்: அனுசம் பி.ப.02.35 வரை
சுபநேரம்: 12.29 - 01.59 வரை
இராகுகாலம்: 07.59 - 09.29 வரை

**துலாம்:** எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். மற்றவர்களைப்பற்றி வீண் விமர்சனங்களைத் தவிர்ப்பது நல்லது. நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தமடைவீர்கள்.

**விருச்சிகம்:** முக்கிய கோப்புகளைக் கையாளும்போது அலட்சியம் வேண்டாம். திடீர் பயணங்களால் அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் பணிகளைப் போராடி முடிப்பீர்கள்.

**தனுசு:** நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். மனதுக்கு இதமான செய்தி வரும். கண்டும் காணாமல் இருந்தவர்கள் வலிய வந்து பேசுவார்கள். உத்தியோகத்தில் செல்வாக்குக் கூடும்

**மகரம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயற்படுவீர்கள். உறவினர், நண்பர்கள் சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புக்களை ஒப்படைப்பார்கள்.

**கும்பம்:** பழைய பிரச்சினைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

**மீனம்:** வேலைச்சுமை இருந்துகொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உங்கள் குடும்ப விடயத்தில் மற்றவர்கள் தலையிட அனுமதிக்காதீர்கள். அடுத்தவர்கள் மனம் காயப்படும்படி பேசாதீர்கள்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | | 1 | | | | | 9 |
| | 8 | | 4 | 2 | | 1 | | 5 |
| 9 | 2 | | | 5 | 8 | 6 | | |
| 1 | | 8 | 5 | | 3 | | | |
| | 9 | | | | | | 3 | |
| | | | 9 | | 7 | 5 | | 6 |
| | | 9 | 3 | 7 | | | 5 | 8 |
| 4 | | 3 | | 8 | 1 | | 6 | |
| 8 | | | | | 5 | | | 4 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 5 | 2 | 1 | 4 | 7 | 3 | 6 |
| 1 | 4 | 7 | 3 | 9 | 6 | 2 | 8 | 5 |
| 6 | 2 | 3 | 7 | 8 | 5 | 4 | 1 | 9 |
| 9 | 5 | 1 | 4 | 2 | 3 | 6 | 7 | 8 |
| 2 | 3 | 4 | 8 | 6 | 7 | 5 | 9 | 1 |
| 7 | 8 | 6 | 1 | 5 | 9 | 3 | 4 | 2 |
| 5 | 7 | 2 | 9 | 4 | 1 | 8 | 6 | 3 |
| 4 | 1 | 8 | 6 | 3 | 2 | 9 | 5 | 7 |
| 3 | 6 | 9 | 5 | 7 | 8 | 1 | 2 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


P.P.T

விரையுங்கள் விசேட விலைச் சலுகையில்




P.P.T வெளிநாட்டு பார்சல் சேவை

மிகக் குறைந்த விலையில் 100இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு 3 வேலை நாள்களில் உங்கள் வீட்டுக்கதவைத் தட்டும் பார்சல் சேவை

20 Kg மேற்பட்ட பார்சல்களுக்கு

* இந்தியா 1 Kg - 625/=
* லண்டன் 1 Kg - 650/=
* பிரான்ஸ் 1 Kg - 775/=
* ஜேர்மனி 1 Kg - 775/=
* கனடா 1 Kg - 850/=
* ஆஸ்திரேலியா 1 Kg - 700/=
* நோர்வே 1 Kg - 850/=

Door to Door Service



We Can Give You Training and Experience in Ticketing. Call Us For More Details

P.P.T உள்நாட்டு பார்சல் சேவை

12 மணித்தியாலங்களுக்குள் கொழும்பு, யாழ்ப்பாணம், பருத்தித்துறை பார்சல் சேவை

P.P.T Bus Service

கொழும்பு, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, K.K.S வீதி அதிசொகுசு பஸ்சேவை

( Wifi Internet, Tv, Mobile Charger, Mic, Serurity Camera, Fridge)

P.P.T Transport Service

உங்கள் பொருள்கள் மற்றும் தளபாடங்களை இலங்கையின் எப்பாகத்திற்கும் கொண்டு செல்ல

P.P.T Guest House A/C, Non A/C Rooms Available in (Point Pedro)

P.P.T Air Ticketing and Visa Arrangement

உலகின் எந்தவொரு நாட்டிற்குமான மிகக் குறைந்த விலையில் விமான பயணச்சீட்டுக்கள்

விசா சேவைகள் செய்து தரப்படும்

சீனா, டுபாய், தாய்லாந்து, மலேசியா, இந்தியா மற்றும் அனைத்து நா[illegible]ளுக்கும்

| கொழும்பு - 06 | கொழும்பு - 13 | யாழ்ப்பாணம் | பருத்தித்துறை |
|---|---|---|---|
| காலி வீதி, வெள்ளவத்தை கொழும்பு | சங்கமித்தை மாவத்தை, கொழும்பு | கே.கே.எஸ். ரோட், யாழ்ப்பாணம் | அரசடி லேன், பருத்தித்துறை |
| Hotline : (+94) 76 6036204<br>Tel : (+94) 11 4375793<br>: (+94) 11 2364999 | Mob : (+94) 77 5755175<br>Tel : (+94) 11 4375790 | Mob : (+94) 77 5731318<br>Tel : (+94) 21 4923240 | Mob : (+94) 77 5736003<br>Tel : (+94) 21 4923724 |

(41701)(27.6.3)





சர்வதேச மாற்றாற்றல் உள்ளோர் தின நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை மன்னார் மாற்றாற்றல் உள்ளோர் புனர்வாழ்வுச் சங்கத்தினரால் நடத்தப்பட்டது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து, வர்த்தகவாணிபம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் கலந்து கொண்டார். (ஒ-5)



பிரதேச அபிவிருத்தி வங்கியின் யாழ். கிளையின் ஒளிவிழா நிகழ்வு கடந்த 22 ஆம் திகதி வங்கியில் இடம்பெற்றது. நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களையும் மங்கல விளக்கேற்றல் நிகழ்வையும் காணலாம். (ஒ-14)



யாழ்ப்பாணம் கச்சேரியடியில் அமைந்துள்ள ஸ்ரீ கல்கி நிலையத்தின் ஒளிவிழாவில் நத்தார்தாத்தா சிறுவர்களுடன் நத்தார் கலை நிகழ்வுகளில் கலந்து கொண்டிருப்பதைக் காணலாம். (ஒ-7)



யாழ்ப்பாணம் மற்றும் மீசாலை உமாதவா கல்வி நிறுவனத்தின் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக பௌதிகத்துறை பேராசிரியர் க.கந்தசாமி. மாணவர்களுக்கு விருது வழங்கிக் கௌரவித்தார். (ஒ-9)




கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற ஒளிவிழாவில் இடம்பெற்ற 'விடியலைத்தேடி' நாடகத்தின் ஒரு காட்சி. (ஒ-135)



அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையில் நடைபெற்ற சிவாகமபானு சிவஸ்ரீ ச.குமாரசுவாமி குருக்களின் 126 ஆவது ஆண்டு நிறைவு நாள் விழாவில் கலந்து கொண்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் குருக்களின் உருவச் சிலைக்கு மாலை சூட்டி பிரார்த்தனை செய்வதையும் காணலாம். (ஒ-11)



சங்கானை மாவடி ஞானவைரவர் பரிபாலன சபையினரால் அண்மையில் நடத்தப்பட்ட மாணவர் கௌரவிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி திருநாவுக்கரசன் மங்கல விளக்கேற்றுவதையும் நந்திக் கொடி ஏற்றப்படுவதையும் காணலாம். (ஒ-29)




இயக்கச்சி இராணுவப் படைப்பிரிவினர் கடந்த போயா தினத்தன்று தமது 6ஆவது வருட நிறைவை அனுட்டித்தனர். இதன்போது கைதடி அரச முதியோர் இல்லத்துக்கு வருகை தந்து அங்கு தங்கி வாழும் முதியவர்களுக்கு உணவு வழங்கிய வேளையில்... (ஒ-51)



யாழ். சின்மயா மிஷனின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள பாலவிஹார் முகாம் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் நடைபெற்ற வேளையில் அதில் கலந்து கொண்டோர். (ஒ-14)



கிளிநொச்சி தமிழ்ச் சங்கம் நடத்திய திருக்குறள் விழாவில் விருதுகள் பெற்ற பெரியோர்களும், போட்டிகளில் பரிசு பெற்ற பாடசாலை மாணவர்களும் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவுடன் காணப்படுகின்றனர். (க-18)



முல்லைத்தீவு வீதி மாங்குளத்தில் அமைந்துள்ள சரத்ஜீவன் முன் பள்ளியின் ஒளிவிழா நிகழ்வின்போது சிறார்களின் கலை நிகழ்வு இடம்பெறுவதையும், இதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட துணுக்காய் கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் எஸ். சசிதரன் உரையாற்றுவதையும் காணலாம். (க)



கிளிநொச்சி மாவட்டம் அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்திலிருந்து தரம் -5 பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த மாணவர்களுக்கும், சிறந்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கும் கௌரவம் அளிக்கும் நிகழ்வொன்று அண்மையில் இடம்பெற்றது. இதன்போது அந்த மாணவர்கள் அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன் காணப்படுகின்றனர். (க-18)



கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இல -2 பாடசாலையில் தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த க.கருணியன் என்ற மாணவன் அதிபர் மற்றும் ஆசிரியருடன் காணப்படுகின்றார். (க-18)



முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்தில் தரம்- 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வின்போது வடமாகாண கல்வியமைச்சர் த.குருகுலராசா மாணவன் ஒருவருக்குப் பரிசில் வழங்கிக் கௌரவிக்கின்றார். (க-18)




இனம் தெரியாதவர்களால் உடைக்கப்பட்ட பண்டாரவன்னியனின் நினைவுக் கல் மீண்டும் அமைக்கப்பட்ட பின்னர் அதனை வடமாகாண சபை உறுப்பினர் சி.சிவமோகன் பார்வையிடுகின்றார். (க-500)




கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம் நடத்திய வருடாந்த திருக்குறள் மாநாட்டில் தமிழ் இலக்கியத் துறைக்கான விருதை எழுத்தாளர் ச.முருகானந்தன் வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜாவிடமிருந்து பெற்றுக் கொண்டார். (க)



ஒட்டுசுட்டான் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் பெண்களால் தயாரிக்கப்பட்ட பனம் பொருள் கைப் பணிப் பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. (க-500)



ஐ.லீட் தொழிற் பயிற்சி நிறுவனத்தினரால் நடத்தப்பட்ட மரதன் ஓட்டப் போட்டியில் பங்குபற்றி முதலாவது இடத்தைப் பிடித்த வீரருக்கு 64 ஆவது படைப்பிரிவு இராணுவ அதிகாரி லெப்ரினன்ட் கேணல் பற்றிக் வெற்றிக் கிண்ணத்தை வழங்குகின்றார். (க-500)



கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இராணுவத்தினர் நடத்தி வரும் கிறிஸ்மஸ் ஒளி விழா நிகழ்வுகளில் சிறுவர்களுக்குப் பரிசில்களை வழங்குகின்றார் கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன். (க-18)



கிளிநொச்சி மாவட்டத்தில் மேய்ச்சல் தரவைகள் அமைக்கப்படாததால் கால்நடை வளர்ப்போர் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (க-18)



வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அண்மையில் ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு வந்தபோது விவசாயிகள் மத்தியில் உரையாற்றுகின்றார். (க-500)



மழை பெய்யாததால் வறண்ட நிலையில் காணப்படும் கிளிநொச்சி இரணைமடுக்குளம். (க-6)

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி சந்தைக்கு அருகில் நாவலடி லேனில் 2 பரப்பு 1.8 குழி காணி உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு:077 361 9648

(சி/11111)(4.6.3)

## கடை,வீடு,காணி விற்பனைக்கு

பண்டத்தரிப்பு,கீரிமலை வீதியில் நான்கு கடைத்தொகுதி உடன் கூடிய மேல்வீடும் மேலும் 10 பரப்பு வயல், 35 பரப்பு காணி கீரிமலை வீதியில் கிணற்றுடன் கூடிய நான்கு பரப்பு காணி,மற்றும் வல்வைச்சந்தை தீருவில் வீதியில் நான்கு அறை கொண்ட வீடும் விற்பனைக்குண்டு

max adz

தொடர்பு :
Shan - 077 027 8937 ( இலங்கை )
மரியநேசன் - 416 839 7896 ( கனடா ) (சி/11105)
Email : GNANAM70@HOTMAIL.COM

## காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகில் ஒரு பரப்பு 15.50 குழி விஸ்தீரணம் கொண்ட 5 அறைகள் உள்ள வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 711 1400

(41755)(4.3.6)

## உடனடித்தேவை

யாழ். சுன்னாகத்தில் இயங்கும் Hotel ஒன்றுக்கு அனுபவமுள்ள சமையல் ஆள்கள்/உதவியாளர்கள் தேவை.

தொடர்பு: 021 224 1731, 077 230 6642, 077 241 8804

(சி/11113)(4.6.3)

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு, கலட்டி ஒழுங்கையில் (கே.கே.எஸ் வீதியிலிருந்து முத்தட்டுமட வீதியூடாக 100 மீற்றர் தூரத்திற்குள்) 3½ பரப்பு விஸ்தீரணமுள்ள சுற்றுமதில் கிணற்றுடன் கூடிய காணிவிற்பனைக்குண்டு.தரகர்கள் தேவையில்லை.வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:077 444 0300

(41743)(4.6.3)

## ஒத்துமாறல்

மன்னார் பிரபல பாடசாலைக்கு வணிகக்கல்வி பாடத்துக்கு ஒத்துமாற விரும்பும் ஆசிரியர் தொடர்பு கொள்ளவும். (41764) (7.6.3)

தொடர்பு : 072 246 9103

## காணி விற்பனைக்கு

கலைவாணி மில்ஒழுங்கை, கொக்குவில் கிழக்கில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 322 1117

(சி/11109)(4.6.3)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், திருநெல்வேலி மருத்துவ பீடத்துக்கு முன் சுற்றுமதிலுடன் 2½ பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு : (சி/10828) (7.6.3)

077 797 3633, 077 915 7883

## வீட்டுப் பணிப்பெண் தேவை

கோண்டாவிலில் இருக்கும் சிறிய அரச உத்தியோகத்தர் குடும்பத்திற்கு வீட்டில் தங்கி நின்று சகல வேலைகளையும் செய்யக்கூடிய குடும்பப் பொறுப்புகளற்ற பணிப்பெண் தேவை.

சம்பளம் ரூ 12000/- (41767)(4.6.3)

தொடர்பு:078 995 6651

## நிச்சயமாக தொழிலை இலக்காகக் கொண்ட பாடநெறி!

### O/L பின் School of Nursing IVA

ஒரு வருட தாதியர் பயிற்சி பாடநெறி

இம்முறை க.பொ.த சா/த மாணவ மாணவிகளுக்கும் விண்ணப்பிக்க முடியும்.

உள்ளூர், வெளியூர் தாதியர் தொழில் வாய்ப்புக்கள் பெருமளவிலே பெற்றுக் கொடுத்திருக்கின்ற ஒரே தாதியர் பாடசாலையில் பாடநெறிகளுக்கு தற்போது மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

பாடநெறியினை சிறந்த முறையில் பூர்த்தி செய்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் நிறுவனத்தினால் தொழில் வாய்ப்புக்கள் பெற்றுத்தரப்படும்.



க.பொ.த சா/த 6 பாடங்கள் சித்தி
வயது: 16 - 30 இடைப்பட்டிருத்தல்
உயரம் 4 அடி 10 அங்குலம்

இலவசமாக சீருடையும், தாதியர் பாடநெறிக்கு ஏற்ற ஆங்கில பாடநெறியும், தூரப் பிரதேச மாணவர்களுக்காக பாதுகாப்பான தங்குமிட வசதிகளும் உண்டு.

### After A/L Medical Laboratory Technology Assistant
### ஆய்வுகூட உதவியாளர் பாடநெறி

நாடு முழுவதிலும் அமைந்துள்ள ஆய்வுகூட உதவியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக க.பொ.த. உ/த விஞ்ஞான பாடத்திற்குத் தோற்றிய நீங்களும் இப்போது ஆய்வுகூட உதவியாளராக ஆகலாம்.



6 மாத நிறுவனத்தினுடனான பயிற்சிக்குப் பின் சேவை இடங்களுக்கு சேர்க்கப்படுவார்கள்.

### மருந்தாளர் பாடநெறி

தற்போது தனியார் துறைகளில் வைத்திய சேவையிலே மருந்து தொடர்பான சேவையில் ஈடுபட்டுள்ள தகுந்த கல்வித் தகைமை இல்லாதவர்களுக்கு தொழிலுக்கு ஏற்ற செயன்முறைப் பயிற்சியுடன் சான்றிதழும் வழங்கப்படும்.

அரச வைத்திய வித்தியாலயத்தினால் நடாத்தப்படும் வெளிவாரி மருந்தாளர் பரீட்சைக்கு வகுப்புக்கள் நடைபெறும்.

நடாத்துபவர் ( வைத்தியர் ராஜவேலாயுதம் — ஞாயிறு தினங்களில் காலை 9.00 முதல் 4.00வரை

**யாழ்ப்பாணம்** — இல 323, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.071-8722350, 0718-722 353

**மட்டக்களப்பு** — இல. 61/1, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. தொ.பே.0718-722 352, 0718-722 353

**வவுனியா** — இல. 36/1, 88/1, 2ம், குறுக்கு வீதி, வவுனியா. தொ.பே. 0718-722 351, 0718-722 353

**அனுராதபுரம்** — இல. 396/3, சுவசேவன வைத்தியசாலை, நீதிமன்ற பகுதி, கடதோனாறு அனுராதபுரம். தொ.பே. 0718-722 355

**பதுளை** — இல 20/1/1, ஹுணுகொடுவ வீதி, பதுளை. தொ.பே.0718-722 354

**கண்டி** — சிங்கர் நிறுவனம், டி.எஸ். சேனாநாயக்க ,வீதி, கண்டி. தொ.பே. 0711-980 980, 0710-336 329

**கம்பஹா** — 77/1/4 யக்கல வீதி கம்பஹா. தொ.பே. 0718-657 775

**பானதுறை** — இல 36, சுவமெதுர வைத்தியசாலை, சுசந்த மாவத்தை, பானதுறை. தொ.பே. 0710-336 332

**தங்கல்ல** — ஆரோக்யா வைத்தியசாலை, முஹுது மாவத்தை, சம்பத் வங்கி அருகில், தங்கல்ல. தொ.பே. 0710-336 334

**இரத்தினபுரி** — இல 85, உள் சுற்று வீதி, இரத்தினபுரி. தொ.பே. 0715-980 980

Registered Education Institute in the republic of Sri Lanka

ரூ 40/= பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் தெரிவு செய்த கிளையை குறிப்பிட்டு விண்ணப்பப்படிவத்தினை அருகிலுள்ள எமது கிளைக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

பிரதான காரியாலயம்
**அய்வா**
சர்வதேச தாதியர் பாடசாலை
இல 85, உள் சுற்று வீதி, லிபர்டி கட்டிடம், இரத்தினபுரி.

NTS P.V. 91973

தொ.பே : 0454 980 980
0715 980 980 Fax : 045 2233000
E-mail : manojhewaduwa@yahoo.com

கையடக்கத் தொலைபேசி குறுந்தகவல் மூலம் விண்ணப்பத்தைப் பெறலாம். 0710 755 755

மாதிரி விண்ணப்பப்படிவத்தை எமது இணையத்தில் அவதானிக்கலாம். www.nursingiva.com

இல. P 07/0096 கீழ் தொழில் மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு சபையால் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனமாகும்.

(சி/10827)

## IVS மற்றும் வர்ணம் FM ஏற்பாட்டில் 2014 இற்கான மாபெரும் விசேட கருத்தரங்கு

90.4 90.6 வர்ணம் FM

**பூரண புலமைப்பரிசில் - 10**

**அரை புலமைப்பரிசில் - 100**

IVS நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் **கலாநிதி விஜித்தா சேனாநாயக்க** அவர்கள் IVS அறக்கட்டளையின் ஊடாக க.பொ.த (சா/த) சித்தியடைந்த மாணவர்களுக்கு மற்றும் க.பொ.த (உ/த) இல் விஞ்ஞானம், கணிதம், வணிக மற்றும் கலைப்பிரிவுகளில் குறைந்தபட்சம் 02 பாடங்களில் சித்தியடைந்த மாணவர்களுக்கு கீழ் காட்டப்பட்டுள்ள பாடத்திட்டங்களுக்கு அமைவாக வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் **(பங்களாதேஷ், இந்தியா, மலேசியா, அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா)** உயர் கல்வியினைப் பெறும் சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது. திறமையான மாணவ மாணவிகளுக்காக 10 பூரண புலமைப்பரிசில்கள் மற்றும் 100 அரைப்புலமைப்பரிசில்களை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பமுண்டு என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றோம்.

### கருத்தரங்கு நடைபெறும் இடம்:

### யாழ் இந்துக் கல்லூரி

ஜனவரி 04 ஆம் திகதி காலை 11 மணி முதல்

**அனுமதி இலவசம்**

**Institute of Vocational Studies (Pvt) Ltd.**

No. 476, Kandy Road, Dalugama, Kelaniya, Sri Lanka

Tel : 0777444500 / 2910323 / 2969211 Fax : 4810829
E-mail : ivsltd@hotmail.com, ivocationalstudies@gmail.com
Web : www.ivsedu.net

(சி/11110)

## 2014 இற்கான புதிய அனுமதிகள்

### BBC ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை

11 வது வருடத்தில்

| வயது 2+ முதல் வயது 3+ வரை | வயது 3+ முதல் வயது 4+ வரை | வயது 4+ முதல் வயது 5+ வரை |
|---|---|---|
| Play Group | Montessori | Pre School |

10 வருடங்களில் 7500 ற்கு மேற்பட்ட சிறார்கள் கல்வி பயின்றுள்ளார்கள். 90 % மாணவர்கள் புலமைப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்கள்.

கற்பித்தல் முறை:

- ★ சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட Dr. Maria Montessori + Canadian ECE Method
- ★ தமிழ் கட்டாய பாடம்.
- ★ ஆங்கில மொழி மூல கற்பித்தல்
- ★ சிறார்களின் திறமைகளை வெளிக் கொணரும் நிகழ்ச்சிகளில் சகலரும் பங்கு பெறுவார்.
- ★ விளையாட்டுப் போட்டி, English Concert, முத்தமிழ் விழா, சித்திரக்கைவேலைக் கண்காட்சி, Graducation Ceremony.

பாலர் பாடசாலை வளாகங்கள்

தலைமைக் காரியாலயம் → **யாழ்ப்பாணம்** — 64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்

| யாழ்ப்பாணம் | நீர்வேலி |
|---|---|
| மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம் [ஓட்டுமடம் சந்தி அருகாமை] | 1வது மைல் கல் இராச வீதி |
| **கோப்பாய்** | **சாவகச்சேரி** |
| பருத்தித்துறை வீதி கோப்பாய் மத்தி | சாவகச்சேரி Hindu Collgee Primary School அருகாமை |
| **மானிப்பாய் 1** | **அச்சுவேலி** |
| 252, ஆலடிச்சந்தி, யாழ் வீதி. | ஆதார வைத்தியசாலை அருகாமை |
| **மானிப்பாய் 2** | **சங்கானை** |
| சங்கரப்பிள்ளை வீதி. (மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி) | பிரதேச செயலகம் அருகாமை [நிகர வைரவர் கோயிலடி] |
| **சுன்னாகம்** | **வடமராட்சி** |
| Dr. சுபாரத்தினம் வீதி சுன்னாகம் | பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, கரவெட்டி |

### BRITISH BUSINESS COLLEGE

British Business College — Where Students Come First

64, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சி/10824)

Tel:077 362 7055, 021 222 4060, 021 222 5796, 077 6646357

British Council இனால் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு நிலையம்.

Registered as an Education & Training Company with the Registrar of Companies- Sri Lanka. Reg. No: P 9718

## தொண்டையில் வெட்டுண்ட நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதி

தென்மராட்சி, டிசெ.29

கூரிய ஆயுதத்தினால் தனது தொண்டையை வெட்டி உயிரை மாய்த்துக் கொள்ளும் முயற்சியில் குடும்பஸ்தரொருவர் ஈடுபட்டார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம்பெற்றது. குரல்வளையில் வெட்டுக்காயத்துடன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் 38வயதுடைய சாவகச்சேரி கச்சாய் வீதி வாசியாவர். இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஒ-9)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### திருமதி நாகேஸ்வரி இராசையா



மண் மகிழ 15.07.1942

கண் நெகிழ 29.11.2013

வாழ்க்கை எனும் ஓடத்தில் - எமைச் சுமந்த அன்புப் பெட்டகமே
அன்பே உருவான உன் ஆருயிர் கணவர் பண்பாய் நீ வளர்த்த உன் பிள்ளைகள்
பாசமாய்ப் பார்த்திருந்த உன் மருமக்கள் அள்ளி அணைத்தெடுத்த உன் பேரன்கள்
பேர்த்திகள் கொஞ்சும் மொழிபேசும் உன் பூட்டன்கள் உதவிகள் பல செய்து
உறவாடி நீ வாழ்ந்த உறவுகள் இத்தனையும் இங்கிருக்க எமைத் தவிக்கவிட்டு
எங்கு சென்றீர் எம் கண்ணில் நீர் சொரிய
தாயே உன் நாமம் நிலைக்க உன் நினைவில் வாழ்ந்திடுவோம்

கடந்த 29.11.2013ஆம் திகதி சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (29.12.2013)ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் சமுகம் தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதுடன் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன விருந்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரது பிரிவுச் செய்தி கேட்டு உடன் வந்தும் அனுதாபச் செய்திகள் ஊடாகவும் ஆறுதல் கூறியோருக்கும் அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு பல வழிகளில் உதவி, ஒத்தாசை புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மீசாலை மேற்கு, மீசாலை. (சி/10678) (7.6.3) குடும்பத்தினர்.

## காற்றில் பறந்த காசோலையை காத்திருந்து கொடுத்தார் வர்த்தகர்

### தவறவிட்டவர் வங்கிக்கு ஓடோடி வந்தவேளை

தென்மராட்சி. டிசெ.29

சாவகச்சேரி ஏ-9 வீதியில் ஒருவரால் தவறவிடப்பட்ட 55 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையை வங்கி வாசலில் காத்திருந்து வங்கி முகாமையாளர் ஊடாக உரியவரிடம் வழங்கினார் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அருகில் உணவகமொன்றை நடத்திவரும் முஸ்லிம் வர்த்தகரொருவர்.

சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:-

வங்கியில் பணம் பெறுவதற்காக 55 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையை சேர்ட் பொக்கற்றில் வைத்துக் கொண்டு நகை விற்பனை நிலைய உரிமையாளரொருவர் தமது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார். அந்த வேளை அந்தக் காசோலை காற்றில் பறந்து வீதியில் வீழ்ந்தது. வீதியில் காசோலையைக் கண்ட உணவக உரிமையாளர் அதனை எடுத்து அங்குள்ள வங்கிக்குச் சென்று முகாமையாளரிடம் கொடுத்தார். அவரின் ஆலோசனைப்படி அங்கு காத்திருந்தார் வர்த்தகர். காசோலையைத் தொலைத்தவர் ஒரு மணி நேரத்தின் பின்னர் வங்கிக்கு ஓடோடி வந்தார். காசோலையை இரத்துச் செய்வது குறித்து முகாமையாளருடன் உரையாடினார்.

அந்த வேளையில் வங்கியில் காத்திருந்த வர்த்தகரை அழைத்து அவரிடமிருந்து காசோலையை பெற்றுக் கொடுத்தார் முகாமையாளர்.

வங்கியில் உடனடியாகப் பணம் பெறக்கூடிய நிலையில் திறந்த காசோலையாகவிருந்த அந்தக் காசோலையை ஒரு மணித்தியாலத்துக்கு மேலாக காத்திருந்து உரியவரிடம் கையளித்த முஸ்லிம் வர்த்தகரின் நேர்மை குறித்து வணிகர்களும், பொதுமக்களும் பாராட்டியுள்ளனர். (ஒ-9)

## கண்ணீர் அஞ்சலி



(C/10827)2.6.3)

நவாலியூர் திருமதி சுதாதேவி செகராஜசேகரம்
(Rtd.M.A.Vali-North - P.S, USA)

வலி வடக்கு பிரதேச சபையிலும், மானிப்பாய் பிரதேச சபையிலும், வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக அலுவலகத்திலும் கடமையாற்றி இளைப்பாறிய திருமதி சுதாதேவி செகராஜசேகரம் (முகாமைத்துவ உதவியாளர்) அவர்கள் 27.12.2013 காலமான செய்திகேட்டு துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்திக்கின்றோம்.

நவாலி. H.S.C.M.F (ஹேமலதா சிறுவர் ஞாபகார்த்த நிதியம்)

## பிறந்தநாள் அறக்கொடை விழா

யாழ்ப்பாணம். டிசெ.29


சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 89 ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா எதிர்வரும் ஜனவரி மாதம் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மகரகம தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல் கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா, யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் த.பேரானந்தராஜா, யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் செல்லத்துரை உதயகுமார் ஆகியோர் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வில் யாழ். போதனா வைத்திய சாலை, தெல்லிப் பழை ஆதார வைத்திய சாலை, சிவத்தமிழ்ச் செல்வி கல்வி நிதியம் என்பவற்றுக்கு அறக்கொடைவழங்கல், சிவத்தமிழ் விருது வழங்கல் என்பனவும் இடம் பெறும். (ந-14)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா சின்னத்தங்கம்



எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழைப் பிறப்பிடமாகவும் முதலாம் மைல் வீதி, கிராம்புவில், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சின்னத்தங்கம் 27.12.2013 வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (30.12.2013) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலாம் மைல் வீதி,
கிராம்புவில்,
சாவகச்சேரி. (33055)(7.6.3)

தகவல் : குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### அருணாசலம் அரியரட்ணம்

[இளைப்பாறிய பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர்]



அராலி வடக்கு, குலனையைப் பிறப்பிடமாகவும், வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டை சிவன் கோயிலடியை வதிவிடமாகவும் கொண்ட அருணாசலம் அரியரட்ணம் 27.12.2013 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முன்னாள் விரியுரையாளரும், வட்டுக் கோட்டை சமாதான நீதிவானும், வட்டு சிவன் ஐக்கிய நாணய சங்கத் தலைவரும், வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனத் தலைவரும், முன்னாள் வடமாகாண நல்லொழுக்க வாலிபர் சங்கத் தலைவரும், சங்கானை கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவருமாவார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம்-நல்லம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான வீரபத்திரர்-மாணிக்கம் தம்பதியரின் அருமை மருமகனும். இரத்தினாவதியின் பாசமிகு கணவரும் (இலங்கை), பானுமதி (பிரான்ஸ்), சேகரன் (ஜேர்மனி), அருளானந்தன் (பிரான்ஸ்), சீவானந்தன் (கனடா), காலஞ்சென்ற சுந்தரா னந்தன் மற்றும் நித்தியானந்தன் (பிரான்ஸ்), கிருபானந்தன் (பிரான்ஸ்), குமாரானந்தன் (நோர்வே), காலஞ்சென்ற துஷ்யந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலகுகா னந்தன் (பிரான்ஸ்), வசந்தினி (ஜேர்மனி), யசோதா (பிரான்ஸ்), சுபத்திரா (கனடா), கலையரசி (பிரான்ஸ்), வசந்தபிரியா (பிரான்ஸ்), பத்மராணி (நோர்வே) ஆகியோரின் அருமை மாமனாரும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, கனகம்மா, தங்கமலர், நேசம்மா, பாக்கியலட்சுமி, விஜயரத்தினம் (மருத்துவர்) ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்ற புஸ்பவதி மற்றும் ராசமலர், காலஞ்சென்ற விமலராணி, சிவகாமசுந்தரி ஆகியோரின் மைத்துனரும், பாரதி (பொறியியலாளர்), வினு (பொறியியலாளர்), சிவதனு, சிவஜனா, கௌரீசன், திரூவன், தாகினி, கஜேந்திரன், நர்த்தனன், கணன், கஜேந்திரி, தாட்சாயினி, கீர்த்திகா, கம்சிகா, றமணா, மதுரன், கஜானா, பபிசன், சுஜீகா, சுபீனா ஆகியோரின் அருமைப் பேரனாரும், ஷோகானின் அருமைப் பூட்டனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (30.12.2013) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| திருமதி இரத்தினாவதி | [இலங்கை] | 0094 21 22 50 969 |
| திருமதி பானுமதி | [இலங்கை] | 0094 77 98 90 848 |
| சேகரன் | [இலங்கை] | 0094 76 69 76 385 |
| அருளானந்தன் | [அருள் சோனோ பிரான்ஸ்] | 0033 148 476 523<br>0033 660 652 272 |
| சீவானந்தன் | [கனடா] | 0019 05 20 90 135 |
| நித்தியானந்தன் | [பிரான்ஸ்] | 0033 148 991 517 - 0033 615 929 085 |
| கிருபானந்தன் | [பிரான்ஸ்] | 0033 141 504 388 - 0033 661 723 015 |
| குமாரானந்தன் | [நோர்வே] | 0047 22 19 17 09 |

சிவபதி
முதலாம் வீதி,
கன்னாகை அம்மன் கோயிலடி,
வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை.

(சி/10625)(7.6.3)

தகவல் : குடும்பத்தினர்.

## கிரவல் சறுக்கி தாயும் மகனும் காயம்

கிரவல் வீதியில் சென்ற மோட்டார் சைக்கிள் சில்லு சறுக்கியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தாயும் மகனும் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் மிருசுவில் கெற்பேலியில் இடம்பெற்றது.

கொழும்பிலிருந்து நத்தார் கொண்டாட்டத்துக்காகமிருசுவிலில்உள்ள உறவினர் வீட்டுக்கு வந்து மற்றொரு உறவினர்வீட்டுக்குச் சென்ற வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத்தெரிவிக்கப்பட்டது. காயங்களுக்கு இலக்கான தாயும் மகனும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ரு-9)

## ஆலாலசுந்தரம் விவேகானந்தன்

(Managing Director, United Professional Agencies (pvt)Ltd)



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், இல.60, இராஜசிங்க வீதி, கொழும்பு - 6 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ஆலாலசுந்தரம் விவேகானந்தன் (25.12.2013) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற ஆலாலசுந்தரம் - திரவியம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், பாலதேவியின் அன்புக் கணவரும், நியோமியின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2013) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, தகனக்கிரியைகளுக்காகப் பூதவுடல் பொரளை கனத்தை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மனைவி, மகள்,
தொடர்பு: 011 255 4629

(2.6.3)(C/11107)

**டுபாய் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு**

டுபாய் நாட்டில் உள்ள முன்னணி நிறுவனத்தில்Fabrication helper, Welders helper உடனடியாகத் தேவை. அனுபவம் தேவையில்லை. அதிஉயர் சம்பளம்/தங்குமிடம் மருத்துவம் இலவசம்.(Pass port copy-1, Background White Passport Photo-1 Bio Data) என்பவற்றை உடனடியாக Email இல் அனுப்பி வையுங்கள்.
Email-Lankavoicenafees @ gmail.com
(43566)(4.6.3)

**வீடு வாடகைக்குத்**

தனியார் நிறுவனம் ஒன்றுக்கு நல்லூர், சுன்னாகம் நகர எல்லைக்குட்பட்ட பகுதி மற்றும் யாழ் நகர எல்லைக்குட்பட்ட மானிப்பாய் வீதி, மற்றும் K.K.S. வீதியில் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு : 077 706 9148, 077 468 2951
(41763)(7.6.3)

**ஆண்டு இறுதி இருப்பு அகற்றும் சிறப்பு விற்பனை**

காலம் : 2013 டிசெம்பர் 29, 30, 31
நேரம் : காலை 9.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை
இடம் : 114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(கனடா ஜெயராஜ் சுப்பர் சென்ரர் முன்றிலில்)

ஆண், பெண், சிறியோர், பெரியோர் ஆகிய அனைவருக்கும் ஏற்ற அனைத்து ஆடைகளும்!!!
(41694) (7.6.3)

# தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,டிசெ. 29

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் வெற்றிடமாக உள்ள தொழில்நுட்ப உத்தியோ கத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ. சாதாரணதர பரீட்சையில் சித்தியுடன் மற்றும் கணிதம் மற்றும் பௌதிகவியல், விஞ்ஞானம் என்பனவற்றுடன் மூன்று விஞ்ஞான பாடங்க ளில் சித்தியடைந்திருக்க வேண்டும். அத்துடன் இந்தக் கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாக தொழில்சார் தகைமை ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பங்களை எதிர்வரும் ஜனவரி 27 ஆம் திகதிக்கு முன்னர் கமநல அபிவிருத்தித் திணைக்களம் த.பெ. இலக்கம் 537, கொழும்பு 7 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஓ-8)

# அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி, டிசெ.29

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட மூன்று பாடசாலைகளில் நிலவும் அதிபர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப் பங்கள் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை களில் கடமையாற்றுவோரிடம் இருந்து கோரப்பட்டுள்ளன.

மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம், இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம், மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம் ஆகியவற்றில் வெற்றிடமாகக் காணப்படும் அதிபர் பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகைமையுள்ளவர்கள் வலய நிர்வாகக் கிளையில் விண்ணப்படிவத்தைப் பெற்று எதிர்வரும் ஜனவரி மாதம் பத்தாம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அ.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (ந-9)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



சாமஸ்ரீ தேசமானிய விருதுபெற்ற
வண்ணை ஸ்ரீ வீரமாகாளி
அம்மன் ஆலய பிரதமகுரு
சிவஸ்ரீ சிவ.கமல்ராஜ்
குருக்கள் அவர்களை
மேலும் பல விருதுகள்
பெற்று
சிறப்புற வாழ வேண்டுமென
அன்னையின்
தாள் பணிந்து வேண்டி
நிற்கின்றோம்.

தொண்டர் சபையினர்
வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்.

**வாடகை**

Attached bathroom உடன் கூடிய அறைகள் வாடகைக்கு உண்டு. (ஒரு நாள் 500/=)
Hotel Villa City,
422 Galle Rd, Colo 6
இராமகிருஷ்ண வீதிக்கு அருகில்
0722 552 222

**வைத்தியம்**

சுவாமி ஆயுர்வேத ஆஸ்பத்திரி Home & Hotel Visit வயிறு சம்மந்தமான, ஆண்களுக்கான பிரச்சனை மற்றும் அனைத்து நோய்களுக்கும் ஒயில் மசாஜ் இந்தியா சிகிச்சை ஸ்பா ஆயுர்வேத மசாஜ் & ஸ்டீம் பாத் அர்சல் வியாதிகளுக்கும் @ மௌனட் லெவனியா.
பிரியா
0728 138 773
0777 204 921

**காணி விற்பனைக்கு**

காந்தி எலக்ரோனிக் கடைக்கு அருகில் உள்ள வீதியில் நான்காவது காணி 5 பரப்பு விற்பனைக்கு உண்டு. உடுவில் பிரதேச சபைக்கு அருகில் K.K.S. றோட், றொட்டியாலடி.
(41760)(7.6.3)
T.P : 077 618 4575, 077 500 9238

**மணமகள் தேவை**

யாழ். இந்து 1981.3.1 இல் பிறந்த மணமகனுக்கு சைவபோசன மணமகள் தேவை. நட்சத்திரம் மூலம், உதயத்துச் செவ்வாய் கிரக பாவம் 75 சொந்தமாக கட்டட ஒப்பந்தம் செய்பவர்.
தொடர்பு:077 423 2836, 021 321 2961
(33056)(4.6.3)

**மணமகள் தேவை**

யாழ். இந்து 1973.11.18 இல் பிறந்த மணமகனுக்கு சைவபோசன மணமகள் தேவை. நட்சத்திரம் பூரட்டாதி, கிரக பாவம் 18 உள்ளூராட்சி மன்றத்தில் வேலை செய்பவர்.
தொடர்பு:077 423 2836, 021 321 2961
(33057)(4.6.3)

**விடுதலைப் பெருவிழா**

"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்."

கவலையா, கண்ணீரா, தீராத வியாதியா, பிசாசின்பிடியா, கடன் தொல்லைகளா, பில்லி-சூனியக்கட்டுக்களா, பாவங்களா, பரம்பரை சாபங்களா, அடிமைத்தனங்களா, ஆகியவற்றிலிருந்து...

இயேசு விடுதலை கொடுக்கிறார்...

பிரவேசம் இலவசம்

காலம் : 29 மார்கழி 2013
நேரம் : தினமும் மாலை 4.00 மணிக்கு
இடம் : சங்கிலியன் பூங்கா, முத்திரைச்சந்தி, நல்லூர்.

கடந்த விடுதலைப் பெருவிழாக்களில் அநேகர் அற்புத விடுதலையைப் பெற்றுக்கொண்டார்கள். சுகம் பெற்ற அற்புத சாட்சிகள் சில...

**இருதயத்தில் இருந்த கட்டி மறைந்தது...**



மாணிக்கம் சண்முகநாதன் – ஆனைக்கோட்டை
அண்மைக்காலமாக ஏற்பட்ட தீவிர மார்பு வலியினால் அவஸ்தைப்பட்ட நிலையில் வைத்திய சிகிச்சையை நாடியிருந்தேன். சிகிச்சையின் போது இருதயத்தில் கட்டி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு சத்திர சிகிச்சைக்காக ஆலோசனை வழங்கப்பட்டது. எனது மனைவியின் ஆலோசனைக்கிணங்க திருச்சபைக்குச் சென்று பிரார்த்தனை செய்த போது மார்பு வலி அற்புதமாக மறைந்தது. மீண்டும் "SCAN" செய்த போது கட்டி மறைந்ததை வைத்தியர்கள் உறுதி செய்தார்கள். அற்புத சுகத்தைத் தந்த இயேசுவுக்கு நன்றி.

**மரணப்படுக்கையில் இருந்து மீண்டேன்...**



பொன்னுத்துரை பத்திநாதன் – உரும்பிராய்
மாரடைப்பு நோயினால் தாக்கப்பட்ட நான் 07 நாட்களாக மீளாத்தூக்க (கோமா) நிலையுடன் அதி தீவிர சிகிச்சைப்பிரிவில் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் போது திருச்சபையினர் எனக்காக இயேசுவை நோக்கி பிரார்த்தனை செய்தார்கள். இயேசு அற்புதகரமாக என்னை சுகப்படுத்தினார். தற்போது நான் ஆரோக்கியமாக உள்ளேன்.

**மூளையில் இருந்த கட்டி மறைந்தது...**




செல்லையா சுபேந்திரராஜா – அளவெட்டி
எனது மூளையில் இருந்த ஆபத்தான கட்டியின் நிமித்தம் மிகவும் உபாதைப்பட்டு வைத்தியரை நாடிய போது பல இலட்சம் ரூபா செலவில் சத்திர சிகிச்சையின் மூலம் கட்டியை அகற்ற வேண்டும் என்றார்கள். திருச்சபையை நாடி பிரார்த்தனை செய்த போது கட்டி மறைந்து அற்புத சுகமடைந்தேன். இதனை வைத்திய சான்றுகளும் நிரூபித்துள்ளன.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முத்திரைச்சந்தியில் இருந்து கொடிகாமத்திற்கும், பருத்தித்துறைக்கும் பஸ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை
673, பருத்தித்துறைவீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(C/10830)



உங்கள் பொறியியல் கனவை நனவாக்கிக் கொள்ள.....
உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் பின்னர்
சரியான தேர்வினை மேற்கொள்ளுங்கள்.......

City & Guilds Diploma in Engineering

அதியுயர் சம்பளத்தை பெற்றுத்தரும்
சர்வதேச அங்கீகாரம் பெற்ற பொறியியல் கற்கை நெறிகள்...

- Civil Engineering
- Quantity Surveying
- Electronic Engineering
- Motor Vehicle Engineering
- Electrical Engineering
- Mechanical Engineering
- Ref & A/C
- AutoCAD & Revit

IESL இனால் அங்கீகாரம் பெற்ற City & Guilds கற்கை நெறிகள்

- சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழ்
- இலகு தவணைக் கட்டண முறை
- தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் விரிவுரைகள்
- அனுபவமும் திறமையும் வாய்ந்த ஆசிரியர் குழாம்

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்...
2014 தை மாதம் 04 மற்றும் 8 ஆம் திகதிகளில்...
பதிவுகள் ஏற்றுக்கொள்ளப் படுகின்றன...

SMS
மேலதிக விபரங்களைப் பெற உங்கள் {Name} {Address} {Course} போன்ற விபரங்களை 0777 762283 க்கு Sms செய்யுங்கள்

0214 92 31 71
0771 06 73 94

SKILLS COLLEGE OF TECHNOLOGY
No 207 Navalar Road,
Jaffna Sri Lanka.
E-Mail : Jafna@skillsinternational.lk

City & Guilds APPROVED CENTRE

Nugegoda Campus
No. 102,
Stanley Thilakaratne Mw,
Nugegoda.
E-mail: scot@skillsinternational.lk

Kurunegala Campus
No. 252,
Puttalam Road,
Kurunegala.
E-mail: kurunegala@skillsinternational.lk

Kandy Campus
No. 511,
Peradeniya Road,
Kandy.
E-mail: kandy@skillsinternational.lk

Jaffna Campus
No.207,
Navalar Road,
Jaffna.
E-mail: jaffna@skillsinternational.lk

(C/10832)

## உடனடி வேலைவாய்ப்பு

கப்பல் /விமான நிலையத்தில் வேலை செய்ய விருப்பமா ? கப்பல் புனர் நிர்மாணத்துறையில் சாதாரண ஊழியர் / வெல்டர் / தச்சர் / பெயிண்டர் மற்றும் விமான நிலையத்தில் (தனியார்) காகோ/ சுத்திகரிப்பாளர் / கேட்டரீங்/லொன்றி பிரிவு 18 - 45 ஆண் - பெண் தேவை. உணவு தங்குமிடம் குறைந்த விலையில் சம்பளம் 18000/= 25000/= 32000/= மேல். வரும் நாளிலே வேலை வாய்ப்பு **தொடர்புகளுக்கு : 077 5561883**

## உடனடியான தொழில்

கொழும்பை அண்மித்த பகுதிகளில் பிரபல்யமான தொழிற் சாலைகளான டொபி / ஜேம்/கோடியல்/ பிஸ்கட் / PVC பிளாஸ்டிக்கை/கோழிஇறைச்சி போன்ற தொழிற்சாலை களில் உற்பத்தி / வேலபல் / பொதியிடல்/ களஞ்சியப்படுத்தல் பிரிவு களுக்கு 18 - 55 வயது ஆண் பெண் இருபாலாரும் தேவை. உணவு தங்குமிட வசதியுடன் மாதாந்தம் 18000/= 25000/= 38000/= சம்பளங்களுடன் உடனடிவேலைவாய்ப்பு

**தொடர்பு : 077 7117661**

# மீனவர் பேச்சு குறித்து கலந்துரையாடினார் 'ஜெ'



சென்னை, டிசெ.29
இலங்கை இந்திய மீனவர் பிரச்சினையில் இலங்கை மற்றும் தமிழக மீனவ பிரதிநிதிகளுக்கு இடையில் பேச்சு ஒன்றை நடத்துவது தொடர் பில், தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் கலந்துரை யாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

தமிழக அரச செயலகத்தில் இந்த கலந்துரையாடல் இடம் பெற்றதாக தமிழக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதன்போது தமிழகத்தின் அமைச்சர்கள் மற்றும் முக்கிய அதிகாரிகளும்கலந்து கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படு கிறது.

ஏற்கனவே இந்த மாதம் இரண்டு நாடுகளின் மீனவர் களுக்கும் இடையில் பேச்சு நடத்துவது தொடர்பில் இந் தியப் பிரதமருக்கு கடந்த செப்ரெம்பர் மாதம் கடிதம் ஒன்றை அனுப்பி இருந்தார்.

இந்தப் பேச்சுகளில் தமிழக அரசை மத்தியஸ்தராக கருத வேண்டும் என்று அவர் தமது கடிதத்தில் கோரி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

## தேவை

கட்டட நிர்மாணத்துறையில் பல வெற்றிடங்கள் உள்ளன யாழ்/கிளிநொச்சி/ கொழும்பு ஆகிய பிரதேசங்களில் தச்சன்/ மேசன்/சட்டறிங்பாஸ்/கம்பிபாஸ் (1200 - 1500/=) கை உதவியாளர் (800 - 1100/=) மாதச் சம்பளம் தினமும் கை செலவுக்கு பணம் உண்டு. வருகை தரும் அன்றே வேலை தரப்படும்.

தொடர்பு :077 5561883

## உடனடி விற்பனை

தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் புதிதாக ஆரம்பிக் கப்பட்ட சுப்பர் மார்க்கெட் சகல வசதிகளுடன் விற் பனைக்கு உண்டு. இலங்கையின் எப் பாகத்திற்கும் மாற்றி தரப்படும் மெகா கோப் சிற்றி அமைக்க மிக உகந்தது தகுந்த கழிவு வழங்கப்படும். ஆக குறைந்தது 70 இலட்சம் ரூபா உள்ளோர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**T. P : 077 0471933**

## பௌதிகவியல்,இணைந்த கணிதம் தமிழ்/ஆங்கில மொழிகளில் A/L 2016 A/L 2013 (Repeat)

பிரபல கல்லூரிகளில் பல ஆண்டுகள் மேற்படி பாடங்களை சிறப்பாகக் கற்பித்து மிகச்சிறந்த பெறுபேறுகளைப்பெற்ற ஆங்கில மொழி மூலப் பட்டதாரி ஆசிரியரினால் தனிப்பட்ட முறையில் மேற்படி பாடங்களை இருமொழிகளிலும் ஏராளமான பயிற்சிகளுடன்(30 வருட A/L வினாத்தாள் உட்பட) மிகச் சிறப்பாகக் கற்பிக்கப்படும். A/L 2014, 2015 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
வகுப்புக்கள் உடனடியாக ஆரம்பம்.
R.பாலசுப்பிரமணியம் B.Sc.(Cey) PGDE
42/1, இந்துக்கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம்
(நீராவியடிக் கேணிக்கு முன்னால்)
தொடர்பு:077 242 3400,
077 887 1217
(41772)(4.6.3)

## தேவை

கிறீம் ஹவுஸ் ஒன்றுக்கு பற்றிஸ், சம்சா, ரோல் போடக்கூடிய அனுபவம் உள்ளவர்கள் தேவை.
உடன் தொடர்பு கொள்ளவும்.

T.P: 0776615973

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1979, ஆயிலியம், கிரகபாவம் 55 செவ்வாய்க் குற்றமற்ற டாக்டர் மணமகளுக்கு படித்த அழகிய மணமகள் தேவை.
தொடர்பு:077 723 4085,
071 416 8659
(க/10879)(4.6.3) balagi dr @ yahoo.co.uk

## 61 ஆவது பிறந்த நாள் வாழ்த்து



V.C. லேன் மருதனார்மடத்தைச் சேர்ந்த
திரு. பொன்னையா மகேந்திரம்
அவர்கள் தனது அறுபத்து ஓராவது பிறந்ததினத்தை இன்று (29.12.2013) ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் மிக குதூகலமாக கொண்டாடுகிறார். இவரை பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

இவரை வாழ்த்துவோர்
மனைவி, சகோதரர்கள், மச்சாள்மார், சகலன்மார், மாமன், மாமி, மச்சான்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள், நண்பர்கள்

V.C. லேன் மருதனார்மடம்

## முதல் முதலாக யாழ் நகரில்

Diploma Courses
IT and Computing
Hotel Management
Graphics and Multimedia
English Courses
IELTS
Diploma in English
Business English
Spoken English

Degree/Postgraduate
**BBA/MBA**
(பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம் பெற்ற கற்கை நெறிகள்)

GCE (O/L) மாணவர்களிற்கான கற்கைநெறி
IT+English (3 மாத கற்கை நெறி)

**London College of Business Technology**
**LCBT city campus**
(41771)(7.6.3)

No: 116, Palaly Road,
Kantharmadam, Jaffna.
(இலுப்பையடி சந்திக்கு அருகில்)
077 024 9071, 021 221 7105

330, Aanandapuram East,
Kilinochchi.
(வலயக்கல்வி அலுவலகம் பின்புறம்)
076 685 7230, 077 301 3620

## MOTOR BIKE விற்பனைக்கு

XI.....தொடர் இலக்கமுடைய CBR 250 (HONDA) விற்பனைக்கு உண்டு. நல்ல நிலையில் உள்ளது. RS 380.000
தொடர்பு:- 077 4896046

## விற்பனைக்கு

1 மாத வெள்ளை நிறமுடைய பொம்மரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு
**தொடர்பு : 077 9495065**

# வட இலங்கை சுதேச வைத்தியசபை

வட இலங்கை சுதேச வைத்திய சபையினால் வடமாகாண சுதேச வைத்திய அமைப்புக்களையும் சுதேச வைத்தியர்களையும் அழைத்து ஏற்பாடு செய்யப்பட்ட பொதுக்கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள், தீர்மானங் கள், ஆவணங்களை பொதுக்கூட்ட முடிவின்படி யாழ். தொழில்நுட்பக்கல்லூரிப் பணிப்பாளரும் வட இலங்கை சுதேச வைத்தியசபை தேர்வுச்சபைத் தலைவருமான பேராசிரியர் ந.யோகராஜன் அவர்களும் வட இலங்கை சுதேச வைத்தியசபை செயலாளரும் பிரபல சுஜீவா வைத்தியசாலை வைத்தியருமான ஜெ.ஜெயலன் அவர்களும் கொழும்பிலுள்ள சுதேச வைத்திய அமைச்சு அலுவலகத்தில் அமைச்சர்களுடன் கலந்துரையாடி கையளித்தனர்.





தேசிய வைத்திய பிரதியமைச்சர் **பண்டுபண்டார நாயக்க** அவர்களுடன் **பேராசிரியர் ந.யோகராஜன், வைத்தியர் ஜெ.ஜெயலன்** ஆகியோர்

**வட இலங்கை சுதேச வைத்திய சபைக் கூட்ட அறிவித்தல்**

வட இலங்கை சுதேச வைத்தியசபையின் இயக்குநர்சபை, அபிவிருத்திக்குழு, பாடத்திட்டக்குழு, நடவடிக்கைக்குழு ஆகியவற்றுக்கான கூட்டம் **05.01.2014 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு 188B மானிப்பாய் வீதி** என்னும் முகவரியில் இடம்பெறும். அனைவரையும் தவறாது பங்குபற்றும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

**188B, மானிப்பாய் வீதி,**
**யாழ்ப்பாணம்.** (41770)(6.3.4)

சுதேச வைத்தியர் ஜெ.ஜெயலன்
செயலாளர்-
வடஇலங்கை சுதேச வைத்தியசபை.

## பொதிகள் சேவையில் முதலிடம் பதித்த இலங்கை நிறுவனம்

GTV ENTERPRISES, MAHARAJAH FOOD PRODUCTS, VIJEYA ENTERPRISES

**பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்.**

பொதிகள் சேவையில் புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்திய G.T.V. ENTERPRISES (PVT) LTD, மஹ புரடக்ட்ஸ் ,விஜயா எண்டபிரைஸஸ், நிறுவனங்கள் மலரும் 2014 ஆங்கில புத்தாண்டிலிருந்து சிங்கள தமிழ் சித்திரைப் புத்தாண்டு வரை புதிய மாற்றமாக லண்டன், கனடா, பிரான்ஸ், ஜேர்மன், அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளுக்கு விஷேட விலைக் கழிவுடனான சேவையினை ஆரம்பித்துள்ளது.

அதற்கேற்ப எமது கட்டணமானது

| நிறை | லண்டன் | அவுஸ்திரேலியா | சுவிஸ் | கனடா | ஜேர்மன் | பிரான்ஸ் |
|---|---|---|---|---|---|---|
| 1kg - கிலோ 1 ற்கு | 1200.00 | 1950.00 | 2600.00 | 2400.00 | 1300.00 | 2000.00 |
| 2 kg - கிலோ 1 ற்கு | 1000.00 | 1500.00 | 1900.00 | 1900.00 | 1150.00 | 1500.00 |
| 3 kg -கிலோ 1ற்கு | 950.00 | 1300.00 | 1670.00 | 1750.00 | 1100.00 | 1350.00 |
| 4 kg - கிலோ 1ற்கு | 900.00 | 1250.00 | 1550.00 | 1625.00 | 1075.00 | 1250.00 |
| 5 kg -கிலோ 1 ற்கு | 875.00 | 1180.00 | 1500.00 | 1575.00 | 1075.00 | 1200.00 |
| 6 kg -கிலோ 1ற்கு | 875.00 | 1170.00 | 1450.00 | 1550.00 | 1050.00 | 1175.00 |
| 7 kg-கிலோ 1 ற்கு | 875.00 | 1150.00 | 1400.00 | 1500.00 | 1050.00 | 1150.00 |
| 8 kg -கிலோ 1ற்கு | 875.00 | 1125.00 | 1375.00 | 1475.00 | 1050.00 | 1125.00 |
| 9 kg -கிலோ 1ற்கு | 875.00 | 1100.00 | 1375.00 | 1450.00 | 1050.00 | 1125.00 |
| 10 kg -கிலோ 1 ற்கு | 600.00 | 650.00 | 1350.00 | 1450.00 | 1050.00 | 1100.00 |
| 11 kg -கிலோ 1 ற்கு | 600.00 | 650.00 | 1000.00 | 900.00 | 650.00 | 700.00 |

அறவிடப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.
குறைவான கட்டணத்தில் விரைவான சேவையினை பெற்றுக் கொள்ள கீழ்க்கண்ட தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புக்கொள்ளவும்.

G.T.V. ENTERPRISES (PVT) LTD / MAHARAJA FOOD PRODUCTS / VIJEYA ENTERPRISES

இலக்கம்: 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தலைமை அலுவலகம்
* 18/3 Dr.E.A.Cooray Mawatha Wellawatta, Colombo - 00600.

* 513, Galle Road Wellawatta, Colombo -00600.
* 170, Central Road ,Colombo - 00120.
* 288, George R.De Silva Mawatha Colombo - 00130.
* G - 2 146, Peart Park, Negombo Road, Wattla.
* 37/4, Trinco Road, Batticaloa.


கடந்த வாரம் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்பட்டு ரூபா 7000.00 பெறுமதியான சாறியினைப் பெறும் அதிர்ஷ்டசாலி ரசீது இலக்கம். 88072
திருமதி அனிஸ்டன் இராணி குருநகர் யாழ்ப்பாணம்.

## வெளிநாட்டு நாணயமாற்று சேவை


எங்களிடம் உங்கள் வெளிநாட்டு நாணயங்களை நியாயமான விலைக்கு மாற்றிக்கொள்ளலாம்.
எம்மை தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்
077 7747299, 071 4353708







# ஆந்திராவில் ரயிலில் தீ 23 பேர் உயிரிழப்பு



ஆந்திர மாநிலம் அனந்தபுரம் அருகே வந்துகொண்டிருந்த நான்டட் - பெங்களூர் எக்ஸ் பிரஸ் ரயிலின் குளிரூட்டப்பட்ட பெட்டியில் ஏற்பட்ட தீ விபத்தில் 26 பேர் உயிரிழந்தனர். பெங்களூரிலிருந்து நேற்று முன்தினம் இரவு 10.45 மணிக்கு புறப்பட்டு, நான்டட் நோக்கி சென்றுகொண்டிருந்த அந்த ரயில் அதிகாலை 3 மணி அளவில் ஆந்திர மாநிலத்தின் அனந்தபூர் மாவட்டம் கொத்தசேவூர் என்ற இடத்தில் வந்துகொண்டிருந்தபோது, ரயிலின் இரண்டாம் வகுப்பு குளிரூட்டப்பட்ட பெட்டியில் திடீரென தீவிபத்து ஏற்பட்டது. இந்தத் தீ அருகில் இருந்த மற்ற பெட்டிகளுக்கும் வேகமாக பரவியது. அதிகாலையில் பயணிகள் தூங்கிக்கொண் டிருந்ததால், தீயில் சிக்கி 23 பேர் உயிரிழந்தனர். 12 இற்கும் அதிகமானோர் படு காயம் அடைந்ததாக முதல் கட்ட தகவல்கள் தெரிவித்தன. ஒருசிலர் தீயில் இருந்து தப்பிக்க ஓடும் ரயிலில் இருந்து குதித்துள்ளனர். இந்நிலையில் விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என கூறப்பட்ட நிலையில், தற்போது சாவு எண்ணிக்கை 26 ஆக அதிகரித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தகவலறிந்து தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டன. பெட்டி முழுவதும் எரிந்து புகை மூட்டமாக காணப்பட்டதால்

## காரைதீவு பிரதேச சபையின் தலைவர் பதவி விலகினார்

அம்பாறை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர் செல்லையா இராசையா தனது பதவியில் இருந்து நேற்று விலகினார்.

இது தொடர்பான கடிதம் மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் உப தலைவருமானபொன்.செல்வராசா ஊடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர் செல்லையா இராசையா அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

காரைதீவு பிரதேச சபையின் தவிசாளராகிய நான் தமித்ழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு அதிகபடியான வாக்குகளைப்பெற்று தவிசாளராக நியமிக்கப்பட்டேன்.

இந்த நிலையில் பிரதேச சபையில் உள்ள ஏனைய மூன்று உறுப்பினர்களும், சபையின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு தரமால் தொடர்ந்து குழப்ப நிலைகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

இது தொடர்பில் கடந்த காலத்தில் பல தடவைகள் எமது கட்சி தலைமையின் கவனத்துக்குக் கொண்டுசென்ற போதிலும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே தொடர்ந்து செயற்பட முடியாத நிலையில் எனது பதவியில் இருந்து விலகுகிறேன். எனினும் கட்சியோ மக்களோ நான் மீண்டும் தவிசாளராகக் கடமையாற்றுமாறு தீர்மானித்தால் கடமையாற்றவும் தயாராகவுள்ளேன் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## மீனவர் சந்திப்புக்கு தமிழக அரசே தடை

*சாடுகிறார் கருணாநிதி*

சென்னை, டிசெ.29

இலங்கை மற்றும் இந்திய மீனவர்களுக்கு இடையிலான சந்திப்பு ஒன்றுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள, தமிழக அரசே தடையாக இருப்பதாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஒரு மாத காலமாகத் தமிழக அரசு இந்த பேச்சுக்காக எந்த ஏற்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

எனினும்தற்போது இறுதிநேரத்தில் தமிழக அரசு இலங்கை மற்றும் தமிழக மீனவர்களுக்கு இடையிலான சந்திப்பு ஒன்றுக்கு ஒழுங்கு செய்வது தொடர்பில் தாம் வியப்படைவதாகவும்அவர் குறிப்பிட்டுள்ளார்.(வ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வடக்கு

பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற சந்திப்பை அடுத்து இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்காக இந்தப் பேச்சை இந்திய அரசு ஏற்பாடு செய்துள்ள நிலையில், இதில் கலந்துகொள்வது தொடர்பில் வடமாகாணக் கடற்றொழில் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு இதுவரை அழைப்புகள் எதுவும் விடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்திய மீனவர்களால் வடமாகாணத்தைச் சேர்ந்த கடல் வளங்களே அதிகம் பாதிக்கப்படும்நிலையில் வடக்கு மீனவர் பிரதிநிதிகள் இதற்கு அழைக்கப்படாமை குறித்துக் கடும் விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வட மாகாண கடற்றொழில் சமாசம், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் என்பவற்றுடன் தொடர்பு கொண்டுகேட்டபோது எமக்கு எந்தவித அழைப்புகளும் விடுக்கப்படவில்லை. மீனவர் பிரச்சினைகள் அரச மட்டத்துடன் மட்டுமே கலந்துரையாடப்படவுள்ளன- என்று அவை கூறின.

(த-14-5)

### 13 ஆபிரிக்க

ஆதரவை வழங்கிய 8 நாடுகளுள் அங்கோலா, பொட்ஸுவானா, பேர்க்கினாபசோ, செனகல் ஆகிய ஐந்து நாடுகளும் ஆபிரிக்க நாடுகளாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, இலங்கை மீது சர்வதேச விசாரணையை வலியுறுத்தி இம்முறை பிரேரணை ஏதாவது வந்தால் அதை ஆதரிக்குமாறு கோரிக்கை விடுக்கும் நோக்கிலும் இலங்கைக்கு சார்பான இராஜதந்திர நகர்வுகளில் ஈடுபடவேண்டாம் என கோரிக்கை விடுக்கும் வகையிலுமே ஆபிரிக்க நாடுகளுடன் உலகத்தமிழர்பேரவை பேச்சு நடத்தவுள்ளது.

மற்றுமொரு ஆபிரிக்க நாடான கென்யா இலங்கையுடன் சிறந்த நட்புறவை பேணுகிறது என கூறப்பட்டாலும் இரு நாடுகளுக்கிடையில் தேயிலை ஏற்றுமதி விவகாரத்தில் பனிப்போர் நிலவுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடைபெற்றபோதும் அதற்கு எதிராக கென்யா பரப்புரையை முன்னெடுத்தது என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. எனவே, இம்முறை வாக்களிக்கும் தகுதி பெற்றுள்ள கென்யா எவ்வாறான நிலைப்பாட்டை எடுக்கும் என்பது இராஜதந்திர ரகசியமாகும்.

அமெரிக்கப் பிரேரணையை ஆதரித்திருந்த பெனின் நாட்டுக்கு 2014 வரை மனித உரிமை சபையில் அங்கத்துவம் இருக்கின்றது.

அதேவேளை, தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் தலைமையில் இலங்கை வரவுள்ள அமெரிக்க இராஜதந்திரிகள் குழுவுக்கு உலகத் தமிழர் பேரவை கடிதமொன்றை எழுதவும் உத்தேசித்துள்ளது.

இதற்கிடையில் ஜெனிவா இராஜதந்திரச் சமரை எதிர்கொள்வதற்கு இலங்கை அரசும் தயாராகிவருகின்றது. இதன் ஓர் அங்கமாக அமைச்சர்களை மட்டத் தூதுக்குழுவை ஜனவரியில் பரப்புரைகளுக்காக களமிறக்க அது தீர்மானித்துள்ளது. (த-சி)

### வவுனியா

சேவையில் ஈடுபடுவதற்கு தற்காலிகமாக விதிக்கப்பட்ட தடையைக் கண்டித்துமே தாம் புறக்கணிப்புப் போராட்டத்தை நடத்தியதாக பஸ் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

நேற்று நடைபெற்ற பஸ் புறக்கணிப்புக் காரணமாக பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டதைக் காண முடிந்தது. நேற்றைய பணிப் புறக்கணிப்புத் தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் வடமாகாண ஆணையரை தொடர்பு கொண்டு கேட்டபோது,

கடந்த மூன்றரை வருடங்களாக வவுனியாவில் இருந்து பரந்தன் ஊடாக முல்லைத்தீவுக்கு பஸ் சேவைகள் நடைபெற்று வருகின்றன. வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து மக்கள் மீள்குடியேறிய நிலையில் அவர்களது நலன்கருதி வவுனியா மாவட்ட அரச அதிபராக பி.எச்.எம். சாள்ஸ் இருந்தபோது இந்த அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. இதன்படியே அவர்கள் சேவையில் ஈடுபடுகின்றனர். குறித்த பிரச்சினை குறித்து வடமாகாண சபையை அணுக முடியவில்லை. காரணம் போக்குவரத்து தொடர்பான அதிகாரங்கள் எவையும் சபையிடம் வழங்கப்படவில்லை - என்றனர்.

புறக்கணிப்பு தொடர்பில் வவுனியா தனியார் பஸ் சங்க நிர்வாகத் தலைவரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, வவுனியாவில் இருந்து பரந்தன் ஊடாக புதுக்குடியிருப்புக்கு எமது பஸ்கள் செல்ல முடியாது என்பதை ஏற்க முடியாது. காரணம் நேற்றுக் காலையும் வன்னி மாவட்ட தனியார் பஸ் சங்கத்துக்குரிய இரண்டு பஸ்கள் முல்லைத்தீவில் இருந்து பரந்தன் ஊடாக வவுனியாவுக்கு வந்தன. அவர்களுக்கு ஒரு நீதி எங்களுக்கு ஒரு நீதி என்றால் அதை ஏற்க முடியாது. இதே வேளை நேற்று மாலை இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து பஸ் புறக்கணிப்பு கைவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ-421-402)

### இராணுவக்

ரல் ஜகத் டயஸ், முல்லைத்தீவு மாவட்டப் பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதியாகவும், மேஜர் ஜெனரல் எல்.பி. ஆர்.மார்க், ஆயுதப் படைப் பிரிவின் பிரதம தளபதியாகவும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

இதேவேளை, இராணுவச் செயலாளராகச் செயற்பட்டு வரும் மேஜர் ஜெனரல் எஸ். ரணசிங்க, கிளிநொச்சி மாவட்டக் கட்டளைத் தளபதியாகவும், இராணுவ செயலாளராக மேஜர் ஜெனரல் டி.ஏ.கருணாசேகரவும் இடமாற்றப்பட்டுள்ளனர்.

அதேவேளை பிரிகேடியர் தரமுடைய ஐந்து இராணுவ அதிகாரிகளுக்கும் அடுத்த வருடத்திலிருந்து இடமாற்றம் வழங்கப்படவுள்ளது. இராணுவ தலைமையகத்தின் இராணுவ உதவி நிதிக்கு பொறுப்பான பிரிகேடியர் சி.கே.ராஜபக்ஷ, எதிர்வரும் ஜனவரி 19ஆம் திகதிமுதல் வடக்கின் முன்னோக்கிய பராமரிப்புப் பிரிவின் கட்டளை அதிகாரியாக பதவி மாற்றம் பெற்றுள்ளார்.

தற்சமயம் வடக்கின் முன்னோக்கிய பராமரிப்புப் பிரிவின் கட்டளை அதிகாரியான பிரிகேடியர் ஏ.வி.ரூபசிங்க, இராணுவத் தலைமையகத்தின் இராணுவ உதவி நிதிக்கு பொறுப்பான இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். கிளிநொச்சியின் முன்னோக்கிய பராமரிப்புப் பிரிவின் கட்டளை அதிகாரியாக பிரிகேடியர் டபிள்யூ. காரியவசமும், இராணுவ தலைமையகத் தொழில்பாடுகளின் இயக்குநராக பிரிகேடியர் முதன்னயகேவும், இராணுவ மரபுப் பிரிவின் இயக்குநராக பிரிகேடியர் வி.ஏ.சுதசிங்கவும் இடமாற்றம் பெற்றுள்ளனர். (த)

### மன்னார்

மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம், அனுராதபுரம் சட்ட வைத்திய அதிகாரி டிஎல். வைத்தியரட்ண ஆகியோர் முன்னிலையில் நேற்றுக் காலை 8.30 மணிக்குத் தோண்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஏற்கனவே புதைகுழி காணப்பட்ட இடத்தில் வீதியை உடைத்து அது மேலும்தோண்டப்பட்டது. இதன்போது மண்டையோடு ஒன்றும் மனித எலும்பு எச்சங்களும் மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட எலும்பு எச்சங்களை அனுராதபுரம் சட்ட வைத்திய அதிகாரி தலைமையிலான குழுவினர் பரிசோதனை செய்தனர்.

இந்தப் பணிகளின் போது உடற்கூற்று நிபுணர் ஆர்.எம். வி.ராஜகருணா, அரச பகுப்பாய்வுத் திணைக்கள அதிகாரி பி.யு. மடவல, தொல்பொருள் திணைக்கள அதிகாரி ஏ. விஜயரத்தின, மற்றும் மன்னார் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் புதைகுழி தோண்டும் பணிகளைப் பார்வையிட்டார்.

புதைகுழி தோண்டும் பணிகள் இன்றும் தொடர்ந்து மேற்கொள்ளப்படவுள்ளன. (த-12)

### தனது

ரான ஓய்வுபெறும் கிராம அலுவலர் இராசையா நித்தியானந்தனின் பிரிவுபசார நிகழ்வு இடம்பெற்றபோது அவர் உரை நிகழ்த்த அழைக்கப்பட்டார்.

அவர் அவ்வேளை தாம் கடமையில் இருந்து ஓய்வு பெற விரும்பவில்லை எனத் தனது உரையில் கூறிக்கொண்டிருந்தார். அவ்வாறான நிலையிலேயே அவருக்கு திடீரென் மாரடைப்பு ஏற்பட்டது.

இதனால் அவர் அங்கு சரிந்து விழுந்தார். உடனடியாக அவர் மானிப்பாய் கிறீன் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். எனினும் அவர் உயிரிழந்து விட்டார் என மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர்.

கடந்த 33 வருடங்களாக கிராம சேவகராகக் கடமையாற்றிய இவர் தனது கடமைக்கு அப்பால் நலிவடைந்துள்ள மக்களுக்கான வாழ்வாதார உதவிகளைத் தனிப்பட்ட ரீதியில் வெளிநாட்டில் உள்ள ஈழத் தமிழர்களிடம் இருந்து பெற்று வழங்கி வருபவர்.

நேற்றும் தன்னுடைய முயற்சியால் வாழ்வாதார உதவிகளைப் பயனாளிகளுக்கு அவர் வழங்கினார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து சண்டிலிப்பாய் பகுதி பெரும் சோக மயமாகக் காட்சி அளித்ததுடன் இந்தப் பிரிவுபசார நிகழ்வில் கலந்துகொண்ட பலர் அதிர்ச்சி அடைந்தனர்.

(த-14-5)

# தாச்சி இறுதியாட்டம் இன்று மாலை உடுவிலில்

## காளியம்பாள்- வள்ளுவன் அணிகள் மோதல்



வலி. வடக்கு, டிசெ.29
யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டு சங்கத்தின் அனுசரணையுடன் வலி.தெற்கு பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தினால் நடத்தப்படும் தாச்சிச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரிக்கு அண்மையாகவுள்ள உதய சூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் யாழ். மாவட்டத்தின் 16 முன்னணி அணிகள் கலந்து கொண்டதுடன் பலத்த போட்டிகளின் மத்தியில் தெரிவு செய்யப்பட்ட அணிகளான தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக அணியும் தையிட்டி வள்ளுவன் விளையாட்டுக் கழக அணியும் இறுதிப் போட்டியில் மோதவுள்ளன.

"-"

இரு அணிகளும் சம பலம் பொருந்திய அணிகளாக காணப்படுவதினால் போட்டி மிகவும் விறுவிறுப்பாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரு அணிகளும் சமபலம் பொருந்திய அணிகளாக காணப் படுவதினால் போட்டி மிகவும் விறுவிறுப்பாக அமையும் என எதிர்பார்க்கப் படுகிறது. (த-86)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், டிசெ.29
சுன்னாகம் சூராவத்தை நியூ வொரியஸ் விளையாட்டுக் கழகம் கந்தன் நல்லதம்பி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக மின்னொளியில் நடத்தும் 5 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் மின்னொளியில் நியூ வொரியஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், டிசெ.29
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து யங்லயன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் செஞ்சுடர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து டையமன்ஸ் விளை யாட்டுக் கழக 'ஏ' அணி மோதவுள்ளது. (த-23)

* * *

வலி.வடக்கு, டிசெ.29
வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர் திருநாளையொட்டி நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-
தெல்லிப்பழை நாமகள் வியைாட்டுக்கழக 'பி' அணி எதிர் அராலி அண்ணா வியைாட்டுக்கழக 'ஏ' அணி.
நாமகள் விளையாட்டுக் கழக 'ஏ' அணி எதிர் சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகம். (த-86)

## உதைபந்தாட்டத்தில் விளைபூமி சம்பியன்



யாழ்ப்பாணம், டிசெ.29
கிளிநொச்சி வை.எம்.சி.ஏ. யினால் நடத்தப்படும் வடக்கு மாகாண வை.எம்.சி.ஏ. அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் விளைபூமி விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.
கடந்த வாரம் கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் விளைபூமி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பரந்தன் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் விளைபூமி விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. (த-23)

## பொம்மர்ஸ்- நவஜீவன்ஸ் இறுதியாட்டத்தில் மோதல்

யாழ்ப்பாணம், டிசெ.29
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பருத்தித்துறை வை.எம்.சி.ஏ. வடமராட்சிப் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இறுதியாட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
இதில் பிரதம விருந்தினராகக் கரவெட்டி பிரதேச செயலக நிர்வாக கிராம அலுவலர், வி.கே.சண்முகநாதன், கௌரவ விருந்தினராக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின்செயலாளர் வரதராசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (த-23)

## வவுனியாவில் பயிற்சி முகாம்



யாழ்ப்பாணம், டிசெ.29
வவுனியா, மன்னார் மாவட்டப் பாடசாலைகளின் கிரிக்கெட் பயிற்றுநர்களுக்கான பயிற்சி முகாம் ஒன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெற்றது.
யாழ்.மாவட்டக் கிரிக்கெட் பயிற்றுநர் லக்சித ஹேரத், முல்லைத்தீவு கிளிநொச்சி மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநர் கங்காதரன், வவுனியா மன்னார் மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநர் ஜெயகாந்தன் ஆகியோர் பயிற்சிகளை வழங்கினார்கள். (த-23)

## ஆட்டம் சமநிலை

யாழ்ப்பாணம், டிசெ.29
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இதில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கலைமதி விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து சென். தோமஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் இரு அணியினரும் தலா 5 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (த-23)

## ஒட்டுசுட்டானில் மரதன் ஓட்டப்போட்டி




முல்லைத்தீவு, டிசெ.29
ஒட்டுசுட்டானில் மாற்றுத் திறனாளிகளின் கல்விச் செயற்பாட்டுக்கு உதவும் பொருட்டு நிதிசேகரிப்பதற்காக மரதன் ஓட்டப்போட்டி ஒன்று இடம் பெற்றுள்ளது.
ஐ.லீட் தொழிற் பயிற்சி நிலையத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்த மரதன் ஓட்டப்போட்டி சமனங்குளம் 642 ஆவது படைப் பிரிவு இராணுவ நிலையத்திலிருந்து ஆரம்பித்து ஐந்து கிலோ மீற்றர் தொலைவிலுள்ள கற்சிலைமடு [illegible]. பாடசாலையை வந்தடைந்தது.
இதில் இளைஞர்களும், யுவதிகளும் பெருமளவில் கலந்து கொண்டனர்.
இதில் முதலாவது இடத்தை தே.வேராசா என்ற இளைஞர் பெற்றுக் கொண்டார். (க-500)

## சென்.பீற்றர்ஸ், விக்னேஸ்வரா அணிகள் ஆட்டங்களில் வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ.29
அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர் திருநாளை முன்னிட்டு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அராலி மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து துணைவி நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் மூளாய் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டன.
இதில் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# இலங்கைக்கு ஆறுதல் வெற்றி



பாகிஸ்தானுக்கு எதிரான ஐந்தாவதும் இறுதியுமான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி இரண்டு இலக்குகளால் வெற்றியீட்டியுள்ளது.


டுபாயில் நேற்று முன்தினம் பகல், இரவு ஆட்டமாக இடம்பெற்ற இந்தப் போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

பாகிஸ்தான் சார்பில் மிஸ்பா உல்ஹக் 51 ஓட்டங்களையும், முஹமட் ஹபீஸ் 41 ஓட்டங்களையும், அஸ்வர் அலி ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். முடிவில் 49.3 பந்துப்பரிமாற்றங்களில் அந்த அணி சகல இலக்குகளையும் இழந்து 232 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. இலங்கை அணி சார்பில் சிறப்பாக பந்து வீசிய லசித் மலிங்க 4 இலக்குகளையும், சுரங்க லக்மால் 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

இதன்படி 233 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கிப் பதிலுக்கு களமிறங்கிய இலங்கை அணி 49.4 பந்துப் பரிமாற்றங்களில் எட்டு இல்க்குகளை இழந்து 235 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. இந்தப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக ஆட்டமிழக்காமல் 64 ஓட்டங்களை விளாசி இலங்கையின் வெற்றிக்கு வழிவகுத்த தினேஷ் சந்திமால் தெரிவானார்.

மேலும் தொடரின் சிறப்பாட்டக்காரராக பாகிஸ்தான் அணியின் முஹமட் ஹாபீஸ் தெரிவுசெய்யப்பட்டார். இதன்படி ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரை 3-2 என்ற அடிப்படையில் பாகிஸ்தான் கைப்பற்றியுள்ளது. (த)

# அன்டி முரேயின் முதல் வெற்றி



காயத்தினால் பாதிக்கப்பட்டிருந்து குணமானதன் பின்னர் ரென்னிஸ் வீரர் அன்டி முரே தமது முதல் வெற்றியைப் பதிவு செய்துள்ளார்.

அபுதாபியில் இடம்பெற்று வரும் முபடாலா உலக ரென்னிஸ் தொடரில் அவர் இந்த வெற்றியை பதிவு செய்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த போட்டியில், ஸ்டனிஸ்லாஸ் வாவ்ரின்காவை 6க்கு3 மற்றும் 6க்கு4 என்ற செற் கணக்கில் முரே வெற்றி பெற்றார். (த)

## மாகி மெக்கேய் பதவி நீக்கம்

கார்டிப் உதைபந்துக் கழகத்தின் முகாமையாளர் மாகி மெக்கேய் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.


அணியின் உரிமையாளர் வின்சன்ட் டான் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. கார்டிப் கழகத்தின் பணிப்பாளர் சபை இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சதம்டன் அணியுடனான போட்டி ஒன்றில் 3:0 என்ற கோல் கணக்கில் கார்டிப் அணி தோல்வி கண்டிருந்தது.

இதன் காரணமாகவே அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (த)



## 200 பிடிகளை எடுத்து கலிஸ் சாதனை



இந்தியா- தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையே நடந்து வரும் இரண்டாவதும் இறுதியுமான கிரிக்கெட் டெஸ்ட் போட்டி டர்பன் நகரில் நடைபெற்று வருகிறது. இப்போட்டியுடன் சர்வதேச டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறப்போவதாக ஜக் கலிஸ் அறிவித்திருந்த நிலையில், அதிக பிடிகளை பிடித்த வீரர்கள் வரிசையில் சாதனை படைத்துள்ளார்.

நேற்று முன்தினம் நடந்த இரண்டாது நாள் ஆட்டத்தின்போது 108 ஆவது பந்துப்பரிமாற்றத்தைப் பகுதி நேர சுழற்பந்து வீச்சாளரான டுமினி வீசினார். அந்தப் பந்துப் பரிமாற்றத்தின் 5ஆவது பந்தில் இந்திய வீரர் ஜடேஜா அடித்த பந்தைப் பிடித்த கலிஸ், அதன் மூலம் டெஸ்ட் போட்டிகளில் அதிக பிடிகளை எடுத்தவர்களில் இரண்டாவது இடத்தைப் பிடித்தார். இது வரை 166 போட்டிகளில் கலந்து கொண்ட கலிஸ் 200 பிடிகளை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்திய வீரர் ராகுல் டிராவிட் 164 போட்டிகளில் பங்கேற்று 210 பிடிகளை எடுத்து முதலிடத்தில் உள்ளார். (த)

பந்துப் பரிமாற்றத்தின் 5ஆவது பந்தில் இந்திய வீரர் ஜடேஜா அடித்த பந்தைப் பிடித்த கலிஸ், இதன் மூலம் டெஸ்ட் போட்டிகளில் அதிக பிடிகளை எடுத்தவர்களில் இரண்டாவது இடத்தை பிடித்தார்.

## CHEMISTRY CENTRE

1. 287, பலாலி வீதி, கந்தர்மடம்.
2. 33, அராலி வீதி, ஒட்டுமடம் சந்தி அருகில்

**A/L CHEMISTRY DAY CLASS**

பிரிவு I Tue - Fri 11.15 - 2.00p.m
பிரிவு II Tue - Fri 6 - 8p.m

General, Basic உட்பட சகல அலகுகளின் கடந்த கால, மாதிரி வினாக்கள் 25இற்கு மேற்பட்ட கருத்தரங்குகளை உள்ளடக்கியது.

ஆரம்பம் : 01.01.2014 புதன்கிழமை

A/L 2014 Physical Chemistry | A/L 2015 Inorganic சக்தியியல் | A/L 2016 General Chemistry

By : அன்பு

Group Classகட்கு தொடர்பு : 077 434 1393

## GERMAN INSTITUTE

German, Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் Greamanயிலிருந்து வந்த ஆசிரியரால் Greaman Embassyயில் கேட்கப்படும் Goethe institue Certificate க்கு ஏற்றவாறு நடைபெறுகிறது. ஆரியகுளத்தடியில்

10, Palaly road, Jaffna.
Mrs. Kajenthini. T.P.: 0771604823

(41810)

## விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி ரோட் யாழ்.

40 வருட சேவையில் கலை வர்த்தக வகுப்புக்கள்

2016 ஆரம்பம்:05.01.2014 8.00 மணி

**A/L DAY CLASS**

ஆரம்பம்:06.01.2014 8.00 மணி

யாழ். தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் ஒருங்கிணைந்த சேவை அனுமதிகள் இன்று முதல். எமது O/L மாணவர்களுக்கு அனுமதி இலவசம் (சி/10817) (4.8.3)

## DCM யாழ் நகர்

**கலை, வர்த்தக பிரிவுகள்**

**DAY CLASS ஆரம்பம்**

நாளை 9.00 AM

வர்த்தகப் பிரிவு

| | |
|---|---|
| பொருளியல்:- | S. வரதராஜன் |
| கணக்கீடு:- | AP. பகீரதன் |
| வணிகக்கல்வி:- | V. முரளி |

## NEC

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. இரு இடங்களிலும் மணிக்கூட்டு வீதி, யாழ் நகர்.

**A/L DAY CLASS**

| பாடம் | ஆனைப்பந்தி | யாழ்.நகர் |
|---|---|---|
| கணக்கீடு | பாலகஜன் | பாலகஜன் |
| பொருளியல் | கஜீதரன் | கஜீதரன் |
| வணிகக்கல்வி | யசோ | பாலசபேஷ் |
| தமிழ் | கீர்த்திராஜன் | தங்கரூபன் |
| இந்துநாகரிகம் | ஸ்ரீஸ் | சுரேஸ் |
| அளவையியல் | கமல் | கமல் |
| புவியியல் | பாலா | சங்கர் |
| அரசியல் | றொபின்சன் | அசோக் |
| நாடகம் | சுகந்தன் | சுகந்தன் |
| வரலாறு | தாஸ் | தாஸ் |
| English Lit. | Subramaniyam | Subramaniyam |

ஆரம்பம் 30.12.2013 திங்கள் 8 மணி

## NEC

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. இரு இடத்திலும் மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.

**A/L 2016**

கலை, வர்த்தக, கணித, உயிரியல், தொழில்நுட்ப பிரிவுகள்

ஆரம்பம் Jan 05 9.00Am

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

## விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

A/L 2016 வர்த்தகப் பிரிவு

Eco. திரு.ஞா. ஞானச்சந்திரன்
Acc. திரு.M. அசோக்குமார்
B.st திரு. S. கிருஷ்ணா

தேசிய கல்லூரி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை.

ஆரம்பம்:- 05.01.2014. 8மணி

இன்று முதல் அனுமதிகள்

## விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

**A/L DAY CLASS**

ஆரம்பம்:- 06.01.2014 காலை 8.00மணி

Eco. திரு.ஞா. ஞானச்சந்திரன்
Tam திரு. குழந்தை
H/c திரு.N.T. தரன்
Log. திரு. வாகீசன்
Geo திரு. சர்மா
Hist. திரு. தாஸ்
Plsce. திரு. ஸ்ரீரங்கநாத்
Chri. திரு. சுயந்தன்
Dra. திரு. கஜிதரன்

அனுமதிகள் இன்று முதல்

## இணைந்த கணித புதிய பிரிவு ஆரம்பம்

A/L 2016

இடம்: மணலாவத்தை, வதிரி (பொம்மேஸ் விளையாட்டு மைதானத்திற்கு அருகில்)

ஆரம்பம் : சனிக்கிழமை 04/01/2014 - 11.30 a m

Sat, Sun- 11.30 a m

ஆசிரியர்: நந்தகுமார்

தொடர்பு: 077 700 5746

## After AL/OL, What Next!

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர்ந்த தொழில்வாய்ப்பை பெற்றுத்தரும் கற்கைநெறிகள்

**BIT-Colombo University, CIMA-UK, Computer Engineering-USA**

அடிப்படைத்தகைமைகள் எதுவுமில்லை.
எத்துறை சார்ந்தோரும் பயிலலாம்.
உங்கள் தெரிவிற்கேற்ப விரிவுரை நேரங்கள்.
100 % வரையிலான புலமைப்பரிசில்கள்.
தகைமை வாய்ந்த விரிவுரையாளர்கள்.
மாணவர்களின் உயர்ந்த பெறுபேறுகள்.
புலமைப்பரிசில் விபரங்களிற்கு Type <NAME><COURSE> send to 0772395895

CIMA-Certificate level
FIT-colombo campus

**100 % schol**

**Free** GCE OLபரீட்சைக்கு தோற்றியமாணவர்களிற்கானது web designing, Multimedia, Hardware&Networking Type Free<NAME> send to 0772395895

**MCS** (யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்)


## கட்டார் நாட்டில் உடனடி வேலை வாய்ப்பு

Airport Helpers (விமான நிலையத்தில்)

அதி உயர்சம்பளம் தங்குமிடம் மருத்துவம் இலவசம் வயது எல்லை 18 தொடக்கம் 35 வரை ஒரு வாரத்தில் பயணம்.

தொடர்பு:- Lanka Voice
075 0650084

## French Classes பிரெஞ் வகுப்புகள்



French மொழி கற்பிப்பதற்கு French அரசாங்கம் மற்றும் French Embassy ஆகியன அங்கிகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் **Alliance Française de Jaffna** (AF) மட்டுமே. இச்சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். Embassy க்கும் France இல் French படிப்பதற்கு / தொழில் புரிவதற்கும் எமது அங்கிகரிக்கப்பட்ட பெறுமதியான CERTIFICATEஐ பெறுங்கள். புதிய வகுப்புகள் விரைவில் ஆரம்பமாகின்றன. இன்றே அனுமதிகளைப் பெறுவது சிறந்தது.

T.P.021.222.8093

61, Kachcheri-Nallur Road, Jaffna
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

## ஏல விற்பனை இன்று மட்டும் ஏல விற்பனை

ஏலம் ஆரம்ப நேரம்:- 10 A.M

வருட இறுதியை முன்னிட்டு அதிரடி ஏல விற்பனை

| | பழைய விலை | ஏல விலை |
|---|---|---|
| சோபா செற் | ~~350000~~ | 15000 |
| STEEL CUPBORD | ~~14000~~ | 6000 |
| சா/ கதிரை | ~~750~~ | 500 |
| மெத்தை | ~~5000~~ | 2000 |

இன்னும் பல பல பொருள்கள் ஏல விற்பனை

தெரிவுக்கு முந்துங்கள் பின் கவலைப் படாதீர்கள்

இல. 536, கே.கே.எஸ் வீதி, மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம்.

## N.C.A கல்விநிறுவனம்
1ஆம் கட்டை, பருத்தித்துறை

A/L 2016

* கலை, வர்த்தகம்
* TECHNOLOGY

DAY CLASS துரித மீட்டல்

ஆகிய பிரிவுகள் ஆரம்பம்
04/01/2014
காலை 9.00 மணி

## COLLEGE OF PHYSICS
Palam Road, Kantharmadam.

A/L 2016
ஆரம்பம்:28.12.2013
Sat:4.30 p.m Sun:7.00 a.m

A/L DAY CLASS
Mon,Tue Wed,Thu } 4.30 p.m

N.KAPILAN BSc

(42910)(4,5.3)

## கடை வாடகைக்கு

கஸ்தூரியார் வீதியில் 26அடி அகலமும், 70 அடி நீளமும் முற்றாக மாபிள் பதிக்கப்பட்ட இணைந்த குளியலறையுடன் சகலவசதிகளும் கொண்ட கடைத் தொகுதி வாடகைக்குண்டு. (நிதிநிறுவனங்கள், வங்கிகளுக்கு ஏற்றது)

தொடர்பு: 077 732 4648/077 732 4637

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

O/L பரீட்சை எழுதிய மாணவர்களினது நன்மை கருதியும், வருகின்ற புத்தாண்டு 2014 ற்காகவும் விசேட கட்டணக் கழிவில் சர்வதேச தரம் கொண்ட கற்கைநெறிகள்

இன்னும் சில மாதங்களில் நீங்கள் உயர்தரத்திற்குச் செல்லலாம், படித்துப் பட்டதாரி ஆகலாம், வேறு சிலர் தொழிற்சந்தையிலே நல்ல வேலைவாய்ப்பைத் தேடலாம் அல்லது வேறு உயர் கற்கைநெறிகளைக்கற்று நீங்கள் வாழ்க்கையை முன்னேற்ற விரும்பலாம். ஆனால் இக் கனவையெல்லாம் நீங்கள் நனவாக்க வேண்டுமானால் தற்போதைய காலகட்டத்திலே ஆங்கில அறிவு மிக மிக அவசியமானது.

### Spoken English With Grammar - Quick Learning Course

Duration: (1 1/2 Months)

- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம்.
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

**நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.**

### Diploma In English

Duration: (2 Months)

தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.

### B1 Exam Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும்.

Duration: (2 Months)

### IELTS Acadamic/General

Duration: (2 Months)

(International English Language Testing System)

Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

**We gurantee success rate 6.5 band and above**

### A1 Exam Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

- UK அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்ற முடியும்.
- சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை.
- ஏனைய பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானது.

எமது நிறுவனத்தினால் 800க்கும் மேற்பட்ட மாணவர்கள் பரீட்சையில் சித்தி எய்தி வெளிநாடு சென்றுள்ளார்கள்

Duration: (2 Months)

**Batches Starting on**

06-01-2014 @ 9.00am
11-01-2014 @ 11.00am
15-01-2014 @ 9.00am
20-01-2014 @ 10.00am
25-01-2014 @ 9.00am

Head Office : No.30 1/5, W.A. Silva Mawatha, Colombo -06. Tel :0112500207
No.15 2/1, Sirambiyadi Lane (Off Stanley Road), Jaffna. Tel : 021-2224550
No.3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavapuliyankulam, Vavuniya. Tel : 024-3245287

Hot Lines : 0777585913, 0777222422 , 0714299935, 0777730074

## UK Student visa with work Permission



- உயர்தர கல்லூரிகளையும், பல்கலைக்கழகங்களையும் தன்னகத்தே கொண்ட London நகரில் நீங்களும் கல்விகற்க ஓர் அரிய சந்தர்ப்பம்
- நடைமுறைகள் மாறினாலும் எவ்வித மாற்றமும் இன்றி London செல்ல முடியும்.

February / March இற்கான அனுமதிகள் தற்போது ஏற்று கொள்ளப்படுகின்றன

**நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்**

- கடந்த 14 வருட காலமாக ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களின் UK உயர் கல்வி கனவை நனவாக்கி வெற்றி நடை போடுகின்ற ஸ்தாபனம்
- எமது நிறுவனம் எண்பதிற்கு மேற்பட்ட முன்னிலை வகிக்கின்ற கல்லூரிகள், பல்கலைக்கழகங்களிற்கு மிகத் தெளிவான ஆலோசனைகளையும், பகுதி நேர வேலை வாய்புக்களுடன் கூடிய விசாக்களையும் பெற்றுக்கொடுக்கின்றது
- நீங்கள் தெரிவு செய்வது கல்லூரியாயின் 2-3 வருடகாலமும், பல்கலைக்கழகம் ஆயின் குறைந்தது 4 வருட விசாவினையும் பெற்றுக்கொள்ள முடியும்
- எம்மிடம் Student Visa அனுமதிக்காக இணைவோருக்கு இலவசமான IELTS, Spoken வகுப்புக்கள் ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது
- சகல ஆவணங்களும் மிகத் திருத்தமாக சமர்ப்பிக்கப்படின் இரு மாதகாலங்களில் உங்கள் UK பயணத்தினை உறுதிப்படுத்தி கொள்ள முடியும்
- பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் visa தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.
- Student Visa தொடர்பான வழிகாட்டலில் யாழ் மாணவர்களின் அதிஉயர் நம்பிக்கையை பெற்ற எமது நிறுவனத்துடன் இணைந்து உங்கள் எதிர்காலத்தை வளமாக்கிக் கொள்ளுங்கள்

**Colleges**
- Yearly Payment £ 3500
- IELTS Overall : 4.5 or B1

**Universities**
- Yearly Payment £ 3950 - £ 6450
- IELTS overall band: Minimum 5.5 Each Band >5.0

வார நாட்களில் 9-5 மணிவரையும் வார இறுதியில் 9-2 வரையும் எமது யாழ்கிளையினூடாக முற்றிலும் இலவசமான UK Student Visa தொடர்பான ஆலோசனைகளை பெறலாம்

EXPONET Overseas Consultants

#379-1/2 Galle Road, Colombo 06 Hotline: 011 7 555511/ 14/ 18 E-Mail: nimal@expogroup.lk
#197, Arasady Road, Jaffna. 021 75383395 | 021 2227230 Web: www.expogroup.lk

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


சூரியகாந்தி
2013
சினிமா
சினிமா
யாழ்ப்பாண
இளைஞர்கள்
படிப்பாளர்கள்
13
தாய்வானிய
இளம்பெண்
பெருமிதம்





# 2013

## தமிழ் சினிமாவின் வசூல்ராஜாக்கள்

என்னதான் சினிமாவைத் திட்டித் தீர்த்தாலும் தமிழ் மக்களிடம் பெரும் தாக்கத்தைச் செலுத்தும் காட்சி ஊடகமாக அது இன்னமும் வளர்ந்து கொண்டேதான் போகிறது. போதிய பொழுதுபோக்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதில் கஞ்சத்தனம் கொண்டுள்ள தமிழ்ச் சனத்துக்கு இருக்கும் ஒரே பெரும் பொழுதுபோக்கு சினிமாதான். அதனால் அதனை இலகுவாகத் தாண்டிச் செல்வது என்பது நடக்கிற காரியமாகத் தெரியவில்லை.

தமிழ் சினிமா அதன் ஆரம்பப் புள்ளியிலிருந்து எவ்வளவோ மாறிவிட்டது என்றாலும் இன்னமும் கதாநாயக வழிபாடும் கதாநாயகி கவர்ச்சியும் மட்டும் விடுபடமாட்டேன் என்று அடம்பிடிக்கின்றன. புதிய சிந்தனை, புதிய திரைமொழியோடு திறமையான இயக்குநர்கள் வந்துகொண்டேதான் இருக்கிறார்கள். திரைப்படம் இன்னமும் இயக்குநரின் ஊடகமாகத்தான் இருக்கிறது. ஆனால் ரசிகர்கள் கொண்டாடித் தீர்க்கும் பொழுதுபோக்குத் திரைப்படங்கள் என்பவை, முன்னணி நட்சத்திரங்களின் முதுகில் சவாரி செய்பவையாகவே இருக்கிறன.

2013ஆம் ஆண்டைத் திரும்பிப் பார்த்தால் அப்படி வெற்றி பெற்ற படங்களின் எண்ணிக்கை குறைவுதான். பெரும் கதாநாயகர்களைப் பொறுத்தவரை நடப்பாண்டில் ரஜினியின் கணக்கில் வரவு வைத்திருக்க வேண்டிய *கோச்சடையான்* வெளியாகவில்லை. என்றாலும் ரஜினியின் *எந்திரன்* பட வசூல் சாதனை இன்னமும் முறியடிக்கப்படாமல் அப்படியே இருக்கிறது.

கொஞ்சமும் அசைத்துப் பார்க்க முடியாதபடி அடுத்த இடத்தில் அமர்ந்திருக்கிறார் கமல். அலையாகப் புறப்பட்ட சர்ச்சைகளைக் கடந்து வெளியான கமலின் *விஸ்வரூபம்*, ரசிகர்களை ஏமாற்றவில்லை. மிகப் பெரிய வெற்றியை ஈட்டியது. *விஸ்வரூபம்* படத்தின் தமிழ்நாட்டு வசூல் மட்டுமே 70 கோடி ரூபாய். இந்தியாவின் மற்றைய தென்மாநிலங்கள், இந்திப் பதிப்பின் வசூல், வெளிநாட்டு வசூல் எல்லாம் சேர்த்து 85 கோடியை ஈட்டியிருக்கிறது.

ஒரு பொழுதுபோக்கு படத்தின் ஊடாக உலக அரசியலைக் கையாண்ட இந்தியாவின் முக்கிய இயக்குநர்களில் ஒருவராகவும் தன்னை அடையாளம் காட்டியிருக்கிறார் கமல்.

கமல் - ரஜினி மாதிரியே அவர்களுக்கு அடுத்த நிலையில் விஜய் - அஜித் வந்துவிடுகிறார்கள். அவர்களில் இந்த ஆண்டு சந்தேகமில்லாமல் அஜித் முன்னால் வந்து நிற்கிறார். அதற்குக் காரணம் *ஆரம்பம்* படத்தின் வசூல். தமிழ்நாட்டில் மட்டும் 85 கோடி ரூபாய் வசூல். ஆந்திராவிலும் கணிசமாக வசூல் செய்தது. படத்தின் மொத்த வசூல் 160 கோடி ரூபாய்.

விஜய் இந்த ஆண்டில் மிகப் பெரிய வெற்றியைக் கொடுக்கவில்லை என்றாலும் *தலைவா* படம் அவர் பெயரைக் காப்பாற்றி வைத்துள்ளது. கடந்த ஆண்டு தீபாவளிக்கு வெளியான *துப்பாக்கி* படத்தின் 200 கோடி ரூபாய் வசூல்தான் விஜய்யின் அண்மைய சாதனை. கடந்த 4 ஆண்டுகளில் விஜய்க்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றி இது.

நடப்பாண்டில் அரசியல் வசனச் சர்ச்சை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால் சற்றுத் தாமதமாக வெளியான *தலைவா* 120 கோடி ரூபாய்க்கு வியாபாரம் ஆகியிருந்தது. தமிழ்நாட்டில் 40 கோடி ரூபாயை மட்டுமே இது வசூல் செய்தது.

அஜித்துக்கு அடுத்த நிலை *சிங்கம் 2* படம் 140 கோடி ரூபாய் வசூலித்திருக்கிறது. இதனால் கமல், அஜித் ஆகிய இருவருக்கும் அடுத்த நிலையில் சூர்யா ஒளிவிட ஆரம்பித்திருக்கிறார். அஜித் - விஜய்க்கு இணையாக வியாபாரக் களத்தில் நின்ற விக்ரமுக்கு *தாண்டவம்* மிகப்பெரிய சறுக்கலாக அமைந்துவிட்டது. இதற்கிடையில் ஹிந்தியில் தயாராகி, தமிழில் மொழிமாற்றப்பட்ட *டேவிட்* படம் சில நாள்கள்கூடத் திரையரங்குகளில் தாக்குப்பிடிக்கவில்லை. தனது எல்லாச் சறுக்கல்களுக்கும் தீர்வாக அமையும் என்று ஷங்கரின் *ஐ* படத்தில் நடித்துவருகிறார் விக்ரம்.





> ஓங்கி அடிச்சா ஒண்ணரை டண் வெயிட். ஆனா 140 கோடிதான் வசூல்



விக்ரமுக்கு அடுத்த நிலையில் வந்த சிம்பு - தனுஷ் இருவரில், சிம்புவுக்குக் கடந்த ஆண்டு தீபாவளிக்கு வெளியான *போடா போடி* படத்துக்குப் பிறகு எந்தப் படமும் இன்னமும் வெளியாகாத சூழ்நிலையில் தற்போது பாண்டிராஜ், கௌதம் மேனன் என்று பெரும் இயக்குநர்களுடன் இணைந்து சுறுசுறுப்பைக் கூட்டியிருக்கிறார்.

தனுஷ் இந்திப்பட உலகில் அறிமுகமான ராஞ்சனா 230 கோடி ரூபாய் வசூலை ஈட்டியதாகச் சொல்லப்பட்டது. ஆனால் இதே படம் தமிழில் *அம்பிகாபதி*யாக வெளியாகி 20 கோடி மட்டுமே வசூல் செய்தது. *மரியான்* படத்தில் தனுஷின் நடிப்பு விமர்சகர்களால் கொண்டாடப்பட்டாலும் படம் வெற்றி பெறவில்லை. *நையாண்டி* படமும் மோசமாகத் தோல்வியடைந்தது.

வசூல் கதாநாயகர்களின் பட்டியலில் இணைந்துகொள்ள வேண்டும் என்று துடித்துவந்த விஷாலின் தொடர் தோல்விக்கு *பாண்டிய நாடு* முற்றுப்புள்ளி வைத்தது. இந்தப் படத்தின் மொத்த வசூல் 90 கோடி ரூபாய். இதற்கு முன்பு வெளியான *பட்டத்து யானை* சுமார் என்று சொல்லப்பட்டாலும் 45 கோடி ரூபாயை வசூல் செய்திருக்கிறது.

ஆர்யா, வித்தியாசமான கதாபாத்திரங்கள் கொண்ட படங்களிலும் *ஆரம்பம்* போன்ற பல கதாநாயகர்கள் கொண்ட படங்களிலும் நடிக்கத் தயங்குவதில்லை. ஜெய் - நயன்தாராவுடன் இணைந்து அவர் நடித்த *ராஜா ராணி*, 70 கோடி ரூபாய் வசூல் செய்தது. இந்தப் படத்துக்கு முன்பு வெளியான *சேட்டை* தோல்விப் படம் என்றாலும் 45 கோடி ரூபாய் வசூல் செய்திருக்கிறது. ஆர்யாவை வியாபாரத்தின் அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லும் என்று எதிர்பார்க்கப்பட்ட *இரண்டாம் உலகம்* தோல்வியைத் தழுவிவிட்டது.

ஜெயம் ரவியைப் பொறுத்தவரை கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பிரபுதேவா இயக்கத்தில் நடித்த *எங்கேயும் காதல்* 45 கோடி ரூபாய் வசூல் செய்ததோடு சரி. நடப்பாண்டில் வெளியான *ஆதிபகவன்* வெற்றி பெறவில்லை. வெற்றிப் பட வரிசையில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திவரும் கதாநாயகர்களின் பட்டியலில் சசிகுமாரும் இந்த ஆண்டு இடம்பிடித்திருக்கிறார்.

*(கட்டுரையில் கூறப்பட்ட தகவல்கள் திரையரங்கங்கள் மற்றும் வீடியோ கஸ்தார்கள் வட்டாரங்களிலிருந்து திரட்டியவை)*



# பாலுக்கு பாலகன் வேண்டி அழுதிட...



ஔரீஷ்

குட்டிகள் பசியில் துடித்துக் கொண்டு இருந்தன. தாய்ப் பன்றியின் மார்பில் துளி யளவு பாலும் இல்லை. இரை தேடினால் மட்டுமே இனி பால் சுரக்கும். பிள்ளைகளின் பசி தீர்க்க இரை தேடி மேய்ச்சலுக்கு புறப்பட்டது தாய்ப்பன்றி. நீண்ட நேரமாக வில்லோடு காத்திருந்த வேடனின் கண்ணில் அது துரதிர்ஷ் டவசமாக பட்டு விட்டது. 'விர்' என்று பாய்ந்து வந்த அம்பு பன்றியின் வயிற்றை துளைத்த பின்னே ஓய்ந் தது. " கடவுளே ! என் பிள்ளைகளின் பசியை தீர் " என்று மனதுக்குள் வேண் டிக்கொண்டே உயிரை விட்டது பன்றி. தாய் வெளியே சென்று நீண்டநேர மாகியும் திரும்பி வராததால் குட்டிப் பன்றிகள் பசியால் துவண்டு விழுந்தன. ஈனஸ்வரத்தில் முனகின. குட்டிகளின் அவலக் குரல் கேட்டு கைலாயம் வரை எதிரொலித்தது. கடவுளின் கன்கள் திறந்தன. சிவபெருமான் தாய்ப்பன்றி யாக மாறி குட்டிகளுக்கு பாலூட்டினார். பசி மறந்த குட்டிகளுக்கு அவர் தாயுமானவர் ஆனார்.

◆ ◆ ◆

**சம்பந்தன் துடுக்கான குழந்தை**

தந்தையின் வேட்டியை பிடித்துக் கொண்டு எல்லா இடமும் பின்னால் சென்று விடுவார். வழமை போன்று அன்றும் தந்தை கோயிலுக்கு புறப்பட்டார். குழந்தை தந்தைக்கு பின்னா லேயே சென்றது. தந்தை கோயில் குளத்தில் நீராடினார். இதன் போது ஒருமுறை சிறிது நேரம் நீருக்குள்ளே அமிழ்ந்து இருந்ததால் குழந்தை தந்தையை காணாது வீறிட்டு அழுத் தொடங்கியது. "அம்மையே அப்பா" என குழந்தையின் அழுகுரல் கேட்டு சிவபெருமான் உமாதேவி சகிதமாக அங்கே தோன்றினார். உமையம்மை குழந்தைக்கு பாலூட்ட சம்பந் தனின் அழுகை அடங்கியது. நீராடிவிட்டு வந்த தந்தை குழந்தையின் கடைவாயில் பால் வழிந்தி ருப்பதை கண்டு " உனக்கு யார் பால் கொடுத்தது ? " என்று கேட்க சம்பந்தர் வானை நோக்கி சுட்டிக் காட்டி "தோடுடைய செவியன்" என்ற தேவா ரத்தை மூன்று வயதிலே பாடி இறைவனின் அற்புதத்தை விளக்கினார்.

◆ ◆ ◆

அந்த முனிவருக்கு அழகான ஆண் குழந் தையொன்றை பரிசளித்த மறுகணமே பிரசவ வலியால் இறந்து விட்டாள் மனைவி. பூமியைத் தொட்ட பச்சிளங் குழந்தைக்கு பசியோ பசி அது தனக்கு தெரிந்த அழுகையின் மொழியால் தன் பசியை வெளிப்படுத்த தொடங்கியது. எந்தத் தந்தையால் தான் குழந்தையின் அழுகையை காண சகிக்க முடியும் ? தன் குழந்தையின் பசி தீர்க்க வழி தெரியாத அந்த ஏழை முனிவர் எங்காவது பால் கிடைக்குமா என்று தேடி வர குழந்தையை தனியே விட்டு விட்டு வெளியே புறப்பட்டார். அந்த சமயம் குழந்தைக்காக பாற்கடலையே இறைவன் பரிசளித்தான்.

◆ ◆ ◆

இப்படி பால் கொடுத்த அற்புதங்கள் மீண்டும் நிகழாதா என்று நிகழ்காலத்திலும் மக்கள் ஏங்கத் தொடங்கி விட்டார்கள். அந்தளவுக்கு இப்போது இலங்கையில் பால்மா பிரச்சினை மேலெழத் தொடங்கிவிட்டது. ஆரம்பத்தில் தென்னிலங்கையில் மட்டுமே நிலவிய பால்மா தட்டுப்பாடு புற்றுநோய் போல அதி விரைவாக வடக்குக்கும் பரவி விட்டது. மக் கள் விரும்பி வாங்கும் பால்மா பைக்கற்றுக் களை வாங்குவதை விடவும் முயல்கொம்பை தேடி எடுப்பது சுலபம் என்ற அளவுக்கு நிலைமை மோசமாகி விட்டது.

சில காலத்துக்கு முன்னர் தங்களுடைய பால்மாவை வாங்கச் சொல்லி ஊடகங்களில் போட்டி போட்டுக் கொண்டு நிறுவனங்கள் விளம்பரப் போரையே நடத்தியிருந்தன. இப்போது அதே நிறுவனங்கள் தான் தங்கள் உற்பத்திகளையே பதுக்கி வைத்தோ அல்லது மட்டுப்படுத்தியோ மக்களை தவிக்க விடுகின் றன. இதற்கு காரணம் இல்லாமலும் இல்லை. உலகச் சந்தையில் பால்மாவின் விலை ஏறியதால் இங்கும் விலையேற்றினால் மட்டுமே பால்மா உற்பத்தி நிறுவனங்களுக்கும் கட்டுப்படி யாகும் என்ற நிலை. அப்படியானால் கண்ணை மூடிக் கொண்டு விலையை ஏற்றுவதுதானே ? எங்கள் அரசுக்கு கைவந்த கலையாயிற்றே என்று பலர் நினைக்கலாம். ஆனால் அங்கு தான் இருக்கிறது சிக்கல். எதையும் ' தீர்க்கதரிசனத்தோடு ' சிந்திக்கின்ற மஹிந்தவாதிகள் நாட்டின் பொருளாதாரச் சுமையை குறைப்பதற்காக உலகச் சந்தையில் விலையேற்றம் நிகழும் முன்னரே பால்மாவுக் கான வரியை அதிகரித்து இயல்பாகவே அதன் விலையை பன்மடங்கு உயர்த்திவிட்டனர். அதனால் இப்போது உயர்த்த முடியாத நிலை. அப்படியும் உயர்த்தினால் ஏற்கெனவே விலைவாசியால் தள்ளாடிக்கொண்டு இருக்கும் மக்கள் நிச்சயம் அரசுக்கு எதிரான மனோபாவம் கொண்டவர்களாக மாறுவது நிச்சயம்.

இலங்கையர் ஒவ்வொருவருமே காலை எழுந்தவுடன் பால் தேநீர் அருந்துவதையே கட்டாயமாக கொண்டவர்கள். ஆகவே மற்றைய பொருள்களில் ஏற்படும் விலை அதிகரிப்பை விட பால்மாவில் நிகழும் விலையேற்றமே அவர்க ளுக்கு உடனடித் தாக்கத்தை உணரவைக் கும். ஆகவே தான் பால்மா விடயத்தில் கொஞ் சம் நிதானத்தோடு செயற்பட வேண்டிய கட் டாயம் இலங்கை அரசுக்கு. இதனால் தான் பால்மா நிறுவனங்கள் கேட்டவுடன் விலையைக் கூட்ட அரசு சம்மதிக்கவில்லை.

இதை விட பால்மா உற்பத்தி நிறுவனங்களில் முக்கியமான ஒன்றான பொன்டேராவுடன் ஏற் கனவே அரசு உரசுப்பட்டிருந்தது. அந்த நிறு வனத்தால் உற்பத்தி செய்யப்படும் பால்மா மெலனமன் என்ற உடலுக்கு தீங்கை ஏற்படுத் தக் கூடிய டி.எச்.டி. பதார்த்தம் கலந்திருப்பதாக திடீரென ஓர் அறிக்கை வெளியிட்டு அந்தப் பால்மா உற்பத்திக்கும் தடை விதித்திருந்தது. ஆயினும் அந்த நிறுவனம் ஓய்ந்து விடாமல் சட்ட ரீதியாக இந்தப் பிரச்சினையை எதிர்கொண்டது பின்னர் ஒரு மாதிரி தங்கள் உற்பத்தியில் உடலுக்கு தீங்கை விளை விக்கும் பதார்த்தங்கள் இல்லை என்பதையே அந்த நிறுவனம் நிரூபித்து மீண்டும் உற்பத்தி யில் இறங்கியது.

எனவே பொன்டேராவிடம் மெலனமன் விடயத் தில் தான் அடைந்த தோல்விக்கு பழி தீர்க்க அரசு காத்திருந்தது. எனவே பொன்டேரா உள்ளிட்ட பால்மா நிறுவனங்கள் தங்கள் உற்பத்தியின் விலையை அதிகரிக்க கேட்ட போது, பொன்டே ராவை பழிவாங்குவதற்காக இந்த அதிகரிப்புக்கு அரசு மறுத்துவிட்டதாக சொல்லப்படுகிறது. ஆனால் பால்மா உற்பத்தி நிறுவனங்கள் வேறு வகையில் அரசுக்கு தலையிடியை கொடுக்கத் தீர்மானித்தன. பால்மாவை சந்தையில் கிடைத்தற்கரிய பொருளாக மாற்றுவதன் மூலம் மக்களை கொந்தளிக்க வைத்து அதன் மூலம் ஏற்படும் அழுத்தத்தால் தாங்கள் கூறிய விலை அதிகரிப்புக்கு அரசை அடிபணிய வைக்க நினைத்தன. அதனடிப்படையில்தான் தங்களு டைய உற்பத்திகளை தாங்களே பதுக்கி வைத்தன. அல்லது உற்பத்திகளை வெகுவாக குறைத்துக் கொண்டன.

பால்மா நிறுவனங்களின் இந்த செயற்பாடு மூலம் சந்தைகளில் செயற்கையான பால்மா தட்டுப்பாடு உருவானது. மக்கள் பால்மாவுக்காக அந்தரிக்க தொடங்கினர். இந்த நிலை தெற்கிலி ருந்து நகர்ந்து வடக்கு வரை பரவி விட்டது. வடக்கில் பால்மா தட்டுப்பாடு காரணமாக பெரும் பாலான பிள்ளைகள் காலையில் ' பிளேன் ரீயையே ' குடிக்க வேண்டியிருக்கிறது.

" இவன் மாத் தேத்தண்ணி இல்லாட்டி வாயிலையும் வைக்கமாட்டானாம். பிளேன் ரீயை குடுக்க குடிக்காமால் அப்பிடியே வைச்சிட்டு போறான்" என்று தாய்மார்கள் புலம்பும் அள வுக்கு பல வீடுகளில் பிள்ளைகள் பால்மாவுக்கான ' தேனீர் குடிக்கா போராட்டத்தில் ' குதித்துள்ள னர். பிள்ளைகளின் பிடிவாதத்தால் எப்படியும் பால்மா வாங்கியே ஆக வேண்டிய கட்டாயம். அதற்காக கடை கடையாக ஏறி இறங்கி அலையும் வேளையில் ஆத்திரம் முழுதும் அரசு மீதே திரும்பும். இதையே பால்மா நிறுவனங்களும் எதிர்பார்த்திருந்தன.

வடக்கு மக்கள் பால்மாவிற்கான பிரதான நுகர்வாளர்களாக முன்னைய காலங்களில் இருக்கவில்லை. ஏனெனில் வீட்டுக்கு வீடு பால் தேவையை ஈடு செய்வதற்காக ஆகக் குறைந் தது நாலைந்து ஆடு மாடாவது இருக்கும். விவசாயத்தை மையமாகக் கொண்டதாக எங்கள் வாழ்க்கை முறை இருந்ததால் அவற்றை கட்டி மேய்ப்பதில் சிரமங்கள் இருக்கவில்லை. இதனால் காலையும் மாலையும் உடன் பாலை எங்களுடைய தேவைகளுக்காக நாங்கள் பருக முடிந்தது. அதிலும் மேலதிகமாக உள்ள பால் தயிராகவோ, மோராகவோ, வெண்ணெயா கவோ உருமாறும். எந்த வித கலப்படமும் அதில் இல்லாததால், ஆரோக்கியமாக வாழ முடிந்தது. ஆனால் மெல்ல மெல்ல எங்கள் வாழ்வியல் மாறத் தொடங்கியது வீடுகளில் ஆடு மாடுகளை வளர்ப்பது சிரமமான அல்லது அசிங்கமான அல்லது கௌரவ குறைச்சலான ஒன்றாக மாறியது. இதை விட விவசாயத்தை பெரும்பா லானோர் கைவிட்டு அந்தக் காணிகளில் கட்ட டக்காடுகள் உருப்பெற்றதாலும் கால் நடைக ளுக்கான மேய்ச்சல் தரவையே இல்லாமல் போனது. நகர்ப்புற வாழ்வியல் தொற்றிக் கொண்டதால் மிக சிறிய காணியில் அடுத் தடுத்து வீடுகளை அமைக்கவே இடமில்லாத நிலை உருவானபோது ஆடு, மாடுகள் வேண்டாப் பொருளாகி ஒதுக்கப்பட்டன. ஆயி னும் காலையும், மாலையும் பால் குடித்தே பழக்கப்பட்டு போனவர்களுக்கு அந்தப் பழக் கத்தை கைவிட முடியாமல் தவித்தனர். இந்த நிலையில் தான் அவர்களுக்கு பைக்கற்றுக்களில் அடைக்கப்பட்ட பால்மா நவீன காமதேனுவாக பால் சுரக்க தொடங்கிற்று.

காசை விட்டெறிந்தால் எப்போதும் வைத்து பயன்படுத்தக் கூடிய கைக்கடக்கமான பொதிகளில் திண்ம வடிவில் சுலபமாக பால்மா கிடைக்கும் போது ஆடும் மாடும் எதற்கு ? மெல்ல மெல்ல எங்கள் சமூகம் அவற்றை இழக்க தொடங்கியது. வீட்டில் பால்மாடுகள் இருந்தா லும் கூட மாப்பால் தேநீரையே அருந்தும் அளவுக்கு எங்கள் நுகர்வுத் தன்மை பெரும் மாற்றம் பெற்றது. அல்லது பால்மா தேனீரை அருந்துவது நாகரீகம் என்று நம்பினோம். இப்படி எங்களுடைய அடிப்படை வாழ்வியல் கட்டமைப்பை தொலைத்ததால் தான் இன்று சின்னதொரு தட்டுப்பாடு ஏற்பட்டவுடனேயே உயிரே போய்விட்டது போன்று அலறி துடிக்கி றோம்.

உண்மையில் எங்களது பிரதேசத்தில் கால் நடை வளர்ப்புக்கு ஏதுவான புவியியலும் சூழ லும் ஆளணியும் தொழில்வாய்ப்பும் சாதகமா கவே இருக்கின்றன. ஆனால் நாம் தான் அதனை நாகரீக குறைவு என்று எண்ணி தவிர்த்துவிட்டோம். இதன் அர்த்தம் எல்லோ ரும் உடனேயே ஆடு, மாடுகளை வாங்கிக் கொண்டு இடையர்களாக மாறுங்கள் என்ப தல்ல. ஒவ்வொரு வீட்டிலு அவரவர் தேவை களை பூர்த்தி செய்யக் கூடிய அளவுக்கு வளர்ப்புப் பிராணிகளாக ஆடு, மாடுகளை வைத்திருந்த எம் முன்னோரின் வாழ்க்கை முறையை மீண்டும் கையில் எடுக்க வேண்டும் என்பது தான். அப்படி நிகழுமாயின் பாலுக்கு பாலகன் வேண்டி அழும் சந்தர்ப்பங்களில் பால்மாவுக்காக அலையத் தேவையில்லை. வீட்டிலேயே இருக்கும் காமதேனுக்களில் சுரக்கும் பாலே எங்களின் பசியை தீர்க்க போதுமானது. அந்த நிலை ஏற்பட்டால் இது போன்று பால்மாவை பதுக்கும் விளையாட்டு தொடராது.

# பலவீனமான தலைவர்களின் பலவந்தப்படுத்தல்கள்

கனிமொழி

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்குவது என்ற பேச்சு மீண்டும் அடிபட ஆரம்பித்துள்ளது. பொது எதிர்க்கட்சிகளின் சார்பில் அவரை ஜனாதிபதியாகக் களமிறக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இணங்கியிருக்கிறார் என்றும் செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இரண்டு தடவைகள் இலங்கையின் ஜனாதிபதி யாகப் பதவி வகித்தவர். மூன்றாவது முறையாக வும் அவர் பதவி வகிப்பதற்கு விரும்பி அரசமைப் பில் மாற்றங்களைச் செய்ய திரைமறைவில் முயற்சித்தபோது அதற்குக் கடும் எதிர்ப்புக் கிளம் பியது. அதையடுத்தே அவர் அந்த முயற்சியைக் கைவிட்டு பதவியிலிருந்து விலகிச் சென்றார். அதன் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளும் ஓரங்கட்டப்பட்டார். அதனை அடுத்து அரசியல் துறவறத்துக்குள் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார் சந்திரிகா.

1994இல் சந்திரிகா முதல் தடவையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது அவர் ஒரு சமாதானத் தேவதையாகத் தோற்றமளித்தார். ஆனால் சமாதானத்துக்கான போரை அவர் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டபோது அவரது சமாதான தேவதை வேடம் கலைந்து கொடூரமான கோர முகம் வெளிப்பட்டது. அத்துடன் அவர் வாக்களித்த அரசியல் தீர்வை அவர் பதவியில் இருந்து விலகும்வரை முன்வைக்கவில்லை. கடைசிக் காலத்தில் அவர் முன்வைத்த தீர்வை ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட எதிர்க் கட்சிகள் பரிசீலனைக்குக்கூட எடுத்துக்கொள்ள மறுத்து நாடாளுமன்றத்திலேயே எரித்தன.

இப்படிச் சீரழிந்த கடைசிக் காலத்துடன்தான் சந்திரிகாவின் அரசியல் வாழ்க்கை முடிவுக்கு வந்தது. அதனால் அண்மைக் காலம் வரையில் தான் மீண்டும் ஒருபோதும் அரசியலுக்கு வரப்போவதில்லை என்று சந்திரிகா கூறிவந்தார். மேலும் தான் மீண்டும் அரசியலுக்குள் நுழைந்தால் மஹிந்த ராஜபக்ஷ அரசால் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்படலாம் என்று அவருக்கு இருந்த அச்சமும் அவர் மீண்டும் அரசியலில் தீவிரம் காட்டாமைக்கான மற்றொரு காரணம்.

இருந்தாலும் அவ்வப்போது சந்திரிகா மீண்டும் அரசியலுக்கு வரப்போகிறார் என்கிற செய்தி வெளியாவது வழமையாகும். கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போதும் அதன் பின் னரும்கூட இத்தகைய செய்திகள் வெளியாகின. ஆனால் அவற்றை மறுப்பதையே சந்திரிகா இதுவரையில் செய்து வந்திருக்கிறார். 2016ஆம் ஆண்டில் நடக்க வேண்டிய ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடத்திலேயே நடத்தப்படலாம் என்ற ஆரூடங்கள் கூறப்பட்டுவரும் நிலையில் மீண்டும் சந்திரிகாவின் அரசியல் மீள்நுழைகை பற்றிய செய்திகள் அடிபடத் தொடங்கியுள்ளன.

சந்திரிகா அரசியலுக்குள் மீண்டும் நுழைந்து அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறாரோ இல்லையோ இது தொடர்பில் அடிக்கடி அடிபடும் செய்திகள் ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்துகின்றன. இலங்கையில் உள்ள முக்கிய அரசியல் கட்சிகள் பலவும் சரியான தலைமை இன்றி அவதிப்படுகின்றன என்பதே அது.

தனது இரண்டாவது பதவிக் காலத்தை முடித்துக் கொள்ள இருக்கும் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாகவும் அந்தப் பதவிக்குப் போட்டியிடுவார் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு வசதியாகவே அரசமைப்பில் கூறப்பட்டிருந்த, ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதியாகப் பதவி வகிக்க முடியாது என்ற சரத்தை 18ஆவது திருத்தத்தின் மூலம் அவர் நீக்கிக் கொண்டார். சுதந்திரக் கட்சி சார்பில் மற்றொரு தலைவரை ஜனாதிபதித் தேர்தலில் நிற்க வைத்தால் தோற்றுவிடுவாரோ என்ற அச்சமும் அவர் மூன்றாவது தடவையாகவும் போட்டியிடுவதற்கான காரணம். இதன் அர்த்தம் மஹிந்த ராஜபக்ஷவை மிஞ்சிய அல்லது மஹிந்த அளவுக்குத் தன்னும் செல்வாக்குப் பெற்ற வேறு தலைவர்கள் சுதந்திரக் கட்சியினுள் இல்லை என்பதாகும். இதை மற்றொரு முறையில் சொன்னால், மஹிந்தவை ஓரம்கட்டிவிட்டு முன்னணிக்கு வந்து ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ளத்தக்க பலம் வாய்ந்த, செல்வாக்கு மிக்க தலைவர் ஒருவர் சுதந்திரக் கட்சியில் இல்லை என்பதாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியிலும் இதுவே நிலை. கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கட்சித் தலைமையைத் தக்க வைப்பதற்கே பெரும் போராட்டம் நடத்த வேண்டியுள்ள நிலையில் அவரால் எப்படி ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ள முடியும்? கட்சிக்குள்ளும் வேறு பலம் மிக்க தலைவர்கள் எவரும் இல்லை. சஜித் பிரேமதாஸ இனவாதம் பேசியே முன்னணிக்கு வரமுடியும் என்று கருதும் ஒரு தலைவராக இருப்பதனால் அவரால் ஜனாதிபதித் தேர்தலை ஒருபோதும் தமிழர்களின் ஆதரவுடன் வெற்றி கொள்ள முடியாது. அத்துடன் கட்சிக்குள் ரணிலை ஓரங்கட்டி தலைமையைக் கைப்பற்றவே முடியாத அவர் எப்படி மஹிந்தவை ஓரங்கட்ட முடியும் என்ற கேள்வியையும் எழுப்புகிறது. கட்சியின் இந்த நிலையே சந்திரிகா போன்ற, அரசியல் துறவறத்தை நாடி நிற்கும் தலைவர்களை மீண்டும் அரசியல் களத்திற்குள் இழுத்து வரும் பலவந்தப்படுத்தல்களுக்குள் கொண்டு சென்று விடுகிறது.

இந்த வியாதி சிங்களக் கட்சிகளுக்கு மட்டும் உரியதல்ல. தமிழர் தரப்பிலும் இதே நிலைமை தான். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஈபிடிபியும் கூட கடந்த மாகாண சபைத் தேர்தலில் இந்த நிலையை எதிர்கொண்டன. கவர்ச்சிகரமான, சிறந்த, பெரு வெற்றி ஒன்றை உறுதிப்படுத்தக் கூடிய தலைவர் ஒருவர் கிடைக்காத காரணத்தாலேயே, அரசியலில் மட்டுமல்ல வாழ்விலும் துறவறத்தை நாடிநின்ற முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை கூட்டமைப்பு பலவந்தமாக அரசியலுக்குள் இழுத்து வந்தது. (முதலமைச்சர் அதனை இப்போதும் சொல்லி வருகிறார்) ஈபிடிபியினரோ தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரும் அமைச்சர் டக்ளஸ்தான் முதலமைச்சர் வேட்பாளர் என்று சொல்லிக்கொண்டிருந்துவிட்டுத் தோல்விப் பயம் காரணமாக இருப்பதையும் இழக்க வேண்டாம் (இதுதான் அவர்களின் தாரக மந்திரம்) என்று பின்வாங்கிக்கொண்டனர். அதனால் லண்டனில் அரசியல் தஞ்சம் கோரி வாழ்ந்து வந்த ஒருவர் முதலமைச்சர் வேட்பாளர் என்று முன்தள்ளப்பட்டார்.

இவை அனைத்துமே இருக்கும் அரசியல் தலைமைகளின் அரசியல் பலவீனத்தை வெட்ட வெளிச்சமாக்குகின்றன. அதேசமயத்தில் தாம் இருக்கும் காலத்திலேயே கட்சிக்குள் தமக்கு அடுத்தநிலைத் தலைவராக ஒருவரை தற்போதைய தலைமைகள் வளர்த்து விடாமல் வைத்திருப்பதன் விளைவாகவும் இது இருக்கிறது. (அப்படி வளர்த்துவிடுவது தமது தலைமைப் பதவிக்கு ஆபத்து என்று அவர்கள் நினைக்கக் கூடும்) இதன் விளைவு யாரோ சிலரைப் பலவந்தமாக அரசியலுக்குள் இழுத்து வருவதாக அமைகிறது. இதன் எதிர்வினையானது மக்களைப் பாதிப்பதாக அமைகிறது.

அரசியலுக்குள் பலவந்தமாக இழுத்து வரப்பட்டவர்கள் தாம் விரும்பமின்றியே அரசியலுக்குள் வந்தவர்கள் என்ற எண்ணத்தாலோ என்னவோ மந்தமாகவே பணியாற்ற முற்படும் நிலைமையும் ஏற்படுகிறது; ஏற்படக்கூடும். இந்தப் பலவீனத்தைக் களைய தற்போதைய தலைமைகள் முன்வந்து ஏதாவது செய்தால் அது மக்களுக்கு நன்மை பயக்கும்.





# மீண்டும் ஒரு செம்மணி

மாந்தையிலிருந்து
அன்ரன்,
எஸ்.ஆர்.

போர் முடிந்து நான்கு ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் மன்னாரில் மேற்கிளம்பியுள்ள மனிதப் புதைகுழி அரசுக்குப் பெரும் தர்மசங்கடமாக எழுந்திருக்கிறது. வடக்கே மன்னார் மாவட்டத்தில் திருக்கேதீஸ்வரம் பகுதியில், புதிய குடிதண்ணீர் குழாய்களைப் பொருத்துவதற்காக நிலத்தைத் தோண்டிய போது தற்செயலாக இந்த மனிதப் புதைகுழி வெளிப்பட்டது. இதுவரையில் 11 எலும்புக்கூடுகளின் எச்சங்கள் அந்தக் குழியிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன. புதிதாக அமைக்கப் பெற்ற காப்பெற் வீதியின் கீழும் புதைகுழி நீண்டு செல்கிறது என்ற அச்சம் எழுந்ததன் காரணமாக பல துறையினரையும் ஒருங்கிணைத்து குழியை மேலும் தோண்ட வேண்டியதாக இருக்கிறது. இதனால் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் தோண்டும் பணி இடைநிறுத்தப்பட்டிருந்தது. நேற்று அது மீண்டும் ஆரம்பிக்கப் பட்டது.

இறுதிப் போரில் 40 ஆயிரத்துக்கும் அதிகமான அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகத் தினால் நியமிக்கப்பட்ட குழு தெரிவித் திருந்த நிலையிலும் அரச புள்ளி விவரங்களின்படி ஒரு லட்சத்துக்கு மேற்பட்டோருக்கு இறுதிப் போரில் என்ன நடந்தது என்று தெளிவாகத் தெரியாத நிலையிலும் மன்னாரில் மேற்கிளம்பியுள்ள மனிதப் புதைகுழி பல்வேறு கேள்விகளையும் எழுப்பி நிற்கிறது.

திருக்கேதிஸ்வரம் மாந்தை சந்தியில் இருந்து சுமார் 70 மீற்றர் தொலைவிலேயே தற்போது கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி அமைந்திருக்கிறது. இதுவரையில் சுமார் 50 மீற்றர் தூரத்துக்குக் குழி தோண்டப்பட்டுள்ளது. 20 ஆம் திகதி மாலை அந்தப் பகுதியில் மனித எலும்புகள் வெளிவருவதைக் கண்ட ஒப்பந்தப் பணியாளர்கள் அச்சமடைந்து பொலி ஸாருக்கு அது பற்றி அறிவித்தார் நீதிவானுக்குத் தகவல் தரப்ப அடுத்து மன்னார் நீதிவான் ஆ கனகரட்ணம் நேரில் வந்தார். அ முன்னிலையில் புதைகுழி மீண் தோண்டப்பட்டது.

கிடைக்கப்பெற்ற மனித மற்றும் எலும்புக்கூடுக டையில் அந்த இட மனிதப் புதைகுழி இ சாத்தியங்கள் உணரப் னால் விசேட சட்டமருத்துவ அதிகாரிகள் மற்றும் விசேட தடவியல் நிபுணர்களின் தேவை உணரப்பட்டது. அனுராதபுரத்திலிருந்து அவர்கள் வரவழைக்கப்பட்டனர்.

## செம்மணிப் புதைகுழி

இலங்கையின் வரலாற்றில் வடக்கே கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாவது பெரும் புதைகுழி இதுவாகும். இதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தின் செம்மணி வயல்வெளிப் பகுதியில் ஒரு புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தின் பிரபல பாடசாலையான சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் பயின்ற கிருஷாந்தி என்ற மாணவி வன்புணர்வுக்குப் பின்னர் இலங்கை இராணுவத்தினரால் துடிக்கத் துடிக்கக் கொல்லப்பட்ட பின்னர், அந்த வழக்கில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட கோப்ரல் ராஜபக்ஷ செம்மணிப்புதைகுழி பற்றிய தகவலை முதல் தடவையாக வெளியிட்டார்.

அதன் பின்னர் 1999ஆம் ஆண்டில் அந்தப் புதைகுழி தோண்டப்பட்டது. 1998ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் காணாமல்போன சுமார் 600க்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகளில் பெரும்பாலானோர் செம்மணி வெளியில்தான் கொன்று புதைக்கப் பட்டார்கள் என்று குற்றவாளியான கோப்ரல் ராஜபக்ஷ நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்திருந்தார்.

இத்தகைய கொலைகளுக்கும் வன்புணர்வுகளுக்கும் காரணமான இராணுவத்தின் உயர் அதிகாரிகளை விட்டுவிட்டு சம்பவம் நடந்த நேரத்தில் கடமையில் இருந்த காரணத்துக்காக தன்னைப் போன்ற சிப்பாய்களை மட்டும் மாட்டிவிட்டுத் தண்டனை பெற்றுத் தந்த கோபத்தில் ராஜபக்ஷ செம்மணிப் புதைகுழி பற்றிய தகவலை வெளிப்படுத்தினார். அவர் அடையாளம் காட்டிய இடங்களில் இருந்து 15 சடலங்கள் மீட்கப்பட்டன. சில நாள்களின் பின்னர் அவர் அடையாளம்காட்டித் தோண்டப்பட்ட இடங்களில் சடலங்களைக் காண முடியவில்லை ராஜபக்ஷவால் உண்மை வெளியிடப்பட்ட காலத்துக்கும் புதைகுழிகளைத் தோண்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட காலத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் செம்மணியில் இரவு நேரத்தில் புகை மூட்டம் காணப்பட்டதாக அப்போது பல கதைகள் இருந்தன. புதைக்கப்பட்ட பல சடலங்கள் மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டு எரியூட்டப்பட்டு விட்டன என்ற பலத்த சந்தேகங்கள்கூட இருந்தன.

சில காலம் இந்த வழக்கு யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து நடந்தது. அதன் பின்னர் போர்ச் சூழலைக் காரணம் காட்டியும் புலிகளால் தமக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்கின்றது என்று காரணம் கூறியும் குற்றஞ் சாட்டப்பட்ட இராணுவத்தினர் அந்த வழக்கு விசாரணைகளை அனுராத புரம் நீதிமன்றத்துக்கு மாற்றினர். அங்கிருந்து அந்த வழக்குப் பின்னர் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்துக்கு நகர்த்தப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்தது என்று தகவல்கள் கூறுகின்றன. ஆனால் இன்று அந்த வழக்கு விசாரணைகளுக்கு என்ன நடந்தது; நடக்கிறது என்று யாருக்குமே தெரியாது.

## இரண்டாவது புதைகுழி

இந்த நிலையில்தான் இரண்டாவது புதைகுழி மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. செம்மணியில் புதைக்கப்பட்டவர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுப் பின்னர் கொல்லப்பட்ட தமிழ் மக்கள்தான் என்ற உண்மையை கோப்ரல் ராஜபக்ஷ கூறியிருந்தார். ஆனால் மன்னார் புதைகுழிகளில் மீட்கப்பட்டு



வரும் மனித எச்சங்களுக்குரியவர்கள் யார் என்பது இன்னமும் திட்டவட்டமாகத் தெரியவரவில்லை.

இங்கு புதைக்கப்பட்டவர்கள் யார்? அவர்கள் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்டார்களா? அரசியல் கொலைகளின் காரணமாக இந்தப் புதைகுழி தோன்றியதா? புதையுண்டு கிடப்பவர்கள் தமிழர்களா? அல்லது இராணுவத்தினரா? என்ற விடயங்கள் இன்னமும் தெளிவுபடாதபோதும் இந்தப் பகுதியில் காணாமல்போன தமிழர்கள் பலரே கொல்லப்பட்ட பின்னர் இங்கு புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சம் பெருவாரியாக நிலவுகின்றது. மன்னார் ஆயர் இராயப்பு யோசப் இது தொடர்பிலான தனது அச்சத்தை ஏற்கனவே வெளிப்படுத்தியிருக்கிறார். காணாமற்போன தமிழர்களின் புதைகுழியாக இது இருக்கலாம் என்பதால் சர்வதேச விசாரணை ஒன்று வேண் டும் என்றும் அவர் வலியுறுத்தியிருக்கிறார்.



புதைகுழி தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருவதாகப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் றோகன தெரிவிக்கின்றார். புதைகுழி சர்வதேச தர நியமங்களுக்கு ஏற்ப தோண்டப்படுவதையும் அதிலிருந்து எடுக்கப்படும் தடயங்கள் உண்மையான, நேர்மையான விசாரணை ஒன்றுக்கு உதவுவதையும் இலங்கை அரசு உறுதிப்படுத்த வேண்டும். இல்லையேல் எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஜெனிவாவில் இந்த விவகாரம் பெரும் பூதாகாரமாகக் கிளம்பும்.

### பின்னணி

மாந்தைச் சந்தியில் தற்போது தோண்டப்பட்டு வரும் இடத்தில் முன்னர் தமிழ் மக்கள் வாழ்ந்தனர். 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் திருக்கேதீஸ்வரம் கௌரி அம்பாள் மகா வித்தியாலயம் அங்கு இயங்கியது. 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் 74 குடும்பங்கள் அங்கு வாழ்ந்தன.

போருக்குப் பின்னர் அந்தப் பகுதியில் விகாரை ஒன்று தனியார் காணியில் அடாத்தாக அமைக்கப்பட்டது. கட்டச்சி அம்மா என்று அழைக்கப்பட்ட, தனிமையில் வாழ்ந்து வந்த பெண் ஒருவருக்குச் சொந்தமானது அந்தக் காணி என்று தெரிவிக்கப்படுகிறது. இதற்கு அண்மையில் கூட்டுறவுச் சங்கக் கிளை ஒன்றும் முன்னர் காணப்பட்டுள்ளது.

இங்கு வாழ்ந்தவர்கள் தமது வீடுகளுக்கு பின்புறமாக இருந்த நிலப்பரப்பில் மிளகாய்த் தோட்டம் செய்து பிழைத்துள்ளனர். தற்போது விகாரை அமைக்கப்பட்டுள்ள இடத்துக்கு எதிர்ப்பக்கமாக ஆர்.டி.ஏ. அலுவலகம் மற்றும் பெரும் அரிசி ஆலை என்பனவும் இருந்திருக்கின்றன.

தற்போது மனிதப் புதைகுழி காணப்படுகின்ற இடத்திற்குப் பின் பகுதியில் நல்ல தண்ணீர் கிணறு ஒன்றும் காணப்பட்டுள்ளது. இன்று அந்தக் கிணறு மூடப்பட்டுவிட்டது.

1990 ஆம் ஆண்டு வேட்டையார் முறிப்பு என்ற கிராமத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் நடமாட்டம் அதிகரித்ததைத் தொடர்ந்து படையினரின் நடமாட்டமும் கெடுபிடிகளும் அதிகரித்ததால் கிராமத்தில் இருந்த குடும்பங்கள் இடம்பெயர்ந்து வேறு மாவட்டங்களுக்கும், இந்தியாவிற்கும் அகதிகளாகச் சென்றுவிட்டனர்.

ஆள் நடமாட்டம் அற்றுப்போன அந்தப் பகுதி 1990ஆம் தொடக்கம் 1999ஆம் ஆண்டு வரை இராணுவத்தின் பாதுகாப்பு வலயமாக இருந்தது. இராணுவக் கட்டளைத் தலைமையகமாகவும், இராணுவ முகாம்களுக்கு ஆயுதம் விநியோகிக்கும் களஞ்சியமாகவும் அங்கிருந்த முகாம் அவ்வப்போது செயற்பட்டு வந்திருக்கிறது.

மன்னார் மாவட்டத்தின் மிகப்பெரும் இராணுவத் தளமான தள்ளாடியின் பாதுகாப்புக்காக திருக்கேதீச்சரம் உள்ளிட்ட பகுதிகள் 1990 ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை இராணுவத்தின் அதியுயர் கண்காணிப்பில் பாதுகாப்பு வலயமாகவே வைக்கப்பட்டிருந்தது. 1997ஆம் ஆண்டு திருக்கேதீச்சர ஆலயம் மக்களின் வழிபாட்டிற்காக திறந்து விடப்பட்டபோதுகூட மன்னார் பெரிய பாலத்தில் அமைந்திருந்த இராணுவ சோதனைச்சாவடியில் இருந்து கண்ணாடிகளுக்குக் கறுப்புநிற ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்ட இராணுவ பஸ்களிலேயே மக்கள் கோயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். பெரும் உடல் சோதனைகளுக்குப் பின்னரே மக்கள் வாகனங்களில் ஏற்றப்பட்டார்கள்.

போர் முடிவடைந்து 5 ஆண்டுகள் கடக்கின்றபோதும் இந்தப் பகுதியில் இன்னமும் மக்கள் மீளக்குடியமரவில்லை. அதற்கு அனுமதிக்கப்படவுமில்லை. அப்பகுதி தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்துக்குரியது என்று கூறப்பட்டு வருகின்றது.

### கடத்தல் தரும் அச்சம்

இந்தப் பகுதியில் பலர் கடத்தப்பட்டுக் காணாமல்போயிருக்கிறார்கள் என்று தமிழர்கள் பலர் தகவல் சொல்கிறார்கள். இராணுவக்கெடுபிடிகள் அதிகம் இருந்த காலங்களில் இந்தப் பகுதியில் அமைந்திருந்த படைமுகாம் மர்மம் நிறைந்த அச்சமூட்டும் நாசகாரத் தளமாகத்தான் தமிழ் மக்களால் உருவகப்படுத்தப்பட்டிருந்தது என்று கூறுவோரும் இருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்ட இளைஞர்கள் கொல்லப்பட்டு செம்மணியில் புதைக்கப்பட்டதைப் போன்றே மன்னாரில் கடத்தப்பட்டவர்கள் இங்கு புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சம் எல்லோர் மனங்களையும் ஆட்டிப் படைக்கின்றது.

**கிடைக்கப்பெற்ற மனித எச்சங்கள் மற்றும் எலும்பு கூடுகளின் அடிப்படையில் அந்த இடத்தில் பெரும் மனிதப் புதைகுழி இருப்பதற்கான சாத்தியங்கள் உணரப்பட்டன.**

போர் காலத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த 'பாஸ்' நடைமுறைகளால் அங்கிருந்து வெளியேற முடியாமல் இருந்தவர்களில் சிலர் மன்னார் உயிலங்குளம் காட்டுப்பாதைகள் ஊடாகத் தப்பி வெளியேற முயன்ற சமயங்களில் இராணுவத்தினரிடம் மாட்டிக்கொண்டனர் என்றும் அப்படிப்பட்ட பலர் பின்னர் மீண்டு வரவேயில்லை என்றும் அவர்களது உறவினர்கள் கூறுகின்றனர்.

இப்படிக் காணாமல்போன உறவினர்களுக்கு என்ன நடந்தது என்ற அச்சத்தில் உறவினர்கள் இருக்கும் நிலையில், இந்த மனிதப் புதைகுழி விவகாரம் அவர்களின் வயிற்றில் புளியைக் கரைக்க ஆரம்பித்திருக்கிறது. புதைக்கப்பட்டவர்கள் யார் என்ற கேள்வியே அவர்களின் மனங்களில் பேரலையாக வீசுகிறது.



"போர் ஒரு புறத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் மறுபுறம் இளைஞர்கள், யுவதிகள், குடும்பத் தலைவர்கள், குடும்பப் பெண்கள், குருமார்கள், ஊடகவியலாளர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் என்று பல நூற்றுக்கணக்கானோர் இராணுவத்தினராலும் புலனாய்வாளர்கள் என்று கூறப்படுவோராலும் அரசுடன் சேர்ந்தியங்கிய ஆயுதக் குழுக்களாலும் - ஒட்டுக்குழுக்களாலும் - கடத்தப்பட்டுக் காணாமற்போயுள்ளனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்று இதுவரையில் தெரியவில்லை. அவ்வாறு காணாமற்போன தமிழ் உறவுகளே மன்னார் மனிதப் புதைகுழியிலிருந்து மனித எச்சங்களாக மீட்கப்பட்டுக் கொண்டிருக்கலாம். என்று சந்தேகிக்கின்றோம். எனவே இது தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்படுவது அவசியம்" என்கிறார் மன்னார் ஆயர் ராஜப்பு யோசப்.








Dialog
அறிமுகப்படுத்தும்
Automatic Loan
356
கிரடிட் முடிவடைந்தவுடன் உடனடி Loan
Lifetime முழுவதும் பெறலாம்
ரூ. 20/- முதல் ரூ. 100/- வரை Loan
356க்கு அழைத்து Automatic Loanஐ தெரிவு செய்யுங்கள்
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது
PEOPLE'S AWARDS 2013
உங்களுக்கு கொண்டு வருவது
இலங்கையின் பிரபலமான டெலிகொம் சேவை வழங்குநர்
ஸ்லிம் நீல்சன் மக்கள் விருது 2013
எதிர்காலம் இன்றே.
Dialog

சூரியகாந்தி
உதயம் 29 12 2013 ஞாயிற்றுக்கிழமை

# உண்மையைத் தெளிவுபடுத்த யாருமே இல்லையா?



வீகேளம்

மனித வாழ்வில் நீரும், நெருப்பும் இன்றியமையாதவை. இவை நல்ல பல காரியங்களுக்குப் பயன்படும் அதே தருணத்தில் அந்த மனித குலத்துக்கே பேராபத்துக்களையும் விளைவித்து விடுகின்றன. இந்த ஆபத்துக்களை நாம் தேடிச் செல்கிறோமா அவை நம்மைத் தேடி வருகின்றனவோ இரண்டுக்குமே பொறுப்பாளி மனிதனே. தண்ணீராலும் நெருப்பாலும் ஆகிப்போனவற்றைவிட அழிந்துபோனவையே அதிகம். இந்தப் பட்டறிதலைப் புரிந்து கொள்ளாது நாம் இன்னமும் போராடிக் கொண்டிருக்கிறோம்.

வடக்குக்கான பெரு நீர்த்தேக்கம் என்று வாணிக்கப்படும் இரணைமடுக்குளம் இன்று எதிர்கொள்ளும் பிரச்சினை அது தேக்கும் தண்ணீரின் பங்கீடு. கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கிடையேயான தண்ணீர்ப் பங்கீடு பற்றிய இந்தச் சிக்கல் எதிர்கால அபிவிருத்திக்குத் தடையாக அமைந்து விடக்கூடாது என்பதே அனைவரதும் விருப்பமாகும்.

இரணைமடுக் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நீண்டகாலத்துக்கு முன்னரே உதவ முன்வந்தது. ஆனால் நாட்டுச் சூழ்நிலை காரணமாக அந்தத் திட்டத்தை ஆராயவோ நடைமுறைப்படுத்தவோ முடியாதுபோய்விட்டது.

2010இல் இந்தத் திட்டம் மீள உருப்பெற்று இன்று அதற்கான கிளைத்திட்டங்கள் உருவாக்கப்பெற்று நடைபெற்றுவரும் நிலையில் மக்கள் விருப்புச் சார்ந்து இந்தப் பெரும் திட்டம் தடைப்பட்டு போகும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

நீண்ட காலமாகப் போர் காரணமாக நிலைபேண் அபிவிருத்தி எவையும் வடக்கு கிழக்கில் இடம்பெறவில்லை. இதனால் அபிவிருத்தியின்போது ஏற்படும் நடைமுறை, நடைமுறை சாராத பிரச்சினைகளைத் தீர்க்க நாம் பழக்கப்படுத்தப்படவில்லை. உதாரணத்துக்கு வீதி அகலிப்புத் திட்டத்தின் ஆரம்பத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளை நோக்கலாம்.

அபிவிருத்திக்கு ஒத்துழைக்கவேண்டியது மக்களது கடமை. அதே சந்தர்ப்பத்தில் மக்களது உணர்வுகளுக்கும் தேவைகளுக்கும் மதிப்பளிக்கவேண்டியது அபிவிருத்தியாளர்களது கடமை. இந்த இருதரப்பு ஒத்துழைப்பும் முரண்படும்போது அபிவிருத்தித் திட்டம் முடங்கிப்போகிறது. அதன் ஊடாக மக்களே பாதிக்கப்படுகின்றனர்.

### இலாப நோக்கம் வேண்டாம்

இரணைமடுத் திட்டத்தின் கிளைத் திட்டங்களை சில உள்ளூர் முகவர்கள் தம்வசம் வைத்திருக்கின்றனர். ஆரம்ப கட்டவேலைகள் பலவற்றை இவர்கள் வடிவமைத்துவிட்டனர். இடையில் முதன்மைத் திட்டம் முடங்கிப் போனால் இவர்களுக்குச் சேர வேண்டிய பொக்கற் மணி புசிப்பற்றுப் போய்விடும். இதற்காகவே திட்டம் குறித்த எதிர்க் கருத்துவாதிகளை இவர்கள் விமர்சிக்கின்றனர். பொறுப்பற்ற கருத்துக்களை வெளியிடுகின்றனர். மக்களைக் குறைகூறுகின்றனர் என்றெல்லாம் கூறப்படுகிறது.

### இரவல் வாங்குவதில் தப்பில்லை

இந்தநிலை மாறவேண்டும். மக்கள் ஏன் மறுக்கின்றனர்? அவர்களது நிலைப்பாடு என்ன? அதற்கான விடைகள் எவை? மக்களை எப்படி அபிவிருத்தியின்பால் அணிதிரட்டுவது? எதிர்காலத் தேவைகள் குறித்து எப்படி மக்களை உணரவைப்பது? போன்றவற்றைத் தெளிவுபடுத்தவேண்டியதே இன்றைய தேவை. இதை அறிவுபூர்வமாக, ஆதாரபூர்வமாக அபிவிருத்தியாளர்கள் மக்கள் முன்கொண்டு செல்லவேண்டும். ஆவணங்களையும் அறிக்கைகளையும் ஆதாரப்படுத்தி மக்களை ஏய்க்கக் கூடாது.

ஆளணி, அறிவு நுணுக்கம் போதவில்லை, அதனாற்றான் எல்லோரும் மேலெழுந்த வாரியாகத் தங்களுக்குப் பட்டதைத் தெரிவிக்கின்றனர். இது அபிவிருத்தித் திட்டத்தை மேலும் மேலும் பாதிக்கின்றது என்ற கருத்தும் நிலவுகிறது. துறையியல் நிபுணத்துவம் எம்மிடத்தில் போதாது என்ற குற்றச்சாட்டும் இருக்கின்றது. குறிப்பாகத் துறைசார் வல்லுநர்கள் சிலர் நாட்டுக்கு வெளியே வசிக்கின்ற னர். இங்கிருப்பவர்கள் தங்கள் இயலுமைக்கு ஏற்ப வேலை செய்தாலும் ஒரு சில இடங்களில் தவறுகள் நிகழ்ந்து விடுகின்றன. எனவே இதுபோன்ற சர்ச்சைக்குரிய திட்டங்களை தயாரிக்க முன்னரும் தயாரிக்கும்போதும் நடைமுறைப்படுத்தும்போதும் இதுபோன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தியவர்களின் அனுபவங்களைக் கவனத்தில் எடுப்பதுடன் மட்டும் நின்றுவிடாமல் இந்தத் திட்டத்தில் அவர்களின் ஆலோசனையையும் பெற்றுக்கொள்வது அவசியம்.

சீனா, ஜப்பான், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளின் நீர்முகாமைக் கட்டமைப்புக்களை நாம் முதலில் புரிந்துகொள்வது மட்டுமன்றி தேவைக்கேற்ப அத்தகைய நாடுகளது முகாமைத்துவ உதவிகளை நாடுவதும் தவறாகாது.

### விவசாயத்தை நிறுத்தலாமா?

வெளிநாட்டு நீர்முகாமைக் கட்டமைப்புக்களில் இப்போது பெரும் மாற்றங்கள் நிகழ்ந்துவருகின்றன. குறிப்பாக விவசாய நடவடிக்கைகளின்போது நெற்பயிருக்குப் பதிலாக வேறு அதிக வருமானம் தரக்கூடிய பயிர்கள் பரிந்துரைக்கப்படுகின்றன. நெற்பயிருக்கு பயன்படுத்தப்படும் நான்கில் ஒரு பங்கு நீர்கூட இவற்றுக்குத் தேவையில்லை என்பதுடன் காலம், செலவு, மனித உழைப்பு என்பவற்றை மீதப்படுத்தி வருமானத்தை ஈட்ட முடியும் என்பதும் அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தின் சிறுபகுதியே அரிசிக் கொள்வனவுக்கு போதுமானது என்பதுமே இந்த நாடுகளது கருத்தாக இருக்கின்றது.

இது இலங்கையை, குறிப்பாக வடக்கில் இதுபற்றிய கருத்துருவாக்கம் முற்றிலும் கிடையாது. ஆனால் குறித்து கொழும்பில் இருப்பவர்கள் இப்போதே சிந்திக்கிறார்கள்.

தற்போதைய நிலையில் கிளிநொச்சி விவசாயத்தை நம்பி இருக்கும் ஒரு மாவட்டம். அங்கு இரு போகங்களும் நெற்செய்கை தவிர்க்க முடியாதது. பெரும்போகச் செய்கை மழையை எதிர்பார்த்ததாயினும் சிறுபோக நெற்செய்கை முற்றிலும் குளங்களிலேயே தங்கியிருக்கிறது.

அதிலும் கடந்த மூன்று வருடங்களாக காலநிலையில் ஏற்பட்டிருக்கும் மாற்றம் போகச் செய்கையைப் பாதித்திருக்கிறது. விவசாயிகள் தொடர்ச்சியாக தொழில் நட்டத்தை சந்தித்துவருகின்றனர். இவர்களுக்கான காப்பீடுகளோ இழப்பீடுகளோ இல்லை.

இப்படி இருக்கையில் இவர்களது வாழ்வாதாரத்துக்கான நீரை மற்றொரு மாவட்டத்துடன் பங்கிட்டுக்கொள்வதில் அவர்கள் தயக்கம் காட்டுவது நியாயமானதுதான். எனவே அந்த மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய மாற்றுத் திட்டம் முன்வைக்கப்படவேண்டும். அது பற்றி மக்களுக்குத் தெளவுபடுத்துவது மிக முக்கியம். அதை விடுத்து 2 அடிக்கு அணையை உயர்த்துகிறோம் அதில் சேமிக்கப்படும் தண்ணீரை மட்டுமே அள்ளி எடுப்போம்; எஞ்சியவை உங்களுக்குத்தான் என்றால் மக்கள் அதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதுதான் இப்போது நடந்துகொண்டிருக்கிறது.

உதாரணத்துக்கு 36 அடி கொள்ளளவுத் திட்டம் பூர்த்தியான பின்னர் மழைவீழ்ச்சி இல்லாத ஒரு வருடத்தில் குளத்தில் கொள்ளளவுக்குக் குறைந்தளவு தண்ணீரைத்தான் தேக்கமுடிந்தது என்றால், அந்த வறட்சியான காலத்தில் யாழ்ப்பாணத்து மக்கள் குடிதண்ணீர் இல்லாமலே வாழ்ந்துவிடுங்கள் என்று சொல்லிவிடமுடியுமா என்ற அச்சம் கிளிநொச்சி விவசாயிகளுக்கு ஏற்படுவது இயல்பானதுதான். வன்னியில் பயிர்கள் தண்ணீரின்றி வாடிக் கொண்டிருக்க இரணைமடுத் தண்ணீரை யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வரமுடியுமா என்ற கேள்வி எழும் அந்தச் சந்தர்ப்பத்தில் மனிதனுக்குக் குடிக்கவே தண்ணீர் இல்லையாம் பயிருக்கா தண்ணீர் வேண்டும் என்று பதில் கேள்வி எழாதா என்று அவர்கள் கேட்பதையும் நிராகரித்துவிட முடியாதுதான்.

இதுபோன்ற ஒரு சந்தர்ப்பத்தில் என்ன மாற்று ஏற்பாடு இருக்கிறது என்பதையும் திட்டவியலாளர்கள் தெளிவுபடுத்த வேண்டும். அவர்கள் இப்போது சொல்லும் மாற்றுத் திட்டங்கள் நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலை தோற்றுவிக்கும் அச்சம் காரணமாக நிராகரிக்கப்படுகின்றது. அத்தகைய நிலையில் புதிய மாற்றுத் திட்டங்களை அறிமுகப்படுத்தி மக்களின் நம்பிக்கையை வெல்வதே அதிகாரிகளின் முதல் இலக்காக இருக்கவேண்டும். அதைவிடுத்து நிதி திரும்பிவிடும் என்று அவர்களை மிரட்டுவது வெற்றியைத் தராது.

### மாற்றுத் திட்டங்கள் சாத்தியமா?

"எங்கட குளத்தை எங்களிட்ட விடுங்கோ நாங்கள் காலம் காலமா விவசாயம் பண்ணினதுபோல இனியும் பண்ணுவம். யாழ்ப்பாணத்துக்கு நிலத்தடித் தண்ணீர் இருக்கிறதுதானே" என்று இந்தத் திட்டத்தைக் கிளிநொச்சி மக்கள் அடியோடு நிராகரித்தால் அதுவும் தவறானதே. யாழ்ப்பாணத்து மக்கள் உங்கள் சகோதரர்கள் இல்லையா? அவர்கள் குடிக்கக்கூட தண்ணீர் தரமாட்டீர்களா? இது என்ன தெலுங்கனுக்கும் தமிழனுக்கும் மலையாளத்தானுக்கும் தமிழனுக்கும் இடையில் தமிழகத்தில் நடக்கும் தண்ணீர் சண்டையைப் போன்றதா? கொடும் வரட்சி ஒன்று வந்து வன்னியில் தண்ணீருக்குப் பெரும் பஞ்சம் என்று ஏற்பட்டுவிட்டால் யாழ்ப்பாணத்து நிலத்தடி நீரில் இருந்து ஒரு சொட்டுக்கூட வன்னிக்குத் தரக்கூடாது என்று சொல்வீர்களா? என்ற தார்மீகக் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாது.

விவசாயத்துக்கும் மேலாக தேவைகள் அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. இருக்கும் வளங்களைச் சரியாக முகாமைப்படுத்தி பங்கீடு செய்து கொள்வதுதான் எல்லோருக்கும் பயனுள்ளது; சரியானது. சரியான சந்தர்ப்பம் ஒன்றின் ஊடாகத் தண்ணீரைப் பகிரவேண்டியது காலத்தின் கட்டாயமாகி இருக்கிறது. இதைப் புரிந்துகொண்டு இரண்டு தரப்புகளுக்கும் வெற்றி கிடைக்கக்கூடிய விதத்தில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த யோசிக்க வேண்டுமே தவிர, அதனை முற்றாக நிராகரித்து அதன் மூலம் கிளிநொச்சிக்குக் கிடைக்கப் போகும் நன்மையையும் வீணடிக்கக் கூடாது.

அரசியல்வாதிகள் வாக்குகளுக்காக உணர்ச்சிபொங்கப் பேசுவார்கள். பின்னர் அவர்களே "நான் இரண்டும் கெட்டான் நிலையில் நிற்கிறேன்" என்றும் சொல்வார்கள். எனவே அவர்களைத் தள்ளி வைத்துவிட்டு மக்கள் தெளிவாகச் சிந்திக்க வேண்டும். தமக்கு எது தேவை: எப்படித் தேவை என்பதைக் கலந்துரையாடல்கள் மூலம் தெளிந்து கொண்டு அதனை அதிகாரிகளுக்கும் தெளிவுபடுத்த வேண்டும்.

அதுபோன்றே இது நீண்டகாலத் திட்டம் என்பதையும் எதிர்காலத் தேவை என்ன என்பதை யும் மக்கள் ஒரே நாளில் உணர்ந்து விடமாட்டார்கள். அவர்களை விழிப்புணர்வு அடைய வைக்க அதிகாரிகளும் திட்டமிடலாளர்களும் கடமையையும் தாண்டி சேவையாக மேலும் கடுமையாக உழைக்க வேண்டும்.

சாத்தியமாகக்கூடிய மாற்று வழிகளை எல்லாம் ஆராய்ந்து அவை எந்தளவுக்குச் சாத்தியம், சாத்தியம் இல்லை என்பதை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

### ஆனையிறவு நீர்த்தேக்கம்

மழைகாலத்தில் இரணைமடு வான் பாயும். அந்தக் காட்டாற்று வெள்ளத்தை கடலில் கலக்கவிடாது தடுத்து ஆனையிறவு வெளியில் தேக்கி ஒரு புதிய நீர்தேக்கத்தை உருவாக்கும் திட்டம் பற்றிய யோசனைகளும் முன்வைக்கப்படுகின்றன. இதன் சாதக பாதகங்கள் தீவிரமாக ஆராயப்பட வேண்டும்.

### வழுக்கையாறு, செம்மணி மாற்றிடங்களாகுமா?

அதுபோன்றே யாழ்ப்பாணமும் தனக்கான மாற்றுவழிகளைத் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். ஒரு தசாப்த காலத்துக்குள் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படலாம் என்பது அண்மைய கண்டுபிடிப்பல்ல. யாழ். பல்கலைக்கழகம் முதற்கொண்டு பலதரப்பாலும் இது எப்போதோ சுட்டிக்காட்டப்பட்டுவிட்டது. ஆனாலும் யாழ்ப்பாணத்துக்கான நீர் முகாமைத்துவம் இன்றளவும் சரியாகக் கட்டமைக்கப்படவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

எதிர்வுகூறப்பட்ட விடயத்தில்கூட அக்கறைசெலுத்தாத அளவுக்கே யாழ்ப்பாணத்து நிலைமை இன்றளவும் இருந்துவருகிறது. நிலக்கீழ் நீரை மீள் உற்பத்திசெய்யும் திட்டங்கள் உருவாக்கப்பட்டபோதிலும் அவை இன்றளவும் ஆரம்ப புள்ளியிலேயே இருக்கின்றன. இந்தத் திட்டங்கள் முற்று முழுதாக இந்தப் பிரச்சினைக்கு தீர்வாகாது விட்டாலும் ஓரளவாவது சமாளிக்கக்கூடியவை என்பது உண்மையே. பெருந் திட்டங்களுக்காக காத்திருப்பதை விடுத்து சிறு சிறு திட்டங்களை முதலில் பயனுடையதாக்குவதுதான் செயல்வீரம்.

### அரசியல் ஆறுகளின் சங்கமம்

எல்லாவற்றையும் அடியோடு நிராகரிப்பது மட்டுமே பிரச்சினைகளுக்குத் தீர்வாகாது என்பதை நாம் அரசியலில் பட்டறிந்திருக்கிறோம். அன்று முழுமையாக நிராகரித்த மாகாண சபையைத்தான் எங்கள் அரசியல் பலமாக இன்று உலகுக்குக் காட்டுகின்றோம். எனவே நிராகரிப்புக்களைவிடுத்து சாத்தியமான வழிகளை முயன்று ஆராயுங்கள்.

# அம்மா தான் அடுத்த பிரதமரா?

ஞாநி

அம்மாதான் அடுத்த முதல்வர் என்று அண்மையில் நடந்த கட்சிப் பொதுக் குழுக் கூட்டத்தில் கூவி இருக்கிறார்கள் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் (அ.இ.அ.தி.மு.க.) தொண்டர்கள். 2016ஆம் ஆண்டு இந்தியப் பொதுத் தேர்தல் நடக்க இருக்கும் நிலையில் ஜெயலலிதாவை முதல்வராக்கும் தமது கனவை அம்மாவின் தொண்டர்கள் வெளியிப்படுத்தியிருப்பது இது முதல் தடவையல்ல.

**ஜெயலலிதாதான்**

அடுத்த பிரதமர் என்ற முழக்கம் அ.தி.மு.கவினரால் சில ஆண்டுகளாகவே தொடர்ந்து முன்வைக்கப்படுகிறது. கூடவே அ.தி.மு.கவினர் முன்வைக்கும் இன்னொரு முழக்கம்: நிரந்தர முதல்வர் ஜெயலலிதா தான் என்பது. ஒருவர் எப்படி நிரந்தர முதல்வராகவும் பிரதமராகவும் ஒரே சமயத்தில் இருக்க முடியும் என்ற புதிரைப் புரிந்துகொள்ள முதலில் அ.தி.மு.கவின் அம்மாயிஸத்தைப் புரிந்து கொள்ள வேண்டியிருக்கும்.

அ.தி.மு.கவினரின் 'ங' போல் வளையும் மரியாதைக் கலாசாரத்தின் தொடர்ச்சியாக அவர்கள் முடியுமானால் ஜெயலலிதாவுக்குதான் அடுத்த நோபல், ஜெயலலிதாதான் அடுத்த ஐ.நா. சபைப் பொதுச் செயலாளர், அவர்தான் அடுத்த ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் என்றெல்லாம்கூட சொல்ல விரும்பக்கூடும். அதையெல்லாம் தமிழக அரசியல் கலாசாரத்தின் வெகுஜனப் பொழுது போக்குக் கூறுகள் என்ற அளவில் ஒதுக்கிவைத்துவிட்டு உண்மையாகவே, ஜெயலலிதா இந்தியப் பிரதமராகும் வாய்ப்பு இருக்கிறதா. அல்லது அது அ.தி.மு.கவினரின் பகல் கனவு மட்டும்தானா என்று ஆராயலாம்.

**தமிழ்ப் பிரதமர்**

தமிழர்கள் பிரதமரைவிட உயர் பதவியான இந்தியக் குடியரசுத் தலைவர் பதவிக்கு ஏற்கெனவே வந்திருக்கிறார்கள். காரணம் அது ஒருவிதத்தில் நியமனப் பதவி மாதிரி இருப்பதுதான். மத்தியில் ஆளும் கட்சி விரும்புகிறவரை அதற்குக் கொண்டு வந்துவிட முடியும். தவிர, எப்போதும் பிரதமர் பதவி வட இந்தியாவிலேயே இருந்துவருவதால், குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர் பதவிகளைத் தென்னிந்தியருக்கு ஒரு பங்கீடு போல அளித்து சமன்செய்வதை நேரு காலம் முதல் பின்பற்றி வந்திருக்கிறார்கள்.

**காமராஜர் நிராகரித்த வாய்ப்பு**

பிரதமராகும் வாய்ப்பு தமிழகத் தலைவர்களுக்கு இதற்கு முன்பு இருந்ததா என்றால், அது ஓரிரு முறை மட்டுமே இருந்திருக்கிறது. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் ஓரளவேனும் அறியப்பட்டிருக்கக்கூடிய தமிழ்த் தலைவராக இருந்தவர்கள் மிகக் குறைவு.

காங்கிரஸுக்குள் மாநிலத் தலைவர்கள் பலம் பொருந்தியவர்களாக இருந்த காலத்தில் இருந்த தமிழகக் காமராஜர் அப்படி அறியப்பட்டிருந்தவர்களில் ஒருவர். அவர் பிரதமராகும் வாய்ப்பு, நேரு - சாஸ்திரி காலத் துக்குப் பின்னர் கனிந்திருந்தது. ஆனால் அவர் அதை விரும்பவில்லை.

இந்தியாவின் பிரதமராக வருபவருக்கு, இந்தி, ஆங்கிலம் இரண்டு மொழிகளில் ஒன்றேனும் நிச்சயம் தெரிந்திருக்க வேண்டும் என்றும் தனக்கு அப்படித் தெரியாத நிலையில் தான் பிரதமராகும் வாய்ப்பு இருந்தும்கூட ஆக விரும்பவில்லை என்றும் காமராஜரே தன்னிடம் சொல்லியிருந்தார் என்று பிரபலப் பத்திரிகையாளர் குல்தீப் நய்யார் சில ஆண்டுகளுக்கு முன்னர் எழுதி யிருக்கிறார்.



பிரதமராகும் வாய்ப்பு தமிழருக்கு வரும் நிலை இந்திய அரசியலில் அடுத்துவந்த சுமார் 30 ஆண்டுகளுக்கு இருக்கவில்லை. ஒற்றைக் கட்சியே வலிமையாக டெல்லியில் ஆட்சி நடத்தும் காலம் முழுக்கவும் அது பெரும்பாலும் காங்கிரஸாக்வே இருந்தது. அதில் இந்திரா காலத்திலிருந்து காமராஜர் போன்ற மாநிலத் தலைவர்கள் உருவாகவே முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டது. இதனால் காங்கிரஸே பல மாநிலங்களிலும் பலவீனமாகி, இனி டெல்லியில் மாநிலக் கட்சிகளின் கூட்டணி உதவியுடன் தான் ஆட்சி அமைக்க முடியும் என்ற நிலைமை 1996இல் ஏற்பட்டது.

**கூடிவந்த இன்னொரு வாய்ப்பு**

அப்போதுதான் மற்றொரு முறை ஒரு தமிழர் பிரதமராகும் வாய்ப்பு உருவானது என்று சொல்லலாம். அன்றைய நிலை என்ன என்று சற்று விவரமாகக் கவனிப்பது இன்றைய அரசியல் ஆரூடங்களுக்குப் பயன்படும்.

அப்போது பா.ஜ.கவின் 15 நாள் அரசு கவிழ்ந்த பின் காங்கிரஸ் அல்லாத ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தது. அதன் 179 நாடாளுமன்ற உறுப்பினர்களில் தமிழகத்திலிருந்து தி.மு.கவும் தமிழ் மாநில காங்கிரஸுமாக அனுப்பியவர்கள் மட்டும் 39 பேர். மேற்கு வங்க இடதுசாரிக் கூட்டணியிலிருந்து 33 பேர். பிகாரிலிருந்து 25 பேர். உத்தரப் பிரதேசத்திலிருந்து 20 பேர். கர்நாடகத்திலிருந்து 16 பேர். ஆந்திரத்திலிருந்து 16 பேர். மொத்தத்தில் 179 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 83 பேர் தென் மண்டலம். அதில் மிகப் பெரிய பங்களிப்பு தமிழ்நாட்டுடையது தான்.

இடதுசாரியான ஜோதிபாசுவும் தெலுங்கு தேசமும் பிரதமர் பதவியை விரும்பாத நிலையில் தமிழ்நாட்டுக்கும் கர்நாடகத்துக்குமே வாய்ப்பு மிஞ்சியது. தமிழ்நாட்டிலிருந்து யார் என்றபோதுதான் அந்தத் தவறு நிகழ்ந்தது.

மூப்பனாரைக் கேட்டார்கள். அவர் மறுத்துவிட்டார். அதன் விளைவாக, கர்நாடக தேவகௌடா பிரதமரானார். நியாயப்படி அப்போது தமிழகத்திலிருந்து மிக அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களை அளித்த தி.மு.கவுக்கு, கருணாநிதிக்குத்தான் பிரதமர் பதவி வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

மூப்பனாரைவிட அரசியல் அனுபவமும் நிர்வாக அனுபவமும் அரசுப் பொறுப்பில் இருந்த அனுபவமும் பல மடங்கு பெற்றவர் கருணாநிதி. அவர் பிரதமராகிவிட்டால் தி.மு.கவில் அடுத்த முதல்வர் யார் என்ற சிக்கலும் கிடையாது. பேராசிரியர் அன்பழகன்.

> 2014க்குள் ஜெயலலிதாவின் இந்தப் போக்கு மாற்றம் அடைந்து ஜனநாயகபூர்வமான, மக்களிடம் செவிகளுடைய ஒரு முதல்வராகச் செயல்பட்டு அவர் தன்னை நிரூபித்துக்கொண்டால் மட்டுமே அவரைப் பிரதமர் பதவிக்கும் தகுதியானவர் என்று ஏற்க முடியும்.






ஸ்டாலின் என்று வரிசையாகப் பலர் இருந்தனர். ஆனால், கருணாநிதியைப் பிரதமராக வரவிடக் கூடாது என்பதற்காகவே மூப்பனார் பெயர் சொல்லப்பட்டு, தமிழக வாய்ப்பு தட்டிப் பறிக்கப்பட்டது.

**2014இல் இன்னொரு வாய்ப்பு**

அப்படி ஒரு வாய்ப்பு 2014இல் வரும் என்பதுதான் ஜெயலலிதாவைப் பிரதமராக்க விரும்புவோரின் கணக்கு. காங்கிரஸ், பா.ஜ.க. இரு கட்சிகளுக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்கப்போவதில்லை என்பதே பெருவாரியான கருத்துக் கணிப்புகளின் முடிவாகும். காங்கிரஸுக்கு சுமார் 130 இடங்களும் பா.ஜ.க-வுக்கு சுமார் 150 இடங்களும் கிட்டலாம் எனப்படுகிறது. எஞ்சியிருக்கக் கூடிய 260 இடங்களை பல்வேறு மாநிலக் கட்சிகள், இடதுசாரிகள் பங்கு போடப்போகின்றன. இடதுசாரிகள் இந்த முறை மேற்கு வங்கத்திலேயே முன்பைவிட அதிகமாக வென்று சுமார் 25 இடங்கள் வரை அடையலாம் என்பது கணிப்பு.

பிரதமர் வேட்பாளராக மோடியை முன்னிறுத்தியதால் (இவர் மீது பாபர் மசூதி இடிப்புக் குற்றச்சாட்டு பலமாக உண்டு), பா.ஜ.கவுடன் கூட்டுச்சேர விரும்பாத பல தேசிய, மாநிலக் கட்சிகள் இடதுசாரிகளுடன் சேர்ந்து மூன்றாவது அணிக்கு முயற்சிப்பார்கள். அப்போது மூன்றாவது அணியில் மிக அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்திருக்கக்கூடிய கட்சியின் தலைவருக்கே பிரதமர் வாய்ப்பு கிடைப்பது சாத்தியமாகும். அப்படி என்றாகும்போது, முலாயம், மாயாவதி, நிதீஷ், ஆகியோரைவிட அதிகமாக ஜெயலலிதாவிடம் 35 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரை இருப்பார்கள்: அப்போது உடன் இருக்கக்கூடிய இடதுசாரிகளும் ஜெயலலிதாவை ஆதரிப்பார்கள் என்பது அவர்கள் வியூகம்.

ஒருவேளை காங்கிரஸ் ஆதரவுடன் மூன்றாவது அணி ஆட்சி அமைக்க விடாமல், தனது ஆதரவுடன் அமைப்பதையே பா.ஜ.க. விரும்புமானால் அப்போது வெளியில் இருந்து கொண்டு ஜெயலலிதாவை அது ஆதரிக்கக் கூடும்; ஜெயலலிதா பிரத மராகிவிடலாம் என்பது இன்னொரு வியூகம்.

இந்த வியூகங்களின்படி எல்லாம் நடந்தால், ஜெயலலிதாவுக்குப் பிரதமராகும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால், எல்லாம் அப்படி நடக்குமா என்று உறுதியாகச் சொல்ல முடியாது. எதுவும் நடக்கலாம்.

இதெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். பிரதமர் பதவிக்குத் தகுதியானவர் தானா ஜெயலலிதா? பிரதமராக மோடிக்கோ ராகுலுக்கோ தகுதி உண்டா என்று கேள்வி எழுப்புவது போல இதையும் அலசத்தான் வேண்டும். ஜெயலலிதாவுக்கு ஆங்கிலம், ஹிந்தி உட்பட பல மொழிகள் தெரியும் என்பதால் மட்டுமே காமராஜருக்கு இல்லாத தகுதி அவருக்கு இருப்பதாகக் கருதிவிட முடியாது. மன்மோகன் சிங்கை விட மோசமாகவா இருக்கப்போகிறார் என்ற வாதங்களும் உதவாது.

**கூட்டணியின் அடிப்படை ஜனநாயகம்**

ஜெயலலிதா ஒரு முதல்வராக எப்படிச் செயல்பட்டிருக்கிறார், ஒரு கட்சித் தலைவராக எப்படிச் செயல்பட்டிருக்கிறார் என்பதைப் பார்க்கும் போது, அவர் கட்சியில் துளியும் உள்கட்சி ஜனநாயகம் என்பதே இல்லை என்பது நாம் கவனிக்க வேண்டிய அதிமுக்கியமான அம்சம். காங்கிரஸ், பா.ஜ.க., இடதுசாரிக் கட்சிகள் எல்லாவற்றிலும் எத்தனை கோளாறுகள் இருந்தாலும், அவை எல்லாவற்றிலும் கட்சிக்குள் மாறுபட்ட கருத்துகளை முன்வைக்கவும் விவாதிக்கவும் இடம் இருந்து கொண்டே இருப்பதுதான் அவற்றை உயிரோடு வைத்திருக்கின்றது. ஜெயலலிதாவின் அ.தி.மு.க. அப்படிப்பட்ட கட்சி அல்ல. ஒரு தனியார் முதலாளி நடத்தும் நிறுவனம்போல, முதலாளியைத் தவிர வேறு யாருக்கும் எதையும் சொல்ல உரிமையற்ற இடமாகவே அது இருக்கிறது.

ஊழல் அராஜகம், குடும்ப சுயநலம், என்று எத்தனையோ கோளாறுகள் நிரம்பிய ஆட்சியை அளித்தவர் என்றாலும், கருணாநிதியை எந்தப் பிரஜை விரும்பினாலும் சந்திக்க முடியும் என்ற நிலை எப்போதும் இருந்திருக்கிறது. சந்திக்க முடியாவிட்டாலும்கூட ஒருவர் தன் குறையை அவர் தீர்க்கிறாரோ இல்லையோ, அவருக்குத் தெரியப்படுத்தவாவது முடியும் என்ற நிலை இருந்திருக்கிறது.

இப்போது முதல்வராக இருக்கும் ஜெயலலிதாவின் காதுக்கும் கண்ணுக்கும் ஒரு விஷயத்தை எடுத்துச் செல்ல என்ன வழி என்று தமிழக அரசு ஊழியர்கள் மத்தியிலேயே தெரியாத நிலைதான் இருக்கிறது. முதல்வர் கவனத்துக்குப் பிரச்சினையை எடுத்துச்செல்வது எப்படி என்று ஒவ்வொரு துறையினரும் திணறிக்கொண்டிருக்கிறார்கள். தனது குடிமக்களுடன் எந்தத் தகவல்தொடர்பும் இல்லாமல் இருக்கும் ஒருவர் எப்படி ஆட்சி நடத்த முடியும் ? எப்படி நிர்வாகம் செய்ய முடியும்? அமைச்சர்கள் முதல் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் வரை முதல்வரை அணுகி, சங்கடமான செய்திகளைப் பேசத் தயங்கும் சூழலில் தனது மக்களின் நிலைபற்றி, நிர்வாகத்தின் குறைகள்பற்றி அவருக்கு யார் தகவல் சொல்வார்கள்? உளவுத் துறை மட்டும்தானா? இப்படிப்பட்ட முதல்வர் பிரதமராக நமக்கு எதற்கு என்பதுதான் என் கேள்வி.

இப்படிப்பட்ட அணுகுமுறையில் இருக்கும் ஒருவரால் இந்தியா போன்ற பல தேசிய இனங்கள், பல மொழிகள், பல்வேறு கலாசாரங்கள், வெவ்வேறான சிக்கல்கள் உள்ள ஒரு பெரிய நாட்டை நிர்வகிக்க முடியுமா? காவல் துறை, உளவுத்துறை, அச்சப்படும் நிர்வாக இயந்திரம், அடிமை மன நிலையுடைய கட்சியினரை மட்டும் கொண்டு ஒரு நாட்டை ஒருபோதும் ஆள முடியாது. 2014க்குள் ஜெயலலிதாவின் இந்தப் போக்கு மாற்றம் அடைந்து ஜனநாயகபூர்வமான, மக்களிடம் செவிகளுடைய ஒரு முதல்வராகச் செயல்பட்டு அவர் தன்னை நிரூபித்துக்கொண்டால் மட்டுமே அவரைப் பிரதமர் பதவிக் கும் தகுதியானவர் என்று ஏற்க முடி யும்.

இப்போதைய நிலையிலேயே அவர் பிரதமரானால், இந்தியாவுக்கு நேரும் தொடர் விபத்துகளில் இன்னொன்றாகவே அது இருக்கும். ஒரு தமிழர் முதன்முறையாகப் பிரதமர் ஆகிறார் என்று மட்டும் மகிழ்ச்சி அடைய முடியாது. 1.76 லட்சம் கோடி ரூபாய் ஊழலில் தமிழர்கள் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்று மகிழ்ச்சி அடைவது போன்றது அது.

*(கட்டுரையாளர் தமிழகத்தின் மூத்த பத்திரிகையாளர், பிரபல அரசியல் - சமூக விமர்சகர்)*

**ஜெயலலிதா ஒரு முதல்வராக எப்படிச் செயற்பட்டிருக்கிறார், ஒரு கட்சித் தலைவராக எப்படிச் செயற்பட்டிருக்கிறார் என்பதைப் பார்க் கும் போது, அவர் கட்சியில் துளியும் உள் கட்சி ஜனநாயகம் என்பதே இல்லை என்பது நாம் கவனிக்க வேண்டிய அதிமுக்கியமான அம்சம்.**



# எதிர்கால முதியவருக்கு யார் பொறுப்பு?

இலங்கை முதுமை அடைகின்றது
2050 இல் முதியோர் பிரச்சினை
பாரியதொன்றாகும்
எதிர்பார்ப்பு ஆயுள் கூட
பிறப்பு வீத வீழ்ச்சியால்
சனத்தொகை வளர்ச்சி வீதம்
பூச்சியத்துக்குக் கீழாக
மருத்துவ சுகாதார
மேம்பாட்டுடன் எழுத்தறிவு
வீதமும் கூடியதால்
தென்னாசியாவிலேயே விரைவாக
அபிவிருத்தி அடையும் நாடென்று
மார்தட்டிக் கொள்கின்றோம்
மறுபுறம்
நாமிருவர் நமக்கிருவர் போய்
நாமிருவர் நமக்கொருவராய்
இன்று
நாமிருவர் நமக்கேன் ஒருவர்
என்கின்ற நிலையிலே
முதியவரைத் தாங்கிப் பிடிக்க
எத்தனை பிள்ளைகள் உண்டு?
மாறிவரும் பொருளாதாரத்தின்
விரைவான ஓட்டத்திலே
விரும்பியோ விரும்பாமலோ
ஓட வேண்டிய கட்டாயத்தில்
இருக்கின்ற பிள்ளைகளும்
வசதியான வாழ்வு
பொருளாதார மேம்பாடு
உயர்ந்த பதவிகள்
அதனால்வரும் பந்தாக்கள்
உயர் கல்வி வாய்ப்பு
சமூக மதிப்பென்று
இவ்வாறே
இளைய தலைமுறை எல்லாம்
பேசிக் கொண்டிருக்க
அவற்றைவிட்டு ஒதுங்கி நின்றால்
ஒரு நூறாண்டு பின்தள்ளிப் போவதோடு
சமூக அந்தஸ்து ஏதுமின்றிப் போவதால்
பெற்றோரை முதியவரை(ப்)
பராமரிப்போர் என் செய்வார்?
மேலும்
2050 வேண்டாம் 2025 லேயே
போரின் வடுவால்
அநாதைகள் ஆக்கப்பட்டோர்
போரின் இடிப்பால் திருமண வாய்ப்பிழந்தோர்
சாத்திரங்கள் பார்த்து
வஞ்சிக்கப்பட்டோர்
பருவத்தால் அன்றி
மணம் புரிந்து பிள்ளை
ஒன்றினைப் பெறவெண்ணி
கொழும்புக்கும் இந்தியாவுக்கும்
மாறியே பயணம் செய்து
பயனொன்றும் இல்லாமல்
கைமுதல் தன்னையும்
தொலைத்து வந்த முதுமிளம் தம்பதியர்
என்றினைய கூட்டமெல்லாம்
முதுமை அடையும் போது
இவர்களைப் பராமரிக்க
எந்தப் பிள்ளையை ஐயா
கைகாட்டப் போறீர்?
ஆதலால்
வெறுமனே பிள்ளைகளை
மட்டுமே குறை சொல்லி
ஆவதொன்றில்லை ஆதலால்
ஆக்கபூர்வமாக வேதும் சிந்திக்க வேண்டுமையா
முதியோர் இல்லமொன்று
மதிப்புக்கேடு என்று சொன்னால்
மாற்று வழியொன்றை(ச்)
சொல்லுங்கள் அது நன்று.




*சின்மயி, கோப்பாய்.*

வளமாக வாழ

# வாஸ்து சாத்திரம்

தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரபல வாஸ்து ஆலோசகர்
எண்கணித நிபுணர் கலாநிதி
ஜே.என்.எஸ்.செல்வன்

2, 11, 20, 29 திகதிகளில் பிறந்தவர்களும், தமது பெயர் எண்ணை 2ஆம் எண்ணில் அமைத்துக்கொண்டவர்களும், நியாயப்படி நடப்ப வர்களாக இருப்பார்கள் என்பதுடன் மனித நேயமும் கொண்டவர்கள். இவர்களின் எண்ணங்களுக்கு ஏற்ப எப்பொழுதும் அமைதியும் ஆனந்தமும் தவழ தங்களுக்கு என்று ஒரு வீடு கட்டும்போது கீழ் காணும் முறையில் அதனை அமைத்துக்கொள்வது மிக அவசியம்.




**வடக்குத் திசை முகப்பு வீடு**

பொதுவாக 2ஆம் எண்காரர்கள் தங்களது வீட்டின் முகப்பை வடக்கு அல்லது கிழக்காக அமைத்துக்கொள்வதே நல்லது. குபேரனுடைய (வடக்கு) திசை இதுதான். இவ்விதம் அமையும் பொழுது வீட்டில் தெய்வீகம் குடிகொள்ளும். ஐஸ்வரயங்கள் என்று சொல்லப்படும் மனித தேவைகள் அளவிற்கு அதிகமாக கிடைத்து வாழ்வின் தரத்தை உயரத்தும்.

இரண்டாம் எண்காரர்கள் கலை ஞானம் அதிகம் உள்ளவர்கள். எனவே திரைப்படம், தொலைக்காட்சி, தனி நாடகம், இசைக்குழு போன்றவைகள் மூலம் வடக்கு வாசல் வீடுகள் அவர்களுக்கு லாபத்தை அள்ளித் தரும். பணம் குவிகிறதே என்று அப்படி இப்படி நடந்துகொண்டு உடம்பைக் கெடுத்துக் கொள்பவர்களும் உண்டு. எனவே மிக அவதானமாக உடல்நலத்திற்கு ஒத்துழைப்பவற்றை மட்டும் தயார் செய்து கொள்வது சிறப்பாகும். பணம் குவிக்கும் கலைகளும் ஆடல் பாடல்களில் அதிக நாட்டமும் இந்த வீட்டிலிருப்பவருக்கு வரும். விருந்தினர் வருகை, அறுசுவை உணவு, பிரபலங்கள் தொடர்பு, ஞானம், திறமை என்பன அதிகரிக்கும். எந்தக் காரியங்களைச் செய்தாலும் அடுத்தவர் ஏற்றுக்கொள்பவைகளை மட்டுமே செய்வர். இதனால் மக்கள் செல்வாக்கு உயரும். சமூகத்தில் நடக்கும் அநீதிகள் வன்முறைகளுடன் தொடர்பு வைத்துக்கொள்ள மாட்டார்கள். மங்கல காரியங்கள் தடையில்லாமல் நடக்கும். மகளிர் சொல்லையே அதிகம் கேட்கும் நிலையில் இருப்பர் இரண்டாம் எண் ஆண்கள். எந்தக் காலச் சூழலிலும் வீட்டினுள் காற்றோட்டம் இயல்பாக இருக்கும். பூதாகரமான விசயங்ளை கண்டு அஞ்சுபவர்களாக இரண்டாம் எண்காரர்கள் இருப்பார்கள் என்பதால் வடக்குத் திசையில் வீடு அமைவதே அவர்களுக்கு கிடைத்தற்கரிய சிறப்பு ஆகும்.

இதுபோல் கிழக்குத் திசையிலும் இந்த 2ஆம் எண்காரர்கள் வீட்டை அமைத்து வெற்றிகளைக் குவித்துக்கொண்டேயிருக்கலாம். நன்மைகள் நாடி ஓடிவரும். நல்ல நண்பர்கள் சேர்க்கையும், உடல் நலமும், உள நலமும் மேலோங்கி நிற்கும். இந்தத் திசையில் வீடு அமைந்தால் எப்படி இருக்கலாம் என்பதை முதலாம் எண்காரர்களுக்கு கிழக்குத் திசையில் வீடமைதால் எப்படி நன்மை என்று கடந்த வாரம் நான் எழுதியதைப் பார்த்துத் தெரிந்துகொள்ளவும்.

*மீண்டும் அடுத்த வாரம்..*

---

# தோல்விகளைத் தோற்கடிப்போம்


சி.நற்குணலிங்கம்
*(கட்டுரையாளர் முன்னாள் கல்வி அதிகாரி)*

நாம் அடைய வேண்டியவற்றை அடைய முடியாதுபோவதைதோல்வி எனக் கருதுகின்றோம். அனுபவம் இல்லாமல் திடீரென ஒரு செயலில் இறங்கினால் தோல்விதான் கிடைக்கும். சிந்தனையில் பலமில்லாத போது அது மூளையைக் குழப்பி தோல்வியைத் தழுவச் செய்துவிடும். எதையும் கையாளும் விதம்தான் வெற்றிக்கும் தோல்விக்கும் காரணமாகிறது.

எதிர்மறையாகச் சிந்திப்பவர்கள் தான் கூடுதலாக தோல்வியைச் சந்திக்கிறார்கள். தோல்வி என்பது கற்றுக் கொள்வது. தவறு செய்துவிடுவோமா என்ற அச்சத்துடன் செய்யும் வேலைதான் தோல்வியில் முடியும். தோல்வி என்ற வார்த்தை வாழ்வில் தொல்லை தரக்கூடியதெனினும் தோல்வி என்று கருதப்படுபவை தற்காலிகச் சரிவுகளே என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

தோல்வி வாழ்வின் உண்மைகளைப்பற்றி உபயோகமான அறிவை பெற்றுத் தருகின்றது. தோல்வி புதிய வாய்ப்புக்களின் கதவுகளைத் திறக்கின்றது. பிறரது வெற்றி தோல்வியிலிருந்து உங்களுக்கு வேண்டியவற்றைக் கற்றுக்கொள்ளுங்கள். தோல்வி ஏற்பட்டிருந்தால் அதற்கான காரணத்தை நன்கு புரிந்து கொள்ளுங்கள். எல்லோரும் மகிழ்வாக வாழ விரும்புகின்றோம். துன்பமற்ற, தோல்விகளற்ற வாழ்க்கை வாழ விரும்புகின்றோம். ஆனால் அதனைக் கையாளும் திறனற்று குழம்புவதால் தோல்வியைத் தழுவுகின்றோம்.

தோல்விக்குள்ளும் வெற்றி என்பது சிறுவிதை போல் இருக்கும் என்பதை மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும். வாழ்க்கையில் எதுவும் நிரந்தரமல்ல. அதைப்புரிந்துகொண்டு வெற்றிக்கான தேடலை ஆரம்பிக்க வேண்டும். ஒருவரது வெற்றியைக் கண்டு பொறாமை கொள்ளாது அதனை எமது உணர்ச்சிக்கான ஒரு பாடமாக எடுத்துக்கொள்ள வேண்டும். தோல்வி புதிய வாழ்வை புதிய அனுபவங்களை பெற்றுத் தரக் கூடியது. கட்டாயத்தினால் எதனையும் சாதிக்க முடியாது. விருப்புடன் முயல்வதுதான் வெற்றிக்கு வழி சமைக்கும். தோல்வியையே எண்ணிக்கொண்டிருப்பவர்களது வாழ்க்கை வெறுமையாகிவிடும். வாழ்க்கையை வாழ வேண்டுமெனில் பல வேதனைகளையும் தோல்விகளையும் சந்தித்தே ஆக வேண்டும் என்பதை மனதில் கொண்டு வாழ வேண்டும்.



தோல்வியைப் பற்றிய எண்ணம் மனதில் ஏற்பட இடமளிக்கக் கூடாது. தோல்வியைப் பற்றிய எண்ணம் ஏற்பட்டால் மனதில் பயம் ஏற்பட்டு எதிர்மறைச் சிந்தனைகள் தோன்றி வாழ்வின் முன்னேற்றப் பாதையைத் தடைசெய்யும். எனவே ஆக்க பூர்வமான சிந்தனைகளுக்கு எம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். மனிதர்களுடைய பெரும்பாலான தோல்விகளுக்கு அவர்களிடம் குடிகொண்டுள்ள பயமே காரணம் என மாவீரன் நெப்போலியன் குறிப்பிட்டுள்ளார். இலக்கைத் தேர்வு செய்வதிலும், அடைவதிலும் மிகுந்க கவனம் வேண்டும். இல்லையேல் வாழ்க்கையில் தோற்றவர்களின் பட்டியலில் உங்கள் பெயரும் இடம்பெறும். எல்லோர் வாழ்க்கையிலும் தோல்விகளும் இயலாமைகளும் வருவது இயல்பானதே. தோல்விகள் ஏற்படும் வேளையில் அவற்றை மறக்க மதுவை நாடாது மௌனத்தை கடைப்பிடிக்காது உங்களுக்கு பொருத்தமான நம்பிக்கைக்கு பாத்திரமானவருடன் மனம் விட்டுப் பேசுவதன் மூலம் காத்திரமான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும். வாழ்க்கையில் வெற்றிபெற தோல்வி ஒரு தடைக்கல் அல்ல. முயற்சியே துணை. அந்த முயற்சியே வெற்றியின் இரகசியம்.

வெற்றியை எப்படி ஏற்றுக் கொள்கின்றோமோ அப்படியே தோல்வியையும் ஏற்றுக் கொள்ளும் மன நிலையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இல்லையேல் மிக நெருக்கடியான சூழ்நிலையில் தோல்வியைத் தாங்க முடியாது. தோல்விக்கு தற்கொலை ஒரு தீர்வு அல்ல. தோல்விகளை சாதுரியமாக அணுகி வெற்றி கொள்ள வேண்டும். வேதனைகளை போதனைகளாக எடுத்துக்கொள்ள வேண்டும். தோல்வியிலிருந்து வெளிவர மன அமைதி தேவை. மன அமைதிக்கு ஆலய வழிபாடு மிக முக்கியமானதாகும்.

எம்மால் முடியாது என்ற எண்ணமும் தோல்விக்குக் காரணமாகின்றது. எம்மால் முடியும் என எண்ணி தொடர் முயற்சி மேற்கொள்ளப்படுமானால் வெற்றி நிச்சயம். இதற்கு சேர்.ஐசாக் நியூட்டன், தோமஸ் அல்வா எடிசன், அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் என்போர் எடுத்துக்காட்டுகளாவர். இவர்களை விட மருத்துவர் அலெக்ஷாண்டர் கிரஹம்பெல் என்பவரும் அடங்குவார். இவர் தனது மனைவியின் காதைக் கேட்கவைக்க ஒரு கருவியைத் தேடித் தோல்வியடைந்தா லும் இறுதியில் தொலைபேசியை கண்டுபிடித்தார்.

தோல்வியைச் சந்திக்காது வாழ ஒவ்வொரு செயலையும் அர்ப்பணிப்புடன் செய்ய வேண்டும். தெளிவான குறிக்கோள் வேண்டும். உங்களை நீங்கள் தாழ்வாகக் கருதாது உயர்வாக மதிக்க வேண்டும். ஏற்கனவே தோல்வியைச் சந்தித்திருப்பின் மேலும் தோல்வியை சந்திக்காதிருக்க முதற்தோல்வியிலிருந்துமீண்டவழியைஉணர்ந்து கொள்ள வேண்டும்.

தோல்வியை அசட்டை செய்வோமாயின் அது தொடர் தோல்விகளைத் தோற்றுவித்து எமது மன நலத்தைப் பாதித்துவிடும். ஆரோக்கிய வாழ்வுக்கு மனநலம் அவசியம். உலகில் 35 கோடி மக்கள் மனநலம் பாதிக்கப்பட்டுள்ளனர். மனநலம் பாதிக்கப்பட்டவர்களில்பெரும்பாலானவர்கள் தற்கொலைக்குத் தம்மை ஆளாக்கிக் கொள்கின்றனர். ஆண்டு தோறும் உலகம் முழுவதும் 8 லட்சம் பேர் தற்கொலை செய்கின்றனர். இவர்களில் 15 வயது முதல் 44 வயதுக்கு உட்பட்டவர்களே அதிகம் என புள்ளி விவரம் எடுத்துரைக்கின்றது. தோல்வியைக் கண்டு நாம் ஒதுங்கிப் போனால் எம்மால் எழுந்திருக்க முடியாது. வெற்றியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தோல்வியை கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

எமது பலம், பலவீனம் என்பவற்றை உணர்ந்து எமது நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். பொறுமை, நம்பிக்கை, தன்னடக்கம், மன உறுதி, மன வைராக்கியம் என்பன வளர்வது தோல்வி ஏற்பட்ட பின்புதான் என்பதை கற்றுக் கொண்டு தடைகளை அகற்றி வெற்றியை நோக்கிய புதிய பயணத்துக்கான வழியை வகுத்துக் கொள்ள வேண்டும்.

தோல்வி எமது வாழ்வில் அர்ப்பணிப்பும், கடின உழைப்பும் தேவை என்பதை நன்கு தெளிவுபடுத்துகின்றது. கடின உழைப்பின் அவசியத்தை வெற்றியைவிட தோல்வியே எமக்கு அதிகம் உணர்த்துகின்றது. எமது தோல்வி தொடர்பான மற்றவர்களது விமர்சனங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். இவை இலவச ஆலோசனைகளாக இருப்பினும் அவை வெற்றிப் பாதைக்கு எம்மை இட்டுச் செல்லும். எமது வாழ்வில் நாம் தோல்விகளை விரும்பாவிட்டாலும் அதனை ஏதோவொரு வகையில் சந்தித்தே ஆகவேண்டும். வாழ்வில் வெற்றி தோல்வி என்பது சகஜம். வெற்றி கிடைக்கும் போது மகிழ்வாகவும், தோல்வி ஏற்படும் போது வாழ்வின் கஷ்டமான பகுதியாகக் கருதாது தோல்வி என்பது வாழ்வில் ஒரு தற்காலிக சரிவே என்பதை உணர்ந்து அதிலிருந்து மீண்டு எழுவோம்.

# வாங்க அழகாகலாம்



## பிரெஞ்சுப் பின்னல்

அடர்த்தியாக, முதுகு வரை கூந்தல் இருக்கும் அத்தனை பெண்களுக்கும், இந்த வகை தலையலங்காரம் அற்புத மாக இருக் கும். பார்ப்பதற்கு கஷ்டமாகத் தோன்றும் இந்த தலைப் பின்னல், பின்னுவதற்கு மிகவும் எளிது. எப்படிப் பின்னலிடுவது என்று பார்ப்போமா முதலில், கூந்தலை ஷாம்பு போட்டு அலசி ஈரம் போக காயவிடுங்கள்.



**படம் 1**
இனி, படத்தில் காட்டியுள்ளது போக முன் பக்க முடியை எடுத்து க்ளிப் போட்டுவிடுங்கள்.

**படம் 2**
இரண்டு காதுகளுக்கும் மேல் உள்ள முடிகளை படத்தில் காட்டியுள்ளது போல எடுத்து...

**படம் 3**
ஏற்கெனவே க்ளிப் போட்ட மீதி முடியோடு சேர்த்து வழக்கமான ஜடை பின்னுவது போல பின்ன வேண்டும்.

**படம்: 4**
இனி, இடது பக்கமிருந்து படத்தில் காட்டியுள்ளது போல சிறிது முடியை எடுத்து, ஏற்கெ னவே பின்னி இருக்கும் ஜடை முடியோடு சேர்த்து...

**படம் 5**
வலது பக்கமிருந்து சிறிது முடியை எடுத்து ஜடையோடு இணைத்து பின்ன வேண்டும்.

**படம் 6**
இப்படி ஒவ்வொரு முறையும் இரண்டு பக்கமிருந்து முடியெடுத்து, ஏற்கெனவே பின்னியிருக்கும் ஜடை முடியோடு சேர்த்து பின்னிக் கொண்டே வரவேண்டும்.

**படம் 7**
எல்லா முடிகளையும் சேர்த்துப் பின்னிய பிறகு, பேண்ட் போட்டுவிட்டால்... அட்டகாசமான ஸ்டைலிஷ், ஃபிரெஞ்சு ப்ளேட் ஹேர்ஸ்டைல் ரெடியாகிவிடும்..

**குறிப்பு:**
ஒவ்வொரு முறை ஒவ்வொரு பக்கமிருந்து முடியெடுக்கும்போது, ஏற்கெனவே பின்னி வைத்திருக்கும் முடிகளை விட்டுவிடக் கூடாது. இந்த ஹேர்ஸ்டைலை பார்லரில் செய்ய 250 ரூபாய் செலவாகும். வீட்டிலும் அழகாக செய்து கொண்டு அசத்தலாம்!





இவ்வகைப் பிரெஞ்சுப் பின்னலை விசேட நிகழ்வுகள், கொண்டாட்டங்கள் போன்றவற்றுக்கு செல்லும்போது பின்னிக் கொள்ளலாம். விசேட நிகழ்வுகளுக்குச் செல்லும் போது பின்னலின் இடைகளுக்குள் முத்துக்கள் சிறிய பூக்களைச் செருகி பின்னலை இன்னும் அழகுபடுத்தலாம்.

தினமும் அலுவலகத்துக்கோ, கல்லூரிகளுக்கோ செல்லும் போது பின்னிச் செல்வதை விட இடைக்கிடை பின்னலாம்.




# யாழ்ப்பாண இளைஞர்கள் துடிப்பானவர்கள்

## தாய்வானிய இளம்பெண் பெருமிதம்

தட்ஜா.ஜோ



"யாழ்ப்பாணத்துக் குழந்தைகள் என் கைகளைப் பிடித்துக் கொண்டு *கிரேஸ் அக்கா! கிரேஸ் அக்கா!* என்று அழைக்கும்போது நான் சொக்கிப் போகிறேன். எனக்கு யாழ்ப்பாணத்தைவிட்டுப் பிரியவே மனமில்லை. ஆனால் இங்கே இருப்பதற்கு முறையான ஆவணங்களை நான் பெற்றாக வேண்டும். நான் மீண்டும் வருவேன். யாழ்ப்பாணத்தையும் இந்த மக்களையும் எனக்கு நிறையவே பிடித்திருக்கிறது. இந்த மக்களுடன் நீண்ட காலம் தங்கியிருந்து அவர்களுக்குச் சேவை செய்ய வேண்டும். அந்த நாள் விரைவில் வருவதற்காகக் காத்திருக்கிறேன்."

பளீர் வெண்மையுடன் வளவளவென்றிருக்கும் இளம் மங்கை கிரேஸ் என்-சூ பேசும்போது கண்கள் இடுங்கி உதடுகள் சிரிக்கும் இந்தச் சிங்காரப் பெண்ணுக்கு சொந்த நாடு தாய்வான்.

வயது 25. தாய்வான் தேசிய பல்கலைக் கழகத்தில் சர்வதேச தொடர்புகள் கற்கையைப் பயின்று வருகிறார்.

கிரேஸுக்கும் இலங்கைக்கும் இரண்டு வருடங்களாகத்தான் உறவு. அதிலும் யாழ்ப்பாணத்துடனான வெறும் மூன்று மாதங்கள்தான்.

"பல்கலைக்கழக உள்ளகப் பயிற்சியை நிறைவு செய்வதற்காக நான் இரண்டு வருடங்களுக்கு முன்பு இலங்கைக்கு வந்தேன். ஏசியன் பவுண்டேசனில் இருந்தது அந்த உள்ளகப் பயிற்சி. யாழ்ப்பாணம் வர அப்போது வசதிப்படவில்லை. யாழ்ப்பாணம் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருந்ததால் நிறைய ஆர்வமாக இருந்தேன். இந்த வருடம்தான் அந்த ஆசை நிறைவேறியிருக்கிறது" என்று சொல்லும் கிரேஸின் கண்களும் சிரிக்கின்றன.

வடக்கு மாகாண சபைத் தேர்தலின்போது பவ்ரல் அமைப்பின் தேர்தல் கண்காணிப்பாளர்களில் ஒருவராகத் தொண்டாற்றிய கிரேஸுக்கு வடக்கின் அரசியல் களநிலவரங்கள், கெடுபிடிகள் அத்துப்படி. இந்தச் சமூகத்துக்கு எதையாவது செய்துவிடவேண்டும் என்று கிரேஸுக்கு இருக்கும் துடிப்பு தமிழ் இளையோருக்கு நிச்சயம் ஒரு முன்மாதிரி.

"எனக்கு சமூகத்தின் மீது அக்கறை அதிகம். நான் எனது நாட்டில் அரசியல் சட்டங்களை மாற்றியமைக்கக் கோரி ஜனாதிபதி மாளிகையின் முன் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்திற்கு நானும் முக்கிய பங்கை ஆற்றியிருக்கிறேன். 250ஆயிரம் பேர் அந்த ஆர்ப்பாட்டத்தில் கூடியிருந்தார்கள். அனைவருக்கும் சமமான வாழ்வு கோரித்தான் நாம் அங்கு போராடினோம். யாழ்ப்பாணம் வந்ததும் இங்கிருந்து பணியாற்ற வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட எனது இந்த அரசியல் ஈடுபாடும் முக்கிய காரணம்."

குறுகிய காலமே வடக்கில் தங்கியிருந்தாலும் கள நிலைமைகளில் கிரேஸின் அவதானிப்பு ஆச்சரியமூட்டக்கூடியது. "அபிவிருத்திப் பணிகள் வடபகுதியில் துரிதகதியில் நடைபெற்றாலும் அடிப்படை வசதிகள் இங்கு முழுமைப்படுத்தப்படவில்லை. அடிப்படை வசதிகள் அற்ற அபிவிருத்தி பயனற்றது. வடபுல மக்கள் போர்ப் பாதிப்புகளில் இருந்து இன்னும் முழுமையாக மீளவில்லை. வடுக்கள் அவர்கள் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளன" என்கிறார்.

யாழ்ப்பாண இளைஞர்கள் துடிப்பானவர்கள் என்று நற்சான்றுப் பத்திரம் வழங்குகிறார் கிரேஸ். "இங்குள்ள இளைஞர்கள் எந்த விடயத்தையும் துணிகரமாக செய்து முடிக்கவல்லவர்கள். அந்தத் துணிவு எனக்குப் பிடித்திருக்கின்றது. அவர்களிடம் மறைந்து கிடக்கும் திறன்களை வெளியே கொண்டுவரவேண்டும். அனைத்திலும் பங்கு பற்ற வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடையே உள்ள தாழ்வு மனப்பாங்கை அடியோடு தகர்த்து விடும்" என்று கூறும் கிரேஸ், 30 வருட இருண்ட காலத்தில் மூத்த சமுதாயம் போரில் தொலைத்ததை இளைஞர்கள் உபயோகமான வழியில் மீட்டுக் கொடுப்பார்கள் என்று ஆணித்தரமாக நம்புகிறார்.

பொதுவாகப் பெண்களை வேறு மாவட்டங்களில் அனுப்பிப் பணியாற்றவோ பணிக்கவோ அச்சங்கொள்ளும் நம் சமுதாயத்திற்கு கிரேஸின் பணிகளுக்கான குடும்ப ஒத்துழைப்பு வியப்பூட்டும். "என் பெற்றோருக்கு நான் ஒரே பிள்ளை. நான் எதை விரும்புகின்றேனோ அதைப் பெற்றுக் கொடுப்பார்கள். என் படிப்புக்கூட அப்படித்தான். நான் விரும்பியதைத்தான் படித்தேன். என் இலங்கைப் பயணம்கூட அவர்கள் ஒத்துழைப்புடன்தான் நடந்தது. எனக்கு சமூக சேவைகள், தலைமைத்துவம் போன்றவற்றில் உள்ள ஈடுபாட்டினை பெற்றோர் நன்கு புரிந்துகொண்டுள்ளனர். குடும்பம் எனக்குத் தடையாக இல்லை; ஆதரவாக, ஒத்துழைப்பாவே இருக்கிறது" என்பவர் "நான் ஒரு சுதந்திரப் பறவை" எனக் கூறி ஒரு வரியில் நிறுத்தினார்.

மனித உரிமைகள் தினமான டிசெம்பர் 10ஆம் திகதி அன்புக்கும் நட்புக்குமான அமைப்பு (அவ்ரல்) நடத்திய *வடக்கு கிழக்கு நம்பிக்கை துளிர்கள் இளைஞர் மாநாட்டை* ஒழுங்குபடுத்துவதிலும் உதவி செய்வதிலும் பெரும் பங்காற்றியிருக்கிறார் கிரேஸ். ஞானம்ஸ் விடுதியில் நடந்த அந்த மாநாட்டில் 240 தமிழ் இளைஞர்கள் வடக்கு, கிழக்கு, மலையகம் போன்ற பகுதிகளில் இருந்து வந்திருந்தார்கள்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் அவர்களை ஒன்றுதிரட்டி ஓங்கிக் குரல் கொடுக்க வைப்பதற்காக இரண்டு மாதங்கள் தனது நண்பரான இலங்கையைச் சேர்ந்த ரவீந்திர டி சில்வாவுடன் இணைந்து கிரேஸ் பணியாற்றி இருக்கிறார். அவர்கள் நடத்திய நிகழ்வைச் சுற்றிச் சுற்றி படைப் புலனாய்வாளர்கள் படையெடுத்த நிலையிலும் அச்சமின்றி அந்த இளைஞர்களை ஒன்று திரட்டி சக்தி கொடுத்திருக்கிறது அந்த மாநாடு. "ஒரு சிங்களவராக நிகழ்வு ஒன்றை யாழ்ப்பாணத்தில் நடத்துவது எந்தளவு சிரமமானது என்பதைப் புரிந்துகொண்டேன்" என்றார் சட்டத்தரணியான ரவீந்திர டி சில்வா.

வடமாகாண சபைத் தேர்தலின்போது தான் எடுத்த ஒளிப்படங்களின் கண்காட்சி ஒன்றையும் கிரேஸ் அந்த நிகழ்வில் நடத்தினார்.

"எனக்கு பொழுதுபோக்கு வரைதல்தான். சின்ன வயதில் இருந்தே வரைவதில் அதீத ஆர்வம். விலையுயர்ந்த வரைதல் உபகரணங்களைப் பெற்றோர் வாங்கிக் கொடுத்துள்ளனர். வரைதல் வகுப்பிற்கு சென்று முறைப்படி வரைதலைக் கற்றுக் கொண்டேன். தற்போது ஒளிப்படக் கலையில் ஆர்வம் ஏற்பட்டுள்ளது. ஒளிப்படங்கள் மூலமாக நாம் கூற வரும் கருத்தை மக்களுக்கு எளிதில் புரியவைக்கலாம்" என்கிறார்.

"யாழ்ப்பாண மக்கள் என்னைத் தங்களில் ஒருவராகப் பார்ப்பது என்னை நெகிழ வைக்கின்றது. இளவயதினர் என்னை *கிரேஸ் அக்கா* என அழைக்கும்போது சொந்த நாட்டினை, வீட்டினை விட்டு வேறு நாட்டில் இருப்பது போன்ற உணர்வு ஒரு துளிகூட எனக்கு இல்லை. கூடப்பிறந்த சகோதரர்களைக் கொடுக்காத இறைவன் யாழ்ப்பாணத்தில் பல சகோதரர்களைக் கொடுத்துள்ளான். சொல்லப்போனால் இது எனது இரண்டாவது வீடு" என்று நெகிழ்ந்து போகிறார் கிரேஸ்.



யாழ்ப்பாணத்து மக்கள் என்னைத் தங்களில் ஒருவராகப் பார்ப்பது நெகிழ வைக்கிறது. இளவயதினர் என்னைக் கிரேஸ் என்று அழைக்கும்போது சொந்த நாட்டை, வீட்டை விட்டு வேறொரு நாட்டில் இருப்பது போன்ற உணர்வு துளிகூட இல்லை.

யாழ்ப்பாணத்தின் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும், அவர்களின் நல்வாழ்வுக்கு உதவ வேண்டும், அவர்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டும், ஆக்கத்திறனுள்ள இளம் சமுதாயத்தினரின் சிறந்த எதிர்காலத்திற்கு வழிவகுக்க வேண்டும் என கிரேஸின் கனவுகள் ஏராளம். பட்டப்படிப்பினை பூர்த்தி செய்யும் நிலையிலுள்ள கிரேஸ் "என் பட்டப்படிப்பிற்குப் பின்னர் நான் மீண்டும் இலங்கைக்கு வந்து யாழ்ப்பாணத்தில் துடிப்புமிக்க இளம் சமுதாயத்தினருடன் பணியாற்றவே விரும்புகின்றேன். அந்த நாளுக்காகக் காத்திருக்கின்றேன்" என்றார்.

இத்தனைக்குப் பின்னரும் அதற்கு இந்த அரசிடம் இருந்து முறையான அனுமதி கிடைக்குமா என்று அவரிடம் கேட்டால் வெட்கப்பட்டுச் சிரிக்கிறார்.





# பெருந்தகவல்

இன்றைக்கு அடிப்படைத் தகவல் மட்டும் போதாது. வேலைக்குச் சேர்ந்த ஊழியர் அளிக்கும் கல்விச் சான்றிதழ் உண்மையிலேயே பல்கலைக்கழகம் அளித்ததா, அப்படி ஒரு பல்கலைக் கழகம் இருக்கிறதா என்று தொடர்புடைய ஆயிரத்தெட்டு தகவல்களை பின்னணி சரி பார்த்து நிறுவனத்தின் கணினியில் ஏற்ற வேண்டும்.

இரா. முருகானந்தன்

பென்சில். அதை வைத்து, படிக்கிற புத்தகத்தில் பிடிக்கிற இடங்களைக் கோடு போட்டு அலங்காரமோ அலங்கோலமோ படுத்தலாம். முனை மழுங்கினால் சீவலாம். காணாமற் போனால் இன்னொரு பென்சில் வாங்கலாம்.

**பென்சிலின் பெருந்தகவல்**

பென்சிலைப் பற்றிச் சொல்ல வேறு என்ன உண்டு? தகவல் சேர்க்கலாம். புது பென்சிலை வைத்துக் கோடு இழுத்துக்கொண்டே போனால், முழுவதும் கரைவதற்குள் 35 மைல் கோடு இழுத்திருப்போம். நிலவுக்குப் போகும்போது ஈர்ப்புவிசை இல்லாத காரணத்தால் நாமும் பென்சிலோடு அந்தரத்தில் பறந்தபடியே புதுக் கவிதை எழுதலாம். இன்னும் உலகின் பழைய பென்சில், காந்தி பயன்படுத்திய பென்சில், பென்சில் பற்றிய கவிதை, பென்சில் ஓவியங்கள் பலவுண்டு.

**காலம் கொண்டு வரும் தகவல்கள்**

பென்சில் மட்டுமில்லை, மனிதர்கள், நிகழ்ச்சிகள், அறிவியல் ஆய்வு, பொருளாதாரம், வங்கித் தொழில், வணிகம், கர்நாடக சங்கீதம், கானா பாட்டு இப்படிச் சகலத்தையும் பற்றிச் சேகரித்து வைத்துப் பகிர்ந்துகொள்ளத் தகவல் நிறைய உண்டு. காலத்தேர் முன்னோக்கி உருளஉருள, தகவல்கள் கூடிக்கொண்டே போகின்றன.

எல்லா அலுவலகத்திலும் இருக்கும் மனித வள மேம்பாட்டுத் துறையை எடுத்துக்கொள்வோம். அலுவலகத்தில் பணிபுரியும், பணி புரிந்தவர்களின் பெயர், விலாசம், புகைப்படம், கல்வித் தகுதி,வேலை, ஊதியம் என்று தொடங்கி, ஏகப்பட்ட தகவல்கள் கணினித் தகவல்தளத்தில் (டேட்டா பேஸ்) சேகரித்துவைக்க வேண்டும். இருபது ஆண்டுகளுக்கு முன்பு



அலுவலகத்தில் ஒரு கணினியிலோ, சில கணினிகள் இணைந்த வலைப் பின்னலிலோ இத்தகவல்களைச் சேர்த்து வைத்தார்கள். மிஞ்சிப் போனால் ஒரு கிகாபைட் அளவு தகவல் மொத்தமாக. ஆரக்கிள், சைபேஸ், எஸ்க்யூஎல் சேர்வர் இப்படியான தகவல் பரப்பு, அதை இயக்க மென்பொருள் கொண்டு இந்தத் தகவலைச் இலகுவாக நெறிப்படுத்தி சம்பளப் பட்டியலோ, தீபாவளி போனஸ் கணக்கோ போடலாம். வாழ்க்கை யும் கணக்கும் சிக்கல் குறைந்து இருந்த காலம் அது.

**இன்றைய தகவல் பெருக்கம்**

இன்றைக்கு அடிப்படைத் தகவல் மட்டும் போதாது. வேலைக்குச் சேர்ந்த ஊழியர் அளிக்கும் கல்விச் சான்றிதழ் உண்மையிலேயே பல்கலைக்கழகம் அளித்ததா, அப்படி ஒரு பல்கலைக்கழகம் இருக்கிறதா என்று தொடர்புடைய ஆயிரத்தெட்டு தகவல்களை பின்னணி சரிபார்த்து நிறுவனத்தின் கணினியில் ஏற்ற வேண்டும்.

ஆயிரக்கணக்கில் ஊழியர்கள் உள்ள நிறுவனம் என்றால் மெகாபைட், கிகாபைட் எல்லாம் எகிறி, எக்ஸாபைட் அளவில்தான் இத்தனை தகவல் தேவை என்று கணக்கிட முடியும். எக்ஸாபைட்? பத்து பெருக்கல் பத்து பெருக்கல் பத்து பெருக்கல் பத்து என்று பதினெட்டு தடவை பெருக்கிக்கொண்டே போனால் கிடைக்கும் தகவல் துண்டுகள்!

ஒரு கணினியிலோ வலைப்பின்னலிலோ சேகரித்து, ஒராக்கிளும் சைபேஸும் இவ்வளவு தகவலைக் கையாண்டு, வேண்டுவன வேண்டியபடி எடுத்துத் தருவது மலையைத் தலைமுடி கட்டி இழுக்கும் பணியாகிவிடும்.

தமிழ்த் திரைப்படங்கள்பற்றி ஒரு தகவல் பரப்பு அமைத்தால்? இதுவரை வெளிவந்த ஆயிரக்கணக்கான தமிழ்ப் படங்களின் டிஜிட்டல் வடிவங்கள், இசை, போடப்பட்ட வழக்குகள், தீர்ப்புகள், நடிகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் என்று தகவல் பெருகிக்கொண்டே போகும். போக்குவரத்து, பங்குச் சந்தையில் வணிக நடவடிக்கைகள் என்று குறிப்பிட்ட பணிகளுக்கு இப்படி மலையாகக் குவியும் தகவல்களிலிருந்து விரைவாகவும், சரியான வழியிலும் தேடி, அடுத்த நிமிடம், அடுத்த மணி நேரம், அடுத்த நாள் எப்படி இந்த நடவடிக்கைகள் நிகழும் என்று தர்க்க ரீதியான ஆருடம் கணிக்க வேண்டியிருக்கும். நாம் புழங்கும் சாமான்யமான தகவல்நெறிப்படுத்தல் இல்லை இதெல்லாம். பெருந்தகவல் (பிக் டேட்டா) என்று இதன் சிறப்பு கருதிப் பட்டம் சூட்டிவிடலாம்.

**பெருந்தகவல்: சிறுகுறிப்பு**

பெருந்தகவல் என்பது குறித்து ஒரு வாக்கியத்தில் சின்னஞ்சிறு குறிப்பு வரைக என்று கேட்டால், அதெல்லாம் முடியாது என்று வெளிநடப்பு செய்யாமல் சொல்ல இதோ பதில்- இன்றைக்கு நடைமுறையில் இருக்கும்எளிய தகவல் தளங்களில் கையாள முடியாமல், சிறப்பு நடவடிக்கை மூலம் கையாளப்பட வேண்டிய பிரம்மாண்டமான தகவல் அடுக்குகள். இவை அதிவேக உருவாக்கம், அதிகக் கொள்ளளவு, அதிக வகைகள் என்று மூன்று குணாதிசயங்களைக் கொண்டவை.

நாளாந்த உலகில் வணிகம், தொழில், அறிவியல் என்று பலதுறைகள் சார்ந்து உருவாகும் தகவல் கிட்டத்தட்ட இரண்டரை எக்ஸாபைட் அதைப் போல் பல மடங்கு தகவலைச் சேமித்து வைக்க மலிவான கணினி வன்பொருள் சாதனங்கள், இணையத்தில் ஏற்படுத்திக்கொள்ள இயலும் மேகக் கணினிகள், பல இடங்களில் அமைந்து ஒருங்கே இயங்கும் கணினி அமைப்புகள் என்று பல முறைகள் புழக்கத்தில் வந்துவிட்டன. போனவாரம் லெபனான் நாட்டுக் கடற்கரையை ஒட்டி இருபத்தைந்து ட்ரில்லியன் கன அடி நில வாயு இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டது. அதாவது மில்லியன் மில்லியன்கள் கன அடி. அகன்ற நிலப்பரப்பு, மிக அடர்த்தியான வாயு கையிருப்பு. நிலத்தடியிலும் மேற்பரப்பிலும் ஆய்வு செய்த வகையில் பல தரத்தில் குவியும் தகவல். துல்லியமாக வாயு இருக்கும் இடங்களைத் தேடி அடையாளம் காணவும் அந்த வளத்தைச் சீராகப் பயன்படுத்த பாதை வகுக்கவும் பெருந்தகவல் அமைப்புகளே கைகொடுக்கின்றன.

**கடவுள் துகள்**

அண்மையில் அணுத்துகள் ஆய்வுக்கான ஐரோப்பியக் கூட்டமைப்பு (செர்ன்), ஹாட்ரான் என்ற துகள் தாக்குவிப்பான் (பார்ட்டிக்கிள் கொலைடர்) மூலம்ஆய்வுசெய்து ஹிக்ஸ்போஸான் என்ற கடவுள் துகள் இருப்பதை நிறுவ முற்பட்டது. இந்த ஹாட்ரான் கருவியில் பத்து லட்சம் சென்சார்கள் வினாடிக்கு நாலு கோடி அணுத் துகள் மோதல்களைப் பதிவுசெய்தன. அவற்றுக்கான பெருந்தகவலில் இருந்து நூறோ இருநூறோ குறிப்பிடத் தகுந்த மோதல்கள் பற்றிய நுண்தகவலை மட்டும் பிரித்தெடுத்து ஆய்வு செய்யத் தேவை எழுந்தது. பெருந்தகவல் அமைப்பும், தகவல் சேமிப்பும், கண் சிமிட்டும் நேரத்துக்குள் வேண்டிய தகவல் அடுக்கை வைக்கோல் போரில் ஊசியாகத் தேடிக் கண்டு பிடிக்கும் ஆற்றலும் கடவுள் துகளின் இருப்பை உறுதிசெய்யத் துணை நின்றன.

கடவுள் துகளைக் காணப் பெருந்தகவல் துணைபுரியும். கடவுள் இருப்பதைக் காண? சின்ன நம்பிக்கை மனதில் இருந்தாலே போதுமோ!

## நீயும் ஒரு கதிரவனாகி நின்றெம்மை எழுப்புகின்றாய் (இது தான் உண்மை)

எம் தந்தையின் காலந்தன்னில்
சுதந்திரன் எனும் பெயரில்
சுந்தரத் தமிழில் எங்கள்
சந்ததி விழிக்கும் வண்ணம்
அரசியற் கட்டுரைகள்
அளித் தன்று மறைந்து போக
உதயனின் உதிப்பால் அந்த
வெற்றிடம் மறையும் வண்ணம்
சஞ்சீவி, சூரியகாந்தி
தந்த, தருகின்ற கட்டுரைகள்
தாங்கியே நிற்பதனை
(தரணியே அறியுமன்றோ)
பாழ் பட்ட போரினாலே
பதைத்த அவ்வேளை தன்னில்
கொப்பித் தாளினில் (றூள்) தந்தாய்
செய்தி சான்றுகள் இன்றும் உண்டு.
கடதாசிக் கூளினாலே
அட்டை போலொன்று செய்து
அதனிலும் தந்தாய் செய்தி
அதனையும் மறக்கலாமோ?
(மறப்போமோ நாம்)
எத்தனை இழப்புக்கள் எத்தனை தொல்லைகள்
அத்தனையும் இன்று தாண்டி.
அரிய பல விருதும் பெற்று
முத்தென மூன்று பத்தாண்டை நோக்கி
முனைப்புடன் ஓடுகின்ற நாளிதழ் அல்ல நீ!
உலகத்து தமிழர் ஏத்தும்
உள்ளத்து இறை அருளால் உதிக்கும்
அறிவியல் ஏடு என்ற அருட் கதிர்க் கீறல் ஒன்றும்
நீ தாங்கி உதிப்பதாலே
நீயும் ஓர் கதிரவனாய் (மறையாது)
உதித்தெம்மை எழுப்புகின்றாய்
இதுதான் உண்மை.



*கவிமணி அன்னதாஸன், ஊரெழு.*



# அனைவரையும் வசீகரிக்க

நிலாமகன்

ஏற்கனவே உங்களிடம் நம்பிக்கை இருக்கிறது என்று எண்ணிக் கொள்வது ஒரு எளிமையான செயல். புது மனிதர்கள் நிறைந்த ஓர் அறைக்குள் நுழைவது. சொற்பொழிவாற்றுவது. குழுவினருடனான சந்திப்பின் போது உங்கள் தரப்பை விவாதிப்பது போன்ற பல சூழ்நிலைகளில் உங்கள் மனதைக் கலங்கடிக்கிற பயங்களையும் சந்தேகங்களையும் 'இருப்பது போல் நடிப்பது' என்பது குறைக்கின்றது.

உங்களைப் பார்ப்பதில் அடுத்தவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள் என்பதாக நீங்கள் நடந்து கொண்டால். அவர்களும் அதே மாதிரியாக எண்ணுவதற்கு வாய்ப்பு உண்டு. நீங்கள் சொல்ல இருப்பதைக் கேட்பதற்கு ஆவலுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்று நீங்கள் நடித்தால் மற்றவர்களும் அதே மாதிரி இருப்பார்கள். மற்றவர்கள் உங்களுக்கு மரியாதை செலுத்துவதாக எண்ணுங்கள்; அதேபோல் உங்களை நடத்துவதில் அவர்கள் விருப்பம் காட்டுவார்கள். இறுதியில் அது நடிப்பு என்பதாக இல்லாமல் இயல்பானதாக ஆகும்.

○ நீங்கள் உங்களைப் பற்றி எது உண்மை என்று கருதுகிறீர்களோ, அதையேதான் மக்களும் உண்மை என்று கருதுவார்கள்.

○ உங்களுடைய தற்போதைய உணர்ச்சி நிலையைக் கண்ணாடியில் காணும் விம்பம் போல் மக்கள் பிரதிபலித்துக் காட்டுவார்கள். மக்கள் எப்படி நடந்துகொள்வார்கள் என்ற எதிர்பார்ப்பு அவர்களுடைய உண்மையானநடவடிக்கையைப் பாதிக்கும்.

## உணர்ச்சி தொடர்பான அறிவு

உணர்ச்சி தொடர்பான அறிவு. மற்றவர்களை உணர்ச்சிவசப்படச் செய்யும் நிகழ்வுகளை உணர்ந்திருப்பது என்பதாகும். அதே நேரத்தில் உங்களது உணர்ச்சிகளும் எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ளுதலும் ஆகும். (உ-ம்) குறைவான உணர்ச்சி தொடர்பான அறிவு என்பது மதிப்பிழக்கச் செய்தல். குறைபாடு உள்ளவராக எண்ணுதல். அச்சுறுத்துதல். கோபப்படச் செய்தல். சலிப்படைதல். குற்றம் புரிந்தவராக எண்ணுதல் போன்ற உணர்ச்சிகளை மற்றவர்களிடம் நீங்கள் ஏற்படுத்துவதைப் புரிந்து கொள்ளாமல் இருத்தல் என்று சொல்லலாம்.

உங்களுடைய உணர்ச்சி தொடர்பான அறிவை வளர்த்துக் கொள்வது . நீங்களும் சமூகத்தைப் பற்றிய விழிப்புணர்வோடு இருத்தல் என்பதாகும்.

உணர்ச்சி தொடர்பான அறிவு என்பது. மற்றவர்களின் நடத்தை. அவர்களுடைய நோக்கங்கள். உணர்ச்சி நிலை மற்றவருடன் பழகுவதற்கான விருப்பம் போன்றவற்றைப் புரிந்து கொண்டு சூழ்நிலைகளைப் படிப்பதற்கான ஒரு சிறப்பு ரேடார் கருவி போன்றது. பிரச்சினை என்னவென்றால். ரேடாரின் கவனத்துக்குள் வராத சில புள்ளிகளால் நாம் துன்புறுகிறோம். அப்போது ஒரு சூழ்நிலையைத் தவறாகப் புரிந்துகொள்கிறோம் அல்லது அதைப் படிக்காமலே இருந்துவிடுகிறோம். (உ-ம்) மிகவும் இயல்பாக எண்ணிப் பேசுவதற்கு ஒரு நபருக்கு அருகில் செல்கிறீர்கள்; அவர் அதைக் கேட்பதற்குத் தயாராக இருக்கிறாரா என்பதைத் தெரிந்து கொள்ளாமல். உடனே அவருடைய நட்பு மிகவும் உன்னதமாக உள்ளது என்று சொன்னால் ரேடார் கருவியைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பது பொருள். அல்லது நீங்கள் சொல்லும் ஏதோ ஒன்று. ஒரு நபரை முழுமையாகக் கலங்க அடிக்கிறது. அதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை என்றால் உங்கள் ரேடார் கருவிசெயற்படவில்லைஎன்றுஅர்த்தம். சூழ்நிலையைப் புரிந்து கொள்வதில். சூழ்நிலையின் ரேடார் திரையைப் புரிந்து கொள்வதில் இங்கு கவனம் செலுத்துவோம்.

சூழ்நிலையைப் படித்துப் புரிந்து கொள்ள உதவும் கருவிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

○ இடம்-இந்தச் சூழ்நிலையின் இடப் பரிமாணம் படம் எது?

○ நடத்தை - இந்தச் சூழ்நிலையில் எதை உன்னிப்பாகக் கவனிக்கிறீர்கள்?

○ மேம்பட்ட ஐம்புலன்கள் சார்ந்த செயற்பாடு - இந்தச் சூழ்நிலையில் என்ன நடந்து கொண்டிருக்கிறது?

○ சொற்களும் குறியீடுகளும் - இந்தச் சூழ்நிலையில் எண்ணங்களின் அடையாளங்கள் என்ன? பொருள் என்ன?

உணர்ச்சி தொடர்பான அறிவு என்பது, மற்றவர்களின் நடத்தை, அவர்களுடைய நோக்கங்கள், உணர்ச்சி நிலை மற்றவருடன் பழகுவதற்கான விருப்பம் போன்றவற்றைப் புரிந்து கொண்டு சூழ்நிலைகளைப் படிப்பதற்கான ஒரு சிறப்பு ரேடார் கருவி போன்றது.



## இடம் (space)

மக்கள் இடத்தைத் தேர்ந்தெடுத்து வசிக்கிறார்கள். அதை எப்படி அவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதிலிருந்து பல விடயங்களைப் புரிந்து கொள்ளலாம். உதாரணமாக, உங்களுடைய அடுத்த கூட்டத்தில் பங்கேற்கும்போது. உள்ளே நுழைந்தவுடன். மனிதர்கள் அங்கங்கு பிரிந்து அமர்வதைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்களா இல்லையா என்பதைச் சுற்றும் முற்றும் பார்த்துத் தெரிந்து கொள்ளவும். தங்களுக்குள்ளேயா அல்லது வெளிப் புறத்திலா எவ்வாறு சார்ந்து இருக்கிறார்கள்; உங்கள் கண்களுக்கு முன்னால். காணும் இடம் சார்ந்த காட்சியில் வேறு என்ன குறியீடுகளை உங்களால் பார்க்க முடிகிறது என்பதைக் கவனிக்கவும்.

மக்கள் பல வகையாகப் பிரிந்து உட்கார்ந்திருக்கும் இட அமைப்பு கீழ் கண்டவற்றுள் எவ்வகையில் உள்ளது. நடைமுறை சார்ந்து திறமையாகச் செயலாற்றுதல். அமைதியாக இருத்தல். விழிப்புணர்வுடன் இருத்தல். நட்புணர்வு இல்லாதவாறு அல்லது அவர்கள் பங்கேற்கும் சடங்கின் ஒரு பகுதி என்ற எண்ணத்தோடா? மக்கள் வசதியான மன அமைதியோடு இருக்கிறார்களா அல்லது அமைதியில்லாமல் இருக்கிறார்களா? காணும் காட்சி வரவேற்பதாக உள்ளதா. இல்லை மாறாக உள்ளதா? யார். எங்கு. ஏன் அமர்ந்திருக்கிறார்கள்?. (உ-ம்) மேசையின் தலைப் பகுதியில் மிகவும் மூத்த அதிகாரி அமர்வார். இந்தக் காட்சியில் உங்களுக்கான சிறந்த இடம் எது? ஏன்?

அடுத்த முறை யாருடைய அலுவலகத்துக்காவது செல்ல நேர்ந்தால் இட அமைப்பு எப்படி உள்ளது என்பதை உன்னிப்பாகக் கவனிக்கவும். அங்கு அமர்ந்திருப்பவரின் அதிகாரத்தை அழுத்தமாக வெளிப்படுத்துவதாக அது வடிவமைக்கப்பட்டு உள்ளதா? கருத்துப் பரிமாற்றத்தை அது அதிகரிக்க. குறைக்கச் செய்கிறதா? நெருங்கிய நட்பை வளர்க்க உதவுகிறதா? அல்லது தடுக்கிறதா? இதைத் தவிர இட அமைப்பு உங்களுக்கு வேறு எவற்றைத் தெரிவிக்கிறது? எல்லாவற்றையும் கவனியுங்கள்.

## வாழ்க்கை தத்துவங்கள்

- பெற்றெடுத்த தாய்; தந்தை. தெய்வம் தெய்வம். அவர்கள் பேசுகின்ற மொழியெல்லாம் வேதம் வேதம்.
- உன்னிடம் பணம் இருந்தால் உன்னை உனக்குத் தெரியாது உன்னிடம் பணம் இல்லையேல் உன்னை ஊருக்கே தெரியாது.
- இல்லை இல்லை என்பவர்க்கு கவலை இல்லை இருந்தும் இல்லை யென்போருக்கு நிம்மதி இல்லை.
- போராடும் வரை உரிமை கொண்டாடும் வரை உறவு உழைக்கும் வரை ஊதியம்.
- நல்லாய் வாழ்ந்து சாகனும் செத்த பிறகும் வாழனும்.



- உடலில் ஊனம் உள்ளவனை விட உள்ளத்தில் ஊனம் உள்ளவன் கெட்டவன்.



உக்ரைனை ஐரோப்பிய யூனியனில் இணையுமாறு வலியுறுத்திப் போராட்டத்தில் ஈடுபடும் உக்ரைன் மக்கள்

# மீள வந்துவிட்டதா பனிப்போர்?

## உக்ரைன் அரசியலை முன்வைத்து ஒரு பார்வை

சோவியத் ஒன்றியத்தின் அங்கமாக இருந்த உக்ரைன், இப்போது தனி நாடாக இருந்தாலும் வர்த்தகம், பொருளாதாரம் போன்றவற்றுக்கு ரஷ்யாவையே அதிகம் சார்ந்து நிற்கிறது. அண்மையில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் வர்த்தக உறவை வளர்த்துக் கொள்ளப் பேச்சு நடத்தியது. ஆனால் ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடியாமல் ரஷ்யாவின் மிரட்டலுக்கு அஞ்சிப் பின்வாங்கியது.

ஐந்து ஆண்டுகளாகப் பொருளாதார மந்த நிலையால் அமிழ்ந்து கிடந்த ஐரோப்பிய நாடுகள் மெல்லத் தலையெடுத்து வளர்ச்சியை எட்டுகின்றன. கிழக்கில் உள்ள உக்ரைன் போன்ற நாடுகளுடன் பொருளாதார, வர்த்தக உறவுகளை விரிவுபடுத்திக்கொள்ள விரும்புகின்றன.

தன்னுடைய செல்வாக்குக்குக் கட்டுப்பட்டுக் கிடந்த உக்ரைன், இப்படித் தன்னைவிட்டுப் பிற ஐரோப்பிய நாடுகளுடன் போவதை ரஷ்யா விரும்பவில்லை. எனவே, சமாதானமாகப் பேசியோ மிரட்டியோ உக்ரைனைத் தன்னுடனேயே வைத்துக்கொள்ளவே அது விரும்புகிறது.

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ நாடுகளுக்கும் சோவியத் ஒன்றியம் தலைமையிலான வோர்சோ ஒப்பந்த நாடுகளுக்கும் சில ஆண்டுகளுக்கு முன்பு வரை நிலவிய பனிப்போர் 21ஆவது நூற்றாண்டிலும் திரும்பிவிட்டதோ என்று நினைக்கும் அளவுக்கு இப்போது மோதல் வலுத்துக்கொண்டிருக்கிறது.

### ரஷ்யாவின் எச்சரிக்கை

எங்களைவிட்டுப் பிரிந்துசென்றால், கடுமையான பொருளாதார, வர்த்தகத் தடைகளுக்கு உள்ளாக நேரும் என்று உக்ரைனை ரஷ்யா கடுமையாக எச்சரித்திருக்கிறது. அப்படிப் போகாமல் ரஷ்யாவுடனேயே தொடர்பை நீடித்தால், கோடிக்கணக்கான ரூபிள்களைச் செலவழிக்கத் தயார் என்றும் ஆசைகாட்டுகிறது. உக்ரைன் பிடியிலிருந்து நழுவிவிட்டால், கருங்கடல் பகுதியில் ரஷ்யக் கடற்படைக்கு மிகப் பெரிய பின்னடைவு ஏற்படும். பல்வேறு நாடுகளுக்கு உக்ரைன் வழியாகச் செல்லும் இயற்கை எரிவாயு, எண்ணெய்க் குழாய்ப்பாதைகளை ரஷ்யா இழக்க நேரும். எனவே சாம, தான, பேத, தண்ட வழிமுறைகளை ரஷ்யா கையாள்கிறது.

மேற்கத்திய ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகளோ ரஷ்யாவின் தீவிரத்துக்கு ஈடுகொடுக்காமல் தொடர்ந்து கசகசவென்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். "உங்கள் நாட்டு மக்களில் பெரும்பாலான மக்கள் எங்களுடன் வர்த்தக உறவை விரும்புகிறார்கள், அவர்கள் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள்" என்று உக்ரைன் அதிபரைப் பார்த்துக் கெஞ்சுகின்றனர். எந்த ஒரு தீர்மானத்துக்கும் வராமல் இப்படித் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தால், அடுத்த அதிபர் தேர்தலில் யனுகோவிச் மண்ணைக் கவ்வ நேரும் என்பதைக்கூடப் புரிந்துகொள்ளாமல், அவரைச் சங்கடத்துக்கு உள்ளாக்குகின்றனர். உக்ரைனையும் தன்னுடைய சந்தையாக்கும் ஆசைதான் ஐரோப்பிய நாடுகளிடம் இருக்கிறதே தவிர அதனை பொருளாதார ரீதியாகப் பலப்படுத்தும் முழு மூச்சான முனைப்பு இல்லை.

உக்ரைனில் மிகப் பெரிய அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய வர்த்தக உடன்பாட்டில் கையெழுத்திடுமாறு ஐரோப்பிய நாடுகள் யனுகோவிச்சைக் கடந்த மாதம் வலியுறுத்தின. ஐரோப்பியப் பிரதிநிதிகளுக்கு ஆதரவாக தலைநகர் கீவிலும் முக்கிய நகரங்களிலும் நூற்றுக்கணக்கானோர் வீதிகளில் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். யனுகோவிச்சுமே ஒரு கட்டத்தில் கையெழுத்திடத் தயாராக இருந்தார்.

உடனே, ரஷ்யா ருத்ரதாண்டவம் ஆடியது. தன்னுடன் செய்துகொண்ட பொருளாதார, வர்த்தக ஒப்பந்தங்களின்படி கடன்களுக்கான முதலையும் வட்டியையும் உடனே தீர்த்துவிட்டுத்தான் ஐரோப்பிய நாடுகளுடன் புதிய வர்த்தக ஒப்பந்தத்தைச் செய்துகொள்ள வேண்டும்; இல்லாவிட்டால், விளைவுகளை அனுபவிக்க வேண்டும் என்று கடுமையாக எச்சரிக்கை விடுத்தது. ஏற்கெனவே, தள்ளாடிக்கொண்டிருக்கும் உக்ரைனின் பொருளாதாரம் ரஷ்யா எடுக்கக்கூடிய தடை நடவடிக்கைகளால் படுகுழிக்கே சென்றுவிடும் என்று அஞ்சியதால், யனுகோவிச் பின்வாங்கினார். இதனால் நாட்டில் இப்போது அவருக்கு எதிரான கிளர்ச்சி தீவிரமடைந்து வருகிறது.

### ஐரோப்பிய நாடுகளின் மறதி

உக்ரைனைத் தம் பிடிக்குள் இப்போது இழுக்க முற்படுவதைப் போலவே முன்னரும் ஐரோப்பிய நாடுகள் முயன்றன. ஆனால், அரைகுறையான இந்த முயற்சிகளால் நன்மை ஏற்படாது என்பதை அவர்கள் மறந்துவிடுகின்றனர். ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் பிராக் நகரில் 2009இல் கூடி, சோவியத் ஒன்றியத்திலிருந்து பிரிந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன் வர்த்தக உறவை வைத்துக்கொள்ள விரும்புகின்றனர் என்று அறிவித்தனர். அப்படி அறிவித்த உடனேயே ரஷ்யா அதை வன்மையாகக் கண்டித்தது. வர்த்தக உறவு என்ற பெயரில், இந்த நாடுகளைப் பிரித்து தனக்கு எதிராகத் திருப்பிவிட மேற்கத்திய ஐரோப்பிய நாடுகள் சதிசெய்கின்றன என்று சாடியது. இந்த வர்த்தக ஒப்பந்தம் ரஷ்யாவுக்கு எதிரானது என்று அப்போது அதிபராக இருந்த மெத்வதேவ் வன்மையாகக் கண்டித்தார்.

அந்த மாதம் நேட்டோ நாடுகள் தங்களுடைய இராணுவப் போர் ஒத்திகையை ஜோர்ஜியா நாட்டில் நடத்தின. அந்த நாடும் சோவியத் ஒன்றியத்தின் அங்கமாக இருந்து விடுதலையான நாடுதான்.

இந்த நாடுகள் அரசியல் ரீதியாக நிலையான ஆட்சியின் கீழ் வருவதும், வளம் பெறுவதும், வெளிப்படையான பொருளாதாரக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதும் ரஷ்யாவுக்கும் ஐரோப்பாவுக்கும் நன்மையயக்கும் என்று ஐரோப்பிய நாடுகளின் வெளியுறவுக் கொள்கைத்துறைத் தலைவர் ஜேவியர் சோலனா அப்போது சுட்டிக்காட்டினார்.



உக்ரைன் ஜனாதிபதி யனுகோவிச் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின்

### நிறைவேற்ற முடியாத இரண்டு நிபந்தனைகள்

மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பொருளாதார, வர்த்தக உறவு வைத்துக்கொள்வது, ஐரோப்பியக் கண்டத்துக்கே நல்லது என்பது வெளிப்படையான உண்மைதான். ஆனால், அதற்காக மேற்கத்திய ஐரோப்பிய நாடுகள் விதித்த இரு நிபந்தனைகளும் யனுகோவிச்சால் நிறைவேற்ற முடியாதவை.

யனுகோவிச்சின் அரசியல் எதிரியும் முன்னாள் பிரதமருமான யூலியா டைமஷென்கோவைச் சிறையிலிருந்து விடுவிக்க வேண்டும், சந்தைப் பொருளாதாரத்துக்கு ஏற்ற மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் என்பவையே அந்த நிபந்தனைகள். உக்ரைனைத் தங்கள் பக்கம் கொண்டுவர அதற்குத் தேவைப்படும் நிதியுதவியை அளிக்க பன்னாட்டுச் செலாவணி நிதியத்திடம் பேசுகின்றனர் ஐரோப்பியத் தலைவர்கள். ஆனால், அதில் வேகம் போதவில்லை. அதே சமயம், புடினைச் சந்திக்கும்போது யனுகோவிச் தங்கள் நாட்டுக்குத் தேவைப்படும் உதவிகளையும் சலுகைகளையும் அதிகம் வலியுறுத்துவார் என்று தெரிகிறது.

யனுகோவிச்சுக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்வது ஒருபக்கம் இருக்கும் அதே வேளையில், நாட்டின் பெரிய தொழிலதிபர்களும் அவர்களுக்கு ஆதரவாக இறங்கியிருக்கிறார்கள். உக்ரைன் அரசின் ஊழலும் தொழில் – வர்த்தகத்தில் அரசின் தலையீடும் அவர்களைக் கோபப்படுத்தியிருக்கின்றன. அத்துடன் தங்களுடைய வீடுகளிலும் அலுவலகங்களிலும் திடீர் திடீரென சோதனை போட்டுத் தங்களை துன்புறுத்துவதையும் அவர்கள் விரும்பவில்லை.

ரஷ்யா உதவிகளைச் செய்தாலும், அந்தக் கடன்களுக்கு அநியாய வட்டி செலுத்த வேண்டியிருப்பதாக உக்ரைன் அரசு உயரதிகாரிகளே தெரிவிக்கின்றனர். எனவே, குறைந்த வட்டிக்கு வேறு யாராவது கடன் கொடுத்தால், உக்ரைன் மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் செல்வதற்கும் வாய்ப்பு இருக்கிறது என்கிறார்கள். பன்னாட்டுச் செலாவணி நிதியம் கடன் கொடுத்தாலும், அவர்கள் விரும்பும் பொருளாதாரச் சீர்திருத்தங்களை உக்ரைன் அரசு வேகமாகச் செய்யும் என்பது நிச்சயமில்லை. எனவே, கடன் கொடுப்பதும் ஆபத்துதான் என்ற எண்ணமும் வங்கித் தலைவர்களிடம் இருக்கிறது.

உக்ரைன் மட்டுமல்ல, சோவியத் ஒன்றியத்தில் முன்னர் இருந்த நாடுகளான மோல்டோவா, ஜோர்ஜியா ஆகியவற்றுடனும் வர்த்தக உறவுகளை வளர்த்துக்கொள்ள மேற்கு ஐரோப்பிய நாடுகள் விரும்புகின்றன. உக்ரைனில் இப்போது நடக்கும் கிளர்ச்சி வெறும் வர்த்தக உறவுக்காக மட்டுமல்ல, அரசியல், இராணுவக் காரணங்களுக்காகவும் என்பதே உண்மை. இந்தக் கிளர்ச்சியை யார் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளப் போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

(நன்றி: நியூயோர்க் டைம்ஸ்)

# பில்கேட்ஸ்

## உலகப் பணக்காரர் உருவான கதை

அழகிய பாண்டியன்



தனது விண்டோஸை வெளியிடும் எல்லாக் கணினி நிறுவனங்களும் அத்துடன் இன்ரநெற் எக்ஸ்ப்ளோரரையும் சேர்த்தே வெளியிட வேண்டும்' என்று மைக்ரோசொஃப்ட் கட்டாயப் படுத் தியது.

"இதை யாரேனும் மறுத்தால், அவர்களின் கணினிகளுக்கு எங்களின் விண்டோஸைத் தரமாட்டோம்" என்றும் மிரட்டியது!

எந்தக் கணினியில் விண்டோஸ் இருக்கிறதோ அதைத்தான் மக்கள் இப்போது போட்டி போட்டு வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். விண்டோஸ் இல்லாத கணினியை வாங்க மக்கள் தயாராக இல்லை.

"விண்டோஸ் இல்லாவிட்டால் நம்முடைய கணினி விற்பனை பாதித்து விடும்" என்று பயந்த கணினி நிறுவனங்கள் விண்டோஸுடன் எக்ஸ்ப்ளோரரையும் சேர்த்து விற்கச் சம்மதித்தார்கள்.

அப்புறம் என்ன? எக்ஸ்ப்ளோரரின் வேகம் ஜெட் வேகத்துக்கு மாறியது. ஒரு விண்டோஸ் விற்கும்போது கூடவே இந்த எக்ஸ்ப்ளோரரும் சென்று விடுகிறதல்லவா?

மைக்ரோசொஃப்ட் அத்துடன் நிற்கவில்லை. தனது எக்ஸ்ப்ளோரரின் தரத்தை மீண்டும் அதிகரித்து 1998 இல் "இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர் 5.0" என்றொரு புதிய உலாவியையும் வெளியிட்டது.

அதே ஆண்டில் வெளியான "விண்டோஸ் 98" என்ற இயங்குத் தளத்துடன் புதிய எக்ஸ்ப்ளோரர் 5.0 சேர்த்தே வெளியிடப்பட்டது.

இந்த விண்டோஸும், எக்ஸ்ப்ளோரரும் ஒரே தாயின் வயிற்றில் பிறந்த அண்ணன் தம்பிகள் அல்லவா? அந்த ரத்த பாசத்தில் இருவரும் ஒன்றாக இணைந்து நன்றாக வேலை செய்ததில் "இவர்களின் கூட்டணி" மக்களுக்கும் பிடித்துப் போனது.

விண்டோஸ் அண்ணன் நுழைகிற இடத்தில் எல்லாம் கூடவே எக்ஸ்ப்ளோரர் தம்பியும் வெற்றிக்கொடி நாட்டிக் கொண்டிருந்தான்.

விண்டோஸுடன் சேர்த்து அழையா விருந்தாளியாக எக்ஸ்ப்ளோரரும் போவது தவிர்க்க முடியாத விடயமாகி விட்டது. இப்போது இன்டர்நெட் குத்துச் சண்டை மேடையில் "எக்ஸ்ப்ளோரர்" விட்ட குத்துக்களைத் தாங்க முடியாமல் 'நெட்ஸ்கேப்' இரத்தக் காயங்களுடன் தள்ளாடிக் கொண்டிருந்தது

தாக்குப் பிடிக்க முடியாத ஆண்ட்ரீசன் தனது 'நெட்ஸ்க்கேப்' நிறுவனத்தை "அமெரிக்கா ஆன்லைன்" என்ற நிறுவனத்துக்கு விற்றுவிட்டார்.

மைக்ரோசொஃப்டை எதிர்த்து அவர்களாலும் தாக்குப் பிடிக்க முடியவில்லை. விரைவிலேயே ப்ரௌஸர் பிஸினஸிலிருந்தே விலகிக் கொண்டார்கள்.

அதன் பிறகு இன்டர்நெட் ப்ரௌஸர் சந்தையிலும் மகாராஜாவாக முடிசூடிக் கொண்டது மைக்ரோசொஃப்ட்.

பில்கேட்ஸின் இமாலய விண்டோஸ் வெற்றியைத் தானே இதுவரையில் பார்த்தோம். அந்த வெற்றிக்குப் பின்னால் அவர் கொடுத்த விலையைப் பார்ப்போம்.

### உடைந்து போன நட்புகள்

ஆரம்ப காலத்தில் விண்டோஸ் சிஸ்டத்தில் சில பிழைகள் இருக்கவே செய்தன. ஒரே நேரத்தில் பல்வேறு விண்டோக்கள் திறந்து கொண்டு ஒட்டுமொத்த கணினி திரையை அடைத்துக் கொள்ளும்.

தேவையானதை மட்டும் வைத்துக் கொண்டு தேவையற்ற விண்டோக்களை நீக்குவதென்பது இயலாத காரியமாக இருந்தது. அதன்பிறகு வெளியான விண்டோஸ் 2.03 வடிவம்தான் இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

அதன் பிறகு விண்டோக்கள் மொத்தக் கணினி திரையையும் அடைக்காமல், ஒரு விண்டோவுக்குப் பின்னால் மற்றொரு விண்டோவாக வரிசையாக நின்றன. இதில் தேவையானதை மட்டும் எடுத்துக் கொண்டு மற்றவற்றை ஒதுக்கி விடலாம்.

ஒன்றின் மீது ஒன்றாக விண்டோக்கள் வரிசை கட்டி நிற்கும் அழகு ஒவர்லப்பிங் விண்டோஸ் (Overlapping Windows) என்று அழைக்கப்படுகிறது. இந்த உத்தியைக் கணினி பயனாளர்கள் வெகுவாகவே ரசித்துப் பயன்படுத்தினார்கள்.

விண்டோஸில் கூடுதலாக ஒரு வசதியை ஆரம்பித்திருக்கிறோம் என்று ஆனந்தக் களிப்பில் பில்கேட்ஸ் குழுவினர் இருந்த நேரத்தில்தான் அவர்கள் மீது ஒரு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. சுமத்தியவர் ஆப்பிள் நிறுவனத்தின் ஸ்டீவ் ஜாப்ஸ்.

ஒரு காலத்தில் பில்லின் நெருங்கிய நண்பராக இருந்தவர். குற்றச்சாட்டு என்னவென்றால், "விண்டோஸில் இருக்கும் ஒவர்லப்பிங் விண்டோஸ் வசதி எங்கள் மேகின்டாஷ் ஆபரேட்டிங் சிஸ்டத்தில் இருந்து திருடியது. அதனை தனது விண்டோஸில் இணைத்து இலாபம் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பது ஸ்டீவ் ஜாப்ஸின் வாதம்.

அத்துடன் மேகின்டாஷில் இருக்கும் வேறு பல உத்திகளையும் கூட விண்டோஸில் இணைத்திருக்கிறார் என்று எரிமலையாய் வெடித்தார்.

இந்த ஒவர்லப்பிங் விண்டோஸ் வசதியை முதன் முதலில் ஆப்பிள் தான் கண்டுபிடித்தார். என்றால் நிச்சயமாக இல்லை. இதற்கு முன்பே இந்த் உத்தியை ஜெராக்ஸ் பாக் ஆராய்ச்சி நிறுவனம்தான் முதன் முதலில் கையாண்டு பார்த்தது.

அதிலிருந்து உருவப்பட்டதுதான் மேகின்டாஷ். தன்னிடமிருந்து திருடி விட்டதாக ஜெராக்ஸ் பாக் நிறுவனம் அப்பிள் மீது குற்றம் சாட்டவுமில்லை. வழக்குப் போடவுமில்லை.

ஆனால் அப்பிள் நிறுவனம் மைக்ரோசொப்ட் மீது குற்றம் சுமத்தீ நீதிமன்றில் வழக்குத் தொடுத்தது.

மேகின்டாஷ் வெளியீட்டுக்குப் பிறகே விண்டோஸ் வெளியாகி இருந்ததால் அப்பிளின் குற்றச்சாட்டில் நியாயம் இருந்தது. ஸ்டீவ் ஜாப்ஸ் மற்றொரு உண்மையையும்போட்டுஉடைத்தார்.

தொடக்கத்தில் மேகின்டாஷுக்கு ஏற்ற வகையில் மென்பொருள்கள் எழுதவேண்டும்என்பதற்காக, மேகின்டாஷின் அனைத்துத் தொழில்நுட்ப விவரங்களையும் பில்கேட்ஸிடம் சொல்லி இருந்தேன். அப்போதே அதைத் தெரிந்து கொண்டிருந்த பில்கேட்ஸ், சிஸ்டத்தை விலைக்கு விற்குமாறு என்னிடம் சொன்ன ஆலோசனையை நான் அன்று மறந்துவிட்டேன்.

இப்போது எங்கள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியே விண்டோஸை உருவாக்கிப் பெரிய அளவில் லாபம் சம்பாதித்துவிட்டார் என்று ஸ்டீவ் ஜோப்ஸ் சொன்னபோது விண்டோஸின் 'பிறப்பு இரகசியம்' வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

எல்லாவற்றையும் புரிந்துகொண்ட நீதிமன்றம் " அப்பிள் நிறுவனத்துக்கு மைக்ரோ சொப்ட் நட்டஈடு தர வேண்டும் " என்று தீர்ப்பளித்தது.

தொழிலில் இதெல்லாம் சகஜமப்பா என்று மனசுக்குள் சொல்லிக் கொண்டவாறு அப்பிளுடன் சட்டப்படியாக ஓர் உடன்பாடு செய்துகொண்டு ஒரு பெரிய தொகையை அப்பிளுக்குக் கொடுத்துப் பிரச்சினையை முடித்துக் கொண்டார் கேட்ஸ்.

இதைப் பார்த்த ஜெராக்ஸ் பாக் நிறுவனமும் இதே குற்றச்சாட்டின் பேரில் ஆப்பிள் மீது வழக்குத் தொடுத்து நஷ்டஈடு கோரியிருக்கலாம். ஏனோ அந்த நிறுவனம் அவ்வாறு செய்யவில்லை. அப்பிளின் நல்ல நேரம்.

*(வளரும்)*





## பாதை மாறும் இளைஞர் சமுதாயம்

இப்போதெல்லாம்
விட்டில்கள் விளக்குகளை
நாடுவதில்லை
அடுப்புக்குள்ளேயே வாழ்வதால் !
யௌவனங்கள்
ஜென்மப் பயன் தெரியாமலேயே
ஜீரணித்து விடுகின்றன !

அன்னையவள் பெற்றெடுத்த
பொற் பிள்ளையவன்
கட்டிளமைக் காந்தம்
கவர
வாலிபனாகின்றான்

இளமை, நட்பு, காதல்
ஒரு பக்கமாக
குடிவெறி, கூத்து
மறுபக்கமாக- தன்
புத்தகத்தை தானே
புரட்டிக் கொள்கின்றான்
ஒவ்வொரு வரியையும்
தலைகீழாகவே வாசிக்கின்றான் !

புகையும் பகையும்
பாடம் நடத்த
போத்தலும் போனும்
சிநேகிதங்களாக

தள்ளாடித் தடுமாறியே
வீடு சேர்கின்றான்
பள்ளி முடிந்து !

பேணிகளில் பெருமை
தேடித்
தினம் ஏணிகளை
இறங்கவே
பாவிக்கின்றான் !
கடந்ததைக்
கடைசியில் நினைத்து
கண்ணீரில்
கரைக்கின்றான்
தன் வாழ்வை !



*கெ.நிப்தன்*
*கொழும்புத்துறை.*



அசை போட
ஒரு விடயம்
106

# அகாஷி
## வருகையின் பின்னணி

அகாஷி நீதியமைச்சருடன் நடத்திய பேச்சுக்களின்போது 2006 ஆம் ஆண்டு திருகோணமலையில் 5 மாணவர்கள் கொல்லப்பட்டமை மற்றும் மூதூரில் 17 உதவிப் பணியாளர்கள் கொல்லப்பட்டமை தொடர்பாகவும் அரசு எடுத்துள்ள செயற்பாடுகளின் விவரம் அறிய முயன்றார் எனத் தெரிகிறது. இந்த விடயங்களில் அரசு மேற்கொண்டுள்ள சட்ட மற்றும் நீதித்துறை செயற்பாடுகள் அகாஷிக்கு விளக்கப்படுத்தப்பட்டுள்ளன.

ரம்யன்

யசூசி அகாஷி, இலங்கையில் அமைதியை ஏற்படுத்தவும் மீள் குடியமர்வு மீள்கட்டுமானம் போன்ற விடயங்களில் உதவி புரிவதற்கெனவும் கடந்த 2002 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். இந்த நியமனத்தின் பின்னர் அகாஷி 23 தடவைகள் இலங்கைக்கு வருகை புரிந்திருக்கிறார்.

அகாஷியின் இந்தமுறை வருகையானது எவ்விதமாக பலன்களைத் தரப்போகிறது என்பது விளக்கமில்லாமல் போனாலும் இலங்கை விவகாரங்களில் குறிப்பாக வர்த்தகம் மற்றும் கட்டுமானப் பணிகளில் சீனா அதிகமாகவே அக்கறை கொண்டிருக்கும் நிலையில் ஜப்பானின் அக்கறையையும் வெளிப்படுத்திக்கொள்வது அகாஷியின் நோக்கமாக இருக்கலாம். கிழக்கு சீனக் கடற்பகுதியிலுள்ள சில தீவுகள் தொடர்பாக சீனாவுக்கும் ஜப்பானுக்கும் பிணக்குகள் அதிகரித்து முறுகல் நிலை உருவாகி இருக்கின்றது. அந்தப் பின்னணியில் இலங்கையில் இரு நாடுகளும் அக்கறை கொள்வதானது ராஜதந்திர முறையில் எதிர்கால அக்கறைகள் அடங்கியிருக்கலாம் என்று யோசிப்பதில் தவறில்லை.

சீனாவின் உதவிகளை அதிகம் அதிகமாகவே நாடிச் சென்று கொண்டிருந்த இலங்கை பின்னர் ஜப்பானின் உதவிகளையும் நாடிச் செல்லத் தொடங்கியது. இலங்கையின் சீன சார்பு இந்தியாவைக் கலக்கத்துக்குள்ளாக்கியிருந்த நிலையில் ஜப்பானுடனான உறவுசீனாவை சிந்திக்க வைத்திருக்கலாம். அதனால் தானோ என்னவோ மனித உரிமைகள் பேணப்படுவது தொடர்பாக சீன அதிகாரி ஒருவர் அண்மையில் பட்டும் படாமல் இலங்கையை கண்டித்திருந்தார். அது இலங்கையில் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தது. அதற்கு சீனத் தரப்பிலும் இலங்கை தரப்பிலும் சமாதானங்கள் வெளியிடப்பட்டிருந்தன. சீனக்கடல் பிராந்திய தீவுகள் தொடர்பாக ஜப்பான் கொண்டிருக்கும் நிலைப்பாட்டில் அமெரிக்காவின் ஆதரவும் இருக்கிறது. அமெரிக்காவுக்கு இலங்கை விவகாரத்தில் அக்கறையுண்டு. இந்த நிலையில் அகாஷியின் வருகையின் பின்னணியில் பல்வேறு மறைமுக நகர்வுகள் இருப்பது சாத்தியமே. அவை காலப்போக்கில் வெளிப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

அடுத்த வருடம் மார்ச்சில் மனித உரிமைகள் சபை மாநாடு ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் நிலையில் வடக்கு மாகாண சபைத் தேர்தலை இலங்கை நடத்தியிருப்பதை ஜப்பான் தேசிய நல்லிணக்கம் தொடர்பில் முன்னேற்றகரமான ஒரு நகர்வு என்று பாராட்டியிருந்தது. இலங்கைக்கு வந்த அகாஷி பல முக்கிய பிரமுகர்களைச் சந்தித்தார். வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் போன்றவர்களைச் சந்தித்த போது நல்லிணக்க ஆணைக்குழுவினால் தெரிவிக்கப்பட்டிருந்த பொறுப்புக் கூறும் விடயங்களில் அரசின் முன்னேற்றம் எப்படி இருக்கிறது என்பதை ஆராய்ந்ததாகச் செய்திகள் கூறின. ஜெனிவா மாநாட்டுக்கு முன்பதாக ஏதாகிலும் முக்கிய நடவடிக்கையை எடுத்துமனித உரிமை சபையின் தாக்கத்திலிருந்து தப்பிக் கொள்வதற்கு முயற்சி செய்யுமாறு அரசுக்கு அவர் ஆலோசனை வழங்கியிருப்பார் என்று பொதுவாக நம்பப்படுகின்றது.

அகாஷி நீதியமைச்சருடன் நடத்திய பேச்சுக்களின்போது 2006 ஆம் ஆண்டு திருகோணமலையில் 5 மாணவர்கள் கொல்லப்பட்டமை மற்றும் மூதூரில் 17 உதவிப் பணியாளர்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக அரசு எடுத்துள்ள செயற்பாடுகளின் விவரம் அறிய முயன்றார் என்று தெரிகிறது. இந்த விடயங்களில் அரசு மேற்கொண்டுள்ள சட்ட மற்றும் நீதித்துறை செயற்பாடுகள் அகாஷிக்கு விளக்கப்படுத்தப்பட்டுள்ளன.

எதுவானாலும் இவ்வித மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்து சர்வதேசத்தை சமாதானம் கொள்ளச் செய்யாது போனால், ஜெனிவா மாநாட்டில் அரசுக்கு இக்கட்டான நிலைமையே ஏற்பட வாய்ப்புண்டு என்று அகாஷி எச்சரித்திருப்பார் என்று கருதலாம்.

அண்மையில் இலங்கைக்கு வந்து சென்ற மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஜெனிவா மாநாட்டில் தமது இலங்கை பயணம் மீதான அறிக்கையை மனித உரிமை சபையில் தாக்கல் செய்யவிருக்கிறார். அதேசமயம் இலங்கைக்கும் அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகளுக்கிடையில் ஒரு சமன்பாட்டை ஏற்படுத்த அகாஷி முயன்றார் எனவும் அதன் நிமித்தமே இந்தியத் தூதுவர் மற்றும் பிரமுகர்களை சந்தித்ததாகவும் கூறப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனை சந்தித்த போது அகாஷி பல விடயங்களையும் விரிவாக ஆராய்ந்தார் எனவும் தேசியப் பிரச்சினை பற்றிய விடயத்தில் ஒரு தீர்வினை எட்டுவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு போதிய அவகாசம் கொடுக்க வேண்டும் என்று அகாஷி தெரிவித்துள்ளார் என்றும் தெரிகிறது. போர் முடிந்து நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. ஒரு தீர்வினை ஏற்படுத்த இந்தளவு அவகாசம் போதாதாவென்று சம்பந்தன் திருப்பிக் கேட்டிருக்கிறார். இப்பொழுது 23 தடவைகள் வந்து சென்றுவிட்டார்.

24 ஆவது தடவையாகவும் வந்து பாரும். அப்போதும் இங்கு ஒன்றும் நடைபெற்றிருக்காது என்று சம்பந்தன் நக்கலாகக் கூறியதாகச் செய்திகள் கூறின.



## ஒபாமா-காஸ்ட்ரோ கை குலுக்கல்

தென்னாபிரிக்க விடுதலை வீரர் முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலாவின் இறுதிச் சடங்கில் பல்வேறு நாடுகளின் தலைவர்களும் கலந்துகொண்டு இரங்கல் தெரிவித்திருந்தார்கள். நிகழ்வில் கலந்துகொள்ளச் சென்றிருந்த அமெரிக்க அதிபர் ஒபாமா தமது இருக்கைக்கு நடந்து செல்கையில் அங்கு ஏற்கனவே வந்திருந்த கியூபாவின் அதிபர் ராவுல் காஸ்ட்ரோவைக் கண்டு அவருடன் கைகுலுக்கிய பின்னரே இருப்பிடத்துக்குச் சென்றுள்ளார். இரு தலைவர்களும் கைகுலுக்குவதை உலக ஊடகங்கள் எல்லாம் பல விதமான கோணங்களில் காண்பித்து மகிழ்ந்தன. பத்திரிகைகளிலும் படங்கள் வெளியாகியிருந்தன.

கியூபாவும்-அமெரிக்காவும் பகை நாடுகள்- கென்னடி அமெரிக்காவிலும் குருசேவ் சோவியத் யூனியனாலும் அதிகாரத்திலிருந்தபோது ஏற்பட்ட கியூபா முற்றுகை மிகப் பெரிய மோதலாக வெடிக்கவிருந்த நிலைமை கென்னடியின் சாதுர்யமான செயற்பாட்டால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாகக் கூறப்படுவதுண்டு.

மன்னிக்கும் மனப்பான்மையைக் கொண்ட மண்டேலாவின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள வந்த ஒபாமா மாற்றுக்கொள்கையாளரான ராவுல் காஸ்ட்ரோவுடன் கை குலுக்கியதைச் சிலர் குறை கூறினாலும் பலர் பெருந்தன்மையாகக் கருதிப் பாராட்டியுள்ளார்கள்.

அதைவிட மண்டேலாவின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள வந்திருந்த உலகத் தலைவர்களில் பலரும் போலியானவர்கள். மனதில் மண்டேலாவின் கொள்கைகள் எதனையும் எண்ணிக்கூடப் பார்க்க முடியாதவர்கள் என்று சில ஊடகங்கள் கருத்து வெளியிட்டிருந்தன.

மண்டேலாவின் இறுதிச் சடங்கினை நேரடியாக தொலைக்காட்சியில் வர்ணித்துக் கொண்டிருந்த ஒருவர் ஒபாமா ராவுல் காஸ்ரோவுடன் கைகுலுக்கியதைக் குறிப்பிட்டபோது மண்டேலா தனது போராட்டங்களுக்கு கியூபாவிலிருந்தே ஊக்கம் பெற்றார் என்று காஸ்ட்ரோ கூறியதைச் சுட்டிக்காட்டினார். அதற்கு அவருடன் இணை விமரிசகராக இருந்தவர் கியூபாவிலிருந்து ஊக்கம் பெற்றாலும் மண்டேலா ஆபிரிக்காவில் ஜன நாயகத்தை நிலைநாட்டினார் என்றார். அதற்கு மற்றவர் அது மட்டுமல்ல மன்னிக்கவே கூடாதவர்களுக்கும் அவர் மன்னிப்பு வழங்கிய பெருமைக்குரியவர் என்றார். இந்த சொற்கள் அங்கு வீற்றிருந்த எத்தனை பேருக்கு உறைத்திருக்கும் என்று தெரியவில்லை. மஹிந்தவும் அங்கிருந்தார்.



தலைப்பாக்கட்டு பிரியாணியாக இல்லாமல் மிக மோசமான சொதப்பலான சாப்பாடாக மாறியிருக்கிறது பிரியாணி.






# விடலைப் பிள்ளை விளையாட்டு

விளையாட்டு விடலைப் பிள்ளைகளான நண்பர்கள் இருவர் பிரியாணி சாப்பிடும்போது ஒரு பெண்ணின் காம வலையில் விழுவதால் விளையும் விபரீதங்கள்தான் வெங்கட் பிரபுவின் 'பிரியாணி' படம். பிரியாணி சாப்பிடப்போன இடத்தில் வந்த வில்லங்கம் என்பதால் படத்துக்கு அதுவே தலைப்பு. அது தவிர வேறு எந்தத் தொடர்பும் கிடையாது படத்துக்கும் பிரியாணிக்கும். நல்லவேளை கழிக்கப்போன இடத்தில் எந்த வில்லங்கமும் வரவில்லை. இல்லையேல் அப்படி ஒரு பெயர் வைத்திருப்பார்கள் படத்துக்கு. என்ன துன்பியல் இது தமிழ்ப் படங்களுக்கு?

பொலிஸ் துரத்த, சுகனும் (கார்த்தி) பரசுவும் (பிரேம்ஜி) காரில் பறக்கும் காட்சியில் தொடங்குகிறது கதை. இருவரையும் ஏன் பொலிஸ் துரத்துகிறது என்ற கதையை விவரிக்கிறார் பரசு. சுகன் பிரியங்காவைக் (ஹன்ஸிகா) காதலித்தாலும் பார்க்கிற பெண்களிடம் எல்லாம் ஜொள்ளு விடுகிறான். பரசுவோ பெண்களைக் கவர முடியாமல் தோற்றுப்போகிறான். இருவரும் பணி நிமித்தமாக ஆம்பூர் போகிறார்கள். அங்கே இந்தியாவின் மிகப் பெரும் 10 பணக்காரர்களில் ஒருவரான வரதராஜனைப் (நாசர்) பேட்டி எடுக்கும் வாய்ப்பு சுகனுக்கு அமைகிறது. சுகனை வரதராஜனுக்குப் பிடித்துப்போகிறது.

இதற்கிடையில், வரதராஜனுக்கு உள்ளூர் கல்லுடைக்கும் தொழிலில் நடந்த மோசடியில் இருக்கும் தொடர்பைப் புலனாய்வு செய்ய இந்திய மத்திய புலனாய்வுச் சேவையைச் சேர்ந்த சி.பி.ஐ. அதிகாரி சென்னைக்கு வருகிறார். அதே நேரத்தில் வரதராஜனைக் காணவில்லை என்ற தகவலும் வருகிறது.

வரதராஜனின் மருமகன் விஜய் கிருஷ்ணா (ராம்கி) பொலிஸ் உதவியுடன் அவரைத் தேடத் தொடங்குகிறார். சி.பி.ஐ. அதிகாரியும் சென்னையின் உள்ள தன் நண்பனான பொலிஸ் அதிகாரி விக்ரமுடன் (பிரேம்) சேர்ந்து வரதராஜனைத் தேடுகிறார்.

சுகனும் பரசுவும் திரும்பிவரும் வழியில் 'பிரியாணி' சாப்பிடும் இடத்தில் மாயா (மாண்டி தக்கர்) என்னும் பெண்ணால் கவரப்பட்டு அவள் பின்னால் போகிறார்கள். அது அவர்களை வரதராஜன் கொலையில் சிக்கவைக்கிறது. சதி வலை அவர்களைச் சுற்றி இறுக்குகிறது. அதிலிருந்து எப்படித் தப்பினார்கள் என்பதே படத்தின் கதை.





இடைவேளைக்கு 15 நிமிடங்களுக்கு முன்தான் கதை சூடுபிடிக்கவே தொடங்குகிறது. அதுவரை சுகனும் பரசுவும் அடிக்கும் ஜொள்ளு லூட்டிகள் எரிச்சலும் அலுப்பும் ஊட்டுகின்றன. துப்பறியும் குற்றக் கதையில் பல ஓட்டைகள். பிணத்தைப் பல நாள்கள் வைத்துக்கொண்டு அலைவது படு அபத்தம். 'மெமரி சிப்' ஒன்றை சி.பி.ஐ. அதிகாரியிடம் கொடுத்தனுப்புகிறான் சுகன். அவர்தான் தன்னைத் தேடுகிறார் என்பது அவனுக்கு எப்படித் தெரிந்தது என்ற கேள்விக்குப் படத்தில் விளக்கமே இல்லை. இரண்டாம் பகுதியில் பல திருப்பங்கள். ஆனால் ஒன்றுகூட நம்பும்படியாக படத்துடன் ஒன்றும்படியாக இல்லை. பொலிஸாக வந்து வில்லியாக மாறும் உமா ரியாஸ்கான் திருப்பம் கொஞ்சம் பரவாயில்லை என்றாலும் அதுவும் கதைக்கு அவசியம்தானா என்று கேட்க வைக்கிறது. பெண்களைக் காரோடும், பிரியாணி லெக் பீஸோடும் ஒப்பிட்டு கார்த்தியும் பிரேம்ஜியும் பேசுவது ரசிக்கவே முடியாத மிகப் படு அபத்தம்.

நண்பனுக்கு ஒரு பிரச்சினை என்றதும் விட்டுவிட்டுப் போக மாட்டோம் என்று நண்பர்கள் சேர்ந்துகொள்ளும் காட்சியை ஏற்கனவே பல படங்களில் பார்த்தாகி விட்டது. தன்னுடைய அக்காவுக்கு ஏதாவது ஆகி விடுமோ என்று தவிக்கும் காட்சிகளில் மட்டும் கார்த்திக்கு நடிக்க வந்திருக்கிறது. மற்றப்படி அவருக்கு நடிக்கவே வாய்ப்புக் கொடுக்க வில்லை இயக்குநர் வெங்கட்பிரபு. பிரேம்ஜி நகைச்சுவை என்ற பெயரில் ரசிகர்களை அழவைக்கிறார். அடுத்த ஆண்டிலாவது அவர் தனது நடிப்பை மூட்டைகட்டி வைத்து ரசிகர்களுக்கு புத்தாண்டுப் பரிசு வழங்கினால் நல்லது. அழகுப் பதுமை ஹன்ஸிகாவுக்கு இரண்டாம் பகுதியில் கொஞ்சம் நடிக்க வாய்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். அவரால் முடிந்தளவுக்குக் குறை வைக்காமல் செய்திருக்கிறார். யுவன் சங்கர் ராஜாவின் பின்னனி இசை இதம். ஆனால் படத்தில் வீண். மொத்தத்தில் தலைப்பாக்கட்டு பிரியாணியாக இல்லாமல் மிக மோசமான சொதப்பலான சாப்பாடாக மாறியிருக்கிறது பிரியாணி. திருட்டு டிவிடியில் பார்க்கத்தான் இந்தப் படம் லாயக்கு.

# செல்ஃபீ ஒபாமா

இளசுகளையும் நட்சத்திரங்களையும் பாதித்த சுயபட ( ø Selfie) மோகத்திற்கு அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமாவும் ஆளாகியிருக்கிறார் என்பது பெரியளவில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. மண்டேலா நினைவுப் பிரார்த்தனை கூட்டத்தில் ஒபாமாவின் இந்த சுயபட ஆர்வம் குறித்த ஒளிப்படம் வெளியானதும் இணைய பரபரப்பாகி அது பற்றியே பேசிக் கடந்தது.

'ஸ்மார்ட்போன்' யுகத்தில் எங்கேயும் எப்போதும் புகைப்படங்களை எடுத்துப் பகிர்ந்துகொள்ளும் பழக்கம் பிரபலமாகி இருக்கிறது. அது மட்டும் அல்லாமல் ஒருவர் தன்னைத்தானே புகைப்படம் எடுத்து அதனை உடனே சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து கொள்ளும் புதிய பழக்கமும் அறிமுகமாகியுள்ளது. 'ஸ்மார்ட்போனை' அப்படியே முன்னால் நீட்டித் தன்னை தானே சுயமாக புகைப்படம் எடுத்துக் கொள்ளும் இந்த முறையிலான புகைப் படங்களுக்கு சுயபடங்கள் - செல்ஃபீ எனப் பெயரிடப்பட்டுள்ளது.



இந்த சுயபட கலாசாரத்தை பிரபலமாக்கியதில் புகைப்பட பகிர்வு சேவையான 'இன்ஸ்டாகிராமுக்குக்கு' பெரும் பங்கிருக்கிறது. அல்லது 'இன்ஸ்டாகிராமை' பிரபலாமாக்கியதில் சுயபடங்களுக்கு அதிக பங்கிருக்கிறது. மற்றொரு புகைப்பட பகிர்வு சேவையான 'ஸ்னப்சொட்'டும் இந்த பெருமைக்கு உரிமை கோரி போட்டிக்கு வரலாம். முகப்புத்தகத்துக்கும் இதில் கணிசமான பங்கிருக்கிறது. பெரும்பாலும் இளசுகள் மத்தியில் தான் இப்படித் தன்னைத்தானே புகைப்படம் எடுத்து வெளியிட்டுக் கொள்ளும் 'பைத்தியம்' இருக்கிறது. சினிமா மற்றும் விளையாட்டுப் பிரபலங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. இணைய நட்சத்திரங்களாகவும் இருக்கும் மைலி சைர்ஸ் மற்றும் கிம் கர்தாஷியான் போன்றவர்கள் சுயபட மோகத்தை வளர்த்தெடுக்கும் பெருமைக்குரியவர்கள்.

சுயபட மோகம் எந்த அளவுக்கு பிரபலமாக இருக்கிறது என்றால், ஒக்ஸ்போர்ட் மொழி அகராதி இந்த ஆண்டின் சொல்லாக செல்ஃபீயை தேர்வு செய்யுமளவுக்கு இருக்கிறது. இப்படித் தன்னைத்தானே படமெடுத் துக்கொள்ளும் பழக்கம் ஆரோக்கியமானதா, இதன் உளவியல் தேவை என்ன? என்றெல்லாம் விவாதங்கள் தூள் பறக்கின்றன. சுயபட கலாசாரம் தொடர்பான சர்ச்சையில் ஒபாமா போன்ற தேசத் தலைவர்களை சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று யாரும் நினைத்துக்கூடப் பார்த்திருக்க மாட்டார்கள். ஆனால் அதுதான் நடந்திருக்கிறது.

நெல்சன் மண்டேலா நினைவாக நடைபெற்ற பிராத்தனை கூட்டத்தில் பங்கேற்றபோது அமெரிக்க அதிபர் ஒபாமா சுயபடம் ஒன்றின் மையமாக இருந்தது விவாதத்திற்கு உள்ளாகி உள்ளது. இந்தக் கூட்டத்தின்போது எடுக்கப்பட்ட சுயபடத்தில் டென்மார்க் பிரதமர் ஹெல்லே தோரிங் ஸ்கிமிட் கையில் ஸ்மார்ட்போனுடன் நடுவில் இருக்கிறார். அவருக்கு அருகே ஒபாமா மற்றும் இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமெரூன் ஆகியோர் உள்ளனர்.

தலைவர்கள் இப்படி 'ஸ்மார்ட்போனில்' தங்களைப் பார்த்து கொண்டிருக்கும் காட்சியை ஏ.எஃப்.பி புகைப்பட கலைஞர் ஒருவர் புகைப்படம் எடுத்து வெளியிட்டார். இந்தப் புகைப்படம்தான் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

நினைவுக் கூட்டத்தில் தலைவர்கள் இப்படி நடந்து கொண்டிருப்பது சரியா என பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ஆனால் இந்தப் புகைப்படத்தைத் தனியே பார்க்காமல் சரியான கண்ணோட்டத்தில் நோக்க வேண்டும் என்றும் சிலர் வாதிடுகின்றனர்.

எப்படியோ ஏற்கெனவே பிரபலமாகி இருக்கும் சுயபட கலாசாரத்திற்கு இப்போது இப்படியும் ஓர் அங்கீகாரம்.





பொரு ளாதார ரீதியாகவும் இன்று வலுப் பெற்றுள்ள பெண்கள் தங்களுடைய தேவைகளுக்காக யாரையும் எதிர்பார்க்காமல் தாங்களே பூர்த்தி செய்து கொள்ளும் அளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ளார்கள்.

# பெண்ணின் பெருந்தக்க யாவுள?

காயத்ரி

பெண்கள் நாட்டின் கண்கள். தன்னை வருத்தி தன்னைச் சார்ந்த வர்களுக்காக நித்தமும் உழைக் கும் தியாகத்தின் பிரதிபலிப்பு. ஒரு கிலோ எடையைக்கூட அடிக் கொருதரம் கைமாற்றுபவர்களுக் கிடையில், தன் வயிற்றில் சுமக்கும் மழலையை பத்து மாதம் பேணிக் காக்கும் உன்னதம். தன் குழந் தைக்கு உதிரத்தையே பாலாய் புகட்டும் உயர்வு. பெண்ணாய்ப் பிறப்பதும் மாதவமே.

அன்று பருவமடைந்த பெண் பள் ளிக்கு செல்லத் தடை விதிக்கப்பட் டது. அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என பெண்களின் அன்றாட வாழ்வு அடுக்களையி லேயே கழிந்தது. கருத்துரிமை கிடையாது. அந்நிய ஆணிடம் பேசுவதற்கே அஞ்சினார்கள். இள வயதிலேயே திருமணம் செய்து வைத்து விடுவதால் வெளிஉலகம் அறியும் முன்னே வாழ்க்கையில் ஈடுபடுத் தப்பட்டனர். ஒவ்வொரு நிலையி லும், தந்தை, சகோதரன், கணவன் என ஆணுக்கு கட்டுப் பட்டு அவர்களைச் சார்ந்தே தன் சுயம் இழந்து வாழ்ந்தார்கள். இளவயதிலேயே கணவனை இழந்தாலும் தமது வாழ்வு அதோடு முடிந்து விட்டதாகவே வெறுமை யான வாழ்வை மேற்கொண்டனர். விரும் பியோ, விரும்பாமலோ.

பருவமடைந்த பெண் பள்ளிக்குச் செல்லத் தடை விதிக்கப்பட் டது. அடுப்பூதும் பெண் களுக்கு படிப்பெதற்கு என பெண்களின் அன்றாட வாழ்வு அடுக்களையிலேயே கழிந்தது. கருத்துரிமை கிடையாது.

இன்றைய பெண்கள் தங்களின் வாழ்வை தாங்களே நிர்ணயம் செய்து கொள்ளும் வல்லமை கொண்டுள்ளார்கள். பருவம டைந்த பிறகும் பட்டங்கள் பல வென்று பதவிகள் பல வகிக்கிறார் கள். ஆண்களிடம் பேசுவதற்கே அஞ் சியவர்கள், இன்று ஆண்களிடம் பாலினம் கடந்த நட்புப் பாராட்டும் அளவுக்கு அவர்களின் இன்றைய நிலை உயர்ந்துள்ளது. அந்தி நேரத்தில் வெளியில் செல்லத் தயங்கியவர்களும் இன்று பணி காரணமாக அதிகாலை வீடு திரும்புகின்றனர். இன்று தனக் கான வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் பக்குவமும், உரிமையும் பெற்றுள்ளனர்.

இன்றைய பெண்களின் வளர்ச்சி வியப்பையே அளிக்கிறது. நாடாளுகி றாள்.. விண்வெளியில் பயணம் என வளர்ந்து ஆணுக்குச் சமமாக அனைத்துத் துறையிலும் ஒளிவீசி வருகிறாள். வீடே உலகமென இருந்தவர்கள் கணினி, இணை யம் என உலகத்தையும் வீட்டில் காண்கிறாள். ஆண்களுக்கே உரிய விளையாட்டிலும் கூட பெண் கள் பங்குகொண்டு அசாத்தியமான சாதனை படைக்கிறார்கள். பொரு ளாதார ரீதியாகவும் இன்று வலுப் பெற்றுள்ள பெண்கள் தங்களு டைய தேவைகளுக்காக யாரையும் எதிர்பார்க்காமல் தாங்களே பூர்த்தி செய்து கொள்ளும் அளவு முன் னேற்றம் அடைந்துள்ளார்கள். திருமண வாழ்வு சரியில்லாது போனால் அதை நேர்செய்து தன் வாழ்வை அமைத்துக்கொண்டு சுதந்திரமாக செயல்படுகின்றனர். சமூக அமைப்பில் பெண்கள் தங் களை ஈடுபடுத்தி வருகின்றனர். இருப்பினும் முழு அளவில் அவர் களது சமூகப் பார்வை திருப்தி கரமாக இருக்கிறதா என்றால் இல்லை என்பதே வருத்தமான உண்மை. இன்றும் சமூகம் சார்ந் தவர்களை உதாரணம் சொல்ல வேண்டும் எனில் அன்னை தெரசா, நைட்டிங்கேர்ள் என்று தான் உதாரணம் காட்டி வருகி றோம். அன்னை தெரசாவைப் போல் தம்மை முழுவதும் சமூகத் திற்காக அர்ப்பணித்துக்கொள் ளும் அளவு இன்னும் பெண்களி டையே மனப்பக்குவம் வரவில்லை என் பதே உண்மை.

இன்றைய பெண்கள் பொருளா தாரத்திலும் மற்றும் அனைத்துத் துறையிலும் முன்னேற்றம் அடைந் திருப்பது எவ்வளவு உண்மையோ அதே அளவு இன்றும் பல இடங் களில் பெண்கள் மதிக்கப்படுவ தில்லை என்பதும் உண்மையே. ஆணுக்குச் சமமாக பதவி வகிப் பதையும், ஆண்களைப் போல் உடையணிவதையுமே சுதந்திரம், வளர்ச்சி முன்னேற்றம் எனக் கருதித் திருப்தியடையும் பெண்கள் பலர். முதலில் ஒரு பெண்ணை மற்றொரு பெண் சமமாகப் பாவிக்க வேண்டும். அந்தப் பக்குவம் இன் னமும் இன்றைய பெண்களிடம் இல்லாதது துரதிர்ஷ்டவசமானது. பெண்கள் வளர்ச்சி, முன்னேற்றம், சுதந்திரம் என்பவை என்ன என்பதை முதலில் உணர வேண்டும். நாக ரிக ஆடை அணிவதும், ஆணுக்குச் சமமான நட்பைப் பேணுவதும், பொருளாதாரத்தில் வளர்ச்சியும், கருத்துச் சுதந்திரம் இருக்கிறது என்பதற்காகத் தமது மனம் நினைத் தபடி வாழ்வைத் தீர்மானம் செய் வது மட்டும் அல்ல முன்னேற்றம். உண்மையான முன்னேற்றம், வளர்ச்சி என்பது வீட்டில் தொடங்க வேண்டும். எப்பொழுது ஒரு தாய், தகப்பன், சகோதரன் மட்டும் அல்ல கணவன், மாமியார், மாமனார் என அனைவரும் ஒரு பெண்ணின் முன்னேற்றத்துக்கு உறுதுணை யாக இருப்பதோடு, அவர்களை ஊக் கமளித்துப் பாராட்டுகிறார்களோ அப்பொழுதுதான் அது உண்மை யான வளர்ச்சியாகக் கருதப்படும். வீட்டில் கிடைக்கும் ஊக்கமே பெண் களைச் சமூகத்தை நோக்கி தன் பார்வையைத் திருப்புவதற்கு உத வியாக இருக்கும்.



# தனித் தன்மையுடன் செயல்படுங்கள்

மனதில் ஒரு சித்திரத்தை உருவாக்கி, முன்கூட்டியே திட்டமிடுங்கள். உடனடி எதிர்காலத்தை மறந்து, நீண்ட எதிர்காலத்துக்குத் திட்டமிடாதீர்கள். வேலையை நேசியுங்கள். அதுவே, முழுத் திருப்தி அளிக்கும்.

அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்ற காலம் மலையேறி, எல்லாத் துறைகளிலும், பெண்கள், கோலோச்சிக் கொண்டிருக்கும் காலம் இது. அலுவலகம் என்பது, மற்றொரு வீடாக மாறிபோன சூழ்நிலையில், நாம் எமது தனித் தன்மையுடன் விளங்க வேண்டும்.

அலுவலக பணியில், சூழ்நிலைக்கேற்ப, அனுசரிக்கப் பழகிக் கொள்ளுங்கள். அதற்காக, உங்கள் நோக்கத்தைக் கைவிட வேண்டிய தில்லை.

எதைச் சொல்ல வேண்டுமென்றாலும், வெளிப்படையாகப் பேசுங்கள். அதற்காக, முரட்டுத்தனமாகவோ, மரியாதைக் குறைவாகவோ நடந்து கொள்ளாதீர்கள். இது, உங்கள் மீது வெறுப்பு வளரக் காரணமாகிவிடும்.

சக மனிதரிடத்தில் நம்பிக்கை வைப்பதுடன், தன்னம்பிக்கையுடன் இருங்கள். அதற்காக, ஏமாளியாகவோ, கர்வத்துடனோ இருக்காதீர்கள்.

தொடர்ந்து கடுமையாக உழையுங்கள்; இடைவெளி விட்டு உழைப்பதில் பயனில்லை.

ஏதாவது ஒன்றில், விசேட திறமை மற்றும் பேச்சு, எழுத்து திறமையை வளர்த்துக் கொள்வதுடன், நாட்டில் நடக்கும் தினசரி நிகழ்வுகளையும் அறிந்து வைத்திருங்கள்.

ஒரு விஷயத்தைப்பற்றிப் பேசும்போது, அதில் தெளிந்த அறிவு இருந்தால் மட்டும் பேசுங்கள். அதைவிட்டு, வெறும் வார்த்தை ஜாலங்களில் ஈடுபடாதீர்கள். இது, மற்றவர்களின் நகைப்புக்கு இடமளிக்கும்.

ஒரு செயலுக்குத் திட்டமிடும்போது, அதன் அடிப்படை விவரங்களை அறிந்து, அதற்கு தகுந்தபடி, திட்டமிடுங்கள். அதே சமயம், எந்த விவரங்களையும் அலட்சியப்படுத்தாதீர்கள்.

மனதில் ஒரு சித்திரத்தை உருவாக்கி, முன்கூட்டியே திட்டமிடுங்கள். உடனடி எதிர்காலத்தை மறந்து, நீண்ட எதிர்காலத்துக்குத் திட்டமிடாதீர்கள். வேலையை நேசியுங்கள். அதுவே, முழுத் திருப்தி அளிக்கும். முயற்சியை வளர்த்துக் கொள்ளுங்கள். சிறிய குழிகள்தான், பெரிய பள்ளங்களாகின்றன. துணிவுடன், நேர்மையுடன் இருங்கள். கஷ்டங்களைக் கடக்க, அது உங்களுக்கு உதவும்.

சாரங்கி

## இந்த வாரம் உங்களுக்கு எப்படி...?

22.12.2013 முதல் 28.12.2013 வரை



சுய கௌரவம், பண சேமிப்பை பாதுகாத்தலில், உரிய அக்கறை வேண்டும். உடன் பிறந்தவர் ஓரளவு உதவிகரமாக நடந்து கொள்வர். உழைப்புக்கேற்ற ஓய்வு உடல் நலம் பாதுகாக்க உதவும். தொழிலில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். பணியாளர் அக்கறையுடன் செயற்படுவதால், குளறுபடி வராமல் தவிர்க்கலாம். மாணவர்கள் படிப்பில் சிறந்தவர்களின் உதவியுடன் நல்ல தரமான தேர்ச்சி பெறுவர்.



நடை, உடை, செயலில் புதிய மாற்றம் கொண்டு வருவீர்கள். உங்களின் ஆலோசனையை நண்பர்கள் விருப்பமுடன் கேட்டு பின்பற்றுவர். இல்லறத்துணை கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார். தொழிலில் போட்டி குறைந்து, உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை பெற அனுகூலம் உண்டு. மாணவர்கள், பாதுகாப்பு குறைந்த இடங்களில் செல்வதைத் தவிருங்கள்.



புதிய முயற்சிகளை ஆரம்பிப்பீர்கள். பின்விளைவுகளை கவனத்தில் கொண்டு செயற்படுத்த வேண்டும். அயல் வீட்டார் மற்றும் நண்பரின் குறையைப் பெரிது படுத்தி பேச வேண்டாம். பணியாளர்கள், தமக்குரிய கடமை உணர்ந்து செயற்படுவதால், நிர்வாகத்திடம் நற்பெயர் பெற வழி பிறக்கும். மாணவர்கள், கூடுதல் பயிற்சியினால் மட்டுமே, திட்டமிட்ட தேர்ச்சி பெறஇயலும்.



சுயகௌரவம் பாதுகாக்க தாராள அளவில் பணம் செலவு செய்வீர்கள்.கவனம் தேவை. பூர்வீக சொத்தில் வளர்ச்சி திருப்திகரமாக இருக்கும். அரசு தொடர்பான உதவி கிடைக்க முக்கியஸ்தர் ஒருவர் உதவுவார். பணியாளர்கள் சக பணியாளரிடம் தேவையற்ற பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். மாணவர்கள் தேவையற்ற செலவைத் தவிருங்கள்.



தாமதமான பணி நிறைவேற புதிய வாய்ப்பு வரும். ஆர்வமுடன் பயன்படுத்துவதால் அளப்பரிய நன்மை பெறுவீர்கள். பணத் தேவையின் நெருக்கடியை சமாளிக்க நண்பரின் உதவி கிடைக்கும். தொழிலில் சீர்திருத்தம் பின்பற்றி சில நன்மை பெறுவீர்கள். பணியாளர் நிர்வாகத்தின் சட்ட திட்டம் மதித்து செயற்பட வேண்டும். மாணவர்கள், ஆசிரியரிடம் நற்பெயர் பெறுவதில் கவனம் கொள்வது அவசியம்.



பெண்களின் உதவியால், சில நன்மை வழங்குவார். இல்லறத் துணை குடும்ப நலனில், அக்கறையுடன் நடந்து கொள்வார். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து உபரி பண வரவு கிடைக்கும். பணியாளர்களுக்கு, கூடுதல் வேலை வாய்ப்பு கிடைத்து பணவரவில் முன்னேற்றம் காண்பர். மாணவர்கள், நண்பர்களின் உதவியால் படிப்பில் கூடுதல் தேர்ச்சி பெறுவர்.



உறவினர், நண்பர்களின் வாழ்வியல் சூழ்நிலை உணர்ந்து இயன்ற அளவில் உதவுவீர்கள். கூடுதல் அன்பு, பாசம் கிடைத்து மனம் மகிழ்வீர்கள். எதிரியால் உருவாகிற தொந்தரவு பலமிழந்து போகும். தொழில், வியாபாரத்தில் சராசரி உற்பத்தி, விற்பனை இருக்கும். பணியாளர்கள், அக்கறையுடன் பணிபுரிவதால் நற்பெயரைப் பாதுகாக்கலாம். மாணவர்கள் சிறந்த தேர்ச்சி பெறுவர்.



விற்பனையாளரின் பகட்டான பேச்சை நம்பி அதிக பயன் தராத பொருள் வாங்க வேண்டாம். சிலர் உங்களின் புகழ், கீர்த்தியை சகித்துக் கொள்ள மனமின்றி அவதூறாகப் பேசுவர். சொந்தப் பணியில் ஆர்வம் கொள்வது நன்மை பெற உதவும். சொத்து தொடர்பான ஆவணத்தை கவனமுடன் பாதுகாக்க வேண்டும். இல்லறத் துணை குடும்ப நலன் சிறக்க பணிமேற் கொள்வார். மாணவர்கள் பாதுகாப்பு குறைவான இடங்களில் செல்ல வேண்டாம்.



தாமதமான பணிகளை புதிய முயற்சியால் நிறைவேற்றுவீர்கள். நண்பர், உறவினரின் ஆதரவு கிடைக்கும். இனிய வார்த்தை பேசி சமூகத்தில் பெற்ற அந்தஸ்தைப் பாதுகாத்திடுவீர்கள். வாழ்க்கைத் தரம் உயர்ந்து மனதில் மகிழ்ச்சி, புத்துணர்வு ஏற்படும். புதிய ஒப்பந்தம் கிடைத்து தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணியாளர் பணி சார்ந்த புதிய நுட்பங்களை அறிந்து கொள்வர். மாணவர்கள் தர தேர்ச்சியில் முன்னேற்றம் காண்பர்.



தகுதி, திறமையை முறையாகப் பயன்படுத்துவதால் பணி குறித்த காலத்தில் நிறைவேறும். மற்றவர்களைப் பார்த்து பணச் செலவில் ஆடம்பரம் பின்பற்ற எண்ணம் வரும். இல்லத் துணை, உங்களின் செயற்பாடு சிறக்க ஆலோசனை சொல்வார். தொழிலில் உருவாகிற இடையூறு தாமதமின்றி சரி செய்வதால் உற்பத்தி, விற்பனை சீராகும். மாணவர்கள் விளையாட்டில் பாதுகாப்பு உணர்வுடன் ஈடுபடுவது அவசியம்.



சமூகப் பணியில் ஆர்வம் கொள்வீர்கள். எதிரியால் தொந்தரவு வராத சுமுக வாழ்வு பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் குளறுபடி வராமல் இருக்க, உரிய கண்காணிப்பு பின்பற்ற வேண்டும். பணியாளர்கள் பொறுப்புணர்வுடன் பணிபுரிவதால் நற்பெயரைப் பாதுகாக்கலாம். மாணவர்கள், அனுகூல சூழ்நிலை அமைந்து படிப்பில் முன்னேற்றம் காண்பர்.



பணியில் புதிய சாதனை நிகழ்த்த வாய்ப்பு தேடி வரும். சொந்தப் சிரமங்களால் எதிரி இடம் மாறிப் போவர். விருந்து, விழாவில் இல்லறத் துணையுடன் கலந்து கொள்வீர்கள். பணியாளர்களுக்கு சம்பள உயர்வு பிற சலுகை கிடைக்கும். மாணவர்கள் ஞாபகத் திறன் வளர்ந்து, தர தேர்ச்சியில் முன்னேற்றம் அடைவர்.

# இறையருள் தங்கிவிட்டால்...

பால் மழையாகப் பொழிந்தாலும் பாத்திரம் இருப்பவனுக்குத்தான் அது பயன்படும்" என்கிறது ரஷ்யப் பழமொழி. இறைவனை நாடுபவர்களுக்கும் இது முற்றும் பொருந்தும். இறையருள் காற்றுப்போல் இந்தப் பிரபஞ்சம் எங்கும் வியாபித்திருந்தாலும் நல்ல இதயம் படைத்தவனிடத்தில்தான் அது நிரந்தரமாய் தங்கும். இங்கு இதயம் என்பது வெறும் லப், டப் என அடிக்கும் பௌதிக இதயமல்ல. அது ஆன்மிக இதயம். சர்ப்பகிரகம்போல் இறைவனை நித்தம் எழுந்தருளச் செய்யும் இந்த இதயம். எங்கள் சரீரமெனும் ஆலயத்தில் எங்கே இறைவனால் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது எனப் பார்ப்போம்.

நாராயண சூக்தம் அதற்கு மூன்று அடையாளங்களைக் குறிப்பிடுகிறது. முதலாவது 'தொப்புளுக்கு மேலே ஒரு சாண் தூரத்தில் உள்ளது இந்த இதயம். பௌதிக இதயமும் இதே தூரத்தில்தான் உள்ளது. ஆனால் அது சற்று இடதுபுறம்உள்ளது. ஆன்மிகஇதயமோ நடுவில் உள்ளது. இரண்டாவது 'சுடர் வரிசையால் சூழப்பட்டுள்ளது'. மூன்றாவது 'அந்த இதயம் பிரகாசிக்கிறது'. இந்தமூன்றுஅடையாளங்களும்பௌதிக இதயத்துக்குச் சற்றும் பொருந்தாது.

எம் சொந்த ஆன்மாவை வெளிக் கொணர வைக்கும். இந்த இந்த ஆன்மிக இதயம் பெரும்பாலும் (உபநிடதங்களில்) இதயக்குகை, புத்தி, இதயத் தாமரை, மூன்றாம் கண், ஞானக் கண் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது நம் வேதங்களில். இந்த இதயக் குகைக்குள்தான் 'ஆன்மா' சுடர்விட்டு எப்போதும் ஒளிர்கிறது. இதனை நாம் உணர்வதில்லை. மிகப் பெரும்பாலோரிடம் இந்த ஆன்மிக இதயம் மலராமல் அரும்பாகவே இருக்கிறது. முதலில் அதை மலரச்செய்ய வேண்டும். மலர்ந்த பின் உணர வேண்டும். அப்போதுதான் நன்மை பயக்கும் இதயமாக மாற்றமடையும். ஆன்மிக இதயம் மலருகின்ற பொழுது ஒரு மனிதனிடத்தில் கருணை இயல்பாகவே கங்கை போல் பிரவாகமாக பெருக்கெடுத்து ஓடும். அந்தக் கருணையெனும் கங்கையில் அந்த மனிதன் மூழ்கி எழுந்தானானால் நிச்சயம் அவன் பாவங்கள் தொலையும்.. இது மனித சரீரத்தை மட்டும் தூய்மைப்படுத்தும் பௌதிக கங்கையல்ல. இதயக் குகையில் இருந்து பெருக்கெடுத்து ஓடும் கருணையெனும் கங்கை. இந்த கங்கை நிஜமாகவே ஊற்றெடுத்து விட்டால். 'தாந்தன்னை அறியுமே சாந்தமும் செறியுமே, பேரன்பு பெருகிடும் பேதமை கருகிடும், சீவன் சிவனென்னுந் தெளிவும் உண்டாகுமே' எனும் சிவயோகரின் ஆழமான நற்சிந்தனை வரிகள் இயல்பாகவே ஒரு மனிதனிடத்தில் அநுபூதியாக வந்துவிடும். இறையருள் தானாகவே தங்கிவிடும். இந்த பிரபஞ்சத்துக்கும் அவனால் ஒளி கிடைக்கும்.

யானை பலம் வாய்ந்ததுதான். ஆனால் தன் பலத்தை உணராததால் யானைப் பாகனுக்கு அடிமையாக இருக்கின்றது. அதுபோல் ஒவ்வொரு மனிதன் இடத்திலும் ஆற்றல் இருக்கிறது. அதைப் புரிந்து கொள்ளாததால் அவர்கள் அவல வாழ்க்கை வாழ்கிறார்கள். ஒருவன் தீமையினிடத்தில் இரப்பதால் அவனது பலம் அவனுக்கேதெரிவதில்லை. அவன் நன்மையினிடத்தில் பிரவேசிக் கின்ற பொழுது அவனது பலம் என்னவென்று அவனுக்கு தெளிவாகவே புரிந்துவிடும். மாயை ஒருபோதும் அவன் கூடாரத்தை அணுகாது.


இந்த உலகில் இரண்டு வித பைத்தியக்காரர்கள் இருக்கிறார்கள். ஒருவர் இவ்வுலகத்தின் மீதும் உலகப் பொருள்கள் மீதும் பைத்தியமாய் இருப்பவர். மற்றவர் சத்தியத்தின் மீதும். இறைதாகம் மீதும் பைத்தியமாய் இருப்பவர். முதலாமவரால் இந்தப் பிரபஞ்சத்துக்குப் பல தீமைகள் விளையலாம். இரண்டாமவரால் இந்தப் பிரபஞ்சத்துக்குப் பல நன்மைகள் விளையும். இதில் எந்தவித சந்தேகமும் இல்லை. 'பஹுஜன ஹிதாய, பஹுஜன ஸுகாய' - பலரது நன்மைக்காகவும் பலரது சுகத்துக்காகவும் வாழ வேண்டும் என்கிறார் புத்தர். இறையருள் தங்கிய மனிதன் சுயநலம் துறந்து இப்படித்தான் வாழ்வான். அவனுக்கு அகங்காரம் ஒரு சிறுதுளியும் தலை தூக்காது. தன் சொந்த ஆன்மாவே அனைத்து உயிர்களுக்கும் ஆன்மா என்ற அனுபவ கோட்பாட்டில் வாழக் கற்றுக் கொள்வான். அப்படிப் பட்டவர்களையே நாம் ஞானிகள், மகான்கள், சித்தர்கள் என்று அழைக்கின்றோம்.

இளைய தலைமுறையினர் அல்லது இளம் சந்ததியினராகிய நாம். நல்ல ஒழுக்க சீலர்களாகவும் இறை சத்தியத்தின் மீதும் பிரபஞ்ச தர்மத்தின் மீது லயித்தவர்களாக நம் வாழ்க்கைப் பாதையை மாற்றிக் கொள்ள வேண்டும். பள்ளத்தை நோக்கி மழை வெள்ளம் ஓடுவது போல். நம்மைப் படைத்தவன் முன்னிலையில் நாம் பணிவுள்ளவர்களாக இருந்தால் எம் இதயத்தை நோக்கி இறையருள் தானாகவே வந்துவிடும். அப்போ எம் தேசமும் மக்களும்அந்த இறையருளாலே தாங்கப்படுவார்கள்.



சா.ரமேஸ்குமார்.
மருதனார்மடம்.

# எனக்கு வாய்த்த பெண்டாட்டி



எனக்கு வாய்த்த
பெண்டாட்டியின்
கதையைக் கேளுங்க - ஐயா
கதையைக்
கேளுங்க எவ்வளவோ
சொல்லிப் பார்த்தும்
அலுத்துப் போச்சுங்க மெத்த
அலுத்துப் போச்சுங்க

நாலு பெண்ணைப் போல
நீயும் நடக்கணும்
என்றேன் நாகரிகமான
உடைகள்
உடுக்கணும் என்றேன்
நாளுக்கொரு
வர்ணச்சேலை கட்டணும்
என்றேன்- நாட்டு
மாதர் சங்கத்திலே சேரணும்
என்றேன்

வாலறுந்த மயிரைத்
தொடுத்து வைத்து
முடிக்கஹும் வாயுதட்டில்
சிவப்புச் சாயம்
வடிவாய்ப் பூசனும் மேல்
விளிம்பில்
மயிர் சுருட்டி மாட்டிக்
கொள்ளணும்
மேலும் பெரிய திருகணை
போல்
கொண்டை முடிக்கணும்

பலவிதமாய்ப் பொட்டு போடும் அச்சுக்கள்
எல்லாம், பார்த்துப் பார்த்து பெரிய கடையில்
வாங்கிட வேணும் கலகலப்பாய் சிவப்பு
பச்சை கறுத்தப் பொட்டுக்கள் காலை
மாலைவேளைக் கொன்றாய் மாறிப் போடனும்

ஓடாட்டிலும் கையில் ஒரு உவாச்சுக்
கட்டணும் உள்ள வளையல் எல்லாம்
மற்றக் கையில் மாட்டிட வேணும்
படாட்டிலும் தெரிஞ்சதுபோல் நடிச்சுக்
கொள்ளணும் பல்லைக் காட்டிப்
புன்சிரிப்பு பவிசாய்ப் பண்ணனும்

சிறிது வெளி இடை வயிற்றில் தெரிய
உடுக்கணும் சிங்காரமாய் அன்ன நடை
போட்டு நடக்கணும் மா.மு.சங்கத்திலே
தலைவியாகணும் - நீ மாலை போட்டு
நாலு பேரும் மதிச்சிட வேணும்

இறவுக்கை அழகு விளங்க இழுத்துக்
கட்டணும் இரண்டு சுத்து சுத்தித் தோளில்
மாட்டிட வேணும் லையிற்றாய் இருக்கும்
எரிகன் எலைற் டிசையின் வகைகளை
இறக்குமதி யாகும் போதே புதிசாய் எடுக்கணும்

படிச்சுக் கொடுக்கும் பள்ளி பெண்ணு
பிள்ளைகள் வந்தால்- பட்டிக்காடு என்று
உன்னைப் பார்த்துப் பேசுங்கள்- நடிச்சுக்
காட்டும் எனது பொட்டுக்கேடு வெளிச்சிடும்
நாலு பேரும் மதிக்க நாங்கள் வாழனும் அல்லோ

முக்கி முக்கி முகங்கருக அடுப்பை
ஊதுறாய், முன்னுறுதி ஈடு வைத்து
போனாப் போகுது- குக்கர் ஒன்று
கொம்பனியில் வாங்கி நான் வாறேன்
குசாலாகச் சோறு காச்சி உண்ணலாம் என்றேன்

*மனைவி கூறல்*
வேறு வேலை ஒன்றும் உமக்கு இல்லையோ
இந்த விழல் பாட்டுப் பாடுவதை விட்டெழுந்து
போய்- ஏறி அந்த மரத்தில் தேங்காய்
பிடுங்கி உரித்துக் கொண்டு வாரும்
நான் பொங்கல் காய்ச்சிப் படைக்கின்றேன்

என்று எனது துணைவி என்னை எச்சரிக்கின்றாள்
எடுத்துச் சொன்ன புத்தியெல்லாம் நச்சரிக்கின்றாள்
எனக்கு வாய்த்த பெண்டாட்டியின் கதையைக்
கேளுங்க- ஐயா கதையைக் கேளுங்க- இதற்கு
என்ன செய்யும் புத்தி சொல்லித் தாருங்க



## சொற்சிலம்பம் - போட்டி இல: 298

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | |
| 6 | | ■ | 7 | | 8 | | ■ |
| 9 | | 10 | | ■ | | ■ | 11 |
| ■ | 12 | | ■ | 13 | | | |
| 14 | ■ | 15 | 16 | | | ■ | |
| 17 | 18 | | | | ■ | 19 | |
| 20 | | ■ | | ■ | 21 | | |
| 22 | | | ■ | 23 | | | |

அனுப்புபவர் பெயர்:..........................................................

விலாசம்:..........................................................

..........................................................

கையொப்பம்:..........................................................

### இடமிருந்து வலம்

1. இது பலருக்கு வதனத்தில் வரும்
5. அரைவாசி
6. இரும்பில் பிடிப்பது
7. ஊறுதல்
9. கூட்டம்
12. நெருப்பில்லாமல் இது வராது
13. பழங்காலத்து செவி வழிக்கதைகள்
15. சரித்திரம்
17. பாவனைக்கு உட்படுத்துதல்
19. தோசை தயாரிக்குமாறு உத்தரவிடல்
20. தலைவன்
21. சத்தமிட
22. வேகம்
23. தாராளமாகக் கிடைத்தல்

### மேலிருந்து கீழ்

1. நெஞ்சுக்குப் பின்புறம்
2. இது ஒரு தாவரம்
3. இரவு அல்ல
4. நாக்கு உணர்வது
5. வெளுத்ததெல்லாம் இதுவல்ல
8. சச்சரவு
10. எதிரிகள்
11. வணங்குதல்
13. அசைவ உணவு
14. துய்த்தல்
16. தேர்
18. நாற்காலி
19. தூய
21. தற்போதைய யுகம்

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.
★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 296 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) சமரசம் (5) சம (7) காந்தம் (8) பந்து
(9) தம்பதி (11) தர (12) அக (13) வருமானம்
(15) மதியம் (17) தம் (18) மோர் (20) வசனம்
(22) கபடு (24) திகில் (25) உள்ளும்.

### மேலிருந்து கீழ்

(1) சகா (2) மந்தகதி (3) ரதம் (4) சம்பவம்
(5) சந்தனம் (6) மதுரம் (10) திரு (12) அமராவதி
(14) மாதர்கள் (16) யன்னல் (19) சுடும்
(21) சகி (23) பளு

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்ட சாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விபரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி**
**இல. 298**
*நியூ உதயன் பப்ளிகேஷன்*
*(பிறைவேற்) லிமிட்டெட்,*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர். (08.01.2013) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.298இல்வெற்றி பெறுவோர்களது விவரம் 12.01.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 296 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
மு.ஹரிதாசன்,
மே/பா பெ.செல்லக்குட்டி, முதலாம் வட்டாரம், முள்ளியவளை.

**2 ஆம் பரிசு**
பா.பிரியரூபினி,
காளிகோவிலடி, கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறை.

**3 ஆம் பரிசு**
சி.செல்வராசா,
'இராணி இல்லம்' கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

**4 ஆம் பரிசு**
செ.பேபியன் ரோய்,
இல.14, பனங்கட்டிக்கொட்டு கிழக்கு, மன்னார்.

**5 ஆம் பரிசு**
து.வற்சலா,
ஆழ்வாண் கிணற்றடி, பன்னாலை, தெல்லிப்பழை.

**பாராட்டுப் பெறுவோர்**

மு.அந்தோனி,
ஆஸ்பத்திரி வீதி, சின்னக்கடை, மன்னார்.

நா.பாலசுப்பிரமணியம்,
இல.7/2 அம்மன் நகர், தோணிக்கல், வவுனியா

அ.திலகவதி,
இல.36- 3/5 ஈ.எஸ்.பெர்னாண்டோ மாவத்த, கொழும்பு- 6

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.*

# குடியானவனும் ரத்தினமும்





விஜி
பருத்தித்துறை.

ஒரு நாள் ஒரு குடியானவன் ஓர் அரிய ரத்தினத்தைக் கண்டெடுத்தான். அதை உடனே அரசனிடம் கொடுத்து வெகுமதி பெற நினைத்துப் புறப்பட்டான். அரண் மனையை அடைந்ததும் வாயில் காவலனிடம், "தான் மன்னரை எவ்வாறு பார்க்க முடியும் என்று கேட்டான்" காவலாளி "எதற்காக மன்னனைப் பார்க்க வேண்டும்?" என்று கேட்க, குடியானவன் தான் வந்த விடயத்தைக் கூறினான். உடனே காவலன் "நான் உன்னை அரசனி டம் அழைத்துச் செல்கிறேன். ஆனால் அவர் உனக்கு அளிக்கும் பரிசில் நீ எனக்கு அரைவாசி தர வேண்டும்" என்று கூற குடியாவனும் அதற்கு ஒப்புக் கொண்டான். உடனே காவலன் அவனை அரசரிடம் அழைத்துச் சென்றான்.

மன்னர் குடியானவன் அளித்த ரத்தினத்தைப் பெற்றுக் கொண்டு "குடியானவனே நீ என்ன வெகுமதியை எதிர் பார்க்கின்றாய்?" என்று கேட்டார். "அரசே! சவுக்கால் எனக்கு ஐம்பது கசையடிகள் கொடுங்கள். இந்தப் பரிசைத்தான் நான் விரும்புகிறேன். எனக்குக் கிடைப்பதில் ஆளுக்குப் பாதி பிரித்துக் கொள்வதாகத் தங்களுடைய காவலனும் நானும் ஒப்பந்தம் செய்திருக்கின்றோம். அதனால், கசையடியில் அவனுக்கு இருபத்தைந்தைக் கொடுங்கள்" என்றான் குடியானவன். அரசன் நடந்ததை அறிந்து குடியவனுக்கு பெறுமதியான பல பரிசுகளைக் கொடுத் தான். அத்துடன் காவலனைக் கண்டித்து அவனை வேலையிலிருந்து நீக்கி விட்டான்.

## விடை தெரியுமா ? 243

### உங்களுக்கும் பரிசுகள்

1. இலங்கையில் வன விலங்கு சரணாலயங்கள் எவை?
2. இலங்கையின் தேசிய மிருகம் எது?
3. பாம்பு எதன் மூலம் வாசனையை உணருகின்றது?
4. 'வைர விழா' எத்தனையாம் ஆண்டு கொண்டாடப்படுகின்றது?
5. இலங்கையில் 'சுனாமி' எப்போது இடம்பெற்றது?

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**விடைகள் 241**

1. ஜப்பான்
2. அடம் ஸ்மித்
3. முதலை
4. நோர்வே
5. ஆலமரம்

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 04.01.2014 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 பெறுமதியான பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

**வெற்றி பெற்றவர் விவரம் (240)**

♥ க.முகிலன், தரம்–7, யா/ வயாவிளான் ம.ம.வி.
♥ ப.யூடி சோபியா சோசை, தோமஸ்புரி, வங்காலை மன்னார்
♥ வி.ஹரிகரன், தரம்–8

## எங்களுக்குத் தெரிந்தவை உங்களுக்குத் தெரியுமா?

♥ நியூசிலாந்து பிரதமர் – ஜோன் கேவு
♥ சீனப் பிரதமர் – லீ கெஹியாங்
♥ பாகிஸ்தான் பிரதமர் – நவாஸ் செரீப்
♥ இஸ்ரேல் பிரதமர் – பெஞ்சமின் நெதன்யாஹ்
♥ இந்தியப் பிரதமர் – மன்மோகன் சிங்
♥ பிரித்தானியப் பிரதமர்– டேவிட் கமரூன்
♥ ஜம்மு காஷ்மீர் முதலமைச்சர் – உமர் அப்துல்லா
♥ குஜாராத் முதலமைச்சர் – நரேந்திர மோடி
♥ இந்திய வெளியுறவு அமைச்சர் – சல்மான் குர்ஷித்
♥ வடக்கு மாகாண முதலமைச்சர் – விக்னேஸ்வரன்
♥ ஈரான் ஜனாதிபதி – ரெளகானிக்
♥ அமெரிக்க ஜனாதிபதி – பராக் ஒபாமா
♥ ஜெனிவா மனித உரிமை ஆணையாளர் – நவநீதம்பிள்ளை
♥ ஐக்கிய நாடுகள் சபையின் பாகிஸ்தானுக்கான நிரந்தரப் பிரதிநிதி – மஸ்ஹூத் கான்
♥ பாகிஸ்தான் பிரதிநிதிகள் சபையின் தேசிய பாதுகாப்பு வெளிவிவகாரங்களுக்கான பிரதமரின் ஆலோசகர் – சர்த்தாஜ் அசீஸ்

பு.நிசாந்தினி,
தரம்-8

## எங்கள் பாடசாலை

எங்கள் பள்ளி நல்ல பள்ளி
என்று நானும் சொல்லுவேன் - எனது
அறிவுக் கண்ணைத் திறந்த கோயில்
என்று சொல்லித் துள்ளுவேன்.

கல்விச் செல்வம் தந்த ஆசான்
எனது வாழ்வில் தெய்வமாம் - நல்ல
கல்வி கற்ற எனது மனம்
தெய்வம் வாழும் கோயிலாம்

அன்னை தந்தை அன்பு கொண்டு
என்னை நன்கு வளர்த்தனர் - இங்கு
எனது மனதில் எழுந்த ஐயம்
அருகில் நின்று தீர்த்தனர்

நாளும் நன்கு படித்த நானும்
பள்ளி முதல் மாணவன் - என்ற
பெயரைப் பெற்று பெரும் புகழை
பள்ளிக்கு நான் சேர்ப்பவன்.




வீடு வீடு வீடு அப்பா
அம்மா தம்பி நாம்
வாழும் வீடு
பச்சை வண்ண நிறமும்
பூசிக் கொண்ட
அழகான வீடு
கல்லும் மண்ணும்
சேர்ந்து கலந்துகட்டிய
வீடு என்றும் எங்கள்
வீட்டில் மகிழ்வு
நிறைந்து இருக்கும்.

இ.தேனமுதன்
யா/சூளாய் சைவப்பிரகாச
வித்தி.


## பசு

பசு ஒரு அழகான
பிராணி.
பசு புல் மேயும்.
பசு வெள்ளை நிறம்.
பசுவுக்கு அழகான
வாலும் நான்கு
கால்களும்
உள்ளன.
பசு எமக்குப் பால்
தரும்





சி.டிசொந்தன், தரம்-9ஏ
யா/ கனகரத்தினம் மத்திய ம.வி.



ஞா.சஞ்ஜீவன், தரம்-10
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி



எஸ்.அனிருத்தன், தரம்-2
மானிப்பாய் மகளிர் கல்லூரி

# பூனை செய்த நீதி



ஒரு பெரிய மரத்தின் பொந்தில் ஒரு மைனா வாழ்ந்து வந்தது. அந்த இடம் அதற்கு வசதியாவும், பாதுகாப்பாகவும் இருந்தது. ஆனால் கோடைக்காலம் தொடங்கியதும் அந்தப் பகுதியில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டது. அக்கம் பக்கம் எங்கிருந்தும் சாப்பிட எதுவும் கிடைக்கவேயில்லை.

அதனால் மைனா பக்கத்துக் கிராமத்திற்குப் போய் அங்கிருந்த கோதுமை வயலில் கிடைக்கிற தானியங்களை உண்டு அங்கேயே மகிழ்ச்சியாக இருந்தது. மைனா முன்னர் இருந்த மரப்பொந்து இப்போது யாரும் இல்லாத இடமாக இருந்தது. அந்தப் பொந்து மரத்தின் அடியில் நிலத்தையொட்டி இருந்தது. ஒருநாள் அந்த வழியாகத் தனக்கு இருப்பிடம் தேடிக் கொண்டு வந்த முயல் ஒன்று அந்தப் பொந்தைக் கண்டது. அதற்கு அது பிடித்துப்போனது. உடனடியாகவே அது அந்தப் பொந்தில் குடி புகுந்தது.

கோடை காலம் வெகுவேகமாகக் கடந்து போனது. குளிர்காலம் வந்தது. மைனாவால் வயல் வெளியில் குளிரைச் சமாளிக்க முடியவில்லை. அதனால் அது தன்னுடைய பழைய இடத்துக்கே திரும்பி வந்தது. ஆனால் அந்தப் பொந்தை முயல் தன்னுடைய இருப்பிடமாக்கி வைத்திருந்ததைப் பார்த்தது. அதற்குக் கடும் கோபம் வந்தது.

"ஏய்! யார் நீ? இங்க எதற்கு வந்து படுத்திருக்கிறாய்? இது என்னுடைய வீடு! நான் கொஞ்ச நாள்கள் வெளியூர் போய் இருந்தேன். நான் இல்லை என்றால் நீ வந்து குடியிருந்துவிட முடியுமா? உடனே வெளியேறு" என்று முயலைப் பார்த்துக் கத்தியது மைனா.

முயல் மைனாவைப் பார்த்து திருதிரு என விழித்தது. "நீ என்ன சொல்கிறாய்?" முயல் கேட்டது. "நான் வீடு தேடிக்கொண்டிருந்தபோது இந்த மரப்பொந்தில் யாரும் இல்லை. அதனால் நான் இங்கே வசிக்கிறேன். திடீர் என்று வந்து நீ இது உன் வீடு என்று சொன்னால் நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்" என்றது முயல்.

மைனாவோ, இல்லை அது தனது பழைய இடம் என்றது. முயலோ அந்த இடத்தை விடமுடியாது என்றது. இரண்டுக்குமே இடத்தை விட்டுக் கொடுக்க மனமிருக்கவில்லை. சண்டையும் முடிவுக்கு வருவதாக இல்லை. கடைசியில் முயல் ஒரு யோசனை சொன்னது. நதிக்கரையில் இருக்கும் தனக்குத் தெரிந்த பூனையிடம் போய் இந்தப் பிரச்சினையைச் சொல்லித் தீர்வு கேட்கலாம் என்றது. பூனை என்றதும் மைனா பதறியது. "பூனையிடமா? ஐயோ! வேண்டவே வேண்டாமம்பா! பூனைகளை நம்பக்கூடாது" என்றது மைனா. ஆனால் முயல் அதனைச் சமாதானப்படுத்தியது. "அட! அது நீ நினைக்கிற மாதிரிக் கெட்ட பூனை இல்லை. மிகப் புத்திகூர்மை உள்ளது. வயசானது. அதற்குக் கடவுள் பக்தி அதிகம்" என்றெல்லாம் எடுத்துச் சொல்லி ஒருவாறு மைனாவை பூனையிடம் அழைத்துச் செல்ல சம்மதம் பெற்றுவிட்டது முயல்.

இரண்டும் புறப்பட்டு பூனையின் இடத்துக்குப் போயின. இரண்டும் வருவதை தூரத்திலேயே பார்த்துவிட்ட பூனை தியானம் செய்கிற மாதிரி நடிக்க ஆரம்பித்தது. மைனாவும் முயலும் மிக அருகில் வந்ததும் அப்போதுதான் கண்ணை விழிக்கிற மாதிரி நடித்துக்கொண்டே "வாங்கோ... வாங்கோ..." என்று வாய் நிறைய அழைத்தது.



"உங்களுக்கு நான் என்ன உதவி செய்யட்டும்?" என்று பாசத்துடன் கேட்டது.

மைனாவும் முயலும் தமது பிரச்சினையைச் சொல்லி அதற்கொரு நல்ல தீர்வு கூறவேண்டும் என்றன. பூனையோ, தனது கண்களை இடுக்கிக் கொண்டே குரலையும் தளுதளுத்த மாதிரி வைத்துக்கொண்டு "நீங்கள் இருவரும் கதைப்பது என் காதுகளிலேயே விழவில்லை. கண்ணும் சரியாகத் தெரியவில்லை. இன்னும் கொஞ்சம் அருகே வந்து பேசுங்கள்" என்று விநயமாகக் கேட்டது. மைனாவும், முயலும் பூனையின் மிக அருகே வந்ததுதான் தாமதம் அந்த வயதான பூனை அவை இரண்டையும் அடித்துக் கொன்று தின்றுவிட்டது.

*நீதி: ஒருத்தர் என்னதான் வெளித்தோற்றத்தை மாற்றிக் கொண்டாலும் அவர்களின் அடிப்படை குணம் மாறாது. எனவே சிறுவர்கள் மற்றவர்களுடன் பழகும்போது வெகு அவதானமாகப் பழக வேண்டும்.*



**ஒருத்தர் என்னதான் வெளித் தோற்றத்தை மாற்றிக் கொண்டாலும் அவர்களின் அடிப்படை குணம் மாறாது. எனவே சிறுவர்கள் மற்றவர்களுடன் பழகும்போது வெகு அவதானமாகப் பழக வேண்டும்.**




நெடுந்தீவு மகேஷ்

"கொல்லாதே! கொல்லாதே! ஐயோ! என்னைக் கொல்லாதே!" பயம் கலந்த பதைபதைக்கும் ஓலம் மீண்டும் ஒருமுறை அந்த இருட்டையும் ஊடுருவி ஒலித்தது.

அந்த வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த அனைவருமே விழித்துக் கொண்டார்கள். பரமானந்தத்தாரின் அருகில் உறங்கிக் கொண்டிருந்த அவரின் மனைவி பார்வதி "இஞ்சேரப்பா என்ன? என்ன? கனவே கண்டனீங்கள்?" என்று கேட்டுக் கொண்டே அவரைத் தட்டி எழுப்பினாள். அவர் தணலைத் தொட்டவர் போல் திடுக்குற்று விழித்தார்.

மின் விளக்குகள் போடப்பட்டன. அவரது பன்னிரண்டு வயதே நிரம்பிய மகள் ரதிதேவி "என்னப்பா நடந்தது" என்று கேட்டுக் கொண்டே அவரது கட்டிலருகில் வந்தாள். "ஒன்றுமில்லை கனவு கண்டனான்" என்று எதுவித உணர்வுகளையும் வெளிக்காட்டாமல் அவரது வாய் முணுமுணுத்தாலும் அவரது மனம் அச்சத்தில் துவண்டிருந்தது.

"என்ன கனவப்பா?" பார்வதியோ கனவென்றதும் அதைக் கேட்டறியும் அவாவுடன் அவரைப் பார்த்தாள். "அதுவொன்றுமில்லை லைற்றை நூத்துப்போட்டு படுங்கோ!" பரமானந்தத்தார் தான் கண்ட கனவை மீட்டுச் சொல்லும் நிலையில் இருக்கவில்லை. உள்ளத்தை உறுத்தும் அந்தப் பயங்கரத்தை விரித்துப் பார்க்கும் வலுவும் அவரிடம் இருக்கவில்லை. மகள் மின்விளக்கை அணைத்துவிட்டுத் தன் படுக்கையில் சாய்ந்து படுத்து விட்டாள். அந்த அறை முழுவதையும் மீண்டும் இருள் மூடிக் கொண்டது.

பரமானந்தத்தாருக்கோ தூக்கம் தொலைந்து போனது. ஒருபக்கம் ஒருக்களித்துச் சாய்ந்து படுத்தார். தூக்கம் வரவில்லை. கால்களை நீட்டி நிமிர்ந்து மல்லாந்து படுத்தார் நித்திரை வரவில்லை. கண்கள் விழித்திருந்தாலும் மூடிக்கொண்டாலும் இருளே அங்கு சூழ்ந்திருந்தது. தூக்கம் வரவில்லை.

அருகில் படுத்திருந்த மனைவி பார்வதி குறட்டை பரவத் தூங்கினாள். அவளது குறட்டை ஒலியும் அவரது தூக்கத்தைக் கெடுத்துப் பயத்தைக் கூட்டியது. பரமானந் தத்தார் கண்ட கனவு அப்படிப்பட்டது. அவரது தூக்கத்தைக் கெடுத்தான கனவு தூண்டிவிட்ட நினைவுகளால் பயம் பரவ விழித்துக் கொண்டே கிடந்தார்.

ஒரு பாடசாலையின் அதிபரான பரமானந்தத்தார் அந்தப் பிரதேசத்தின் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும் பதவி வகித்தார். அவர் தலைவராகித் தனது கடமையைப் பொறுப்பேற்று ஆறு மாதங்களே ஆகியிருந்தன. அந்தத் தலைவர் பதவிக்குப் போட்டியிடவிருந்த முருகானந்தம் தேர்தலுக்கு முன்னரே ஒரு கார் விபத்தில் காலமாகிவிட்டார். அவர் காலமானதால் கிடைத்த வாய்ப்பே பரமானந்தத்தாரை ஏகமனதாகத் தலைவராகும் நிலைக்கு உயர்த்தியது. அது அவருக்குக்கிடைத்தஅதிர்ஷ்டம்என்றே ஊரெல்லாம் பேசிக் கொண்டது.

அதிபராக வேலை பார்ப்பதிலும் பார்க்க அந்தக் கிராமத்தின் தலைமைப் பதவி ஒன்றில் உயர்ந்திருக்க வேண்டும் என்பது அவரது ஆசைகளில் முதன்மையானதாகிப் போனது.

அந்த வகையில் இன்றிருக்கும் கூட்டுறவுச் சங்கத் தலைவர் பதவி அவருக்குப் பெருமையாக இருந்தது.

சங்கத் தலைவராக ஏகமனதாகத் தெரிவான மகிழ்ச்சியை இரண்டு மூன்று தினங்கள் தனது ஆதரவாளர்களோடு கொண்டாடினார். அமைதியாகப் பணி தொடர்வதாக அனைவருமே பார்த்திருக்கச் சங்கத்தின் மனேச்சர் மதிவாணன் காணாமற் போன செய்தி பரவியபோது மதிவாணனைத் தேடி அழுதலைந்த குடும்பத்தினருக்கும் ஆதரவாளர்களுக்கும் ஆறுதல் சொல்லத் தெரியாமல் அங்கலாய்த்தார். காயங்களோடு பிணமாகிப்போன மதிவாணனின் சடலத்தைக் கண்டெடுத்த போது பயம் குவிந்தாலும் மரணச் சடங்கை முன்னின்று நடத்தி வைத்தார். கொலைக்கான காரணமோ கண்டறியப்படாமல் மர்மமாகிப் போன மரணங்கள் கொஞ்சம் கொஞ்சமாகப் பலரின் மனங்களிலிருந்தும் மறையத் தொடங்கின. காலங்கள் கடந்து கொண்டிருந்தன. அவரது மனத்தில் ஏதோ ஒன்று உள்ளிருந்தே அவரைப் பயமுறுத்தியது. மக்கள் முன்னே அவர் தனது பயத்தைக் காட்டிக் கொள்ளாமல் மக்களைக் கவரும் தனது பேச்சாலும் செயலாலும் ஒரு தலைவராகவும் துணிவு மிக்க சேவையாளனாகவும் தன்னை முன்னிறுத்திக் கொண்டார். ஆனால் அவரின் உள்ளத்தெழுந்த உறுத்தல் ஒன்று அவரை அடிக்கடி பயமுறுத்தியது. எதனையும் வெளிக்காட்டாமல் எப்போதும் போல் ஊழியர்கள் மீதும் நண்பர்கள் மீதும் நட்புறவுடன் நடந்து கொண்டார். காணாமற் போதல், கைது செய்யப்படுதல், கொலை செய்யப்படுதல் என்ற செய்திகளெல்லாம் சர்வசாதாரண செய்திகளாகிப் போய்விட்ட நிலையில், நாடு கெட்டுக் கிடக்கிறது என்பதை எவருக்குமே சொல்லித் தெரியப்படுத்த வேண்டியதில்லை. "பொறுப்புக் கூறவேண்டிய தலைவர்களோ




வல்லதும் நல்லதுமான வார்த்தை ஜாலங்களால் தமது கை நழுவல்களையும் பொய் புளுகுகளையும் போர்த்திக் கடத்தும்போது, இந்தப் பரமானந்தத்தார் என்ன செய்வார். அவரது ஊழியர்களை இந்தச் சூழ்நிலையில் காப்பாற்றுவதென்பது இலகுவானதல்ல. இந்த நிலையில் அவரின் பதவிக்கும் உயிருக்கும் ஆபத்துக்கள் வராமலா போகும்". ஊர் இப்படிப் பேசிக் கொண்டது.

மனைவி பார்வதியோ "ஏனப்பா உங்களுக்கு இந்தத் தலைவர் பதவி உயிரைக்கையில்பிடிச்சுக்கொண்டே வேலை பார்க்க வேணுமோ, இதை விட்டுப் போட்டுப் பள்ளிக்கூடத்தோடு இருந்தாலென்ன?" என்று கேட்கும் ஒவ்வொரு வேளையும் பரமானந்தத்தாரின் மனதில் பயம் பரவி உடலையும் உணர்வுகளையும் உறுத்தும். தனது கணவனுக்கு ஏதாவது ஆபத்து ஏற்படலாம் என்றும் பார்வதி பல வேளைகளில் பயந்தாள்.

"அவர் ஒரு பாவமும் அறியாதவர். அவருக்குத் தீங்கிழைக்க எவருக்கும் மனம் வரமாட்டுது" என்றும் ஆறுதலடைந்தாள். தலைவர் பரமானந்தத்தாரின் நெருங்கிய சிற்றூழியர் சின்னராசாவைச் சில தினங்களாகக் காணவில்லை. அந்த ஏழைத் தொழிலாளியின் மனைவி பிள்ளைகள் பரமானந்தத்தாரை நெருங்கி வந்து தினமும் தம் இழப்பையும் கவலையையும் சொல்லி அழுதுபோனார்கள். அப்பொழுதெல்லாம் தனக்கும் இப்படி நேர்ந்தால் தனது மனைவியும் மகளும் வாடிப் போவார்களே என்று எண்ணித் தணலிடைப்பட்ட புழுவாகிச் சில பொழுது எரிந்து போவார்.

காணாமற் போன ஊழியரைத் தேடிக் கண்டறியக் காவற்றுறையினர் நாடு முழுவதும் முடுக்கி விடப்பட்டிருந்தனர். எந்தவொரு நல்ல செய்தியும் இல்லாமலே நாள்கள் நகர்ந்து கொண்டிருந்தன. இழப்புக்களைத் தாங்க இயலாமல் அழுது கரையும் குடும்பங்களுக்கு ஆறுதல் வார்த்தைகளைச் சொல்லும் போதெல்லாம் மேலெழும் ஒரு உறுத்தல் பரமானந்தத்தாரைப் பயமுறுத்தும். "உங்களோடு இருந்தவர்களுக்கெல்லாம் இப்படி ஆகிப்போனதே!" எனப் பலரும் அவரைக் கேட்கும் போதெல்லாம் பயம் உடலெங்கும் பற்றிக் கொள்ளும்.

காரணம் தெரியாத சகதிக்குள் வீழ்ந்து காணாமற் போனோரும் கொலை செய்யப்பட்டோரும் இல்லையென்றாகிப் போக, இனங் காணப்படாத கொள்ளைக்காரரும் கொலைகாரரும் வழக்குக் கணக்குகளுக்குள் சிக்காமல் சுதந்திரராகிப் போயினர்.

சாட்சிகள் இல்லாமல் தொலைந்து போகும் வழக்குகளால் குற்றவாளிகள் ஊரை நிறைத்து உலா வருகின்றனர். கொடிய குற்றங்கள் அனைத்துக்குமே எந்தவித விசாரணைகளும் விளக்கங்களும் இல்லாது போனதால் கொலை கொள்ளைக் குற்றவாளிகளும் மறைந்தும் மறக்கப்பட்டும் போயினர்.

பணத்துக்காகப் பச்சிளங் குழந்தைகளையும் கடத்திக் கொலை செய்யும் கொடியவர்களைக் கண்டறிந்து விசாரித்து உண்மையறியும் முன்னரே கொலைகாரர்களாகவும் கொள்ளைக்காரர்களாகவும் யார் யாரோ இனங்காட்டப்பட்டுத் தண்டனைக்குள்ளாகிக் கொன்றொழிக்கப்பட்டனர்.

இந்தக் கொடுஞ் சூழலுக்குள் பரமானந்தத்தாரின் கூட்டுறவுச் சங்க மனேச்சரின் கொலையும் ஊழியர் காணாமற் போய் பிணமாகக் கண்டெடுக்கப்பட்டமையும் சாட்சிகளற்ற விசாரணைக்கு உட்படுத்த இயலாத வழக்குகளாகிப் போயின. யாவருமே மௌனிகளாயினர்.

நேற்றைய பொதுக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய தலைவர் பரமானந்தத்தார் எதிர்பாராத விதமாக அங்கிருந்த மேசையில் தடக்குண்டு அலக்குமலக்காக விழுந்தார். அவரின் தலையில் அடிபட்டுச் சிறு காயம். அந்தச் சம்பவம் அவரது உடலை மாத்திரமல்ல உள்ளத்தையும் வேதனைக்குள் வீழ்த்தி வாட்டி வருத்தியது. நடந்தவைகள் எல்லாமே ஊருலகத்தின் கண்களுக்கும் சிந்தனைக்கும் சிக்காத சங்கதிகளாய் இருந்தாலும் பரமானந்தத்தாரின் உள்ளத்தை வருத்தும் சம்பவங்களாய் அவை மாறி வருவதாகவே அவருக்குத் தோன்றியது. அந்த நடு இரவில் விழித்துக் கொண்ட பரமானந்தத்தார் குப்பையைக் கிளறும் கோழியாகி மறந்து போக நினைத்த பழையவைகளைக் கொத்திக் கொத்திக் குதறினார்- குவித்தார். தூக்கமோ தொலைந்து போனது. அவருடன் அன்று தலைவர் பதவிக்குப் போட்டி யிடவிருந்த முருகா னந்தத்தார் ஓட்டிவந்த கார் மரத்துடன் மோதியதால் மரணமானார். சிதைந்த காருக்குள் சிக்குண்டு கிடந்த அவரது சடலம் கண்டெடுக்கப்பட்டது. சாட்சிகள் இன்றிக் காரணகாரியங்களைக் கண்டறிந்து அவர் விபத்தில் மரணித்து விட்டார் என்பது தீர்வாகிப் போனது. சங்கக்கடையில் இருந்த இருநூறு அரிசி மூடைகளையும் இருநூறு சீனி மூடைகளையும் தனக்கு இலாபம் ஏற்படும் வகையில் வேறு வழியில் விற்றுப் பெற்ற காசுக் கணக்கைக் காட்டிக் கொடுக்கும் ஒரே சாட்சி காணாமற் போன மனேச்சர் மதிவாணன் என்பதால் அவரைக் காணாமற் போகச் செய்த பயங்கரம், அந்தக் கொடுமையைக் கண்டுதவிய பின்னர் காட்டிக் கொடுக்கத் துணிந்த ஒரேயொரு சாட்சி சிற்றூழியர் சின்னராசாவைக் காணாமற் தொலைத்த கொடுமை எல்லாமே இன்று சாட்சிகளில்லாத வழக்குகளாயின.

எனினும் அவை இன்று, அவரின் தூக்கத்தைக் குலைத்துத் துன்புறுத்தின. தலையைப் பிய்த்துக் கொண்டார். தூங்க முயற்சித்தார். முடியவில்லை. அந்த மூன்று சம்பவங்களுக்கும் தனக்கும் உள்ள தொடர்பில் எந்தச் சாட்சிகளும் இல்லை என ஒரு பொழுது எண்ணி மௌனித்தாலும் பூதாகாரமாய் விரியும் நினைவுகளால் மனச்சாட்சி அவரின் உறக்கத்தைக் கெடுத்தது. மரணபயம் அவரில் தொற்றிக் கொண்டது.

கனவு கண்டு விழித்துக் கொண்ட நேரம் தொடக்கம், விஞ்சி நின்ற சோத்னைக்குள், தன்னைத் தானே வீழ்த்திக் கொண்டு, தாழ முடியாத அச்சத்திற்குள் அமிழ்ந்து போனார். இப்பொழுது கண்களை மூடினால் இயமனின் காலடி ஓசை கேட்பதைப் போன்றதோர் பிரமை. விழித்துக் கொண்டே இருட்டினூடு கூரையை நோக்கினார். கூரையைப் பிரித்துக் கொண்டு பயங்கரமாய் பற்கள் தெரியச் சிரிக்கும் ஏதோ ஒன்று. மனேச்சர் மதிவாணனும் சிற்றூழியர் சின்னராசாவும் "எத்தனை நாளைக்கப்பா உன் ஆட்டம்!" என்று ஏளனம் செய்வதாக ஒரு அழுத்தம்.

சாட்சிகள் இல்லாத சம்பவங்களுக்கெல்லாம் உண்மைச் சாட்சியாகி அவரது மனச்சாட்சி அவரை விழித்திருக்க வருத்தி மூளையைக் குழப்பியது. "ஐயோ! ஐயோ! ஐயோ!" தூக்கத்தைத் தொலைத்த பரமானந்தத்தார் எழுந்திருந்து உரத் துக் கூச்சலிட்டார். எல்லோருமே விழித்துக் கொண்டார்கள்.

கிழக்கு வானம் வெளித்திருந்தது. இயற்கையின் அழகு அந்தப் பூமியை ஈர்ந்தொளிர்ந்தது. பரமானந்தத்தார் கண்கள் சிவக்க, முகம் இருள, எங்கோ? எதையோ? இழந்து விட்டவராகிப் பேயறைந்தவர் போலானார்.

மகள் ரதிதேவி அவரருகில் நின்று "என்னப்பா என்னப்பா" என்று கேட்டு அவரை உசுப்பினாள். அவரோ பதில் சொல்லவில்லை. எதனையோ வெறித்துப் பார்த்தார். மீண்டும் "ஐயோ! ஐயோ! ஐயோ!" என்று கூக்குரலிட்டபடி முற்றத்தில் இறங்கினார்.

மனைவி பார்வதியின் முகத்திலோ அதிர்ச்சியின் கோலங்கள், மகள் ரதிதேவி அப்பாவின் எதிர்பாராத செய்கையால் வேதனை முட்ட விம்மினாள். "என்னப்பா என்னப்பா" எனக் கேட்டு ஏங்கும் குடும்பத்துக்குப் பதில் ஏதும் கூறமுடியாமல் பாதையில் இறங்கிய பரமானந்தத்தாரை இப்பொழுது ஊரார் பரிதாபத்தோடு பார்த்தனர்.

அவரது செய்கைகளைக் கட்டுப்படுத்த முயன்ற மனைவியால் எதுவுமே இயலவில்லை. பாவம் பரமானந்தத்தார்.

"கூட்டுறவுச் சங்கத்தில் இருந்த அவருக்கு, மிகவும் நெருக்கமான முருகானந்தம், மதிவாணன், சின்னராசா எல்லோரையும் இழந்ததாலே பரமானந்தத்தார் மூளை குழம்பிப் போனார்" இப்படித்தான் ஊரெங்கும் பேச்சுப் பரவியது. அவருக்கு இப்படி ஒரு தண்டனையை வழங்கக் காரணமான உண்மையான ஒரேயொரு சாட்சி யாரென்பது அவருக்கும் இப்பொழுதாவது தெரியுமோ? என்னவோ? பரமானந்தத்தார் பைத்தியம் பரமானந்தமானார்.



# ஏன் கூடினார்கள்?

## கூட்டமைப்பின் வவுனியா கூட்டம் பற்றி

உ_சிலமணி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபை உறுப்பினர்களும் கூடி அரசி யல் நிலைமை குறித்து ஆராயும் முதலாவது கூட்டம் வவுனியாவில் 24ஆம் திகதி இடம்பெற்றது. ஓர் அரசியல் கட்சிக் கட்டமைப்பு எதனை யும் கொண்டிராத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரையில் அதன் நாடாளுமன்ற உறுப்பினர்களா லேயே வழிநடத்தப்பட்டு வந்தது: வருகிறது. இப்போதுதான் முதல் தடவையாக அது மாகாண சபை உறுப்பினர்களையும் சேர்த்துக் கொண்டு அரசியல் நிலைவரம் குறித்து ஆராய்ந்திருக்கிறது.

வடக்கு மாகாண சபை பதவியேற்ற பின்னர் ஆளுநருடன் சபைக்கு ஏற்படும் முறுகல் நிலை, இரணை மடுக் குளத்தின் தண்ணீரை யாழ்ப் பாணத்துக்கு எடுத்துச் செல்வதில் உள்ள சிக்கல்கள், கூட்டமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படுகின்றமை மற்றும் காணி அபகரிப்பு போன்ற பல்வேறு பிரச்சினைகளின் பின்னணி யில் கூடிய இந்தக் கூட்டம் பற்றிப் பரபரப்பான எதிர்பார்ப்புகள் இருந் தன. ஆனால் சில பல சூடான கருத் துப் பரிமாறல்களுடன் பரபரப்பு ஏதுமின்றி கூட்டம் முடிவடைந்தது.

எப்போதும் தனித்தே முடிவெடுக்கும் மும்மூர்த்திகளான சம்பந்தன், சுமந்திரன், விக்னேஸ்வரன் ஆகி யோர் இப்போது அவசரமாக ஊரைக் கூட்டியிருப்பதன் பின்னணியில் ஏதாவது இருக்கும் என்று மாகாண தலைகள் பலவற்றிற்கு எதிர்பார்ப்பு இருந்தது.

### ஆரம்பத் தவறு

வவுனியா நகரசபை மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை கலந்துரை யாடல் இடம்பெற்றிருந்தது.

9 மணிக்குக் கூட்டம் ஆரம்பமாகும் என்று அறிவித்தல் கொடுக்கப்பட்டி ருந்தாலும் தலைவர் சம்பந்தன் 10.30 மணிக்கே வந்து சேர்ந்தார் என்பதால் அதன் பின்னரே கூட்டம் ஆரம்பமானது. கூட்டம் வவுனியா வில் நடந்த காரணத்தால், அந்த மாவட்டத்து அமைச்சர் ப.சத்தியலிங் கம் நிகழ்வுகளை நெறிப்படுத்தினார். மங்கலவிளக்கேற்ற வருமாறு சம்பந் தன், மாவை. சேனாதிராசா, விக் னேஸ்வரன், சிவஞானம் ஆகி யோரை அவர் ஒலி வாங்கியில் பெயர் சொல்லி அழைத்தார். அவர் மறந்தோ மறக்காமலோ விட்டுவிட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஷ் பிரேமச்சந்திரனையும் மேரி கலா குணசீலனையும் தலைவர் சம்பந் தன் அழைத்து மங்கல விளக்கேற்ற வைத்தார். திருமதி அனந்தி சசிதரன் கூட்டத்துக்கு காலம் தாழ்த்தியே வந்திருந்தார்.

தேர்தல் காலங்களில் மேடைகளில் அவர்களின் நினைவுக்கு வந்த போரில் உயிரிழந்த மக்களையும் மாவீரர்களையும் மீண்டும் அங்கு நினைவுகூர அங்கு யாருக்கும் நேரம் இருக்கவில்லை. ஒருவருக்குக் கூட அது பற்றிய நினைவு கூட்டம் முடியும் வரையும் வரவில்லை.

சம்பந்தரின் கைக்கு 'மைக்' சென்ற தும் சுமார் அரை மணிநேரம் பேசி னார். தற்போதைய அரசியல் நிலை மைகள் தொடர்பில், உறுப்பினர் களுக்கு பாடம் எடுத்தார். தெரிவுக் குழுவில் பங்கேற்று பேச்சுக்கு வருமாறு ஜனாதிபதி நாடாளுமன் றில் விடுத்த அழைப்புக் குறித்துப் பேசினார். இது தொடர்பில் ஒவ்வொரு உறுப்பினர்களின் கருத்துக்களை யும் அறிய விரும்புவதாகச் சொல்லி முடித்தார்.

அவரது உரையில் அரசுடன் மீண் டும் பேச்சுக்குச் செல்ல வேண்டும் என்ற தொனியே மேலோங்கி இருந் ததாக அங்கிருந்த உறுப்பினர்கள் பலர் அபிப்பிராயப்பட்டார்கள்.

கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் மாவை. சேனாதிராசாவும் அரை மணிநேரம் விடாமல் பேசினார். அரசுடன் மீண்டும் பேச்சுக்குச் செல் வது தொடர்பில் அவர் எந்தவொரு கருத்தையும் முன்வைக்கவில்லை. மாறாக கட்சியின் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படுவது தொடர் பில் தனது ஆதங்கத்தை வெளிப் படுத்தினார். அத்துடன் தற்போது அரசால் முன்னெடுக்கப்படும் போர் கால இழப்பீடு மதிப்பீட்டைக் கடுமை யாக விமர்சித்தார்.

### சுரேஷின் கோபம்

நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பேசும்போது உள்ளூராட்சி சபை களின் வரவு - செலவுத் திட்டம் தோற் கடிக்கப்படுவதற்கு காரணம் கட்சி கட்டுக்கோப்பில்லாமல் இருப்பது தான் என்றார். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கூட்டமைப்பின் பதி வின் அவசியத்தை வலியுறுத்தி னார். தமிழரசுக் கட்சியினரே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியி னருடன் இணைந்து வரவு - செல வுத் திட்டத்தை தோற்கடிக்கின்றனர் என்று பகிரங்கமாகக் குற்றஞ்சாட் டினார். அதற்கு தமிழரசுக் கட்சியினா ரிடம் இருந்து பகிரங்கமான மாற்றுக் கருத்துக்கள் எவையும் வரவில்லை. யாழ்ப்பாணத்தின் மானிப்பாய் பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் ஆரம்பத்திலிருந்தே தோற் கடிக்கப்பட்டு வந்த போது அதனை யாரும் கணக்கில் எடுக்கவில்லை. அது தமிழரசுக் கட்சியின் உள்கட்சி விவகாரம் என்று விட்டுவிட்டார்கள். இப்போது மற்றைய கட்சிக்காரர் களின் வரவு செலவுத் திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டவுடன் தமிழரசுக் கட்சி மீது பாய்கிறார்கள் என்ற முனங்கல்கள் மட்டும் கேட்டன.

மஹிந்த ராஜபக்ஷ பேச்சுக்கு அழைத் தால் சம்பந்தனோ விக்னேஸ்வ ரனோ செல்லக்கூடாது என்றும் சுரேஷ் அழுத்தம் திருத்தமாகச் சொன்னார். அதற்கும் இவர் மட்டும் மஹிந்த வின் அமைச்சில் ஆலோசகராக இருந்தது சரியாமோ என்ற குசு குசுப்பு இடையே எழுந்தது.

இலங்கை அரசுகள் தமிழர்களை எப்படியெல்லாம் கடந்த காலங்களில் ஏமாற்றின என்பதைப் பற்றிப் பேசிய சுரேஷ், சர்வதேசத்தின் தலையீடு ஒன்றில்லாமல் மீண்டும் பேச்சுக்குச் செல்லக்கூடாது என்றார்.

வடக்கின் முதலமைச்சர் ரத்தினச் சுருக்கமாகப் பேசினார். 'கட் அன்ட் ரைட்டாக' சட்டப் பிரச்சினைகளை எடுத்துக்காட்டிப் பேசினார். பேச்சுக் குச் செல்லக்கூடாது என்பதையோ ஜனாதிபதியைச் சந்திக்கக் கூடாது என்றோ அவர் கருத்துக்கள் எதனையும் சொல்ல வில்லை. போகவேண்டும் என்றும் வலியுறுத்தவில்லை.

இலங்கையில் நடந்ததை இனப்படு கொலை என்று நிரூபிப்பதில் எதிர் கொள்ளப்படும் சிக்கல்கள் குறித்துச் சொன்னார் எம்.ஏ.சுமந்திரன். இனப் படுகொலை என்று சொல்லி அதை நிரூபிக்க எமக்கு நிறைய ஆதாரங்கள் தேவை என்பதை அவர் எடுத்துக் கூறினார். அவசரப்பட்டு அந்த விடயத்தை நிரூபிக்கத் தவறினால் அரசியல் ரீதியாகப் மேலும் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டி வரும் என்பதையும் அவர் எடுத்துக் கூறினார். சர்வதேசம் முதலில் போர்க் குற்ற விசாரணை ஒன்றை நடத்துவதற்கு இடம்விட்டு அதன் பின்னர் இனப்படுகொலை நடந்தது என்பதை நிரூபிப்பதே சிறந்தது என்று விளங்கப்படுத்தினார். ஆனால் அவரது கருத்துடன் பலருக்கும் உடன் பட முடியாமலிருந்தது. நடந்தது இனப்படுகொலைதான் என்பதை அவர்கள் ஆணித்தரமாக நம்பிய துடன் அதனை சர்வதேச நீதிமன்றில் இலகுவாக நிரூபிக்க முடியும் என்றும் பேசிக்கொண்டார்கள். அதற் குரிய நடவடிக்கைகளைக் கட்சிதான் எடுக்க வேண்டும் என்று பேசிக் கொண்டார்கள்.

பேச்சுக்குப் போவது போகாமல்விடு வது என்பது பற்றி அவர் கருத்து எத னையும் சொல்லவில்லை.

### கிழக்கை மறந்துவிடாதீர்கள்

இதன் பின்பு கிழக்கு மாகாணத்தின் கைக்கு 'மைக்' மாறியதும் தாங்கள் கைவிடப்பட்டதான உணர்வை அவர்கள் வெளிப்படுத்தினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வ ராஜா பேசும்போது உள்ளூராட்சி சபைகளில் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படுவது தொடர்பில் தனது கவலைகளை வெளிப்படுத் தியிருந்தார். நாடாளுமன்ற உறுப்பி னர் அரியநேத்திரன் வருகின்ற சர்வ தேசத் தலைவர்கள் எல்லோரும் வடக்கைப் பற்றி மட்டுமே கதைக் கின்றனர். கிழக்கைக் கண்டு கொள்ளாமல் விட்டுவிடுகின்றனர் என்று ஆதங்கப்பட்டார்.

கிழக்கு என்ற ஒன்று இருப்பதை மறந்து விடுகின்றனர் என்பதையும், வடக்கையும் - கிழக்கையும் எப்போ தும் இணைத்தே நோக்கவேண்டும் என்றும் கோரிக்கை வைத்தார்.

கிழக்கு மாகாண எதிர்கட்சித் தலை வர், அமைச்சர் ப.சத்தியலிங்கம் ஆகியோரின் உரையுடன் முதல் பாதி முடிவுக்கு வந்தது. மதியபோச னத்தின் பின்னர் இரண்டாம் கட்டம் தொடர்ந்தது.

வெளிநாடுகளுக்குச் சென்று விட்டு வந்த அனந்தி, தான் வெளிநாடு களில் சந்தித்தவர்களுடன் கலந்து ரையாடிய விடயங்கள், மக்கள் தீர்ப்பாயத்தின் தீர்ப்பு பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார். அரசின் பேரழி வுக் கணக்கெடுப்புக்குப் பதிலாக கூட்டமைப்பே அத்தகைய கணக் கெடுப்பு ஒன்றை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

### பதிலடிகள்

வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் கருத்துக் கள் சுமந்திரனின் கருத்துக்கான பதிலாக அமைந்தன. இங்கு நடந்த தும், நடந்து கொண்டிருப்பதும் இனப்படுகொலைதான் என்றார் ஆணித்தரமாக. அத்துடன் அரசுடன் பேச்சுக் குச் செல்லக்கூடாது என்றும் வலியு றுத்தினார்.

வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் பற்றியே தாங்கள் எல்லா இடமும் பேசுகிறார்கள் என்று அரிய நேத்திரனுக்குப் பதில் சொன்னார் வடமாகாண சபையின் மற்றொரு உறுப்பினரான ரவிகரன். யாரும் அதை நினைத்து அச்சப்படத்தேவை யில்லை என்றும் ஆறுதல் சொன் னார்.

இலங்கையில் நடப்பது கணவன் - மனைவி பிரச்சினை என்றும் இதில் வெளியாள்கள் தலையிடாமலி ருப்பதே சிறந்தது என்றும் இந்தியா வின் 'தி ஹிந்து' பத்திரிகைக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூறிய கருத்துக்கு மெல்லிய சாட்டை யடியும் கொடுத்தார் ரவிகரன். "சரி! கணவன் - மனைவி பிரச்சினை தீரவில்லையென்றால் விவாகரத்து தான் ஒரே வழி. அதைத்தானே எங்க ளுடைய ஆட்களும் இதற்கு முன் னர் கேட்டவர்கள். இரண்டு பேர் மனமொத்துப் பிரிவதென்றால்கூட மூன்றாம் தரப்பான நீதிமன்றத் தைத்தானே நாடியாக வேண்டியி ருக்கிறது" என்று ரவிகரன் சொல்லி முடிக்க முன்னர் அரங்கே சிரித்தது.

அது பழைய விடயம் அதை விடுங்கோ என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா குறுக்கிட்டு அந்த விடயத்தை அப்படியே அமுக்கிவிட்டார்.

அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றால் அரசுடன் பேசத்தான் வேண் டும் என்ற கருத்தை முன்வைத்தவர் வடமாகாண சபையின் பிரதித் தவிசாளர் அன்ரனி ஜெகநாதன். அரசுடன் பேச்சுக்குப் போகவேண் டும் என்று வெளிப்படையாக அந்தக் கூட்டத்தில் சொன்ன ஒரே நபர் அவர்தான். வடக்கு மாகாணசபை அதிகாரிகள் தங்கள் அதிகாரங்க ளுக்கு உட்பட்ட வேலைகளையே செய்கின்றனர் இல்லை என்று சாட வும் அவர் தயங்கவில்லை.

முதலமைச்சரைத் தாங்களே நேரில் சந்திப்பதற்கோ தொலைபேசியில் பேசுவதற்கோ முடியாமல் இருக்கும் நிலையைச் சுட்டிக்காட்டி வருத்தப்பட் டார்.

### இறுதித் தவறு

இன்றைய கூட்டத்திற்கு நிகழ்ச்சி நிரலே தரப்படவில்லை என்று கூட்டத்தின் நிறைவுப் பகுதியில் உரையாற்றிய சிவசக்தி ஆனந்தன் பிழை பிடித்தார். முதலமைச்சரை யாரோ இருவர் 'ரிமோட் கொன் ரோல்' வைத்து இயக்குகின்றார்கள் என்றும் முகத்திலடித்தாற்போலச் சொன்னார். இந்தக் குற்றச்சாட்டை எதிர்பார்க்காத பலரது முகங்கள் வாடிப்போயின.

உரையாற்றிய கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள், தமிழர்களே தமிழர்களுக்கு எதிராக இருக்கின்ற னர் என்று மிகவும் வருத்தப்பட் டனர். கிழக்கில் முஸ்லி களால் தமிழர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் பட்டியலிட் டனர்.

அதற்குப் பதிலளிக்கும் வகையில், கூட்டமைப்பில் இருக்கும் ஒரே ஒரு முஸ்லிம் மாகாண சபை உறுப்பி னர் அஸ்மின் பேசினார். முஸ்லிம் அமைச்சர் ஒருவர் விடும் அறிக்கை யையும், அவர்களது ஆதரவாளர் கள் செய்வதையும் வைத்துக் கொண்டுஒட்டுமொத்த முஸ்லிம்களை யும் அவ்வாறு நினைக்கக்கூடாது என்று பவ்வியமாகக் கேட்டுக் கொண்டார். கூட்டமைப்புத் தலைமை அரசுடன் இப்போதைக்குப் பேச்சுக் குச் செல்லக்கூடாது என்று அவரும் வலியுறுத்தத் தவறவில்லை.

### முஸ்லிம்கள் ஆதரவுதான்

இறுதியில் சம்பந்தரின் பதிலுரை யுடன் கூட்டம் முடிவை எட்டியது. பேச்சுவார்த்தைக்கு செல்வது தொடர் பில் கட்சி ஆலோசனைப்படியே செயற்படுவோம் என்று சம்பந்தன் உறுதிமொழி வழங்கினார்.

கூட்டத்தில் கலந்துகொண்ட பல உறுப்பினர்கள் அரைத்த மாவையே திரும்பத் திரும்ப அரைத்துக் கொண்டிருந்தார்கள். இதனால் கூட்டம் முடிவடைய மாலை ஆறு மணியாகி விட்டது. கூட்டத்தின் முடிவில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் ஆனந்தசங்கரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலக்கப்பட்டதாக வெளியிடப்படும் ஊகங்கள் குறித்துக் கேட்கப்பட்ட கேள்விக்கு ஊகங்களுக்கு எல்லாம் பதில் சொல்ல முடியாது என்று கறா ராகச் சொல்லிவிட்டார் சம்பந்தன். அத்துடன் நன்றி வணக்கம் என்று சொல்லி மேலதிக கேள்விகளுக்கு சந்தர்ப்பம் வழங்காமல் கூட்டத்தை முடித்துக் கொண்டார்.

ஜனாதிபதியின் முன் பதவியேற்க வேண்டாம் என்று கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தலைவர் கள் கேட்டுக் கொண்டபோதும் தனியாக முடிவெடுத்து ஜனாதிபதி முன்னிலையில் முதலமைச்சர் பதவியேற்றதைப் போல இந்தக் கூட்டத்து முடிவுகளுக்கும் நடக்கா மல் இருந்தால் சரி என்று சில உறுப்பி னர்கள் பேசிக்கொண்டனர்.

சூரியகாந்தி



# வாங்கிக் கட்டிய வடக்கு பொலிஸார்

அதிரன்

மும்மொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசு அதிக சிரத்தையுடன் செயற்பட்டு வருகின்றது என்று ஜனாதிபதியும் அவரது அமைச்சர்களும் அடிக்கடி பகிரங்கமாகப் பிதற்றிக் கொள்கின்றனர். நாம் மும்மொழியையும் சமமாக மதிக்கிறோம் என்று வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கும் அடிக்கடி அரசு சுட்டிக்காட்டி வருகிறது. மொழிநடைமுறைப்படுத்தல் அமைச்சரான வாசுதேவ நாணயக்கார, நாட்டின் அனைத்து இடங் களிலும் மும்மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான விசேட திட்டங்களை எனது அமைச்சு தயாரித்து, செயற்படுத்தி வருகின்றது என்று ஓயாமல் கூறி வருகிறார். வடக்கில் இப்போது அரசின் சகல செயற்பாடுகளும் தமிழ் மொழியில் நடைபெறுகின்றன என்று இங்கிருந்து ஜெனிவா வரை சென்று அரச பிரதிநிதிகள் அடித்துச் சத்தியம் செய்கின்றனர்.

ஆயினும் அரசின் இந்தப் பிதற்றல்கள் எல்லாம் வெறும் வாய்ப்பேச்சளவில் மட்டும்தான். நடைமுறையில் அனைத்துமே பூச்சியம். இதனைத் தெளிவாக வெளிப்படுத்தியது கடந்த வியாழக்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம். மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அரச அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள், பொலிஸார் ஆகியோர் ஒன்றிணைந்து ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்வதற்காகவே இந்தக் கூட்டம் கூட்டப்படுகிறது. வழமையாகவே ஆரவாரம் எதுவுமின்றி அமைதியாக நடந்து முடியும் இந்தக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை சற்று வித்தியாசமாக இருந்தது. கூட்டத்தில் காரசாரமான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இந்த வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டவர்கள் யாரும் அல்லர். அரசின் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் அரச அதிகாரிகளான பிரதேச செயலர்களும் சட்டம் ஒழுங்கைப் பேணும் நடவடிக்கையில் ஈடுபடும் பொலிஸாரும்தான். பொலிஸாரின் நடவடிக்கைகளால் அதிருப்தியடைந்து விசனத்துக்குள்ளான யாழ்.மாவட்டத்தின் பிரதேச செயலர்கள் பலர் இந்தக் கூட்டத்தில் வைத்து பொலிஸார் மீது குற்றச்சாட்டுக்களை அடுக்கினர். இப்படியொரு அதிரடித் தாக்குதல் நடைபெறும் என்று பொலிஸார் கனவிலும் நினைத்திருக்கமாட்டார்கள்.

இவ்வாறானதொரு நேரடியான தாக்குதலை வடக்கு அரச அதிகாரிகளிடமிருந்து பொலிஸார் எதிர்கொண்டது இதுவே முதல் முறையாகவும் இருக்கக் கூடும். அந்தளவுக்கு கடுமையான குற்றச்சாட்டுக்கள் பொலிஸார் மீது சுமத்தப்பட்டன. அத்தனைக் குற்றச்சாட்டுக்களையும் சுமத்தியவர்கள் பிரதேச செயலர்கள்தான்.

யாழ்.மாவட்டத்துக்குப் புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபராக றொஹான் டயஸ் பதவியேற்றுச் சில தினங்கள் ஆவதற்குள்ளேயே பொலிஸார் மீது இந்தக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இதனால் கூட்டத்தில் கலந்துகொண்ட புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொஹான் டயஸ் தர்மசங்கடமான நிலைக்கு உள்ளானார். பிரதேச செயலர் களின் இந்தக் குற்றச்சாட்டுக் களுக்கு பதிலளிக்க முடியாமல் திக்குமுக்காடிப் போன அவர் இவற்றை விரைவில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகக் கூறி தனது தரப்புத் தவறை ஒப்புக் கொண்டார்.


"வடக்கில் பொலிஸார் தொடர்ந்தும் தமிழ் மொழியை புறக்கணிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். சில பொலிஸ் நிலையங்களில் இன்னும் தமிழில் முறைப்பாடு செய்ய முடியாத நிலை காணப்படுகிறது. பொலிஸாரினால் அனுப்பப்படும் கடிதங்கள் கூடத் தனிச் சிங்களத்திலேயே உள்ளன" என்று பிரதான குற்றச்சாட்டை வடக்குப் பொலிஸார் மீது பிரதேச செயலர்கள் முன்வைத்தனர். இதனால் பொலிஸ் அதிகாரிகளுக்கும் பிரதேச செயலர்களுக்கும் இடையே கடும் வாய்த் தர்க்கம் ஏற்பட்டது. இதன் போது வடக்கில் உள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் 100 வீதம் தமிழில் முறைப்பாடு செய்யப்படுகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். இதன் போது பொலிஸாரின் கூற்றை முற்றாக மறுத்தனர் பிரதேச செயலர்கள். தமிழில் முறைப்பாட்டை பொலிஸார் பதிவு செய்வதில்லை என்பதற்கான ஆதாரங்களையும் அவர்கள் அங்கு அம்பலப்படுத்தினர்.

ஏதாவது பிரச்சினைகள் தொடர்பில் பொலிஸ் நிலையங்களுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டால் அங்கு பதிலளிப்பதற்கு தமிழ் பேசும் பொலிஸார் இருக்க மாட்டார்கள். பின்னர் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸாரால் கூறப்படுகிறது என்று கூறிய பிரதேச செயலர்கள், அதற்கான உதாரணமாக ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டினர். சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கும் வீடு ஒன்றில் கடந்த நவம்பர் மாதம் 22 ஆம் திகதி இரவு 9.30 மணியளவில் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. இது குறித்து சாவகச்சேரிப் பொலிஸாருக்கு உடனடியாகத் தகவல் தெரிவிக்கப்பட்டது. ஆயினும் பொலிஸார் அங்கு வரவே இல்லை. மறுநாள் காலை 8.30 மணியளவிலேயே சம்பவ இடத்துக்குப் பொலிஸார் வந்தனர் என்று உதாரணத்துக்கு ஒரு சம்பவத்தைச் சுட்டிக்காட்டினர் பிரதேச செயலர்கள்.

அத்துடன் பொலிஸாரால் அனுப்பி வைக்கப்படும் கடிதங்கள் கூட தனிச் சிங்களத்தில் அனுப்பப்படுகின்றன. வவுனியா பொலிஸாரால் அண்மையில் தனிச் சிங்களத்தில் கடிதம் அனுப்பப்பட்ட விடயம் அங்கு சுட்டிக்காட்டப்பட்டது. பிரதேச செயலர்கள் அத்துடன் நின்றுவிடவில்லை. குற்றச்செயல்களைத் தடுப்பதில் பொலிஸாரின் நடவடிக்கை போதாது என்றும் அவர்கள் கூட்டத்தில் விசனம் வெளியிட்டனர். யாழ்.குடாநாட்டில் பரவலாக இடம்பெறும் சட்டவிரோத செயல்கள் தொடர்பில் பொலிஸாரின் நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை. அரியாலை கிழக்கு, ஊர்காவற்றுறை, மண்கும்பான், மிருசுவில், வடமராட்சி உட்பட பல இடங்களில் மணல் கடத்தல் இடம்பெறுகிறது. மருதங்கேணியில் கண்டல் தாவரங்கள் சட்டவிரோதமாக வெட்டப்பட்டு விறகுக்காகக் கொண்டு செல்லப்படுகின்றன. பொன்னாலை, ஊர்காவற்றுறைப் பகுதிகளில் பனை மரங்கள் தறிக்கப்பட்டுக் கடத்தப்படுகின்றன. மாதகலில் அதிகளவான கஞ்சா அண்மையில் மீட்கப்பட்டுள்ளது. போதைப் பொருள் விற்பனை குடாநாட்டில் தொடர்கிறது எனப் பல விடயங்கள் நேற்றைய கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டன. இவற்றைத் தடுப்பதற்குப் பொலிஸாரின் நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை என்றும் குற்றம் சுமத்தப்பட்டது. குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல்களைத் தெரிவிப்பவர்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் நிலை ஏற்படுவது குறித்தும் அங்கு பிரஸ்தாபிக்கப்பட்டது. அத்துடன் யாழ்.குடாநாட்டு வீதிகளில் போக்குவரத்துப் பொலிஸார் இராணுவத்தினருடன் இணைந்து சோதனையில் ஈடுபடுவதற்கும் கடும் அதிருப்தி வெளியிடப்பட்டது.

இந்தச் சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் அதிகளவான குற்றச்சாட்டுக்கள் பொலிஸார் மீது சுமத்தப்பட்டமையால் கூட்டத்தில் கலந்து கொண்ட பொலிஸ் அதிகாரிகள் கோபம் அடைந்தவர்களாகக் காணப்பட்டனர். கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்களில் பெரும்பாலானவை பொலிஸார் தொடர்பானவையாகவே இருந்தன. இவற்றையெல்லாம் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த யாழ்.மாவட்ட புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொஹான் டயஸ், இந்தப் பிரச்சினைகளைச் சீர்செய்வதற்கு விரைவில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கூட்டத்தில் தெரிவித்தார்.

மக்களின் பிரச்சினைகளை நேரில் அறிபவர்கள் என்ற ரீதியில் பிரதேச செயலர்கள் பல விடயங்களை இந்தக் கூட்டத்தில் முன்வைத்தார்கள். பொலிஸாருக்கு எதிரான பல விடயங்களையும் அவர்கள் துணிவுடன் முன்வைக்கத் தவறவில்லை. அந்த வகையில் பிரதேச செயலர்கள் பாராட்டுக்குரியவர்கள். பொலிஸாரின் நடவடிக்கைகளால் கடந்த பல காலமாக அதிருப்தி அடைந்திருந்த அவர்கள் அதனை ஒட்டுமொத்தமாக கடந்த கூட்டத்தில் போட்டுடைத்தனர். சற்றும் எதிர்பாராத பொலிஸார் பிரதேச செயலர்களின் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க முடியாமல் திக்கித் திணறியதை காணக் கூடியதாக இருந்தது. எனவே தொடர்ந்து வரும் கூட்டங்களிலும் மக்கள் பிரச்சினைகளை முன்னிறுத்தி அவற்றுக்கு தீர்வு காணப்பட வேண்டும். சட்டத்தை பேண வேண்டிய பொலிஸாரே அதனைப் புறக்கணிப்பதை துணிந்து சுட்டிக்காட்டுவதற்கு தயங்க வேண்டியதில்லை. சொல்ல வேண்டியதை சரியான நேரத்தில் சரியாக சொல்ல வேண்டும். அதுதான் இன்றைய காலத்தின் கட்டாய தேவை. இந்த விடயங்களில் இனியாவது பொலிஸார் தம்மைத் திருத்திக் கொண்டு செயற்படாவிட்டால் எதிர்வரும் கூட்டங்களிலும் குற்றச்சாட்டுக்கள் மேலும் வந்து குவியும் என்பதில் சந்தேகமில்லை.



ரெங்கன்

# காலநிலை மாற்றத்துக்கு சூரிய தொழிற்பாடுகள் முக்கிய காரணியல்ல

## விஞ்ஞானிகள் புதிய கண்டுபிடிப்பு

சூரியனில் ஏற்படும் வெப்ப மாற்றங்களால் பூமியின் காலநிலை மாற்றங்களில் தாக்கம் பெரிதாக ஏற்படுவதில்லை. புதிய விஞ்ஞான ஆய்வொன்றில் இந்த உண்மை கண்டறியப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய முடிவு நீடித்த வெப்பம் மற்றும் குளிரான காலநிலைகள் சூரியனில் காலத்துக்குக் காலம் ஏற்படும் மாறுதல்களினால் உருவாக்கப்படுவதாக இருந்து வந்த கருத்தைத் தலைகீழாக மாற்றியுள்ளது. கடந்த 1000 ஆண்டு காலமாக வட பூகற்ப பிர தேசங்களில் ஏற்பட்டு வந்துள்ள காலநிலை மாற்றங்கள் குறித்து நடத்தப்பட்டுள்ள ஆராய்ச்சிகளில் 1800 ஆம் ஆண்டு வரையில் காலநிலை மாற்றத்தை ஏற்படுத்தி வந்துள்ள பிரதான காரணியானது. எரிமலை சீற்றங்களாகவே இருந்துள்ளன என்று தெரியவந்துள்ளது.

இவை சூரியஒளி பூமியை வந்தடைவதைத் தடை செய்கின்றன. அதன் மூலம் குளிர் மற்றும் வறட்சியான காலநிலையை உருவாக்குகின்றன. 1900ஆம் ஆண்டிலிருந்து பூமியிலிருந்து வெளியிடப்படுகின்ற கரியமில வாயுவே காலநிலை மாற்றங்களுக்கு முக்கிய காரணிகளாக இருந்துள்ளது. இந்தப் புதிய கண்டுபிடிப்பானது சூரியனின் மிதமான செயற்பாடுகள் பூமியின் தட்பவெப்ப நிலைகளில் பெரிதாக தாக்கங்களை ஏற்படுத்த மாட்டாது என்பதை நிரூபித்துள்ளது. இந்த ஆராய்ச்சியை எடின்பரோ பல்கலைக்கழக விஞ்ஞானிகள் நடத்தியுள்ளனர். மரங்களின் வளையங்கள் மற்றும் ஏனைய வரலாற்றுப் பதிவுகளை வைத்து இந்த ஆய்வு நடத்தப்பட்டது. இந்தவித புள்ளிவிவரங்களை கணினி அடிப்படையான மாதிரிகளுடன் ஒப்பிட்டு ஆராயப்பட்டது.

இந்த ஆய்வுகளின்படி சூரிய தொழிற்பாடுகள் கடந்த மிலேனியத்தில் மிகக் குறைவாகவே காணப்பட்டுள்ளது என்பது தெரியவந்துள்ளதாம்.

இயற்கை பூதத்துவவியல் சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ள இந்த ஆய்வை இயற்கை சுற்றுச்சூழல் ஆராய்ச்சி சபையும் ஏற்றுக் கொண்டுள்ளது.

இதுவரை காலமும் காலநிலை மீதான சூரியனின் கடந்த கால ஆற்றல் சரியாகப் புரிந்து கொள்ளப்படவில்லை. இப்போதைய ஆய்வுகளின் முடிவுகள், கடந்த சில நூற்றாண்டுகளில் எவ்வாறு காலநிலை மாற்றங்களுக்குள்ளாகி வந்துள்ளது என்பதை விளக்கிக் கொள்வதை மேலும் மேம்படுத்துவதாய் இருக்கும் என்று எடின்பரோ பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானிகளில் ஒருவரான டாக்டர் அன்ட்ரூஸ்சுரர் தெரிவித்துள்ளார்.



1900 ஆம் ஆண்டிலிருந்து பூமியிலிருந்து வெளியிடப்படுகின்ற கரியமில வாயுவே காலநிலை மாற்றங்களுக்கு முக்கிய காரணிகளாக இருந்துள்ளது. இந்தப் புதிய கண்டுபிடிப்பானது சூரியனின் மிதமான செயற்பாடுகள் பூமியின் வெப்ப தட்ப நிலைகளில் பெரிதாக தாக்கங்களை ஏற்படுத்த மாட்டாது.

### பயங்கரவாத இயக்கமாம்

முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தை ஒரு பயங்கரவாத இயக்கம் என்று எகிப்தியப் பிரதமர் ஹசெம பெப்லவி குற்றஞ்சாட்டியுள்ளார். எகிப்திய நகர் ஒன்றில் ஒரு காரில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்து ஒரு பொலிஸ் நிலையத்தைத் தகர்த்ததுடன் 14 பேர் வரை கொல்லப்பட்டதையடுத்து பிரதமர் இவ்வாறு குற்றஞ்சாட்டினார். பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் பிரதமர் மொகம்மது யோர்ஸியின் தடை செய்யப்பட்ட முஸ்லிம் சகோதரத்துவ கட்சியினரையே புதிய பிரதமர் இவ்வாறு பட்டம் சூட்டியுள்ளார்.

மோர்ஸி பதவி இறக்கப்பட்டதன் பின்னர் நடைபெற்றுள்ள மிகப் பெரிய தாக்குதலாக இது கருதப்படுகின்றது. அத்துடன் எகிப்தின் புதிய அரசியல் திட்டம் தொடர்பான வெகுஜன வாக்கெடுப்பு நடைபெறுவதற்கு சில வாரங்களே இருக்கும் நிலையில் இது நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

### விண்வெளியில் நடை பயணம்

விண்வெளியில் உள்ள சர்வதேச விண்வெளிக் கலத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளைச் சரி செய்வதற்காக அங்கு சென்றுள்ள இரண்டு நாஸா விஞ்ஞானிகளும் கிறிஸ்துமஸ் தினத்துக்கு முதல்நாள் விண்வெளியில் நடந்து பணி புரிந்துள்ளனர். இந்த வருடத்தில் நடத்தப்பட்டுள்ள 10 ஆவது விண்வெளிப் பயணம் இதுவாகும்.

நாஸா விஞ்ஞானிகள் றிக் மாஸ்ட்ரச்சோ (53) மற்றும் மைக் ஹொப்கின்ஸ் (44) ஆகிய இருவரும் கடந்த சனிக்கிழமை முதல் தடவையாக பிரதான கலத்திலிருந்து வெளியில் வந்து பிரதான கலத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளைச் சரி செய்தனர் இரண்டு நாள் பணிகளை ஒரு நாளில் முடித்திருந்தார்கள். ஐந்தரை மணி நேரம் பிடித்த இந்தப் பணி ஒரு மணி நேரம் முன்னராகவே முடிவுற்றது.

### முன்னாள்- இந்நாள் போப் பாண்டவர் சந்திப்பு

இன்றைய போப்பாண்டவர் பிரான்சிஸ் தமக்கு முன் போப்பாண்டவராகவிருந்தவரான பெனடிக்ட் XVI அவர்களை கிறிஸ்மஸ் தினத்தையொட்டி கடந்த திங்களன்று சந்தித்து வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டார்.

வத்திக்கான் நகரில் மலைப்பாங்கான ஓர் இடத்தில் உள்ள பழைய மடாலயத்தில் பெனடிக்ட் (86) வாழ்ந்து வருகிறார். அவருக்கு கிறிஸ்மஸ் தினத்தையொட்டி தமது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ள பிரான்சிஸ் (77) சென்றிருந்தார்.

அண்மையில் ஓர் இடத்தில் நடந்த நிகழ்வொன்றில் தேவாலயத்தை ஒரு கர்ப்பிணி தாய்க்கு பிரான்சிஸ் ஒப்பிட்டுப் பேசியிருந்தார். அவர் கேட்டார், இறைவனுக்கென்று ஒரு இடம் இருக்கிறதா? அல்லது ஒன்றுகூடல் கொண்டாட்டங்களுக்கும் கடைகளுக்குச் சென்று பொருள்கள் வாங்கவும் மற்றும் பெரும் சத்தங்களை ஏற்படுத்தவும் மட்டும்தான் இடம் இருக்கிறதா என்று.

### மாவோக்கள் சம்மதம்

நேபாளத்தின் அரசமைப்பு சபைக்கான கூட்டங்களில் கலந்து கொண்டு பணியாற்ற நாட்டின் மாவோயிஸ்ட் கட்சியினர் முன்வந்துள்ளனர். முதலில் தேர்தல் முடிவுகளை அவர்கள் தில்லுமுல்லுகள் ஏற்பட்டிருப்பதாக நிராகரித்து ஒதுங்கியிருந்தனர். ஏனைய கட்சிகள் தேர்தல் முறைகேடுகள் பற்றி புலனாய்வு செய்யப்படும் என்று அறிவித்துள்ளதைத் தொடர்ந்து அரசமைப்புச் சபையில் பங்கேற்க மாவோயிட்ஸ்கள் ஒப்புக்கொண்டனர்.

கடந்த மாதம் நடைபெற்ற தேர்தலில் 80 ஆசனங்களை மட்டுமே அவர்களால் வெற்றி கொள்ள முடிந்தது. 575 ஆசனங்களில் மூன்றாவது இடத்தை மட்டுமே அவர்களால் பிடிக்க முடிந்திருந்தது.

### ஜப்பானியப் பிரதமரின் யசுகுனி பயணம்

2 ஆம் உலகப் போர் ஞாபகார்த்த 'யசுகுனி' ஸ்தூபிக்கு ஜப்பானியப் பிரதமர் ஷின்சோஅபே பயணம் மேற்கொண்டு மரியாதை செலுத்தியிருப்பதானது சீனாவிலும், தென் கொரியாவிலும் பலத்த எதிர் அலைகளைக் கிளப்பியுள்ளது. தமது பயணம் போருக்கு எதிரானது என்று ஜப்பானிய பிரதமர் கூறியிருக்கிறார். யசுகுனி ஸ்தூபியானது ஜப்பானில் போர் காலத்தில் கொல்லப்பட்ட 2.5 மில்லியன் மக்களின் ஆன்மாக்களை அடக்கியிருக்கின்றன. இவர்களில் பெரும்பாலானவர்கள் சாதாரண போர் வீரர்கள் என்றாலும் இவைகளில் போரின் பின் போர்க் குற்றங்களுக்காக கொல்லப்பட்ட உயர் மட்ட அதிகாரிகளுக்காகவும் ஸ்தூபி நிர்மாணிக்கப்பட்டிருப்பதாக கருதப்படுகின்றது.

ஆனால் இதனை ஜப்பானின் கடந்த கால போர் வெறியை நினைவுறுத்தும் ஞாபகச் சின்னமாகவே சீனாவும் கொரியாவும் கருதுகின்றன.

ஜப்பானியப் பிரதமரின் யசுக்குனி பயணத்தை சீனாவும் தென்கொரியாவும் கண்டித்திருக்கும் அதேநேரம் அமெரிக்கா ஏமாற்றமளிப்பதாக வர்ணித்துள்ளது. ஜப்பானிய பிரதமர் இதுபற்றிக் கூறுகையில் போர் குற்றவாளிகளுக்கு வழிபாடு செய்வதற்காக யசுகுனி ஸ்தூபிக்கு நான் சென்றதாக சிலர் கூறுகிறார்கள்.

உண்மையில் எனது பயணமானது ஜப்பான் இனி ஒரு போதும் போரில் இறங்காது என்பதை மீளவும் உறுதி செய்வதற்காகவே இடம் பெற்றது என்று கூறினார்.

# பணிய வைத்து வெற்றி



எந்த முடிவுமே ஒரு அணிக்கு ஏமாற்றத்தையும் மற்றைய அணிக்கு மகிழ்ச்சியையும் தரும். ஆனால் இந்த முடிவு இருஅணிகளுக்கும் ஏமாற்றத்தையும் ஆறுதலையும் கிட்டத்தட்டசம அளவில் தந்தது.

இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே நடைபெற்ற முதல் டெஸ்ட் சமனிலையில் முடிவடைந்தது. எந்த முடிவுமே ஏதேனும் ஒரு அணிக்கு ஏமாற்றத்தையும் மற்றொரு அணிக்கு மகிழ்ச்சியையும் தரும். ஆனால் இந்த முடிவு இரு அணிகளுக்கும் ஏமாற்றத்தையும் ஆறுதலையும் கிட்டத்தட்டச் சமமான அளவில் தந்தது.

ஐந்து நாள்களும் கடும் போராட்டமும் உயர்தரமான ஆட்டமும் வெளிப்பட்ட இந்த டெஸ்ட் ஆட்டத்தில் கடைசிப் பந்துப்பரிமாற்றத்தில் யார் கை ஓங்கும் என்பதைக் கணிக்க முடியாத அளவில் விறுவிறுப்பாக இருந்தது. ஆட்டம் ஆரம்பமாகும் போது இந்திய அணியின் மீது யாருக்கும் அதிக நம்பிக்கை இல்லை. மூத்த வீரர்கள் யாரும் இல்லை. துணைக்கண்டத்துக்கு வெளியே டெஸ்ட் ஆட்டங்களில் ஆடிய அனுபவம் கொண்டவர்கள் மிகக் குறைவாக உள்ள அணி இது. வேகப்பந்துக்குத் தோதான களங்களில் தென்னாபிரிக்கப் பந்து வீச்சாளர்களுக்கு இணையாகப் பந்து வீசக்கூடிய பந்து வீச்சாளர்களும் இல்லை. போதாக்குறைக்கு ஒரு நாள் ஆட்டத்தில் பலத்த அடி வாங்கியிருந்தது.

இத்தனை எதிர்மறை அம்சங்களுடன் களம் இறங்கிய இந்திய அணி எல்லாவற்றுக்கும் பதில் சொல்லும் விதத்தில் ஆடியது. முதல் நாள் முடிவில் அனைத்து இலக்குகளையும் இழக்காது இருந்ததே பெரிய விடயம். விராட் கோஹ்லி சதம் அடித்தார். சதீஸ்வர் புஜாரா வேகப் பந்துகளைத் தடுமாற்றம் இல்லாமல் எதிர்கொண்டார். முரளி விஜயும் வேகப்பந்தை ஓரளவு சமாளித்து நின்றார். அஜிங்க்ய ரஹானே 137 பந்துகளை எதிர்கொண்டு 47 ஓட்டங்களைப் பெற்றார். கடை நிலை ஆட்டக்காரர்கள் விரைவில் விழுந்ததால் 280 ஓட்டங்களுக்குள் இந்தியா சுருண்டது.

இதற்கு முன்பும் இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் அந்நிய மண்ணில் 300-400 ஓட்டங்கள் பெற்றிருக்கின்றார்கள். [illegible] அதன் பிறகு ஆடும் எதிரணி 500 ஓட்டங்களை இலகுவாகப் பெற்றுவிடும். அதனால் இரண்டாம் இன்னிங்ஸில் துடுப்பாட்ட வீரர்கள் மீது கூடுதல் சுமை விழும். 2001 ஆம் ஆண்டு வீரேந்திர சேவாக் அறிமுகமான ஆட்டத்தில் அப்படித்தான் நடந்தது. முதல் இன்னிங்ஸில் 400க்கு மேல் ஓட்டங்களைப் பெற்றபோதும் இந்திய அணி தோற்றது.

அப்படி எதுவும் இந்த முறை நடக்கவில்லை. இந்தியப் பந்து வீச்சாளர்கள் தென்னாபிரிக்கக் களத்தைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். 244 ஓட்டங்களுக்குள் எதிரணியைச் சுருட்டினார்கள். இரண்டாவது இன்னிங்ஸில் இந்திய துடுப்பாட்ட வீரர்கள் மேலும் தன்னம்பிக்கையோடு ஆடினார்கள். புஜாரா சதமடித்தார். கோஹ்லி மயிரிழையில் சதத்தைத் தவறவிட்டார். இந்தியா 421 ஓட்டங்கள் குவித்தது. 458 என்னும் வெற்றி இலக்கை எதிர்கொண்டு ஆடிய தென்னாபிரிக்க அணி இந்தப் போட்டியைக் காப்பாற்றிக்கொள்ளுமா என்னும் கேள்வி எழுப்பப்பட்டது. இந்தியா தேறுமா என்னும் கேள்வி நான்கே நாள்களில் தென்னாபிரிக்கா தப்பிக்குமா என்பதாக மாறியது. இதுவே இளம் இந்திய அணியின் வெற்றி என்றுதான் சொல்ல வேண்டும்.

> தென்னாபிரிக்கா கடைசி நேரத்தில் இப்படிப் பணிந்துபோகும் என்பதை யாரும் எதிர்பார்க்கவில்லை. ஆட்டத்தைக் கைப பற்றாவிட்டாலும், தென்னாபிரிக்காவைப் பணிய வைத்ததே இளம் இந்திய அணிக்குக் கிடைத்த வெற்றிதான்.

எனினும் தென்னாபிரிக்க அணி அசாத்தியமான உறுதியைக் காட்டியது. ஏபி டிவிப்லியர்ஸும், டு பிளஸியும் வெல்லும் நிலைக்கு அணியைக் கொண்டு சென்றார் கள்.

தேநீர் இடைவேளைக்குப் பின்னர் 127 ஓட்டங்கள் பெற்றுக்கொண்டால் வெற்றி என்ற நிலை. கையில் ஆறு இலக்குகள் இருந்தன. பந்துப்பரிமாற்றத்துக்கு சுமார் 4 ஓட்டங்களே அடிக்க வேண்டும்.

இருவரும் சீராக ஆடிக்கொண்டிருந்தார்கள். வெற்றி தென்னாபிரிக்காவைப் பார்த்துச் சிரித்த சமயத்தில் டிவில்லியர்ஸின் மட்டையில் பட்ட பந்து இலக்கைப் பதம் பார்த்தது. அடுத்துவந்த ஜே.பி. டுமினி வீராவேசத்துடன் மட்டையை வீசினார். பவுண்டரிகள் வந்தன. ஆனால் ஒரு 'யோக்கர்' பந்து அவர் இலக்கைச் சாய்த்தது. அது போதாதென்று டு பிளஸிஸ் 'ரன் அவுட்' ஆனார். சில நிமிடங்களில் நிலைமை மாறிவிட்டது.

அதன் பிறகு பிலாந்தர் அடித்து ஆடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அடுத்து இறங்க வேண்டிய மோர்னி மோர்க்கலுக்கு அடிபட்டிருந்ததால் இலக்கு விழாமல் ஆட வேண்டும் என்பதில் பிலாந்தர் கவனம் செலுத்த ஆரம்பித்தார். வெற்றி இலக்கை எட்டும் நோக்கத்தைக் கைவிட்டு சமன் செய்யும் நோக்கில் ஆடி ஆட்டத்தை முடித்துக்கொண்டது தென்னாபிரிக்கா.

தேநீர் இடைவேளைக்குள் 2 இலக்குகளை எடுத்திருந்தால் இந்தியா வெற்றிபெற்றிருக்கலாம். டிவில்லியர்ஸ் அல்லது டு பிளஸிஸ் ஆட்டமிழக்காமல் இருந்திருந்தால் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றிருக்கலாம். இரண்டும் நடக்கவில்லை. ஆட்டம் சமனில் முடிந்தது. இரு அணிகளும் கடுமையாகப் போராடியதன் விளைவே இந்த முடிவு. இரு அணிகளும் இதில் மகிழ்ச்சி கொள்ளலாம் என்றாலும் இந்தியா கூடுதல் மகிழ்ச்சி கொள்ளலாம்.

இரண்டாவது இன்னிங்ஸில் 400 ஓட்டங்களுக்கு மேல் அடித்ததும் கடைசி நாளில் எதிரணியின் முன்னேற்றம் கண்டு அசராமல் இந்திய பந்துவீச்சாளர்கள் முகமது சமி, சகீர்கான் இஷாந்த் சர்மா ஆகியோர் தொடர்ந்து போராடியதும் பாராட்டத்தக்க அம்சங்கள். தோல்வியைத் தவிர்க்க வேண்டும் என்று தென்னாபிரிக்கா நினைத்ததில் தவறில்லை. ஆனால் இரண்டு பந்துப்பரிமாற்றங்களில் 16 ஓட்டங்கள் என்னும்போது பிலாந்தர் வேகம் காட்டியிருக்கலாம்.


அந்தக் கோபம் தென்னாபிரிக்க ரசிகர்களின் எதிர்வினையில் தெரிந்தது. களத்திலிருந்து வெளியேறிய பிலாந்தரையும் டேல் ஸ்ரெயினையும் பார்த்துக் கோபமாகக் கூச்சல் போட்டார்கள். பாதுகாப்பே முக்கியம் என்ற முடிவு களத்தில் இருந்தவர்கள் எடுத்தது என்று தென்னாபிரிக்க அணித் தலைவர் கிரேம் ஸ்மித் சொல்லிவிட்டார். டெஸ்ட் தொடரில் முதலிடத்தில் இருக்கும் தென்னாபிரிக்கா கடைசி நேரத்தில் இப்படிப் பணிந்துபோகும் என்பதை யாரும் எதிர்பார்க்கவில்லை.

ஆட்டத்தைக் கைப்பற்றாவிட்டாலும், தென்னாபிரிக்காவை பணிய வைத்ததே இளம் இந்திய அணிக்குக் கிடைத்த வெற்றிதான்.

இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் ஆரம்பமாகிவிட்டது. எந்த அணி சாதிக்கின்றது என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

---

## விஸ்வரூபம் எடுக்கும் ஆட்ட நிர்ணயம்



கிரிக்கெட்டில் கொடி கட்டிப் பறக்கும் ஆட்டநிர்ணயம் மெல்ல மெல்ல உதைபந்தாட்டத்துக்குப் பரவி தற்போது ரென்னிஸ் அரங்குக்குள்ளும் பிரவேசித்துள்ளது.

அது எதிர்காலத்தில் ஆரோக்கியமான விளையாட்டுத்துறை காணப்படுமா என்பது குறித்த கேள்விளை எழுப்பியுள்ளது.

அண்மையில் ஆட்டநிர்ணயத்தில் ஈடுபட்டமைக்காக ஸ்பெயின் ரென்னிஸ் வீரர் கில்லர்மோ ஒலாசோவுக்கு 5 ஆண்டு தடை விதிக்கப்பட்டுள்ளது. சர்வதேச தரவரிசையில் 236ஆவது இடத்தில் இருக்கும் கில்லர்மோவுக்கு ரூபா 15 லட்சம் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

சேலஞ்சர் மற்றும் பியூச்சர் ரென்னிஸ் போட்டிகளில் விளையாடி வரும் கில்லர்மோவுக்கு 3 குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இந்தத் தண்டனையை விதித்துள்ளது டென்னிஸ் ஊழல் தடுப்புப் பிரிவு. அந்த மூன்று சம்பவங்களுமே 2010ஆம் ஆண்டு நடந்தவையாகும்.

இந்த நிகழ்வு ரென்னிஸ் இரசிகர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச தரப் போட்டிகளில் பங்கெடுக்கும் ரென்னிஸ் வீர, வீராங்கனைகள் சாதாரணமாகவே பெருந்தொகைப் பணத்தைச் சம்பாதித்துக் கொள்கின்றனர். அது போதாதென்று அவர்கள் ஆட்டநிர்ணயம் மூலமும் பணம் ஈட்ட முற்படுகின்றனர் என்பது ரென்னிஸ் ரசிகர்களிடையே பெரும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது ரென்னிஸ் ஊழல் தடுப்புப் பிரிவு ஆட்டநிர்ணயத்துக்கு எதிரான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

கடுமையான தண்டனைகள் மூலம் ஆட்டநிர்ணம் என்பதை முளையிலேயே கிள்ளி விடுவதற்கான ஏற்பாடுகளை ரென்னிஸ் ஊழல் தடுப்புப் பிரிவு செயற்படுத்த ஆரம்பித்துள்ளது. அவ்வாறான தண்டனைகள் மூலமே நேர்மையான விளையாட்டரங்கை எதிர்காலத்தில் உருவாக்க முடியும்.



# 2013

## இந்த ஆண்டின் கதா நாயகிகள்





தமிழ்ப் பெண்ணா, கேரளப் பெண்ணா, இல்லை வடநாட்டு பெண்ணா என்பதெல்லாம் தமிழ் ரசிகர்களுக்குப் பிரச்சினை இல்லை. வெள்ளையாய் இருந்துவிட்டால் போதும், தமிழர்களுக்கு அவர் கனவுக்கன்னிதான். 10 ஆண்டுகளைக் கடந்தும் எங்களால் வெற்றிக் கதாநாயகியாக நீடிக்க முடியும் என்று நிரூபித்தபடி தொடர்கிறார்கள் த்ரிஷாவும் நயன்தாராவும். த்ரிஷாவுக்கு மவுசு குறைந்துவிட்டது, அவர் தனது கல்யாணத்தைத் திட்டமிட்டுவருகிறார் என்று செய்திகள் வெளியான நேரத்தில், த்ரிஷா தனது மந்திரப் புன்னகையால் அவற்றை ஊதித் தள்ளிவிட்டார். *என்றென்றும் புன்னகை* படத்தில் தன்னை விட வயதில் குறைந்த ஜீவாவின் காதலியாக நடித்த அவர், மென்மையான கதாபாத்திரத்தில் அட்டகாசமாகப் பொருந்தினார். தோற்றத்தில் இளமையும் நடிப்பில் முதிர்ச்சியும் அவரிடத்தில் கூடியிருக்கின்றன . *சமர்* படத்தில் வெற்றி கிடைக்காவிட்டாலும் அதிலும் அவரது நடிப்பும் அழகும் பாராட்டப்பட்டன.

இன்னொரு வெற்றி நாயகியான நயன்தாராவைச் சர்ச்சைகள் சுழற்றியடித்தன. அவரும் ஓய்வுபெறுவார் என்று சொல்லப்பட்டது. ஆனால் நயன்தாராவின் வசீகரம், சர்ச்சைகளிலிருந்து அவரை விடுதலை செய்தது. இவரும் தன்னைவிட இளையவர்களான ஜெய், கோபிசந்த் ஆகியோருடன் நடிக்கிறார். தமிழில் அதிக ஊதியம் பெறும் நாயகி இவர்தான். இந்த ஆண்டு *ராஜா ராணி, ஆரம்பம்* ஆகிய இரண்டு படங்களில் நடித்தார். இரண்டிலும் வெற்றி.



ஹன்சிகாவின் குழந்தைத்தனமான தோற்றமும் அழகும் ரசிகர்களுக்குப் பிடித்திருப்பதில், அவர் நடிக்கும் படங்களின் வெற்றி தோல்விகளுக்கு அப்பால், அவர் கொண்டாடப்படுகிறார். காஜல் அகர்வால், அனுஷ்கா இருவருமே தெலுங்குப் படங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதால் தமிழில் இந்த ஆண்டு பின்தங்கி விட்டார்கள். வந்த படங்களும் சொல்லிக்கொள்ளும்படி இல்லை. காஜலுக்கு *அழகுராஜா*வும் அனுஷ்கா வுக்கு *இரண்டாம் உலகம்* படமும் நல்ல பெயரை வாங்கித் தரவில்லை.

## வெற்றி பெற்ற இளசுகள்



100 ஆண்டுகளைத் தொட்டுவிட்ட தமிழ் சினிமா தொடர்ந்தும் மிகப் பெருமளவில் உயிர்ப்புடன் இருக்கக் காரணம், திறமைமிக்க கலைஞர்கள் புதிது புதிதாக உருவாவதுதான். அவர்கள்தான் சினிமாவில் மாற்றங்களையும் கொண்டு வந்து ரசிகர்களுக்குப் புத்துயிர் ஊட்டுகிறார்கள். அந்த வகையில் கடந்த ஆண்டு சிறகடித்த புது முகங்களைப் பார்க்கலாம்.

### சிவகார்த்திகேயன்



பெரிய திரையில் தங்களுக்கு இனி வாய்ப்பில்லை என்றான பிறகு சின்னத் திரை பற்றி நினைக்கும் நட்சத்திரங்களின் போக்கை மாற்றியவர் சிவ கார்த்திகேயன். 'மிமிக்ரி' கலைஞராகத் தோன்றிய தொலைக்காட்சியிலேயே நிகழ்ச்சித் தொகுப்பாளராக அறிமுகமாகி, தனக்கெனத் தனிப் பாணியை உருவாக்கி, இன்று பெரிய திரையில் வெற்றிக்கொடி கட்டியிருக்கிறார்.

கடந்த ஆண்டு *மெரினா* படத்தில் அறிமுகமானபோது பத்தோடு பதினொன்று என நினைத்தவர்கள்கூட, இன்று அவரது பயணம் ஏறுமுகமாக இருப்பதைப் பார்த்து வாயடைத்து நிற்கிறார்கள். ஓர் ஆண்டில் ஒரு வெற்றிப் படம் கொடுக்கவே நட்சத்திரங்கள் மல்லுக்கட்டும் இந்தக் காலகட்டத்தில் *எதிர் நீச்சல், வருத்தப்படாத வாலிபர் சங்கம்* என இரு வணிக ரீதியான வெற்றிப் படங்களைக் கொடுத்திருக்கிறார்.

நகைச்சுவை என்ற பலத்தோடு சினிமாவுக்குள் நுழைந்த சிவ கார்த்திகேயன், அதிலிருந்து மெல்ல வெளியேற முயன்று கொண்டிருக்கிறார். அது அவருக்குச் சாதகமாக பாதகமா என்பது போக போகத்தான் தெரியவரும்.

### விஜய் சேதுபதி



தமிழ் சினிமாவில் இப்போது மிகப் பரபரப்பான நடிகர் என்றால் அது விஜய் சேதுபதிதான். *சுந்தர பாண்டியன்* படத்தைத் தொடர்ந்து, *பீட்சா, நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம், சூது கவ்வும்* எனத் தொடர்ச்சியாக வெற்றிப் படங்களையே அள்ளி வழங்கிய விஜய் சேதுபதியின் கைவசம் தற்போது ஐந்துக்கும் மேற்பட்ட படங்கள் இருக்கின்றன.

விடா முயற்சி விஸ்வரூப வெற்றி என்பதற்கு நல்ல உதாரணம் விஜய் சேதுபதி. 2010ஆம் ஆண்டில் வெளியான *தென்மேற்கு பருவக் காற்று* படத்தில் கதாநாயகனாக நடிப்பதற்கு முன்பு வரை ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக, இவர் பல படங்களில் சிறு வேடங்களில் நடித்தவர். அந்த அனுபவத்தையே களமாக அமைத்துக்கொண்டு வேகமாக முன்னேறிவரு கிறார். தற்போது புகழ்பெற்றுள்ள இளம் இயக்குநர்கள் இயக்கும் படங்களில் நடிக்கவே முன்னணிக் கதாநாயகர்கள் ஆர்வம் காட்டும் நிலையில், விஜய் சேதுபதி மட்டும் விதிவிலக் காகச் செயல்படுகிறார். மிக மூத்த இயக்கு நர்களின் இணை, துணை இயக்குநர்களும் குறும்படங்களின் இயக்குநர்களும்தான் இவரது தேர்வு. முன்னணிக் கதாநாயகர்களுடன் அவர்களது படங்களில் இணைப் பாத்திரத்திலும் வில்லன் கதாபாத்திரத்திலும் நடிக்கத் தயாராக இருப்பதாகக் கூறும் விஜய் சேதுபதி, தமிழ் சினிமாவில் தவிர்க்க முடியாத நட்சத்திரமாக உருவெடுத்துவருகிறார்.

### விக்ரம் பிரபு

நடிகர் திலகத்தின் பேரன், இளைய திலகத்தின் மகன் என்ற முத்திரையோடு சினிமாவுக்குள் நுழைந்த விக்ரம் பிரபு தாத்தா, அப்பாவின் பெயரைக் காப்பாற்றத் தவறவில்லை. தாத்தாவைப் போலவே பேரன் விக்ரம் பிரபுவுக்கு முதல் படமான *கும்கி* வெற்றிப்படமாக அமைந்துவிட்டது. அழுத்தமான கதை, விறுவிறுப்பான திரைக்கதை, சிறந்த இயக்கம், வருடும் இசை எனச் சம விகிதத்தில் கலந்த *கும்கி*யில் யானைப்பாகன் பொம்மனாக மிளிர்ந்தார் விக்ரம் பிரபு.



*கும்கி* வெற்றி அவருக்கு யானைப் பலம் கொடுத்தது. சரியாக ஓராண்டு கழித்து வேறு மாதிரியாக வந்திருக்கிறார் விக்ரம் பிரபு. சட்டக் கல்லூரியில் நிகழ்ந்த கலவரத்தைமையமாகக்கொண்ட கதையில் உள்ளார்ந்த கோபத்தை வலுவாகச் சித்தரித்திருக்கிறார் விக்ரம். இந்தப் படமும் இவருக்கு வெற்றியைத் தந்திருக்கிறது.

அடுத்த கட்டமாக *சட்டம் ஒரு இருட்டறை* என்ற ரீமேக் படத்தில் இறங்கியிருக்கிறார் விக்ரம் பிரபு. விஜயகாந்துக்குப் பெயர் பெற்றுக்கொடுத்த இந்தப் படம் விக்ரம் பிரபுவுக்கும் பெயர் கொடுக்கலாம்.



கோடம்பாக்கத்தில் இப்போது அதிகம் உச்சரிக்கப்படும் பெயர் லட்சுமி மேனன். பாவாடை, தாவணியைத் தமிழ்நாட்டு இளம் பெண்களே மறந்துவிட்ட இந்தக் காலத்தில் பாவாடை, தாவணியில் தொடர்ந்து மூன்று படங்களில் நடித்து இளைஞர்களின் மனதில் சப்பாணி கொட்டி அமர்ந்திருக்கிறார் லட்சுமி. அறிமுகப் படம் வெற்றி பெற்றாலே தலை கால் புரியாத திரையுலகில் வரிசையாக *சுந்தர பாண்டியன், கும்கி, குட்டிப்புலி, பாண்டிய நாடு* என நான்கு வெற்றி படங்களில் நடித்தும் அலட்டிக்கொள்ளாத நடிகை லட்சுமிமேனன். இந்த ஆண்டில் மட்டும் இரு வெற்றிப் படங்கள். தொடர்ந்து *மஞ்சப்பை, ஜிகர்தண்டா, சிப்பி, வசந்தகுமாரன்* ஆகிய படங்கள் இவரது கைவசம் உள்ளன. கிளாமர் என்ற ஆயுதத்தை ஏந்தாமல் இருப்பது, பெண்கள் மத்தியிலும் லட்சு மிக்கு ரசிகைகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. நடிப்புக்கு இடையேயும் பாட சாலைப் படிப்பைத் தொடரும் நம்பிக்கை நட்சத்திரமாகவும் காட்சியளிக்கிறார்.

### நஸ்ரியா நஸீம்



நடிகர் சிவ கார்த்திகேயன் போலச் சின்னத் திரையில் இருந்து பெரிய திரைக்கு வந்தவர் நஸ்ரியா. அழகும் திறமையும் உள்ள நடிகை. மலையாளப் படங்களில் நடித்திருந்தாலும், தமிழ்ப் படமான *நேரம்*தான் இவருக்குப் பட வாய்ப்புகளை அதிகரித்துள்ளது.

*நேரம்* நடிப்புக்கு முக்கியத்துவமுள்ள நாயகியாக நஸ்ரியாவை அடையாளம் காட்டியது. அடுத்த படமான *ராஜா ராணி* படத்தில் நயன்தாராவுக்கு இணையாக இவரது நடிப்பும் பேசப்பட்டது. தனுஷுடன் நடித்த *நய்யாண்டி* படம் சரியாகப் போகாவிட்டாலும், இவருக்கான வாய்ப்புகளில் எந்தப் பிரச்சினையையும் அது ஏற்படுத்தவில்லை. ஜெய்யுடன் இவர் நடித்த திருமணம் என்ற *நிக்காஹ்* படம் அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

சர்ச்சைகளில் சிக்கினாலும் *நீ நல்லா வருவடா, வாய் மூடி பேசவும்* என அடுத்தடுத்த படங்களில் பரபரப்பாக இருக்கிறார் நஸ்ரியா.

# 2013

## தமிழ் சினிமாவின் நல்ல சில பதிவுகள்

## தலைமுறைகள்




மூத்த இயக்குநரான பாலுமகேந்திரா (இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்) பல ஆண்டுகளுக்குப் பிறகு இயக்கிய படம் தலைமுறைகள். தமிழ் சினிமாவில் பல விதங்களிலும் ஆறுதல் அளித்த படம். தமிழ் வாசனையோ கிராமிய மணமோ அற்ற ஒரு தலைமுறைக்கும் அவை இரண்டையும் தன் மூச்சுக் காற்றாகக் கொண்ட ஒரு தலைமுறைக்கும் இடையே நடக்கும் சந்திப்பின் சலனங்கள்தான் படத்தின் கதை.

கிராமக் கலாசாரத்தின் சத்தான அம்சங்களோடு சாதி உணர்வு என்னும் களையும் நவீனத்துவத்திற்கு முகம்கொடுக்காத ஒவ்வாமையும் இந்த மூத்த தலைமுறையிடம் இருப்பதை இப்படம் பதிவுசெய்கிறது. நகர வாழ்வையும் நவீனத்துவக் கூறுகளையும் விமர்சிக்கும் இந்தப் படம் அவற்றை வில்லனாகச் சித்தரிக்காமல் இருப்பதுதான் ஆறுதல.

தாத்தாவுக்கும் பேரனுக்கும் இடையே உருவாகும் அன்பு மொழி, வயது, கலாசாரம் ஆகியவற்றைத் தாண்டிய உறவையும் மாற்றங்களையும் சாத்தியப்படுத்தி நெகிழவைக்கிறது.

ஒரு கனவைத் திரக்கதையாக்கிய விதத்திலும் அந்தத் திரைக் கதையைப் படமாக்கிய விதத்திலும் பாலுமகேந்திராவுக்கு வெற்றி. முக்கியப் பாத்திரம் ஏற்றிருக்கும் அவரது நடிப்பும் பாராட்டத்தக்க விதத்தில் உள்ளது. ஆனால் இன்றைய தலைமுறை விரும்பிப் பார்க்கும் வேகத்திலும் வீச்சிலும் படம் இல்லாமல் போனமை அதன் குறை.

## தங்க மீன்கள்



ராமின் இயக்கத்தில் வெளிவந்து கவனம் பெற்ற படம் தங்க மீன்கள். குழந்தைகள் படமாகவும், தமிழகத் தில் உள்ள அரசுப் பாட சாலைகளின் சிறப் பைப் பரப்புரை செய்வ தாகவும் மேலோட்ட மாகப் புரிந்துகொள்ளப் பட்டாலும் இப்படம் இவற்றையெல்லாம் தாண்டிய ஓர் அசலான வாழ்க்கைச் சித்திரத் தைப் பதிவுசெய்கிறது.

இளம் வயதிலேயே காதல் திருமணம் செய்து கொண்ட கல்யாணி, அவனுக்காக வீட்டை விட்டு ஓடிவந்து குடும் பம் நடத்தும் வடிவு. நாகர்கோயில் புற நகரில் ஒரு மேட்டு நிலத் தில் அமைந்துள்ள அவர்கள் வீடு. அங்கு ஓய்வுபெற்ற ஆசிரியரான கல் யாணியின் தந்தையுடனும் தாயுடனுமான அவர்கள் வாழ்க்கை. இந்த நால்வருக்கும் இடையிலான உறவின் மையமான குழந்தை செல்லம்மா. இவர்களின் வாழ்க்கைதான் இந்தப் படம். மனித உறவுகளுக்கு இடையிலான சிக்கலையும் பாசாங்கு களையும் சின்னச் சின்ன உரையாடல்களில், பாவனைகளில் உணர்த்துகிறது படம்.

படத்தில் வரும் மனிதர்கள் இயல்பான பலவீனங்களு டன் இருக்கிறார்கள். சொற்ப வருமானத்துக்குள் காதல், கனவுகள், சுயமரியாதை என் பவற்றுக்குள் வாழும் சாமான்ய மனிதர்களின் உருவமாக வருகிறான் கல்யாணி. தங்க மீன்கள் உலவும் ஆழ் குளத்தில் தொடங்கிப் பார்வையாளனை உள்ளிழுத்துக் கொள்ளும் இப்படம் அதே குளத்தில் கரடி பொம்மை மிதக்கும் காட்சியுடன் முடிவடைந்துவிடுகிறது. ஆனால் இன்னும் சில காட்சிகளாகப் படம் நீள்வது படத்திற்கு ஒற்றைப்படைத்தன்மையைக் கொடுத்துவிடுகிறது.

இம்மாதிரியான பலவீனங்களுக்கு அப்பாற்பட்டு தங்க மீன்கள் தமிழ்த் திரையில் எழுந்த ஓர் இயல்பான வாழ்க்கைச் சித்திரம்.

## சூது கவ்வும்

எந்த எதிர்பார்ப்பும் இன்றி வெளியாகி சக்கைபோடு போட்ட படம் சூதுகவ்வும். நலன் குமாரசாமி இயக்கியிருக்கிறார். தமிழ் சினிமாவில் ஒரு புதிய அலையை உண்டாக்கியிருக்கும் சினிமாவுக்கு இணையான மாற்று முயற்சிகளின் பின்னணியில் இருந்து உற்சாகத்துடன் வந்திருப்பவர் நலன். உலகமயமாக்கலுக்குப் பின் சமூகம் அடைந்திருக்கும் மாற்றங்களை எவ்விதமான அறிவுரை தொனியோ புலம் பலோ இன்றி நகைச்சுவையு டன் சித்தரிக்கிறது படம். வாழ்க்கை குறித்து உருவாக்கப்பட்டிருக்கும் வரையறைகள் எதுவும் இல்லாத கதாநாயகன், கடத்தலை தொழிலாகக் கொண்டிருக்கிறான்.

விஜய் சேதுபதியுடன் கடத்தலில் கூடவே வரும் அவன் காதலி திடீரென ஒரு காட்சியில் கற்பனை உருவாக வெளியேறி விடுகிறாள். இது தமிழ் சினிமா பார்வையாளருக்குப் புதிய அனுபவத்தைத் தருகிறது. இப்படம் தமிழ் சினிமாவின் போக்கைத் திசைதிருப்பியது. வெறும் நகைச்சுவை என்று வகைப்படுத்த முடியாதபடி சமகாலத்தின் சமூக அரசியலைச் சொல்லும் படமாகவும் இது இருக்கிறது.



## பரதேசி



கறுப்பர்களின் அடிமை நிலை குறித்தும் வெவ்வேறு நாடுகளில் நடந்த ஒடுக்கப் பட்ட மக்களின் துயரம் தோய்ந்த விடுதலைப் போராட்டங்கள் குறித்தும் உலகளவில் சிறந்த திரைப்படங்கள் வந்துள்ளன. ஆனால் தமிழில் ஒடுக்கப்பட்டோரின் வலிகளையும், அவர்களின் இருண்ட உலகத்தையும் சற்று நெருங்கிப் பார்த்த திரைப் படங்கள் அரிது. அந்த வகையில் இயக்குனர் பாலாவின் பரதேசி ஒரு முன்னோடி முயற்சி.

பொள்ளாச்சித் தேயிலைத் தோட்டங்களில் சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் பஞ்சம் பிழைக்கப்போன தமிழர்களின் கொத்தடிமை நிலைகுறித்து, அப்பகுதிகளில் பணியாற்றிய மருத்துவர் டேனியலால் எழுதப் பட்ட எரியும் பனிக்காடு நாவலைத் தழுவி எடுக்கப்பட்டது பரதேசி திரைப்படம்.

படம் பல குறைபாடுகளுடன் இருந்தாலும் 20ஆம் நூற்றாண்டு ஆரம்பத்தில் அதிகம் பதிவுசெய்யப்படாத தமிழ் வாழ்க்கையின் துயரமான பகுதியை பெரிய சமரசங்களின்றி பதிவுசெய்ததில் பரதேசி திரைப் படம் முக்கியமானது. வறுமை இருந்தாலும், சொந்த கிராமத்தில் தன்னிறைவுடன், சின்னச் சின்ன சந்தோஷங்களுடன் வாழும் மக்கள் பிழைப்புக்காக பரதேசம் போகும்போது அநாதைகளாக அவர்கள் மாறிப்போவதை இந்தப் படம் நிதர்சனமாக்க் காட்டியது. இடைவேளைக்கு முன்பு, உறவினர்கள் எல்லாம் இழுத்துச் செல்லப் படும் நிலையில் அநாதையாக இறந்து போகும் ஒரு மனித னின் கை வெறுங் கையாக உயரும். இது போன்ற அழுத்தமான காட்சிகளுக்காக பரதேசி படம் எப்போதும் நினைவில் நிற்கும்.




## ஹரிதாஸ்



அதிகம் கவனிக்கப்படாத ஆட்டிசம் என்னும் குறைபாட்டைக் கையில் எடுத்ததற்காகவே ஹரிதாஸ் படத்தின் இயக்குநர் ஜி.என்.ஆர். குமரவேலனைப் பாராட்டலாம். 'என்கவுண்டர் ஸ்பெஷலிஸ்ட்' கிஷோரின் மகன் ஹரிதாஸ். அம்மாவின் மறைவால் பாட்டியிடம் வளரும் ஹரிதாஸ், பாட்டியின் பிரிவுக்குப் பிறகு தந்தையிடம் வருகின்றான். அதுவரை ரவுடிகள், என்கவுண்டர் என்று மட்டுமே இருந்த கிஷோர், தன் மகனையும் அவனுடைய குறைபாட்டையும் புரிந்துகொள்ள முடியாமல் தவிக்கிறார்.

ஹரிதாஸின் குறைபாடு ஆட்டிசம் என்பதை அவனுடைய அப்பாவுக்கு மட்டுமல்ல, நமக்குமே சேர்த்துச் சொல்கிறார் மருத்துவர். ஹரிதாஸாக வரும் ப்ரித்விரா ஜின் நடிப்பு, படத்தை உயிர்ப்புடன் வைக்கிறது. இலக்கற்ற பார்வை யும், சற்றே வளைந்த கைகளும், தளர்ந்த நடையுமாக நம் மனசுக் குள் நுழைந்துவிடுகிறான்.

அப்பாவையும் மகனையும் பிணைக் கும் அன்பு இழை, நம்மையும் அவர்களுடன் ஒன்றச் செய்து விடுகிறது. காதல், டூயட் இல்லா மல் ஒரு குறைபாட்டைச் சொல்ல குறும்படம்தான் எடுக்க முடியும் என்ற பொதுவான நினைப்பைத் தன் படத்தால் உடைத்தெறிந்து இருக்கிறார் குமரவேலன்.

மகனின் திறமையை அடையாளம் கண்டறியும் தந்தை, அவனை மாரத்தான் போட்டிக்குத் தயார்படுத்துகிறார். அதில் வெற்றிபெறுகிறவன், பின்னாளில் விளையாட்டுத்துறையில் சாதிக்கிறான்.

வெற்றிபெற்ற அந்த இளைஞனிடம் இருந்து படத்தைத் துவக்கியிருப்பது நல்ல முயற்சி. எந்தக் கருத் தையுமே வலிந்து சொல்லாமல், இயல்பாகச் சொல்லியிருப்பதே இந்தப் படத்தின் வெற்றிக்குக் காரணம்.



## மூடர் கூடம்

இன்றைய சமூகம் குறித்த தீவிரமான விமர்சனத்தை வைத்த படம்தான் மூடர் கூடம். ஒரு நவீன நாடகம் போன்ற அமைப்பில் சின்னச் சின்னக் கதைகளைச் சேர்த்து, சுவாரசிய மாக எடுக்கப்பட்ட படம். சொந்த ஊரில் பெற்றோரை இழந்து, சென்னையில் வெவ்வேறு பின்னணி களிலிருந்து வரும் அநாதை இளைஞர்கள் நால்வர் சந்திக்கிறார்கள். இந்த நால்வரும் சந்திக்கும் இடம் காவல் நிலையத்தின் சிறை அறை, நால்வரில் ஒருவரான வெள்ளையின் அப்பாவை ஏமா ற்றிப் பணக்காரராக இருக்கும் மாமா பக்த வத்சலத்தின் வீட்டில் புகுந்து கொள்ளைய டிக்கத் திட்டமிடுகின்றனர். அதனால் ஏற்படும் அபத்தங்களும் திருப்பங்களும்தான் மூடர் கூடம். கதையின் போக்கிற்கேற்ப சித்தர், பாரதி பாடல்கள் ஆகியவை படத்தின் போக்கி லேயே நிரவி வருவது அருமையான அனுபவமாக இருந்தது. தனித்து விடப்பட்ட இளை ஞர்கள் மாறுபட்ட சூழலில் எப்படி மாறுகிறார் கள் என்பதை அருகிலிருந்து பார்ப்பதுபோல உணர்ந்துகொள்ளலாம். பணக்காரர் - ஏழை பாகுபாடு, குழந்தைகளுக்கு அன்பு கிடைக்காத நிலை, ஆங்கில மோகம் போன்ற தீவிரமான பிரச்சினைகள் படம் முழுவதும் பேசப்பட்டிருந்தன.

